தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1979 ஏப்ரல் 7.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) பாகிஸ்தான் முன்னாள் அதிபர் தூக்கிலிடப் பெற்றது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், ஒரு முக்கியமான விஷயம். இந்தியாவினுடைய நட்பு நாடான பாகிஸ்தானுடைய முன்னாள் அதிபர் தூக்கிலே போடப் பட்டது சம்பந்தமாக கேரளா, மகாராட்டிரம் போன்ற மாநிலங் களில் அஞ்சலித் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். நம் முடைய சபையிலேயும் அஞ்சலித் தீர்மானம் நிறைவேற்றுவதற்கு ஏதாவது உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாராளுமன்றத் திலே அப்படிப்பட்ட தீர்மானம் கொண்டுவரப்பட்டதாகத் தெரியவில்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பாராளுமன்றத் திலே அத்தகைய இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றவில்லை. நம்முடைய சட்டமன்றத்திற்கு என்று தனி மரபுகள் உண்டு. மற்ற மாநிலங்களிலே என்ன என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்த்துச் செய்வது நம்முடைய மரபு இல்லை. நம்முடைய நிலைமை இரங்கல் தீர்மானம் தேவையில்லை என்பதாகும்.

திரு. மு. அம்பிகாபதி : மத்தியிலே ஜனதா கட்சியினுடைய ஆட்சி இருக்கிறது. தமிழகத்திலே அகில இந்திய அண்ணா தி.மு.க. வினுடைய ஆட்சி இருக்கிறது. கேரளாவிலே கம்யூனிஸ்ட் கட்சியும் காங்கிரஸ் கட்சியும் சேர்ந்து இருக்கிற ஆட்சி இருக்கிறது. . . .

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கேரளாவிலே முஸ்லீம் லீக்கும் உண்டு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது இயற்கை மரணம் அல்ல. வெளிநாட்டுப் பிரச்சினைகளிலே வேறு நாட்டின் உள் விவகாரங்களிலே தலையிடுவதில்லை என்ற மரபை நாம் கடைப் பிடித்துக் கொண்டு இருக்கிறோம். பாராளுமன்றத்திலே அதன் காரணமாகத் தீர்மானம் கொண்டு வரப்படவில்லை. கேரளா போன்ற சில மாநிலங்களிலே அப்படி இருந்தாலுங்கூட அதைப் பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : ஒரு கருத்தை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். முன்வரிசையிலே இருக்கிறவர்களுக்கு தாங்கள் அனுமதி கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வேண்டாம்; உட்காருங்கள், தேவையில்லை என்று முடிவு செய்ததற்குப் பிறகு ஒவ்வொருவரும் அந்தந்தக் கட்சியின் சார்பாகப் பேச வேண்டும் என்பதெல்லாம் நல்ல மரபாக இருக்காது, அமருங்கள்.

திரு. கு. ரமணி : கட்சிக்கு ஒரு ஆள் பங்கு போட்டுப் பேசுவது என்பதல்ல. அமைச்சர் அவர்கள் சொன்னபோது பாராளுமன்றத்திலே செய்யவில்லை, நாமே எதற்காகச் செய்வது என்று சொன்னது சரியல்ல. இந்திய அரசியல் சட்டப்படி இது சுதந்திரமாக இயங்கக் கூடிய சட்டமன்றம். அரசியல் சட்டத்தை மீறாமல் நாம் அப்படிச் செய்வதற்கு உரிமை இருக்கிறது. ஏன் இங்கே செய்யக் கூடாது என்பதற்குத் தகுந்த பதில் அமைச்சர் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வெளி நாட்டினுடைய உள் விவகாரங்களில் தலையிடக் கூடாது என்ற முறையிலே பாராளுமன்றத்திலே கொண்டு வரப்படவில்லை. அதைத் தான் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

திரு. அ. சுவாமிதாஸ் : சார். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள். குறுகிய கால வினா 43.

2. வினாக்கள் — விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

சென்னை நகர குடிசை வாழ் மக்களுக்கு நில ஒதுக்கீடு.

குறுகிய கால வினா எண் 43—திரு. கே. பண்ணை சேதுராமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை நகரத்தில் குடிசைப் பகுதியில் வாழக் கூடிய குடிசைவாசிகள் ஒவ்வொருவருக்கும் 40 சதுர அடி ஒதுக்கி அதற்கான கிரயத்தை மாதம் ரூ. 20 வீதம் பிடித்துக் கொள்வதற்கான திட்டம், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) மற்றும் (ஆ): இது அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. கே. பண்ணை சேதுராம் : துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே உள்ள மக்களில் 40 சதவீத மக்கள் குடிசைப் பகுதியிலே வாழ்கிறார்கள். அவர்களில் ஏழ்மை நிலையில் உள்ளவர்கள் சாக்கடை ஓரங்களில் புழுக்களாகத் துடிப்பவர்களும், சாலை ஓரங்களிலே வேலையில்லாமல் திரிபவர்களும் 40 சதவீதத்திற்கும் அதிகமாக இருக்கிறார்கள். பம்பாய் குடிசைப் பகுதியிலே 8 சதவிகிதம் வாழ்கிறார்கள். கல்கத்தா குடிசை பகுதியிலே 20 சதவீதம் வாழ்கிறார்கள். இந்தக் குடிசைப் பகுதியிலே உள்ளவர்களுக்கு 20 ரூபாய் கொடுக்க அரசு எப்போது இருந்து திட்டம் கொண்டுவர இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதோடு சென்னை நகரத்திலே கொண்டுவர இருக்கிற இந்தத் திட்டத்தை மற்ற மாவட்டங்களின் தலைநகரங்களுக்கும் கொண்டுவர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணை தலைவர் அவர்களே, என் பதில் ‘இது அரசின் ஆய்வில் உள்ளது’ என்று கூறியிருக்கிறேன். இப்போது இதற்கு மேலே எந்தத் தகவலையும் தரும் நிலையில் இல்லை.

சென்னையில் அரசினர் மாணவர் விடுதிகள்.

*வினா எண். 652—திரு. நா. பழனிவேல் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1978-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23-ம் நாள் அன்று சர்வ கட்சியினர் நடத்திய 'பந்த்'-ஐ முன்னிட்டு சென்னையில் விடுதியில் தங்கியிருந்த தாழ்த்தப்பட்ட மற்றும் ஏழை மாணவர்களை இரு தினங்களுக்கு முன்பாகவே விடுதியிலிருந்து கட்டாயமாக வெளியேற்றியதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அதனால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு அரசு என்ன உதவி செய்து அனுப்பியது ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : துணைத் தலைவர் அவர்களே,

(அ) 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23 ஆம் நாள் அன்று சர்வகட்சியினர் நடத்திய "பந்த்"-ஐ முன்னிட்டுச் சென்னையிலுள்ள கல்லூரி மாணவ மாணவியர் மற்றும் தொழிற்பயிற்சி மாணவர் விடுதிகள் 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21 ஆம் நாள் முதல் 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30 ஆம் நாள் வரை மூடப்பட்டன.

(ஆ) மேற்படி விடுதிகளில் தங்கியிருந்த மாணவர்களுக்கு சொந்த ஊருக்குச் செல்ல வழிச்செலவுக்குப் பணம் அவர்களுக்கு அளிக்கப்படும் போக்குவரத்து மற்றும் தினசரி படிகளிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற விதிமுறைகளுக்குட்பட்டு வழங்கப்பட்டது.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : துணைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23 ஆம் நாள் அன்று நடைபெற்ற பந்தின் பொழுது என்ன காரணத்தை முன்னிட்டு அரிசன மாணவர்களுக்கு முன்கூட்டியே விடுப்பு அளித்து வீட்டுக்கு அனுப்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டது ? அரிசன மாணவர்கள் ஹாஸ்டலில் தங்கியிருந்தால் அதன்மூலம் ஏதாவது அரசுக்குத் தொந்திரவுகள் ஏற்படும் என்ற அடிப்படையில் அவர்களை வீட்டுக்கு அனுப்பினார்களா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, பொதுவாக மாணவர்களின் பாதுகாப்புக்காகத் தான் இதுபோன்ற நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கிறது.

REPORTING SECTION

1979 ஏப்ரல் 7]

திரு. ரா. உமாநாத் : துணைத் தலைவரவர்களே, அதே விடுதியில் இருக்கும் மாணவர்களை அதற்குப் பிறகு நாடாளுமன்றத்தில் இந்திராகாந்தி அம்மாளுக்குத் தண்டனை அளிக்கப்பட்ட பொழுது ஏற்பட்ட கிளர்ச்சி சம்பந்தமாக அந்த ஹாஸ்டல் மூடப்பட்டு இதேமாதிரி வீட்டுக்கு அனுப்பப்பட்டார்களா? இல்லாவிட்டால் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, அதுபற்றி விவரம் இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23 ஆம் நாள் அன்று நடந்த பந்தின் பொழுது இரண்டு தினங்கள் மட்டும் ஹாஸ்டல் மூடப்பட்டு அந்த மாணவர்கள் வெளியேற்றப்பட்டால், அவர்கள் ஊருக்குச் செல்லவும், தங்கவும், உணவு அருந்தவும் மிகவும் அல்லல் பட்டிருப்பார்களே, ஆகவே, இது மெத்த அவசியம்தானா? இது சரியல்ல என்பதை அரசு உணர்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, அவர்கள் ஊருக்குச் செல்ல வேண்டுமென்பதற்காக வழிச் செலவுக்குத் தொகை கேட்டு அது தரப்பட்டிருக்கிறது. வேறு எந்தவிதமான காரணத்திற்காகவும் இந்தத் தொகை வழங்கப் படவில்லை. மாணவர்களின் பாதுகாப்புக்காகத்தான் அரசு உதவுகிறது. இது சரிதான்.

திரு. ரா. கிருஷ்ணன் : துணைத் தலைவரவர்களே, 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23 ஆம் நாள் அன்று, தொழிலாளர் சம்பந்தமாக ஒரு முழு வேலை நிறுத்தத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது, அதில் மாணவர்களுக்கு எந்தவிதத்திலேயும் சம்பந்தம் இல்லையே. அப்படியிருக்கும்பொழுது அந்த விடுதியை மூட வேண்டிய அவசியம் என்ன? இப்படி ஊருக்குச் செல்லும் பொழுது வழிக்காசு கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. அது ஸ்காலர்ஷிப் பணத்திலிருந்துதான் கொடுக்கப்படுகிறது. ஏற்கனவே வழங்கப்படும் தொகையான 65 ரூபாய் போதாது. அப்படியிருக்கும்பொழுது வழிச்செலவுக்கு என்று காசு கொடுத்தால் ஏற்கெனவே தருகின்ற வசதிகள் குறைக்கப்படுமே, இது முறைதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, ஏன் மூடப்பட்டது என்பதற்கான காரணத்தை முன்பே சொல்லியிருக்கிறேன். உபகாரச் சம்பளத்திலிருந்து இந்த தொகை பிடிக்கப்படவில்லை. போக்குவரத்துக் கட்டணத்திற்காகக் கொடுக்கப்படும் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. இந்தத் தொகையையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ளலாமா என்பது பற்றி பரிசீலனை செய்யப்படுகிறது.

[1979 ஏப்ரல் 7

மாநில அரிசன நலக்குழு உறுப்பினர்கள்.

·வினா எண். 653—திரு. சொ. ந. பழனிசாமி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தமிழ்நாடு மாநில அரிசன நலக்கமிட்டியில் கோவை மாவட்டத்தின் சார்பில் நியமிக்கப்பெற்றுள்ளவர்கள் யாவர்?

மாண்புமிகு திரு. பெ. செளந்தரபாண்டியன்: தமிழ்நாடு மாநில அரிசன நலக்குழுவில் கோவை மாவட்டத்தின் சார்பில் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் திரு. எஸ். ஆர். கோபால், திரு. பி. குருசாமி, எம்.எல்.ஏ., திரு. அண்ணாநம்பி, திரு. ஆர். எஸ். தங்கவேலு, எம்.எல்.ஏ., ஆகிய நால்வர் ஆவர்.

திரு. சொ. ந. பழனிசாமி: பேரவை உதவி சபாநாயகர் அவர்களே, கோவை மாவட்டத்தின் சார்பாக ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்கள்தான் அரிசன நலக் குழுவில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். இதில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பதை இந்த அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. செளந்தரபாண்டியன்: தலைவரவர்களே, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பது தவறு. மாண்புமிகு உறுப்பினர்கள் சார்ந்திருக்கிற கட்சியைச் சேர்ந்த புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள சட்டமன்ற உறுப்பினர் திரு. சின்னையா அவர்கள் இடம் பெற்றிருகிறார்கள். இந்தக் குழுவில் எல்லாக் கட்சியையும் சேர்ந்தவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

திரு. கு. ரமணி: துணைத் தலைவரவர்களே, இந்த அரிசன நலக் கமிட்டியில் பிரதிநிதிகளை நியமிப்பதற்கு அரசாங்கத்தினுடைய கிரைட்டீரியா என்ன? எந்த அளவுகோலை அடிப்படையாகவைத்து இந்தப் பிரதிநிதிகளை நியமிக்கிறார்கள்? அரசியல் கட்சி அடிப்படையிலா அல்லது அவர்கள் அரிசன சேவையில் முன் நிற்கிறார்கள் என்றா அல்லது சாதாரண சமூக சேவையில் மனிதாபிமான அடிப்படையில் வேலை செய்கிறார்கள் என்ற அடிப்படையிலா? எந்த அடிப்படையில் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

1979 ஏப்ரல் 7]

(முற்பகல் 9-10.)

மாண்புமிகு திரு. பெ. செளந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன எல்லா அடிப்படையையும் வைத்துத்தான் அரசாங்கம் உறுப்பினர்களை நியமிக்கிறது.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் கோவை மாவட்டத்தை மட்டும் குறிப்பிட்டார்கள். அதைப் போலவே, மாநில அரிசன குழுவின் பதவிக்காலம் எவ்வளவு? அவர்கள் யார், யார்? எந்த, எந்தப் பதவிகளில் இருக்கிறார்கள்? அவர்கள் பதவிகள் எப்பொழுது முடிவடையும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. பெ. செளந்தரபாண்டியன் ; தலைவரவர்களே, இந்தக் குழு 1978 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15ஆம் நாள் அன்று திருத்தியமைக்கப்பட்டது, பதவிக்காலம் 3 ஆண்டு. மொத்த உறுப்பினர்கள் 49 பேர்கள். அதில் உத்தியோகப் பற்றில்லாத உறுப்பினர்கள் 41 பேர்கள். அலுவல் சார்புள்ளவர்கள் 8 பேர்கள்.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் பொறுப்பேற்ற அன்று, தங்களைப் பாராட்டுகிற நேரத்திலே, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் Ruling party has its way and the opposition has its say என்று சொன்னார்கள். அதை உறுதிப்படுத்துகின்ற வகையிலே,—எதிர்க்கட்சியிலே உள்ளவர்களுக்கு அளித்த வாய்ப்பைப்பற்றி, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்—இனி அரசு ஆளுங்கட்சி உறுப்பினர்களை மட்டும், குழுக்களில் உறுப்பினர்களாகப் போட முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. செளந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தொண்டுள்ளம் கொண்டவர்கள் எங்கெங்கே இருந்தாலும் அவர்களைக் கட்சி சார்பில்லாமல் போட்டால் தான் அரசாங்கத்திற்கு நல்ல ஆலோசனைகளும் நல்ல திட்டங்களும் கிடைக்கும் என்பதால்தான் சர்வகட்சியைச் சேர்ந்தவர்களையும் இந்த அரசாங்கம் நியமித்துக் கொண்டிருக்கிறது.

சென்னை துறைமுகத்தினை விரிவுபடுத்தல்

*வினா எண். 654—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை துறைமுகத்தினை விரிவுபடுத்தும் செயற் குறிப்பு பற்றி மத்திய அரசு நமது மாநில அரசினரிடம் கலந்து ஆலோசித்ததா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, சென்னைத் துறைமுகத்திற்கு வருகின்ற கப்பல்கள் பழுதடைகின்ற நேரத்திலே அவைகளையெல்லாம் மறுபடியும் ரிப்பேர் செய்வதற்கு வேறு துறைமுகங்களுக்குக் கொண்டு போகவேண்டிய நிலைமை இருக்கிறது. இங்கே பணிமனைகள் இல்லை. எனவே, பணிமனைகள் கட்டுவதற்காக இந்த அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்து மத்திய அரசை வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, சென்னைக்கு வருகின்ற, குறிப்பாக, சரக்குக் கப்பல்களைப் பொறுத்த வரைக்கும் பழுது செய்வதற்கு இங்கே வசதி இல்லை என்பது உண்மைதான். மைய அரசோடு மாநில அரசு பல முறை தொடர்பு கொண்டு 180 மீட்டர் ஆழமுள்ள கப்பல் பழுது பார்க்கும் தொழிற்கூடம் அமைக்க மைய அரசு ஒத்துக் கொண்டிருக்கிறது. 220 மீட்டர் ஆழமுள்ள தொழிற்கூடமாக அமைக்கப்படுமானால் அப்பொழுதுதான் பெரிய கப்பல்களை அங்கே பழுதுபார்க்க முடியும். கல்கத்தா, பம்பாய், போன்ற பகுதிகளுக்குச் சென்று அதிகச் செலவிடுவதைத் தடுக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் மைய அரசின் மாண்புமிகு சந்த் ராம் அவர்களிடம் எடுத்துரைத்தார். அவர்களும் அதைப் பரிசீலித்து உடனே ஆவன செய்வதாக உறுதி அளித்துள்ளார்.

1979 ஏப்ரல் 7]

போக்குவரத்துக் கழகங்களுக்கிடையே ஊழியர்களை மாற்றம் செய்தல்

வினா எண். 655—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒரு போக்குவரத்து கழகத்திலிருந்து வேறு போக்குவரத்து கழகங்களுக்கு ஊழியர்களை மாற்றுவதற்கு அரசு ஏதேனும் விதி வகுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இல்லை.

திரு. ரா. உமாநாத்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்லவன் டிரான்ஸ்போர்ட் எக்ஸ்பிரஸ் விங் ஆரம்பிக்கும் போது அதிலே இருந்த பலரை அங்கே அப்சார்ப் பண்ண முடியாமல் மற்ற கழகங்களுக்கு அனுப்பப்பட்டார்கள். இப்பொழுது பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் புது ரெக்ரூட்ஸ் எடுக்கப்படுகிறார்கள், முன்னால் வேறு கழகங்களுக்கு அனுப்பப்பட்டவர்களை எடுக்காமல், ஆகவே, வாகன்ஸி இருக்கும்போது, புது புது ரெக்ரூட்ஸ் எடுக்காமல், ஏற்கனவே மற்ற கழகங்களுக்கு அனுப்பப்பட்டவர்களுக்கு ப்ரிஃப்ரன்ஸ் கொடுப்பீர்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, விரைவுப் பேருந்தினைப் பொருத்தவரைக்கும் புதிதாக ரெக்ரூட்ஸ் எடுக்கப்பட வேண்டாமென்ற முடிவினை தற்பொழுது எடுத்து, இதுபோன்ற ஓட்டு—நர் நடத்துநர் போன்ற பணியாளர்கள் மற்ற போக்குவரத்துக் கழகங்களில் அவர்கள் எந்தவித குற்றமும் செய்யாமல், நடத்துநராக இருந்தால் ஃஎப்.சி. கேஸ் என்று சொல்லப்படுகிற காசைக் கையாடுகிற தவறுகளைச் செய்யாதவர்களாக இருப்பார்களானால், ஓட்டுநர்களைப் பொறுத்தவரையில் எந்தவித விபத்திலும் உட்படாதவராக இருந்தால், அவர்களை எல்லாம் எடுத்துக் கொள்ளலாம் என்ற முறையிலே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்த கருத்து நடைமுறையிலே கொண்டு வரப்பட்டிருக்கிறது.

திரு. க. இரா. சின்னராசு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது, பணியாளர்கள் அவர்களுடைய ஒழுக்கத்தின் அடிப்படையிலேதான் மாறுதல் செய்யப்படுவதாக கூறியிருக்கிறார்கள். அப்படி அவர்களுடைய ஒழுக்கத்தின் அடிப்படையிலே மாறுதல் செய்யும்போது, அவர்கள் ஒருநாள் வேலைக்கு வராமல் அவர்கள் ஆப்செண்ட் ஆகிவிட்டால் கூட, ஒழுக்கக் குறைவு என்று குற்றஞ்சாட்டப் பட்டு, மாறுதல் செய்யவேண்டாம் என்ற நிலை ஏற்படு கிறது என்று கூறுகிறார்கள், அது உண்மையா? அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள் என்றெல்லாம் அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒருநாள் விடுமுறை எடுத்துக் கொண்டால் அது குற்றமே இல்லை. எங்குமே எந்த இடத்திலுமே அது குற்றமாகக் கருதப்படுவது இல்லை என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையில் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற கேள்வியின் அடிப்படையைப் பார்க்கிற போது அது ஒரு மிகப் பெரிய பிரச்னையாக இருந்து வருகிற தாகத் தெரிகிறது. எனவே ஒரு கழகத்திலிருந்து இன்னொரு கழகத்திற்கு மாறுதல் கொடுக்கின்ற நேரத்தில் அங்கே இருக்கின்ற நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் பணியாளர் களின் மேல் அடிக்கடி தக்க வகையில் சில பல குற்றச்சாட்டுகளை எடுத்துச் சொல்லி அந்தக் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் மாறுதல் செய்ய முடியாத சில நிலைமைகளை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள், எனவே அதை அரசு கவனித்து தேவையான நடவடிக்கைகளை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட சில பல குற்றச்சாட்டு களுக்கு பணியாளர்கள் உட்படுத்தப்பட்டிருந்த போதிலும் மியூ சுவல் டிரான்ஸ்பர் என்று சொல்லப்படுகிற அளவுக்கு ஒரு போக்கு வரத்துக் கழகத்திலிருந்து ஒரு பணியாளர் மாறுதல் செய்ய வேண்டி, அவர் எந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு கேட்கி றாரோ அங்கே வேறொருவர் அப்படி டிரான்ஸ்பருக்கு தயாராக இருந்தால், அவர்கள் இருவரும் மாறுதல் செய்யப்படும் நிலைமை இருந்து வருகிறது. எனவே ஒரு கழகத்திலிருந்து இன்னொரு கழகத்திற்கு மாறுதல் கொடுக்கின்ற நேரத்திலே அங்கே

1979 ஏப்ரல் 7]

இருக்கிற நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் பணியாளர்கள் மீது குற்றம் சாட்டினாலும், அவர்களும் கூட மியூசுவல் டிரான்ஸ்பர் என்ற அளவுக்கு பணி மாற்றம் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது ஓடிக் கொண்டிருக்கிற விரைவுப் பேருந்துகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் பயணம் செய்வதற்காக இரண்டு இடங்களை ரிசர்வ் செய்து வைக்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். பேருந்து புறப்படும் இடங்களில் இருந்து போய்ச் சேரும் இடம் வரையில் இந்த ரிசர்வ் செய்யப்பட்ட 2 இடங்களில் பொதுப் பயணிகள் உட்கார வரும்போது, அந்த இடங்கள் எம்.எல்.ஏக்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறபோது, பொதுப் பயணிகள் எம்.எல்.ஏக்களை தரக் குறைவாக பேசுகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது, அதை மாற்ற அரசு என்ன முடிவை எடுக்கப் போகிறது என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்காக புறப்படும் இடங்களில் இருந்து போய்ச் சேரும் இடம் வரையில் இரண்டு இருக்கைகளை ரிசர்வ் செய்யப்பட வேண்டும் என்று அரசு உத்தரவு இட்டிருக்கிறது. அந்த இரண்டு இருக்கைகளில் சட்டமன்ற உறுப்பினர்களோ, மேலவை உறுப்பினர்களோ ஏறவில்லை என்றால், பொதுப் பயணிகள் உபயோகித்துக் கொள்ளலாம் என்றும், ஆனால் இடையில் சட்டமன்ற உறுப்பினர்கள் பேருந்தில் ஏற வருகிற போது அவர்களுக்குரிய ரிசர்வ் செய்யப்பட்ட இடங்களை விட்டு, வேறு இருக்கைகளுக்கு செல்ல வேண்டும் என்றும் உத்தரவு போடப்பட்டிருக்கிறது நடை முறையிலும் மேற் கொள்ளப்பட்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் பற்றி அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கம் சரியானது தான். அடுத்து, டிரைவர்கள், கண்டக்டர்கள் சம்பந்தமாக அவர்களின் சொந்த மாவட்டங்களுக்கு, எந்த மாவட்டங்களிலிருந்து வந்திருக்கிறார்களோ அந்த மாவட்டங்களுக்கே மாறுதல் செய்வதற்கு பரிசீலனை செய்ய அரசு முன் வருமா என்று அறிந்துக் கொள்ள விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து துறையில் பணி புரிகின்றவர்களுக்கு அவர்களின் சொந்த மாவட்டங்களுக்கு மாறுதல் செய்தால், தொழிலாளர்களுக்கு குறைந்த ஊதியம் வருகிறது என்ற காரணத்தால், சொந்த ஊர்களுக்கு பணி புரிய சென்றால் அவர்களுடைய பொருளாதார நிலை பாதிக்கப்படும் என்ற நோக்கத்தோடு இதை பரிசீலனை செய்து ஏற்கெனவே முடிவு செய்து அரசு ஆய்ந்து வருகிறது. இருந்தாலும் நடைமுறையிலும் கூட அவர்களே மியூசுவல் டிரான்ஸ்பர் என்ற மாறுதலின்கீழ் சொந்த ஊர்களுக்குச் செல்லலாம் என்று உத்தரவு இடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1975–76 ஆம் ஆண்டு, பிரசித்தி பெற்ற அவசர கால நேரத்திலே நாகர்கோவிலிலிருந்து அரக்கோணத்திற்கு போக்குவரத்து பணியாளர்களை மாற்றியிருக்கிறார்கள். அவர்கள் இன்னும் அங்கே இருந்து கொண்டு தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை முறையாக பரிசீலனை செய்து நியாயமான முறையில் அவர்களை திரும்பவும் மாறுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகர்கோவிலிலிருந்து அரக்கோணத்திற்கு தொழிலாளர்கள் மாற்றப்பட்டதற்கான தகவல்கள் என்னிடம் இல்லை. என்றாலும், அது பற்றி ஆய்ந்து, உண்மையில் இடம் இருக்குமானால் மியூசுவல் டிரான்ஸ்பர் முறையின் கீழாவது அவர்களை மாற்றுவது பற்றி அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-20.)

திரு. துரை. கோவிந்தராசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் போக்குவரத்துக் கழகத்திலே இருக்கிற நடத்துனர்கள், ஓட்டுனர்கள், போக்குவரத்துக் கழகங்களின் பெயர்கள் பழைய சரித்திர கால மன்னர்களின் பெயர்களான சேர, சோழ, பாண்டியன் என்ற வகையில் அமைக்கப்பட்டு இருப்பதால், ஒரு சிலர் பாண்டியனிடத்திலும், ஒரு சிலர் சோழனிடத்திலும் மாட்டிக் கொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்களில் வாய்ப்பு ஏற்படும் போது மாற்றம் செய்ய அரசு முன் வருமா ?

1979 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே பல உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளும் இதே அடிப்படையில் கேட்கப்பட்டு இருக்கின்றன. அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த பணியாளர்கள் அந்தந்த மாவட்டங்களுக்குச் செல்ல விரும்புகிறபோது, காலி இடங்கள் அல்லது மியூசுவல் டிரான்ஸ்பர் அடிப்படையில் பரிசீலிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. நடவடிக்கை மேலும் எடுக்கப் படும்.

திரு. பொ. காளியப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இடம் ஒதுக்கியிருப்பதைப் போல், பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திலே ஒதுக்கப்பட வில்லை. பாண்டியன் போக்குவரத்துக் கழக பேருந்துகளிலும் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு இடம் ஒதுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற பேரவை, மேலவை உறுப் பினர்களுக்கு இத்தகைய சலுகைகள் விரைவுப் பேருந்துகளில் அளிக்கப்பட்டிருக்கின்றன. பாண்டியன் போக்குவரத்து விரைவு பேருந்து விடவில்லை. அது தான் அதற்குக் காரணம்.

திரு. சி. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, அரசு நடத்துகிற போக்குவரத்துக் கழகங்களில் வேண்டு மென்றே பழி வாங்கி விடுகிறார்கள். அதை மாற்றுவதற்கு அந்தந்த மாவட்டங்களில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு அந்தந்த மாவட்டத்தில் உள்ள பேருந்துப் போக்கு வரத்துக் கழகங்களில் ஒரு குழு ஏற்படுத்துவதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்துப் போக்குவரத்துக் கழகங் களுக்கும் ஆலோசனைக் குழு ஒன்றை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த ஆலோசனைக் குழுவில் சட்டமன்ற பேரவை, மேலவை உறுப்பினர்கள் சார்பில் சில அங்கத்தினர்கள் போடலாம் என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. அ. சுவாமிதாஸ் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திலே, நெருக்கடி காலத்தில், பலர் அந்த மத்திய அலுவலகங்களில் வேலை பார்த்துக் கொண்டு இருந்த ஊழியர்களை பழி வாங்க

[1979 ஏப்ரல் 7

வேண்டும் என்பதற்காக வேறு மாவட்டங்களுக்கு அங்கேயிருந்து அனுப்பியிருக்கிறார்கள். இந்த அரசு வந்தவுடன் அவர்களுக்கு எல்லாம் மாறுதல் கிடைக்கும் என்று இருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு மாறுதல் கொடுக்கப்படவில்லை. இனிமேலாவது அவர்களுக்கு நாகர்கோவிலிலேயே பணியாற்றுவதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அத்தகைய பணியாளர்கள் அந்த ஆர்வத்தோடு இன்றும் இருந்து வருகிறார்கள். படிப்படியாக அவர்கள் ஆர்வம் நடைமுறையில் பூர்த்தி செய்யப்பட்டுத்தான் வருகிறது.

திரு. இ. தமிழரசன் ; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு போக்குவரத்துக் கழகத்திலே இருந்து வேறு போக்குவரத்துக் கழகத்திற்கு ஊழியர்கள் மாற்றம் செய்யப்படும்போது சில நடை முறை இருப்பதைச் சொன்னார்கள். எல்லாக் கழகங்களும் நம்முடைய அரசின் கன்ட்ரோலில் தான் இருக்கிறது. எனவே தவறு செய்பவர்கள் எந்தக் கழகத்தில் இருந்தாலும் நம்முடைய அரசின் துறைகளின்கீழ் தான் இருக்கிறார்கள். எனவே, அவர்களை மாற்றம் செய்கிற போது, அவர்கள் வசதிக்கு ஏற்றவாறு மாற்றம் செய்து விட்டு, அதற்குப் பிறகு அவர்களுடைய குற்றங்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் மணிமாறன் அவர்கள் கேட்டபோது பதில் அளித்தேன். குற்றச்சாட்டு அடிப்படையில் மாற்றத்திற்குள்ளானவர்களுக்குக் கூட மியூச்சுவல் டிரான்ஸ்பர் மூலம் மாற்றப்படுகிறார்கள். காலி இடம் இருக்கும் என்றால் அவர்கள் அந்த இடங்களிலும் கவனிக்கப்படுவார்கள் என்று கூறிக் கொள்கிறேன்.

Manufacture of tractors.

* *Q. No.* 656.—THIRU S. M. VASAN : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) whether the Agro-Industries Corporation of Tamil Nadu have entered into collaboration with Foreign firms for the manufacture of tractors in this State; and

(*b*) if so, the deeails thereof?

1979 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) & (இ) தமிழ் நாடு வேளாண்மை தொழில்கள் கழகம் இதுவரை வெளிநாட்டு நிறுவனத்துடன் கூட்டாகச் சேர்ந்து இம் மாநிலத்தில் (Tractor) தயாரிக்கத் திட்டம் எதுவும் மேற்கொள்ளவில்லை.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண் தொழில் கழகத்தின் மூலம் பலநோக்கு கருவிகள் தயாரிக்கப்பட்டு வெளிவந்துள்ளது என்றும், அம்மாதிரி பலநோக்குத் தொழில் கருவிகள் வேளாண் தொழில் கழகத்தின் மூலம் தொடர்ந்து செய்ய செயற்குறிப்பு அரசிடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, டிராக்டராக மட்டுமல்லாமல் பல்வேறு வகையில் வேளாண்மைத் தொழிலுக்கு பயன்படுகிற டிராண்டர் என்ற கருவியைச் செய்ய, பிரிட்டன் நாட்டு நிறுவனத்துடன் அந்தத் தொழில் கழகம் பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டு இருந்தது. பிரிட்டனில் இருக்கக்கூடிய ''டிரெயிலர் என்ஜினீரிங் டெவலெப்மென்ட் லிமிடெட்'' என்ற நிறுவனத்துடன் பேச்சு வார்த்தை நடந்து வந்தது. அதற்குப் பின்னாலே இன்று அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. கே. கந்தசாமி : துணைத் தலைவரவர்களே, நமது இந்தியாவிலேயே மிக அதிகமான அளவுக்கு டிராக்டர்கள் போன்ற நவீன விவசாயக் கருவிகளை பஞ்சாப் மாநிலத்தில்தான் பயன்படுத்துகிறார்கள். ஒவ்வொரு வீட்டிலும் டிராக்டர் போன்ற நவீன கருவிகளைப் பயன்படுத்தி விவசாய உற்பத்தியைப் பெருக்குகிறார்கள் ; மேலும் உற்பத்தியைப் பெருக்குவதில் மிகக் குறைந்த செலவில் நல்ல லாபம் அடைந்து வருகிறார்கள். அப்படி இருக்கும் போது மாண்புமிகு அமைச்சரவர்கள் அதிகாரிகளை அனுப்பி வைத்து, என்னைப்போன்ற விவசாயப் பிரதிநிதிகளை கூட அனுப்பிவைத்து, நவீன கருவிகளை எந்தெந்த வகையில் பயன்படுத்துகிறார்கள் ; எந்தெந்த இடத்தில் பயன்படுத்துகிறார்கள்; எப்படி உற்பத்திச் செய்கிறார்கள் என்பதை அறிந்து வந்து, அதேமுறையில் நம்முடைய மாநிலத்தில் டிராக்டர்கள் போன்ற நவீன கருவிகளை உற்பத்தி செய்து, விவசாயத்திற்குப் பயன்படுத்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பஞ்சாப் மாநிலத்தைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். நமக்கு இருக்கின்ற கவலை எல்லாம் நம்முடைய மாநிலத்திலே இருப்பது ' ஸ்மால் ஹோல்டிங்ஸ் '—இருக்கக்கூடிய நிலங்கள் எல்லாம்

5 அல்லது 6 ஏக்கர் என்ற அளவுக்குத்தான் விவசாயிகள் வைத்திருக்கிறார்கள். நமக்கு மேலும் நில உச்சவரம்பு இருக்கின்ற காரணத்தால் அதிகமான நிலங்கள் வைத்துக்கொள்ள முடியாது. ஆகவே, எல்லோருக்கும் டிராக்டர்கள், நவீன கருவிகளைப் பயன்படுத்தும் சூழ்நிலை அதிகமாக இல்லை. ஆனால் பெரிய நிலப்பிரபுக்கள் அத்தகைய டிராக்டர்களைப் பயன்படுத்தலாம். சிறு நிலச்சுவான்தார்கள் அதை உபயோகிக்கும் நிலமையில் இல்லை; அவர்களிடம் போதுமான பணவசதிகள்கூட இல்லை. ஆனால், 'என்கோஃபட்' நிறுவனத்தின் மூலம் டிராக்டர்கள் போன்ற நவீன கருவிகளை வாடகைக்கு விடுகிறோம். அதன்மூலம் நியாயமான வாடகைக்கு கொடுக்கின்ற காரணத்தால் விவசாயிகள் அவைகளைப் பெற்று உபயோகப்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மணிமுத்தாறு பாசன வாய்க்கால் லைனிங் திட்டம்.

*வினா எண். 657 திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள மணிமுத்தாறு பெருங்கால் பாசன வாய்க்காலில் லைனிங் திட்டம் அமுல் நடத்த அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அரசு இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) ஆம்.

(ஆ) பெருங்கால் வாய்க்காலிலும், மற்றும் கிளை வாய்க்காலுக்கும் லைனிங் செய்வதற்கான திட்டம் ஆய்வில் உள்ளது. இதற்கான விவர மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : துணைத் தலைவரவர்களே, இந்த லைனிங் திட்டத்திற்கு எஸ்டிமேட் எவ்வளவு ? இந்த வேலையை சீக்கிரம் முடிக்க துரித நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1979 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மதிப்பீடு 8·75 இலட்சம் ரூபாய். உடனடியாக வேலை ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. ஜான் வின்செண்ட் : துணைத் தலைவரவர்களே, அதைப்போன்று பிரதான மணிமுத்தாறு வாய்க்கால் நாங்குனேரி பகுதியில் இருக்கிறது. அந்த பிரதான வாய்க்கால் இருக்கிற நாங்குனேரி பகுதியில் சிமிண்ட் லைனிங் கொடுக்க அரசு ஆய்வில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கக்கூடிய கேள்விக்கும் சம்பந்தம் இல்லை என்று நினைக்கிறேன். தனிக் கேள்வி போடவும்.

திரு. ந. தனசேகரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்று தயவு செய்து தள்ளிவிட வேண்டாமென்று கேட்டுக்கொண்டு, தாம்பிரபருணி ஆற்றிலுள்ள அனைத்து வாய்க்கால்களுக்கும் லைனிங் போட ஒரு பெரிய திட்டத்தைத் தயாரிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அனைத்து வாய்க்கால்களுக்குமாக ஒரு தனிக் கேள்வி போடவும்.

திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் : துணைத் தலைவரவர்களே, ''லைனிங்'' திட்டம் உடனடியாக ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இது எத்தனை கிலோ மீட்டர் அளவுக்கு போடப்பட இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, பெருங்கால் கால்வாயில் 2 மைல் 4 பர்லாங்கில் 400 அடி முதல் 700 அடி முடிய ''லைனிங்'' செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

[1979 ஏப்ரல் 7

காஞ்சீபுரத்தில் பட்டு உற்பத்தி தொழிற்சாலை.

வினா எண். 658—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சீபுரத்தில் பட்டு உற்பத்தி தொழிற்சாலை அமைக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) அவ்விதத் திட்டம் ஏதும் இப்போது இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: துணைத் தலைவர் அவர்களே, நமது தமிழ்நாட்டிலே பட்டுக்குப் பெயர் போன இடம் காஞ்சீபுரம். பட்டு உற்பத்தி செய்வதற்கு அந்த இடத்திலே ஒரு பட்டு உற்பத்தித் தொழிற்சாலையை அமைக்க, அதற்கு மிகுந்த கவனம் செலுத்திக் கொண்டுவர அரசாங்கம் முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 9-30]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் துணைத் தலைவரவர்களே, தற்போது செங்கற்பட்டு மாவட்டத்திலேயே முசுக்கொட்டை பயிரிடப்படும் பரப்பானது 75 ஏக்கர் என்ற அளவிலேதான் இருக்கிறது. இதன் மூலம் தோராயமாக 8,000 கிலோ பட்டுக் கூடுகளை ஆண்டு ஒன்றுக்கு உற்பத்தி செய்கிறோம். இதை அதிகரிக்கின்றபோது அங்கே இயற்கையாகவே ரீலிங் யூனிட் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. மேலும் 6-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே பல்வேறு திட்டங்களை உருவாக்கி மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்திருக்கிறோம். விரைவிலே அந்த ஒப்புதல் கிடைத்த பிறகு அனைத்து இடங்களிலும் பட்டுக்கூடு வளர்ப்பை அதிகப்படுத்தி தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. எம். எம். ஏ. ரசாக்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, காஞ்சீபுரத்தைப் போலவே தென்காசி, செங்கோட்டைத் தாலுக்காக்களில் அதிகமான பட்டுக் கூடுகளை வளர்த்து பட்டு உற்பத்தி செய்து வருகிறார்கள். ஆகவே, காஞ்சீபுரத்தைப் போல

1979 ஏப்ரல் 7]

இல்லாவிட்டாலும் அங்கே ஒரு சிறு தொழிற்சாலை அதாவது பட்டு தொழிற்சாலை ஆரம்பிக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலே பட்டுப் பூச்சிகளை உற்பத்தி செய்கின்ற பணிகள் தீவிரமாக இப்போது நடந்து வருகின்றது. முசுக்கொட்டை பயிரிடுகின்ற பரப்பளவும் அங்கே அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே, இவைகளின் பின்னணியில் அங்கே பட்டுத் தொழிற்சாலை வருவதற்கு நிரம்ப வாய்ப்பு இருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அண்ணா அவர்கள் பிறந்த இடமான காஞ்சீபுரத்தின் அருகிலே முசிறிவாக்கம் என்ற இடம் இருக்கிறது. அங்கே அரசுப் பண்ணை இருக்கிறது. அங்கே அதிகமான அரசு நிலமும் இருக்கிறது. தண்ணீர் வசதியும் இருக்கிறது. அப்படி இருக்கிற நிலைமைகளைக் கருத்தில் கொண்டு அங்கே முசுக்கொட்டை வளர்க்கும் திட்டத்தை அரசு கொண்டுவர முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, இதை அரசு பரிசீலிக்கும்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, இப்போது முசுக்கொட்டை பயிரிடுகின்ற விவசாயிகள் அதனை விற்க நினைக்கின்றபோது விற்பதற்கு வாய்ப்பு வசதிகள் இல்லாமல் பல விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அரசு தரப்பிலேயோ அல்லது பஞ்சாயத்து யூனியன் போன்றவைகளின் மூலமாகவோ அந்த இலைகளை வாங்கி அரசாங்கத்தின் மூலமாக அந்த பூச்சியை வளரச்செய்து அதன் மூலமாக பட்டு எடுப்பதற்குரிய திட்டத்தை அரசு வைத்துக் கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, வெறும் முசுக்கொட்டை இலைகளை மட்டும் ஒரு இடத்திலே உற்பத்தி செய்து வேறு இடத்திலே பட்டுப் பூச்சிகளை வளர்ப்பது என்பது காரிய சாத்தியமா என்பது அரசுக்குத் தெரியவில்லை இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையைப் பரிசீலிக்கிறோம்.

[1979 ஏப்ரல் 7

திரு. மு. ஆறுமுகம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, பட்டு உற்பத்தி இயக்குநர் அலுவலகம் ஒன்றை சேலத்தில் நிறுவுவதாக அறிவிக்கப்பட்டது. அது எந்த அளவில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

அதே போன்று 6-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பட்டு உற்பத்திக்கென்று அரசு எவ்வளவு தொகை செலவிட இருக்கிறது என்பதையும் தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, பட்டு உற்பத்தியைத் தீவிரப்படுத்த வேண்டும் என்பதற்காக ஒரு இயக்குநர் அலுவலகம் டைரக்டரேட், தனியாக அமைக்க வேண்டும் என்று அரசு கொள்கை ரீதியாக முடிவெடுத்திருக்கிறது. அந்த இயக்குநர் அலுவலகம் சேலத்திலேயே இருக்கும் என்று அரசு தீர்மானித்திருக்கிறது.

அதே போல் இந்த 6-வது திட்டத்தில் 6 கோடி ரூபாய் அளவில் 12 ஆயிரம் ஏக்கர் அளவில் முசுக்கொட்டையை அதிகமாக வளர்ப்பதற்கான திட்டத்தை தயாரித்து மத்திய அரசின் ஒப்புதலுக்காக நாம் அனுப்பி இருக்கிறோம்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: தலைவர் அவர்களே, பின்தங்கிய மக்களாகிய ஆதிவாசிகள், மலைவாசிகள் சில பகுதிகளில் இந்தப் பட்டு தொழிலை தங்களுடைய குடிசைத் தொழிலாக இன்றைக்கு நடத்தி வருகிறார்கள். அந்த அடிப்படையிலே கோவை மாவட்டம் தாளவாடி யூனியனிலே ஏராளமான ஆதிவாசிகள் இந்தப் பட்டுத் தொழிலை குடிசைத் தொழிலாக நடத்தி வருகிறார்கள். அப்படி நடத்தி வரக்கூடிய அந்தத் தொழிலின் மூலமாக அவர்கள் உற்பத்தி செய்கின்ற அந்தப் பட்டினை பர்சேஸ் பண்ணுவதற்கு போதிய ஏற்பாடுகள் இல்லை. அவர்கள் அதனை எடுத்துக் கொண்டு அண்டை மாநிலமான மைசூருக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்கிறார்கள். ஆகவே, அவர்களது உற்பத்தியினை பர்சேஸ் செய்வதற்கு ஒரு மையத்தை அந்தத் தாளவாடி பகுதியிலே ஏற்படுத்துவதோடு அங்கே இப்படி உற்பத்தி செய்கின்ற அளவினைக் கருத்தில் கொண்டு அந்தப் பகுதியிலேயே ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1979 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத்தலைவர் அவர்களே, தாளவாடி பகுதியில் ஏற்கனவே பட்டு நூற்பாலை இருக்கிறது. அந்தப் பகுதியிலே உற்பத்தி செய்யப்படுகிற பட்டுப் புழுக் கூடுகளை அந்த நூற்பாலை பயன்படுத்தியது போக கூடுதலாக உற்பத்தி செய்வதால், அது பெங்களூருக்கும் மைசூருக்கும் எடுத்துச் செல்வதால் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன. இப்போது நூற்பாலைகளை அதிகப்படுத்தி வருகிறோம். கூட்டுறவு முறையிலும், தனிப்பட்ட முறையிலும் 20-க்கும் மேற்பட்ட நூற்பாலைகளைத் துவக்க வேண்டும் என்று அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதுபோல் உற்பத்தி செய்யப்படுகின்ற பட்டை தமிழகத்தில் குறிப்பாக கூட்டுறவு சங்கங்கள் வாங்கவேண்டும் என்பதற்காக, அதற்கென ஒரு இணைப்பு மையம் (பெடரேஷன்) காஞ்சீபுரத்தில் இப்போது செயல்பட்டு வருகிறது. அதன் மூலம் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்ன சில இடர்பாடுகள் எல்லாம் தவிர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, பட்டுப் பூச்சி வளர்ப்புத் தொழில் உதவிகரமாகவும் லாபகரமாகவும் இருப்பதால் அது இந்த நாட்டில் புதிதாக ஆரம்பிக்கப் படவேண்டும் என்பது அரசினுடைய உள் நோக்கம். கிராமப்புறங்களில் தொழில் வளர்ச்சி ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிற காரணத்தால் என்னுடைய ஆண்டிப்பட்டி தொகுதியில், மதுரை மாவட்டத்தில் ஒரு பட்டு நூற்பாலை தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் அந்தப் பகுதி மிகவும் பிற்பட்ட பகுதி. பட்டினம் இல்லாத, கிராமங்கள் நிறைந்த பகுதி. வைகைப் பகுதியாக இருப்பதால் தண்ணீர் கிடைக்கும். விவசாயம் மாதிரி பண்ணை இருப்பதால் நிலம் இருக்கிறது. எனவே, அங்கே பட்டு நூற்பு ஆலைத் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல் தனிப்பட்டவர்களில் சிலபேர் அந்தப் பகுதியில் பட்டுக் கூடுகளை உற்பத்தி செய்கிறார்கள். அங்கே எவ்வளவு உற்பத்தியாகிறது என்பதற்கான தகவலைச் சேகரித்து, விரைவில் ஆண்டிப்பட்டியில் பட்டு நூற்பாலையைத் துவக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

[1979 ஏப்ரல் 7

நெடுவயல் கிராமத்தில் கதர் இலாகாக் கட்டிடம்.

*வினா எண் 659—திரு. மு. மு. அ. ரசாக்: மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தென்காசித் தாலூகா நெடுவயல் கிராமத்தில் காதி இலாகாவுக்குச் சொந்தமான கட்டிடம் ஒன்று உபயோகம் இல்லாமல் கிடப்பதும் அதற்கு இரவு காவலர் ஒருவரும் நியமனம் செய்யப்பட்டுள்ளதும் அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் என்றால் அதில் காதி இலாகாவிலிருந்து புது தொழில் ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) தென்காசி தாலூகா நெடுவயல் கிராமத்தில் தற்போது பயன்படுத்தப் படாமல் இருக்கும் கட்டிடம் மூடப்பட்ட கற்றாழை நார் பயிற்சி நிலையம் ஆகும். இது தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனத்திற்கு உரியதாகும்.

அக்கட்டிடத்தில் பயிற்சி நிலையத்திற்கு தேவையான உபகரணங்கள் மற்றும் தறிகள் வைக்கப்பட்டுள்ளன. ஆதலின் அதில் தற்சமயம் ஒரு இரவுக் காவலர் மட்டும் பணிபுரிந்து வருகிறார்.

(ஆ) இக்கட்டிடத்தில் கற்றாழை நார் தயாரிப்பு பயிற்சியினைத் தொடர்ந்து அளிப்பதற்கோ அல்லது வேறு மாற்றுத் தொழிலினை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளோ இல்லையென கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியமும், தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனமும் அறிவித்துள்ளன.

பயிற்சி நிலையக் கட்டிடத்தையும் அதன் சொத்துக்களையும் தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து, அரசு எடுத்துக்கொள்வது பற்றியும் அவைகளை பயன்படுத்துவது குறித்தும் தொழில் வணிக இயக்குநரோடு கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

திரு. எம். எம். ஏ. ரசாக்: பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்றபோது அங்கே பொருள்களைப் பாதுகாப்பதற்காக ஒரு இரவு காவற்காரரை வைத்திருப்பதாகச் சொன்னார்கள். அந்தத் தொழிற்

1979 ஏப்ரல் 7]

சாலைக்குத் தேவையான கச்சா பொருள்கள் அதிகமாக அங்கே கிடைப்பதால், அங்கே அந்தத் தொழிற்சாலையை தொடங்கு வதற்கு இந்த அரசு முன் வருமா என்பதை அறியவிரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே என் பதிலில் தெரிவித்திருக்கிறேன். அந்தப் பொருள்களைப் பயன்படுத்தி அரசு நடத்த முடியுமா என்பதைப் பற்றி தொழில் வணிக இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அவரது அறிக்கை வந்தவுடன் அந்தக் கட்டடத்தையும், பொருள்களையும் பயன்படுத்த அரசு விரைவாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. எம். எம். ஏ. ரசாக் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கிற ஒரு உயர்நிலைப் பள்ளியைத் தொடங்குவதற்கு அங்கே இருக்கிற மாவட்ட கல்வி அதிகாரி இடமிருந்து அந்தக் கட்டடத்தைக் கேட்டு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: துணைத் தலைவர் அவர்களே, அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடத்தில் இருந்தால் அதை அவர்கள் அரசுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளக்கோவில் சோமு மில்லுக்கு மின் சக்தி வழங்கல்.

*வினா எண் 660.—திரு கு. ரபணி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டம் வெள்ளக்கோவில் நகரில் உள்ள சோமு மில்ஸ்க்கு மின் இணைப்பு கொடுத்த நாளிலிருந்து மீட்டர் ரீடிங் தவறாக கணக்கிட்டதால் மின்வாரியத்திற்கு சுமார் 60,000 ரூபாய் நஷ்டமேற்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதற்குப் பொறுப்பானவர்கள் யார்? அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

(இ) வசூலிக்காமல் விடப்பட்ட பணத்தை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம். வாரியத்திற்கு இழப்பு ரூ. 28,323.

(ஆ) தவறு செய்த ஊழியர் மீது பொறுப்பை சுமத்த மின்வாரியம் உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

(இ) மின்வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[முற்பகல் 9–40]

திரு. கு. ரமணி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மில்லில் மீட்டர் ரீடிங் எடுப்பதில் பல்லாயிரக்கணக்கான அளவுக்குப் பணம் ஏமாற்றப்பட்டு இருப்பதைப் பார்த்தால் சாதாரணமாகக் கணக்குப் போடத் தெரியாமல் ஏமாந்து போயிருக்கிறார்கள் என்று கருத முடியாது. வேண்டுமென்றே திட்டமிட்டு மீட்டர் ரீடிங்கை ஏமாற்றி பல்லாயிரக்கணக்கான ரூபாய் அளவுக்கு மின்வாரியத்திற்கு வரவேண்டிய வருவாயை எடுத்துக் கொண்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு என்ன என்ன ஏற்பாடு செய்துள்ளது? மீட்டர் ரீடிங் எடுப்பவர்கள் இதற்குத் திறமையுள்ளவர்கள்தான் நியமிக்கப் பட்டிருக்கிறார்களா அல்லது சாதாரண ஊழியர்களைக் கொண்டு தான் செய்கிறார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இதைப் பொறுத்த வரை நடவடிக்கை எடுக்கப்படும். மீட்டர் ரீடிங்கை எடுப்பதற்கு தகுதியானவர்களை மட்டுமே நியமிக்க வேண்டும் என்பதைப் பற்றி மின்வாரியம் ஆலோசித்து வருகிறது.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மின்வாரியத்திற்கு வருமானமே மீட்டர்களின் அடிப்படையில் தான் வருகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? மின் வாரியத்திற்கு மீட்டர் மூலம் லீக்கேஜ் போன்றவைகள் ஏற்படுவதால் அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது. இதைத் தடுப்பதற்கு மீட்டர் ரீடர்ஸ் என்று தனியாக ஸ்தானங்களை ஏற்படுத்த அமைச்சர் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மின்வாரியத்திற்கு மீட்டர்கள் அடிப்படையில் தான் வருமானம் வருகிறது என்பதை அறிவேன். இந்த மீட்டர் ரீடிங்கை எடுப்பதற்கு தகுதியானவர்களைக் கொண்ட தனிப் பிரிவு ஏற்படுத்த வேண்டுமா என்பதைப் பற்றி வாரியம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

1979 ஏப்ரல் 7]

திரு. கு. ரமணி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து தகுந்த நபர்களைக் கொண்டு இந்த மீட்டர் ரீடிங் எடுப்பதில்லை ஏற்கனவே என்று தெளிவாகிறது. ஆகவே இந்த நஷ்டம் வந்த காலத்தில், கணக்கு ஏமாற்றப்பட்ட காலத்தில், இந்த மீட்டர் ரீடிங்கை எடுத்தது யார் என்பதையும் அவர்களுடைய பெயர்கள் என்ன என்பதை இங்கு அறிவிக்க இயலுமா? இவர்கள் சாதாரண ஊழியர்களா அல்லது மீட்டர் ரீடிங்க்காக பயிற்சி பெற்றுள்ள ஊழியர்களா என்பதைத் தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இதைப் பொறுத்த வரையில், மின்மாற்றி 400, 200 ஆம்ப்ஸ் என்றும் லோ டென்ஷனில் 5 ஆம்ப்ஸ் என்றும் இருக்கும். கரண்ட் டிரான்ஸ்பார்மரில் 400, 200 என்ற இரண்டு இருக்கும். லோ டென்ஷனில் 5 ஆம்ப்ஸாக இருக்கும். 200 என்றிருந்தால் அதை 400 ஆக மாற்றி இணைப்பு கொடுக்க வேண்டும். அப்படி இணைப்பு கொடுத்ததில் 200 க்குண்டான தொகை கணக்கிடப்பட்டு தவறு நடந்திருக்கிறது. தவறு செய்தவர்களின் பெயர்கள் விவரம் இல்லை. இருந்தாலும் இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மீட்டர் ரீடிங்கை எடுப்பதற்கு இப்போது பணியாற்றுகின்ற அலுவலர்கள் வயர் மென், லைன் மேன், லைன் இன்ஸ்பெக்டர் இவர்கள் எல்லாம் எடுக்கலாம் என்றிருக்கிறது. மீட்டர் ரீடிங்கை எடுப்பதற்கு இவர்களுக்கு போதுமான பயிற்சி இருக்கிறதா என்று நாங்கள் பரிச்சார்த்தமாக சோதனை செய்வதற்காக ஈரோடு மின் திட்டத்தில் பார்த்தோம். அதில் சிலருக்குப் பயிற்சி இல்லை என்பது தெரிய வந்தது. இதைப்பற்றி வாரியம் தீவிரமாக பரிசீலித்து வருகிறது.

திரு. அ. சுவாமிதாஸ்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மீட்டர் கட்டணத்தை வசூலிப்பதற்கு வீட்டுக்காரர்கள் எவ்வளவு கட்டணம் கட்ட வேண்டும் என்று டிமான்ட் நோட்டீஸ் முன்னர் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். தற்போது டிமான்ட் நோட்டீஸ் கொடுப்பதில்லை. தாங்களாகவே டிமான்ட் நோட்டீஸ் கொடுக்கின்ற இடங்களுக்குச் சென்று பார்த்து கட்டணத்தை கட்டிக் கொண்டிருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் தற்போது வீடுகளில் வந்து இப்படி டிமான்ட் நோட்டீஸ் கொடுப்பதில்லை, மக்களே போய் அறிந்து கட்டவேண்டிய நிலையில் இருக்கின்றோம். இப்படிப்பட்ட கஷ்டத்தால் பலருக்குக் குறிப்பிட்ட காலத்தில் பணம் கட்ட முடிவதில்லை. இதனால் மின் துண்டிப்பு ஏற்படுகிறது, ஆகவே, இதைத் தடுப்பதற்கு ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்த விவரம் தற்போது என்னிடம் இல்லை. மின்வாரியம் பற்றி விவாதத்தில் இப்படிப்பட்ட கருத்துக்களுக்கு நிரம்ப இடம் இருக்கிறது.

திரு. பே. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட தொழிற்சாலைகளில் சரியாக மீட்டர் ரீடிங் எடுக்கப்படாததன் காரணமாக அதிகமான நஷ்டங்கள் ஏற்படுவதால், தொழிற்சாலைகளில், பெரிய ஸ்தாபனங்களில் இதுபோன்ற ரீடிங்கை எடுப்பதற்கு உதவி என்சினியர்களை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பெருமளவுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்தக்கூடிய இடங்களில்—உயர் அழுத்த மின்சாரத்தை பயன்படுத்தக்கூடிய பெரும் தொழிற்சாலைகளில் (ஹைடென்ஷன் இண்டஸ்ட்ரீஸ்) மீட்டர் ரீடிங்கை எடுப்பதற்கு துணை மின் பொறியாளர் அல்லது என்சினியர் அளவுக்கு அலுவலர்களை நியமித்து மீட்டர் ரீடிங்களை எடுக்க வேண்டும் என்றும், இவ்வாறு மீட்டர் ரீடிங் எடுத்த மூன்று நாட்களுக்குள் பில்கள் தயாரிக்கப்பட்டு அவர்களுக்கு அனுப்பிவிட வேண்டும் என்றும் அரசு மின்வாரியத்திற்கு ஆலோசனை வழங்கியிருக்கிறது. விரைவில் வாரியம் அதற்கான உத்தரவுகளை பிறப்பிக்கும்.

மின் கட்டண விகிதங்கள்.

*வினா எண். 661—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மின் கட்டண விகிதங்கள் இடத்திற்கு இடம் வித்தியாசம் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அதை நிவர்த்திக்க அரசு நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) மற்றும் (ஆ) சென்னைப் பெருநகர்ப் பிரிவு பகுதியில் மட்டும் தொழிற்சாலைகள் ஏற்படுவதைத் தவிற்கும் பொருட்டு, இப்பகுதியில், வீட்டு உபயோகம், தெருவிளக்கு, விவசாயம் அல்லாத காரியங்களுக்கு பயன்படுத்தும் மின்சாரத்திற்கு, சாதாரண மின் கட்டணத்திற்குக் கூடுதலாக யூனிட் ஒன்றுக்கு 2 காசு வீதம் மெட்ரோபாலிட்டன் லெவியும் அதன்மீது மேல் வரி 50 சதவீதமும் வசூலிக்கப்படுகிறது.

1979 ஏப்ரல் 7]

திரு. ரா. கிருஷ்ணன் : துணைத் தலைவரவர்களே, இப்பொழுது ஏற்கனவே மெட்ரோபாலிடன் ஏரியாவில் இருந்தாலும்கூட, அங்கே இருக்கக்கூடிய ஏழைகள் அல்லது நடுத்தரத்திற்கும் குறைவான ஏழைகள், இன்னும் சிறு கடைக்காரர்கள் பயன்படுத்தும் இந்த மின்சாரத்திற்கு இப்படி அதிகமாக போடுகிறார்கள். அதை மறுபரிசீலனை செய்து, குறைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பொதுவாக மாநகர் வளர்ச்சியை தடுப்பது, தவிர்ப்பது அரசின் கொள்கை. ஆகவே, வீட்டு உபயோகம் வீதி விளக்குகள் இவைகள் தவிர, மற்றவற்றிற்கு கட்டணம் விதிப்பது என்பது கொள்கை அளவில் எடுக்கப்பட்ட முடிவு. அதை மாற்றும் உத்தேசம் இல்லை.

திரு. வி. கொ. சின்னசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு குதிரை வேகமுள்ள மோட்டார் ஒரு மணி நேரம் ஓடினால் இவ்வளவு மின்சாரம் செலவாகும் என்ற கணக்கு இருக்கிறது. இருந்தாலும், ஒருசில பெரிய பாக்டரியில் மின் இணைப்பைத் துண்டித்து, வேறு வழிகளில் மின்சாரம் பெறுகிறார்கள். அப்படி இயக்குகின்ற நேரத்தில், அதிகம் நேரம் ஓடினாலும், குறைந்த அளவுக்கு மீட்டர் காட்டுகிறது. ஆகவே அப்படிப் பட்டவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவும், மின் இணைப்பை அந்தப் பாக்டரிகளுக்கு கொடுக்காமல் தடுக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இது போன்ற தவறுகளை கண்காணிப்பதற்காக சர்ப்பரைஸ் ஸ்குவாடுகள் மின்சார வாரியத்தில் இருக்கிறது.

திரு. கே. பண்ணை சேதுராம் : துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதி நிலை அறிக்கையில் குடிசையிலே வாழ்கின்ற ஏழைமக்களுக்கு மீட்டர் இல்லாமல் மின்சாரம் வைத்துக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், பணக்காரர்கள் ஒரு பகுதியிலே நூற்றுக்கணக்கான குடிசைக்களைக் கட்டி, ஏழைகளை வைத்திருக்கிறார்கள். இதனால், அதனுடைய பலன் பணக்காரர்களுக்குப் போய்விடுமா ? ஏழைகளுக்குப் போய் சேருவதற்கு வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஏழைகளுக்கு மண்ணெண்ணெய் போதுமான அளவு கிடைக்காதபோது, இந்த விளக்குகள் கொடுப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. ஆனால், குடிசைகளை சில பணக்காரர்கள் வைத்திருப்பதால், அந்தப் பலன் அவர்களுக்குப் போய் விடுமா என்று கேட்டார்கள். அதற்கு மின்வாரியம் ஒன்றும் செய்வதற்கு இல்லை. நாம் மின் விளக்குகள் தான் தர முடியும்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மின் கட்டணம் தரப்படுவதிலே வீடுகளுக்கு முதல் 100 யூனிட்டுகளுக்கு ஒரு சார்ஜும். அதற்குமேல் உபயோகப்படுத்தும் ஒவ்வொரு 100 யூனிட்டுக்கும் குறைந்து கொண்டே போகும் முறையில் கட்டண விதிப்பு முறை இப்போது நடைமுறையில் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. வீடுகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் இந்த முறை இருக்கிறதா ? ஆகவே, இந்த ஸ்லாப் சிஸ்டம் குறைந்த அளவு மின்சாரம் உபயோகிப்பவர்களுக்கு குறைவான சார்ஜும், அதிகமாக உபயோகிப்பவர்களுக்கு அதிகமான ரேட்டும் என்ற வகையிலே மாற்றியமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கட்டண விகிதத்தை மாற்றியமைக்கின்றபோது மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்களின் அரிய யோசனையை இந்த அரசு கருத்தில் கொள்ளும்.

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, சில இடங்களில் மின் கட்டணம் பில் அனுப்புவதில் காலதாமதமாகிறது. சில இடங்களில் அனுப்புவதே இல்லை. இந்தக் குறையை நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ரா. கிருஷ்ணன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த இன்ஸ்டலேஷன் சார்ஜ் நெல்லையிலே விளாத்திகுளத்தில் ஒருவிதமாகவும், தென்காசியிலே ஒருவிதமாகவும் இருக்கிறதே, அதற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன் ?

1979 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இன்ஸ்டலேஷன் சார்ஜ் ஒவ்வொரு சர்வீசுக்கும் தகுந்த மாதிரி, அதாவது ஒரு வீட்டுக்கு சர்வீஸ் கொடுக்கும்போது எவ்வளவு கம்பிகள் பயன்படுத்தப்படுகின்றது என்பதைப் பொறுத்து, அவர்கள் இந்த மதிப்பீடு தயார் பண்ணி வாங்குகிறார்கள்.

[முற்பகல் 9-50]

திரு. க. அன்பழகன் : நான் கேட்கிற கேள்வி இது தொடர்பாகச் சொல்லப்பட்ட எல்லாப் பதில்களையும் சரியாகக் கவனித்துக் கேட்பது அல்ல என்றாலும் பொது மக்கள் எடுத்துச் சொன்ன ஒரு உண்மை அடிப்படையில் கேட்க விரும்புகிறேன். திருச்சி மாவட்டத்தில் பெரம்பலூர் வட்டாரத்தில் சிறு நில விவசாயிகளிடமிருந்து மின்சாரக் கட்டணம் 12 பைசா என்பதற்குப் பதிலாக 14 பைசா என்று கணக்கிட்டு வசூலிக்கப் பட்டதாகக் கூறுகிறார்கள். இரண்டு பைசா அதிகமாக வசூலிப்பதால் எங்கள் வேண்டுகோளைப் பரிசிலிக்கவில்லை என்று குறைபட்டுக் கொண்டார்கள். அதைப் பற்றி அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சிறுநில விவசாயிகள் அதற்கான சான்றிதழை தாசில்தாரிடத்தில் இருந்து வாங்கித் தருவார்களானால் எவ்வளவு கூடுதலாக வசூலிக்கப்பட்டதோ அதைத் திருப்பி தர அல்லது அடுத்து வரும் பில் தொகையில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

கற்பகம் கூட்டுறவுச் சிறப்பங்காடி, தண்டராம்பட்டு

*வினா எண். 662—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தண்டராம்பட்டு கிராமத்தில் அமைக்கப்பெற்ற கற்பகம் கூட்டுறவு சிறப்பங்காடி தற்போது இயங்கவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அங்கத்தினர்களின் பங்குத் தொகை திருப்பி வழங்கப்பட்டு விட்டதா ?

[1979 ஏப்ரல் 7

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :

(அ) ஆம்.

(ஆ) பங்குத் தொகை திருப்பித் தருமாறு கோரி உறுப்பினர்களிடமிருந்து மனு வந்தால், அவர்களுடைய பங்குத் தொகை வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு விநியோகம் மற்றும் விற்பனை சங்கத்தால் திருப்பித் தரப்படும்.

திரு. த. வேணுகோபால் : தற்போது ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலும் ஒரு நியாய விலைக் கடையைத் திறக்கும் நடவடிக்கையை அரசு எடுத்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் தண்டராம்பட்டு தொகுதியை மையமாகக் கொண்டு அந்தக் கிராமத்தில் இயங்கி வந்த கூட்டுறவுச் சிறப்பங்காடி இயங்காத நிலை ஏற்பட்டதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தண்டராம்பட்டில் கூட்டுறவு சிறப்பங்காடி ஒன்று இயங்கி வந்தது. அது தற்போது கூட்டுறவு விவசாயிகள் சேவா சங்கமாக மாறியதன் காரணமாக கற்பகம் கூட்டுறவுச் சிறப்பங்காடி கிளையின் பணியை புதிதாக இன்றைய தினம் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கூட்டுறவு விவசாய சேவா சங்கம் ஆற்றிக் கொண்டிருக்கும் காரணத்தால் அந்தக் கிளை இன்றைய தினம் மூடப்பட்டிருக்கிறது.

திரு. த. வேணுகோபால் : அந்தச் சங்கத்தில் பங்குத் தொகை போட்டவர்கள் அதைத் திருப்பி கொடுக்கவேண்டுமென்று கோரி எவ்வளவு நாட்கள் ஆகிறது ? ஏன் திருப்பித் தரப்படவில்லை ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அந்தச் சங்கத்திலே ஏறத்தாழ 144 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். 1,540 ரூபாய் பங்குத் தொகையாக இருக்கிறது. இதுவரை எந்த உறுப்பினரும் அதைத் திருப்பித் தரவேண்டுமென்று கொடுக்கவில்லை. அவர்கள் மனுப் போட்டால் அந்தப் பணம் உடனடியாகத் திருப்பிக் கொடுக்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தண்டராம்பட்டில் மினி சூபர் மார்க்கட் செய்த பணியை விவசாய சேவா சங்கம் செய்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். மினி சூப்பர் மார்க்கட் தொகுதி பூராவும் பயனடையும் வகையிலும் பக்கத்திலுள்ள தொகுதி பயனடையக் கூடிய வகையிலும் நடத்தக் கூடிய சூழ்நிலை இருந்தது. ஆகவே, அந்த மினி சூப்பர் மார்க்கட் இயங்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

1979 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தண்டராம்பட்டு பஞ்சாயத்தைப் பொறுத்தவரை இந்தக் கூட்டுறவு விவசாய சேவா சங்கம் மட்டுமல்ல, அந்த பஞ்சாயத்துக்கு உட்பட்ட பிற ரெவின்யூ கிராமங்களில் கிராமத்திற்கு ஒரு கடை என்ற வகையில் வேறு கடைகளும் இந்தப் பணியை ஆற்றிக் கொண்டு வருகிற காரணத்தால் கற்பகம் கூட்டுறவு அங்காடி கிளை தேவை யில்லை என்று கருதி மூடப்பட்டிருக்கிறது.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : தண்டராம்பட்டு கிராமத்தில் மூடப்பட்ட கூட்டுறவு சிறப்பங்காடியில் ஷேர் திருப்பித் தரப் படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாகூர் தொகுதியில் மத்தூர் கிராமத்தில் ஷேர் கலெக்ஷன் செய்யப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் அப்படி சிறப்பங்காடி ஏற்படுத்தப்பட வில்லை. பல தடவை மனுக்கள் போடப்பட்டும் ஷேர் இது வரை திருப்பித் தரப்படவில்லை. இதைப் பற்றி அரசுக்குத் தெரியுமா ? அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : என்னிடத்தில் விவரம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அளித்த விவரத்தை அடிப்படையாகக் கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப் படும்.

கூட்டுறவு நிறுவன ஊழியர்களுக்கு குடும்ப நல நிதித் திட்டம்.

*வினா எண் 663—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் குடும்ப நல நிதித் திட்டத்தினை கூட்டுறவு நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர் களுக்கும் விரிவு படுத்தும் திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : துணைத் தலைவர் அவர் களே, குடும்ப நலத் திட்டத்தின் மூலமாக மற்ற அரசு அலுவலர்கள் எல்லாம் பயன் பெறுகிறார்கள். இந்த அர சாங்கத்தினுடைய கூட்டுறவுத் துறையிலே பல்வேறு துறை களிலே நிலவள வங்கிகளிலே, கூட்டுறவு மாவட்ட அளவிலே

[1979 ஏப்ரல் 7

உள்ள வங்கிகள், மத்திய கூட்டுறவு வங்கி, தாலூகா அளவிலே உள்ள ஸ்தாபனங்கள் இவைகளிலே பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கும் இந்தத் திட்டம் தேவை என்று நீண்ட நாட்களாக அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே உடனடியாக அரசு அதற்கு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற பணியாளர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் குடும்ப நலத் திட்டத்தைப் போன்ற அந்தத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை என்றாலும், மத்தியஅரசுத் திட்டமாக ஊழியர் சேம வைப்பு நிதியுடன் கூடிய காப்புத் திட்டம், எம்ப்ளாயீஸ் பிராவிடென்ட் பன்ட் டெபாசிட் லிங்க் இன்ஷூரன்ஸ் ஸ்கீம் என்ற திட்டம் இன்றைக்கு அமலில் இருக்கிறது. அப்படி அது அமலில் இருக்கிற காரணத்தாலே இந்தத் திட்டத்தின் மூலமாக கூட்டுறவு நிறுவனங்களிலே பணியாற்றக் கூடியவர்கள் இன்றைய தினம் பயன்பெற்று வருகிறார்கள்.

திரு. சோ. அழகர்சாமி : துணைத் தலைவர் அவர்களே அரசு ஊழியர்களுக்கு மட்டுமல்ல, பள்ளி ஆசிரியர்களுக்கும், குடும்ப நலத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. கூட்டுறவின் கீழே பல ஸ்தாபனங்களிலே பணியாற்றக்கூடியவர்களுக்கும் இந்தத் திட்டம் அமல் படுத்தாமல் இருப்பது ஒரு பாரபட்சம் இல்லையா ? அமைச்சர் அவர்கள் வேறு திட்டம் அவர்களுக்கு இருப்பதாகச் சொன்னார்கள். அந்தத் திட்டத்திலே திடீரென்று இறந்து விட்டால் 10 ஆயிரம் ரூபாய் என்பது இல்லை என்று அறிகிறேன், திடீரென்று ஆபத்து ஏற்பட்டு விட்டால் அந்தக் குடும்பத்திற்குப் பாதுகாப்பு வேண்டுமென்ற முறையிலே கூட்டுறவுத் துறையிலே வேலை செய்யக் கூடியவர்களுக்கும் அவர்கள் வைத்திருக்கிற நியாயமான கோரிக்கை ஏற்றுக்கொண்டு இந்தத் திட்டத்தை அவர்களுக்கும் கொண்டுவர நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல் நாங்களும் மத்திய அரசாங்கத்திற்கு அதனைப் பற்றிய அத்தனை உணர்வுகளையும் வேண்டுகோளாக விட்டோம். ஆனால் இந்தத் திட்டம் அமலில் இருப்பதால் குடும்ப நலத் திட்டத்தை அவர்கள் ஒப்புக் கொள்ள முடியாது என்று மறுதலித்து விட்ட காரணத்தால் அவர்கள் அதைப் பெற முடியவில்லை.

திரு. மு. அரங்கநாதன்: துணைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள், நான் கூப்பிட்டால் தான் கேட்க வேண்டும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலே உள்ள ஊழியர்களுக்கு எல்லாம் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். கூட்டுறவுத் துறையிலே உள்ள பல்வேறு வகையான ஊழியர்களும் அதை பெறுகின்ற வகையிலே மத்திய அரசாங்கத்திற்கு எழுதி நல்ல முடிவை ஏற்படுத்த இந்த அரசு அக்கறை எடுத்துக் கொண்டு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுப்பார்களா.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: ஏற்கெனவே நான் அவர்கள் மறுதலித்து விட்டார்கள் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறேன். இந்தத் திட்டத்தையே செம்மையாக நிறைவேற்ற மத்திய அரசுக்கு சொல்ல இந்த அரசு மேல் முயற்சிகளை எடுத்துக் கொள்ளும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு ஊழியர்களுக்குக் கொண்டு வரப்பட்டு இருக்கின்ற குடும்ப நலத் திட்டத்தை கூட்டுறவுத் துறை ஊழியர்களுக்கு அமல் படுத்த மத்திய சர்க்கார் மறுத்து விட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது இந்த சட்ட சபையிலேயே அதற்காகத் தீர்மானம் கொண்டு வந்து மத்திய அரசை வற்புறுத்துகின்ற நோக்கம் இந்த அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: அரசுக்கு அப்படிபட்ட உத்தேசம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மீதியுள்ள கேள்விகள் நாளை எடுத்துக் கொள்ளப் பெறும்.

[1979 ஏப்ரல் 7

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

திருச்சி மாவட்டத்தில் முந்திரித் தொழிற்சாலை.

வினா 651— திரு. ஆர். மார்க்கபந்து : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

திருச்சி ஜில்லாவில் செந்துறை, ஆண்டிமடம், ஜெயங்கொண்டம், அரியலூர், திருமானூர் யூனியன் பகுதிகளில் அதிகமாக உற்பத்தியாகும் "முந்திரிக்கொட்டை" பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை அரசு ஏற்படுத்த உத்தேசம் உண்டா ?

விடை —

தற்போது இல்லை.

வெள்ளாற்றின் கரைகள்.

வினா 652— திரு. எ. இராமலிங்கம் : மாண்புமிகு வேளாண்மை-பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள வெள்ளாற்றின் இரு புறத்திலும் நிரந்தரமாகக் கரை அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

விடை—

வெள்ளாற்றின் இரு புறத்திலும் முழு நீளத்திற்கும் கரைகள் அமைக்கும் உத்தேசம் தற்போது இல்லை.

வடாற்காடு மாவட்ட ஒன்றியங்களில் மதிய உணவுத் திட்டத்திற்கு வழங்கிய தொகை.

வினா 653— திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் மதிய உணவிற்காக **1977–78** ஆம் ஆண்டு ஒன்றியங்கள் வழங்கிய தொகை எவ்வளவு?

(ஆ) ஊராட்சிகள் வழங்கிய தொகை எவ்வளவு ?

விடை—

(அ) ரூ. 56,852.

(ஆ) ரூ. 35,257.

ஊராட்சி ஒன்றியங்களில் தொழில் வளர்ச்சி அதிகாரிகள்.

வினா 654—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் தொழில் வளர்ச்சி அதிகாரிகள் எத்தனை பேர் பணியாற்றி வருகிறார்கள்.

(ஆ) கிராமத் தொழில் வளர இவர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா.

விடை—

(அ) 106 தொழில் வளர்ச்சி அதிகாரிகள்.

(ஆ) இந்த எண்ணிக்கையை அதிகப்படுத்த செயற் குறிப்பு ஒன்றும் இல்லை.

ராயநல்லூர் கிராமத்திற்கு சாலை வசதி.

வினா 655—திரு. எம். பரமசிவம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மரக்காணம் ஒன்றியத்தில் உள்ள ராயநல்லூர் கிராமத்திற்கு சாலை வசதி செய்து தர உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

(அ) மற்றும் (ஆ)—இந்தக் கிராமம் ஏற்கனவே போதுமான அளவு சாலை வசதியுள்ளது. சில மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

மருத்துவ மனைகளுக்கு ''ஆம்புலன்ஸ்'' வண்டிகள்.

வினா 656—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள மருத்துவ மனைகளில் 50 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனைகளுக்கும் ''ஆம்புலன்ஸ்'' வண்டி ஒதுக்கீடு செய்யும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ)—தமிழகத்தில் தற்போது 50 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனைகள் மொத்தம் 11 உள்ளன. அவைகளில் கூடலூரிலுள்ள அரசு மருத்துவ மனையில் மட்டும் தான் ஆம்புலன்ஸ் வண்டி ஒன்று உள்ளது. மற்றவைகளுக்கு ஆம்புலன்ஸ் வண்டி ஒதுக்கீடு செய்யும் உத்தேசம் தற்போது ஏதுமில்லை.

சீர்காழி அரசு மருத்துவ மனையில் ஈ.சி.ஜி. வசதி.

வினா 657—திரு. கா. சுப்ரவேலு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி நகரத்திலுள்ள அரசு மருத்துவ மனையில் ஈ.சி.ஜி. வசதி செய்து தரும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை—

இல்லை. தற்சமயம் மாயூரம் அரசினர் மருத்துவ மனையில் சீர்காழி நகர மக்கள் ஈ.சி.ஜி. வசதி பெறுகிறார்கள்.

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 ஏப்ரல் 7]

மன்னார்குடி-நீடாமங்கலம் சாலையில் பாலம்.

வினா 658—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி-நீடாமங்கலம் சாலையில் பூவனூர் கிராமத்திற்குச் செல்லும் வகையில் பாலம் கட்டும் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

மாநிலத்தில் உள்ள உயர் தொடக்கப்பள்ளிகள்.

வினா 659—திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் எத்தனை உயர் தொடக்கப்பள்ளிகள் உள்ளன ?

(இ) அவைகளில் எத்தனை பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் ?

விடை—

(அ) 5,743.

(இ) ஒரு உயர் தொடக்கப்பள்ளிக்கு ஒரு பட்டதாரி ஆசிரியர் வீதம் 1,348 உயர் தொடக்கப்பள்ளிகளில் 1,348 பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கிராம உத்தியோகப் பயிற்சித் திட்டம்.

வினா 660—திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராம உத்தியோகத்திற்காக அளிக்கப்படும் பயிற்சியின்போது சேர்ந்தார்ப்போல் அளிக்கப்படும் சர்வே பயிற்சிக்கும் சேர்த்து சான்று வழங்கப்படுவதில்லை என்பது உண்மையா?

(ஆ) மேற்கண்ட இரண்டு பயிற்சியும் ஒரு சேர பயின்ற பின் மீண்டும் சர்வே பயிற்சிக்கு மட்டும் 48 நாள் தனியாக பயிற்சி பெறவேண்டும் என்ற விதிமுறை இருக்கிறதா ?

விடை—

(அ) சர்வே பயிற்சிக்கும் சேர்த்து சான்றிதழ் வழங்கப்படுகிறது.

(ஆ) இல்லை.

குன்னூர் மருத்துவ மனைக்குப் புதியக் கட்டிடங்கள்.

வினா 661—திரு. க. அரங்கசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குன்னூரில் உள்ள அரசு மருத்துவ மனைக்கு புதிய கட்டிடங்கள் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

விடை—

இல்லை.

1979 ஏப்ரல் 7]

சிவகிரியில் குஷ்டரோக சிகிச்சைக்கான மருத்துவமனை.

வினா 662—திரு. ஆர். கிருஷ்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நெல்லை மாவட்டம், சிவகிரியில் குஷ்டரோக சிகிச்சைக்கான மருத்துவ மனை கட்ட அரசுக்கு உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எந்நிலையில் உள்ளது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

கலசப்பாக்கம் ஒன்றியத்தில் சமுதாயக் கிணறுகள்.

வினா 663—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கலசப்பாக்கம் ஒன்றியத்தில் சமுதாயக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை கிணறுகள் ?

(இ) அதில் எத்தனை விவசாயத்திற்கு பயன்பட்டு வருகின்றன ?

(ஈ) அதன் மூலம் வருவாயாக வந்துள்ள தொகை எவ்வளவு ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஒன்பது.

(இ) ஐந்து.

(ஈ) ரூபாய் 2,247·64 மட்டும்.

[1997 ஏப்ரல் 7

ஒன்றியங்களுக்கு ஜீப் வழங்கல்.

வினா 664—

திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் எல்லா ஒன்றியங்களுக்கும் ஜீப் வழங்கப் பட்டுள்ளதா ?

(ஆ) அவைகளுள் எத்தனை ஜீப்கள் தற்போது இயங்கும் நிலையில் உள்ளன ?

(இ) ஜீப்புகள் வழங்கப்படாத ஒன்றியங்கள் எத்தனை ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 362 ஜீப்புகள் இயங்கும் நிலையில் உள்ளன.

(இ) வினாவிற்கு இடமில்லை.

நிலக்கோட்டை வட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள்.

வினா 665—

திரு. அ. பாலுசாமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை தாலூகாவிலுள்ள நடகோட்டை, அணைப்பட்டி கிராமங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

விடை—

இல்லை.

NEIKATTANVILAI ELEMENTARY SCHOOL BUILDINGS

Q. 666—THIRU N. KITTAPPA : Will the Hon. The Minister for Education be pleased to state—

(a) Whether the Government are aware of the dangerous condition of the roofs of the Neikattanvilai Government Elementary School under the Takkalai Educational Officer's jurisdiction in Kanyakumari district; and

(b) If so, the steps taken thereon ?

1979 ஏப்ரல் 7]

(அ) மற்றும் (இ) : அரசு துவக்கப்பள்ளி, நெய்காட்டன் விளை தற்காலிகமான ஒரு கொட்டகையில் நடந்து வருகிறது. 1978–79 ஆம் ஆண்டுக்கான அக்கொட்டகையின் பராமரிப்பு வேலைகள் சமீபத்தில்தான் முடிவடைந்து இருக்கிறது. இப் பள்ளிக்கென சொந்தமாக நிலமில்லை. எனவே, தகுந்த மனை ஒன்று ஆர்ஜிதம் செய்தபின் சொந்தக் கட்டிடம் கட்ட யோசிக்க லாம்.

COMPOUND WALLS FOR GOVERNMENT GIRLS' HIGH SCHOOL AT AMBASAMUDRAM.

Q. 667—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) Whether it is a fact that there are no compound walls for the Government Girls' High School at Ambasamudram ; and

(b) if so, the steps taken thereon?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அரசு நிதி நிலை இடம் தருவதற்கேற்ப, ஆண்டு தோறும் அரசினர் உயர்நிலைப்பள்ளிக் கட்டிட வேலைகளுக்கு ஒதுக்கப்படும் தொகைக்குட்பட்டு இப்பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்டும் தேவையை இனி வரும் ஆண்டுகளில் நிறைவேற்ற முயற்சி எடுக்கப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

WATER FROM THE VARADHAMA RIVER DAM.

Q. 668—THIRU S. M. VASAN : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(a) the total water let out from the Varadhama river dam in Palani area into the Pappan Canal ;

(b) the total quantity of water sucked by the sand bunds; and

(c) the amount of water available for irrigation?

(அ) வரதமாநதி அணையிலிருந்து பாப்பான் வாய்க்காலுக்கு 1—10—1977 முதல் 28—2—1978 வரை திறந்து விடப்பட்ட தண்ணீர் அளவு சுமார் 765·85 மி.க. அடி.

(ஆ) 191·45 மி.க. அடி.

(இ) 574·40 மி.க. அடி.

RECORD OF GROUND WATER LEVEL.

Q. 669—THIRU S. M. VASAN: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) Whether any record of Ground Water level is maintained in this State district-wise; and

(*b*) if so, the details thereof?

விடை—(அ) இந்த மாநிலத்தில் மாவட்ட வாரியாக நிலநீர் மட்ட அளவுகள் பதிவு செய்து வைக்கப்படுகின்றன.

(ஆ) பதிவு செய்யப்பட்ட புள்ளி விவரங்கள் இன்னும் அச்சிடப்பட்டு வெளியிடப்படவில்லை. ஆனால், ஒவ்வொரு ஆண்டும் தரை மட்டத்திலிருந்து தண்ணீர் மட்டத்தின் சராசரி ஆழம் போன்ற புள்ளி விவரங்கள் புத்தக வடிவில் தயாரிக்கப்படுகிறது.

SATHIAMANGALAM TANK.

Q. 670—THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state: the steps taken to expand the water storage potential of the Sathiamangalam Lake in Gingee in South Arcot district.

விடை—செஞ்சியிலுள்ள சத்தியமங்கலம் ஏரியின் நீர்ப் பிடிப்பு பகுதியிலிருந்து கிடைக்கும் 123 மி. க. அடி தண்ணீரே பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டின் நிலங்கள் முழுமைக்கும் போதுமானதால், இந்த ஏரியின் கொள்ளளவை உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

[1979 ஏப்ரல் 7]

திருவண்ணாமலைக் கோட்ட வானொலி மேற்பார்வையாளர் அலுவலகம்.

வினா 671—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவண்ணாமலை கோட்டத்தில் உள்ள ரேடியோ சூபர்வைசர் அலுவலகத்தில் ரிப்பேருக்காக 1976-77 ஆம் ஆண்டில் எத்தனை ரேடியோக்கள் கொடுக்கப்பட்டன ?

(ஆ) அவைகளை எவ்வளவு காலத்தில் ரிப்பேர் செய்யப் பட்டு கொடுக்கப்பட்டுள்ளன ?

(இ) காலதாமதத்திற்கு என்ன காரணம் ?

விடை —

(அ) 695

(ஆ) சாதாரணமாக 10 நாட்களுக்குள் பழுது பார்க்கப் பட்டு அனுப்பப்பட்டுள்ளன.

(இ) தேவையான சில உதிரிப் பாகங்கள் வானொலி மேற் பார்வையாளரிடம் இருப்பு இல்லாததால் உற்பத்தியாளரிட மிருந்து பெற வேண்டி இருந்ததால் சில பெட்டிகளைப் பழுது பார்ப்பதில் ஒரு மாத அளவிற்கு காலதாமதம் ஏற்பட்டிருக்கக் கூடும்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

HOUSES RELEASED FROM ACCOMMODATION CONTROL

Q. No. 672—Thiru K. SUPPU : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) Whether it is a fact that a number of houses were released by the Government during the period of emergency from the Accommodation Control ; and

(*b*) If so, the reasons therefor?

விடை—(அ) மற்றும் (இ) நெருக்கடி நிலை செயலில் இருந்த காலத்தில் 85 வீடுகள் விடுவிக்கப்பட்டன. அரசு வாடகைக்கு மேற்கொண்டுள்ள வீட்டை விடுவிக்குமாறு கேட்கின்ற வீட்டுச் சொந்தக்காரரின் வேண்டுகோள் உண்மையானது என்றும் நியாயமானது என்றும் அரசு கருதினால், அத்தகைய வீடுகளை விடுவிக்கலாம் என தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) சட்டம் வகை செய்கிறது. வீட்டுச் சொந்தக்காரரின் அனுபோகத்திற்காகவும், கட்டிடம் முழுவதையும் இடித்துத் தள்ளி மறுபடி புதிதாகக் கட்டுவதற்காகவும் அவ்வீடுகள் விடுவிக்கப்படுகின்றன.

அரூர் வட்டத்தில் புதிய அணைகள் கட்டும் திட்டம்.

வினா 673—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரூர் வட்டத்திலுள்ள வாணியார் முள்ளிக்காட்டு அணை, வள்ளிமதுரை அணை, வாணியார் அரூர் அணை, பயிர்நாயக்கன் பட்டி அணை, கோட்டைப்பட்டி அணை ஆகிய திட்டங்களை அமுல்படுத்தும் செயல் குறிப்புகள் உள்ளனவா ?

விடை—

ஆம். வாணியாற்றின் குறுக்கே முள்ளிக்காடு கிராமத்தின் அருகில் ரூ. 560 இலட்சம் செலவில் நீர்த்தேக்கம் அமைப்பதற்கான திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளது.

வள்ளிமதுரை வரட்டாறு நீர்த்தேக்க திட்டம், அரூர் வாணியாற்றுத்திட்டம், பாப்பநாயக்கன்பட்டியருகே காவிலாற்றுத் திட்டம் மற்றும் கோட்டைப்பட்டிக் கல்லாற்றுத் திட்டம் ஆகியவை பரிசிலனையில் உள்ளன.

கீளானூர் அரிசனக் குடியிருப்பு அருகில் உள்ள சுடுகாட்டுப் பகுதி ஆக்கிரமிப்பு.

வினா 674—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் வட்டம், கீளானூர் அரிசன குடியிருப்புக்கு அருகில் உள்ள சுடுகாட்டுப் பகுதி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அதை அகற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

1979 ஏப்ரல் 7]

விடை—

(அ) ஆம்.

(ஆ) கீழானூர் கிராமம், சர்வே எண். 2-ல் ஆற்றுப் புறம்போக்கு நிலம் மொத்த விஸ்தீரணம் 5·18 ஏக்கரில் 10 (பத்து) செண்டு நிலத்தை அவ்வூர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மயான பூமியாக உபயோகப்படுத்தி வருகின்றனர். இந்த மயானத்தை ஒட்டியுள்ள சுமார் 0·23 ஏக்கர் நிலத்தை இரு நபர்கள் திருமதி பழனியம்மாள் (6 செண்டு), திரு. லட்சுமணன் (17 செண்டு) ஆக்கிரமித்துள்ளார்கள். இந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற அரூர் தாசில்தார் நடவடிக்கை எடுத்து வருகிறார். மேலும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் கேட்டுக்கொண்டுள்ள படி, அவர்கள் காலனிக்கு கிழக்குப் பகுதியில் உள்ள பட்டா நிலங்களை மயானத்திற்குத் தேவையான அளவு நிலங்களை ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பனை விபத்தில் இறந்தவர் குடும்பங்களுக்கு நிதி உதவி.

வினா 675—திரு. டி. ஞானசிகாமணி: மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனை விபத்தில் இறந்தவர்கள் குடும்பத்திற்கு ரூ. 5,000 வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரை எத்தனை குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது ?

(ஆ) மேலும் எத்தனை நபர்களுக்கு வழங்கப்பட வேண்டியுள்ளது ?

விடை—

(அ) ஒன்பது குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டது. நிவாரணத் தொகை வழங்கப்பட்டவர்களின் *பட்டியலொன்று இணைக்கப்பட்டுள்ளது.

(ஆ) இம்மாதிரியான நிவாரணம் கோரி, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நேரிடையாக பல மனுக்கள் அனுப்பப் படுவதாலும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பரிந்துரையை ஏற்று, அரசு உத்தரவிடுவதாலும், மேலும் எத்தனை நபர்களுக்கு நிவாரணத் தொகை அளிக்கப்பட வேண்டியுள்ளது என்பது மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து வரும் அறிக்கையைப் பொருத்திருக்கிறது.

(* 332-333 ஆம் பக்கத்தில் இணைப்பு I-ஆக அச்சிடப் பெற்றுள்ளது.)

[1979 ஏப்ரல் 7

பள்ளிமடத்தில் ஏழை விவசாயிகளுக்கு பட்டா வழங்குதல்.

வினா 676—திரு. டி. ஞானசிகாமணி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குன்றத்தூர் வில்லேஜ்ஜில் மேலமங்கலம் என்னும் இடத்திலுள்ள சுசீந்தரம் வட்டம் பள்ளிமடத்திற்கு கீழுலுள்ள மிச்ச நிலத்தில் குடியிருக்கும் ஏழை விவசாயிகளில் எத்தனை பேருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது?

விடை—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், குன்னத்தூர் கிராமத்தில் மேலமங்கலம் என்னும் ஊரில் சுசீந்திரம் வட்டப்பள்ளி மடத்திற்குச் சொந்தமான நிலங்களில் ''மிச்ச நிலம்'' என்று திருநெல்வேலி நிலச் சீர்திருத்த அனுமதி பெற்ற அலுவலரால் இதுவரை அறிவிப்பு செய்யப்படவில்லை. மேற்படி அறிவிப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் இப்போது எடுக்கப்பட்டு வருகின்றன. ''மிச்ச நிலம்'' அறிவிக்கப்பட்டதும் அங்குள்ள ஏழை விவசாயிகளுக்குப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மின்விசையில் இயங்கும் பம்பு செட்டுகள்.

வினா 677.—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிநீர் வாரியத்தின் மூலம் பரிட்சார்த்தமாக செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென்னாற்காடு மாவட்டங்களில் மின்விசையில் இயங்கும் பம்பு செட்டுகள் அமைக்கப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டில் எத்தனை அமைக்கப்பட்டன, மாவட்ட வாரியாக?

(இ) மேலும் எத்தனை அமைக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது?

1979 ஏப்ரல் 7]

விடை—

(அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் எந்த ஒரு மாவட்டத்திலும் பரிட்சார்த்தமாக மின்விசை பம்புகள் அமைக்கப்படவில்லை. இருப்பினும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் கிராமக் குடிநீர்த் திட்டத்திற்காக அந்தந்த ஊர் மக்கட்தொகையின் அடிப்படையில் மின்விசை பம்பு மூலமாகவோ அல்லது கைபம்பு மூலமாகவோ குடி தண்ணீர் வசதி செய்துக் கொடுக்கப்படுகிறது. மேலும், செங்கல்பட்டு, வட ஆற்காடு மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தாலும் மற்றும் இதர துறைகளாலும் அமைக்கப்பட்ட மின்விசைப் பம்புகள் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் நாள் முதல் ஒரு வருடத்திற்கு பரிட்சார்த்தமாக பராமரிக்கும் பொறுப்பை வாரியம் ஏற்றுக் கொண்டது. இந்த மூன்று மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள மின்விசை பராமரிப்புத் திட்டம் செயல்படும் விதத்தினை ஓராண்டு காலத்தில் அறிந்த பின் மற்ற மாவட்டங்களுக்கும் இத்திட்டம் விரிவு படுத்தப்படும்.

(ஆ) ஆண்டு வாரியாக தகவல்கள் இல்லை. ஆனாலும் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதிவரை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தாலும் மற்றும் இதர துறைகளாலும் அமைக்கப்பட்டுள்ள மொத்த மின்விசை பம்புகளின் விவரம் கீழ் வருமாறு :—

மாவட்டத்தின் பெயர்.	மைய விலக்கு பம்புகள்.	தாரை விலக்கு பம்புகள்.	நீர்முழ்கி பம்புகள்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)
1. செங்கல்பட்டு ..	316	280	40	636
2. வட ஆற்காடு ..	536	399	17	952
3. தென்னாற்காடு	801	174	188	1,163
மொத்தம் ..	1,653	853	245	2,751

(இ) தற்சமயம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பிரிவு 1 (குடிநீர் ஆதாரமற்ற சிற்றூர்கள்) மற்றும் பிரிவு 2 ஐ (குடிக்க தகுதியற்ற நீர்நிலை உள்ள சிற்றூர்கள்) சார்ந்த சிற்றூர்களுக்கு குடிநீர் வசதி செய்யும் பணியை ஏற்றுக் கொண்டுள்ளது. அதில், மக்கள் தொகை 750-க்கு மேல் உள்ள சிற்றூர்களுக்கு எங்கெங்கு மின்விசை பம்புகள் அவசியமோ அங்கு அமைக்கப்படும். இதற்கான புள்ளி விபரங்கள் வேலைகள் முடிவு பெற்றவுடன் தெரியவரும்.

மாயூரம் அரசினர் ஞானாம்பிகை பெண்கள் கல்லூரி.

வினா 678—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரத்திலுள்ள அரசினர் ஞானாம்பிகை பெண்கள் கல்லூரியினை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தருமபுரம், ஞானாம்பிகை அரசு கலைக் கல்லூரியில் இளங்கலை (விலங்கியல்) வகுப்புகள் 1978–79-ல் இருந்து துவக்கும்படி 1978 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28 ஆம் தேதி அன்று அரசு ஆணை விடுத்துள்ளது. மேற்கண்ட வகுப்புகளில் ஆங்கில போதனா மொழியில் 18 மாணவிகளும், தமிழ் போதனா மொழியில் 14 மாணவிகளும் பயின்று வருகின்றனர். இப்புதிய வகுப்பு தொடங்குவதற்காக புத்தகங்கள், தளவாடங்கள், உபகரணங்கள் உட்பட செலவினங்களுக்கு மொத்தம் ரூ. 20,000 அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

அன்னூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் அறுவை சிகிச்சைப் பிரிவு.

வினா எண். 679—திரு. சொ. ந. பழனிச்சாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிரிட்டிஷ் அரசு உதவித் திட்டத்தின் கீழ் அன்னூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இந்த வருஷம் கிராமப் பகுதிகளில் அறுவை சிகிச்சை வசதிகள் பிரிவினை விஸ்தரிப்பு செய்தல் பற்றிய குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

1979 ஏப்ரல் 7]

கொடைக்கானலில் உருளைக் கிழங்கு விளை நிலங்களைக் குத்தகைக்கு விடல்.

வினா எண். 680—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் அரசுக்குச் சொந்தமான குத்தகைக்கு உருளைக் கிழங்கு பயிரிடும் நிலம் ஏலத்திற்கு விடப்பட்டு வருகின்றதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஏக்கர் நிலம் அந்த வகையில் ஏலத்திற்கு விடப்படுகிறது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கடந்த மூன்று ஆண்டுகளில் கொடைக்கானலில் அரசுக்குச் சொந்தமான நிலங்களில் உருளைக்கிழங்கு பயிரிட குத்தகைக்கு விடப்பட்ட விபரம் பின்வருமாறு :—

வருடம்.			பரப்பு ஹெக்டர்.
1976–77	..	..	829-20
1977–78	..	..	897-10
1978–79	..	..	912-00

கூறைநாடு உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் தீ விபத்தினால் பாதிப்பு.

வினா எண். 681—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978-ம் ஆண்டில் மாயூரம் நகராட்சியினரால் நடத்தப்பட்டு வரும் கூறைநாடு நகராட்சி உயர்நிலைப் பள்ளியின் பெரும் பகுதி தீக்கிரையானது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனைப் புதுப்பிக்க மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை யாது ?

விடை —

(அ) கீற்றுக் கொட்டகைப் பகுதியில் தீப்பிடித்தது, மேற்கூறையும் இரண்டு அறையிலுள்ள மரச்சாமான்களும் எரிந்து விட்டன.

(ஆ) கல்நார் அட்டையைக் கொண்ட புதிதாக கொட்டகைகள் அமைக்கப்பட்டு வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

உயர்நிலைப் பள்ளிகளில் தொழில் வாய்ப்புக் கல்வி வகுப்புகள்.

வினா எண். 682—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(ஆ) நடப்பாண்டில் எத்தனை உயர்நிலைப் பள்ளிகளில் தொழில் வாய்ப்பு கல்வி வகுப்புகள் துவக்கப்பட்டன ?

(ஆ) அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) & (ஆ) 1978–79-ல் உயர் நிலைப் பள்ளிகளில் புதிதாக தொழில் வாய்ப்புக் கல்வி வகுப்புகள் எவையும் துவக்கப்படவில்லை, எனினும் மேல்நிலைப் பள்ளிகள் 709-ல் மொத்தம் 1,153 தொழில் வாய்ப்புக் கல்வி வகுப்புகள் தொடங்கப்பட்டன. அவ்வகுப்புகளில் சுமார் 23,000 மாணவமாணவியர் பயின்று வருகின்றனர்.

தொழில் கல்வியில் தேர்ச்சிப்பெற்று வேலையில்லா திருப்போர் எண்ணிக்கை.

வினா எண். 683—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கார் ரிப்பேர், ஏலெக்ட்ரிகல் ஒயின்டிங் முதலிய தொழில் கல்வியில் தேர்ச்சிப் பெற்று வேலையில்லாதிருப்போரின் எண்ணிக்கை என்ன ?

(ஆ) இவர்களை உடனடியாக வேலையில் அமர்த்த அரசு சிறப்பு திட்டம் தீட்டியுள்ளதா ?

1979 ஏப்ரல் 7]

விடை—

(அ) 1978-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ம் நாள் அன்றைய நிலவரப்படி, 5,443 பேர்கள், விவரம் பின்வருமாறு—

தொழிலின் பெயர்.	தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் படித்து தேர்ச்சி பெற்றவர்கள். (Institutionally trained.)	தொழில் அனுபவம் பெற்றவர்கள். (Not institutionally trained but experienced.)	மொத்தம் காத்திருந்தவர்கள்.
(1) கார் ரிப்பேர் ..	2,660	762	3,422
(2) ஆட்டோ எலக்ட்ரிஷியன்	158	98	256
(3) எலக்ட்ரிஷியன் ..	1,509	225	1,734
(4) ஆர்மச்சூர் வைண்டர்	..	31	31
மொத்தம் ..	4,327	1,116	5,443

(ஆ) இல்லை.

கூட்டுறவுக் கடன்களை விளை பொருள்களாகவே திருப்பித் தரும் திட்டம்.

வினா எண் 684— திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகள் கூட்டுறவு சங்கங்களில் வாங்கிய கடனை திருப்பிக் கட்டும் போது பணத்திற்கு பதிலாக தானியமாக பெற்றுக் கொள்ளும் திட்டத்தை அரசு பரிசீலனை செய்யுமா?

விடை---

விவசாய சங்கங்கள் கொடுத்த கடன் மொத்தத்தையும் தானியமாக பெறும் திட்டம் எதுவும் கிடையாது. அதை செய்வதற்கு தேவையான வசதிகளும் சங்கங்களுக்கு கிடையாது. ஆனால் விற்பனையை கடனுடன் இணைக்கும் திட்டத்தின்கீழ் விற்பனை சங்கங்கள் உறுப்பினர்களின் விளைபொருளை வாங்கி விற்று, கூட்டுறவு கடன் சங்கத்திற்கு திருப்பிக் கொடுக்க வேண்டிய பணத்தை அளித்து விட்டு, மீதியை உறுப்பினரிடம் கொடுக்கிறது. ஆனால் இது ஒரு அளவில் நீலகிரி, சேலம் மாவட்டங்களில் உருளைக்கிழங்கு, கடலை முதலிய வணிகப் பயிர்களை பொறுத்தமட்டில்தான் செயல்படுகிறது. 1977-78-ம் வருடம் வசூலான 103·90 கோடியில் 1·71 கோடிதான் இவ்விதம் வசூல் செய்யப்பட்டது.

தஞ்சை மாவட்டத்தில் ஆற்றங்கரைகள், வாய்க்கால் கரைகள் பழுதுபார்த்தல்.

வினா எண் 685---திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா---

1977 நவம்பரில் தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தினை ஈடுசெய்ய ஆற்றுக்கரைகள், வாய்க்கால் கரைகள் கட்டவும் பழுது பார்க்கவும் செய்யப்பட்ட மொத்த செலவுகள் எவ்வளவு ?

விடை---

1977-ம் ஆண்டு நவம்பரில் தஞ்சாவூர் மாவட்டத்தில் பாசன அமைப்புகளுக்கு ஏற்பட்ட வெள்ளச் சேதத்தினை ஈடு செய்ய கரைகள் கட்டவும் பழுது பார்க்கவும் 30-9-78 வரை செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 116.357 இலட்சம் ஆகும். வெள்ளப் பணிகளுக்காக தஞ்சாவூர் மாவட்டத்திற்கு 1977-78 மற்றும் 1978-79-ல் ஒதுக்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ. 136·98 இலட்சம் ஆகும்.

1979 ஏப்ரல் 7]

தூத்துக்குடி சங்கர ராமேஸ்வரர் திருக்கோயில் வருமானம்.

வினா எண் 686—திரு. ந. தனசேகரன் : மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி சங்கர ராமேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான கட்டிட சொத்துக்களும், சொந்தமான நிலங்களின் பரப்பளவும் எவ்வளவு ?

(ஆ) அதன் மூலம் அரசுக்கு கிடைக்கும் வருமானம் எவ்வளவு ?

விடை—

(அ) தூத்துக்குடி சங்கர ராமேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான சொத்துக்களாவன:—

கட்டிட சொத்துக்கள்—46.

நிலங்கள்—நன்செய்—6 ஏக்கர் 45 செண்ட்.

புன்செய்—76 ஏக்கர் 58 செண்ட்.

(ஆ) கட்டிடங்கள் மற்றும் நன்செய் நிலம் மூலம் கோயிலுக்குக் கிடைக்கும் ஆண்டு வருமானம் மொத்தம் ரூ. 36,767·00, புன்செய் நிலம் மூலம் வருமானம் ஏதுமில்லை.

உயர் இடைநிலை வகுப்பு ஆசிரியர்களுக்கு சிறப்பு ஊதியம்.

வினா எண் 687—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

(அ) +2 வகுப்புகளுக்குப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குச் சிறப்பு ஊதியம் வழங்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு ? இல்லையெனில் சிறப்பு ஊதியம் வழங்க அரசு முன் வருமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அரசாணை எண். 1091, கல்வி, நாள் 15—6—78-ல் நிர்ணயித்துள்ள கல்வித் தகுதிகள் பெற்றிராவிடினும், தலைமை ஆசிரியராக அல்லது ஆசிரியராகத் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்டுள்ளோருக்கு, கீழ்க்கண்டவாறு தனிச்சம்பளம் (Special Pays) பெற, அரசாணை எண். 1073, நிதி, நாள் 6—10—78-ல் ஆணையிடப்பட்டுள்ளது:—

	தனிச் சம்பளம்.
தலைமை ஆசிரியர்	ரூ. 50 மாதம்.
ஆசிரியர்	ரூ. 25 மாதம்.
உடற்பயிற்சிக் கல்வி இயக்குநர் ..	ரூ. 25 மாதம்.

முறைசாராக் கல்வி நிலையங்கள்.

வினா எண் 688—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இதுவரை எத்தனை ''முறைசாராக் கல்வி நிலையங்கள்'' திறக்கப்பட்டிருக்கின்றன ?

(ஆ) இந்த ஆண்டு எத்தனை நிலையங்கள் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது ?

(இ) இது செய்யும் பணி என்ன ?

விடை—

(அ) 3,708 நிலையங்கள்.

(ஆ) 748 நிலையங்கள்.

(இ) தங்கள் ஏழ்மை காரணமாகவும் குடும்ப நிலை காரணமாகவும், பாதியிலே பள்ளியை விட்டு விலகியவர்களுக்கும் அல்லது பள்ளிக்கே செல்லாத சிறார்களுக்காகவும் அவர்கள் ஈடுபட்டுள்ள தொழில் சார்ந்தோ அல்லது அவர்களது பகுதியின் முக்கிய தொழில் சார்ந்தோ 10 மாத காலத்திற்கு முறைசாராக் கல்வி மையங்களில் கல்வி கற்பிக்கப்படுகிறது. இவ்வாறு உழவர்

1979 ஏப்ரல் 7]

பெருமக்கட்கு உழவுத் தொழில் சார்ந்து அத்தொழிலின் நவீன செயல்முறைத் திட்டங்கள் பற்றி 10 மாத காலத்திற்கு கல்வி கற்பிக்கப்படுகிறது. இது போன்ற ஓரளவு எழுத்தறிவு பெற்ற இளைஞர்கட்கு தொழில் முன்னேற்றம் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு ஏற்றவாறு பாடத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு எழுத்தறிவுடன் தொழில் அறிவும் கற்பிக்கப் படுகிறது.

நன்னிலம் ஒன்றியத்திற்கு ஒதுக்கப்பட்ட வெள்ள நிவாரண நிதி.

வினா எண் 689—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் ஒன்றியத்திற்கு வெள்ள நிவாரண வேலைக் காக எவ்வளவு ரூபாய் ஒதுக்கப்பட்டது ?

(ஆ) ஒதுக்கப்பட்ட பணத்திற்கு வேலை மேற்கொள்ளப் பட்டதா ?

விடை—

(அ) ரூபாய் 30,900.

(ஆ) வேலைகள் ரூபாய் 35,943·30 செலவில் செய்து முடிக்கப்பட்டன.

ஆறுமுகநேரி பி. ஆர். சி. தொழிற்சாலை.

வினா எண் 690—திரு. ஆர். கிருஷ்ணன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் ஆறுமுகநேரியிலிருக்கும் பி. ஆர். சி. தொழிற்சாலை கடந்த ஆறு மாத காலமாக மூடிக் கிடப்பதற்குக் காரணம் என்ன ?

(இ) அதை திறப்பதற்குத் தமிழ்நாடு அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) உற்பத்தி விலை அதிகரித்துள்ளதாலும் நிறுவனத்தின் சீரடையாத பொருளாதார நிலையினாலும் நிர்வாகத்தினர் 15—2—1978 அன்று முதல் தொழிலாளர்களை லே-ஆப செய்தனர்.

(இ) இத்தொழிற்சாலையைத் திறப்பதற்கான சாத்தியக் கூறுகள் அனைத்தையும் தொழில் துறையில் மத்திய அரசினைக் கலந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு மத்திய அரசு உதவி.

வினா எண் 691—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78-ம் ஆண்டிற்கும், 1978–79-ம் ஆண்டிற்கும் முறையே தமிழ்நாடு சாலை மேம்பாட்டிற்கு மத்திய அரசு ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு ?

(ஆ) நமது மாநில அரசு கோரிய தொகை முறையே எவ்வளவு ?

விடை—

(அ) 1977–78 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு சாலை மேம்பாட்டிற்கு மத்திய அரசு ஒதுக்கியுள்ள தொகை ரூ. 675·23 இலட்சம்.

1978–79 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு சாலை மேம்பாட்டிற்கு மத்திய அரசு ஒதுக்கியுள்ள தொகை ரூ. 664·43 இலட்சம்.

(ஆ) 1977–78 ஆம் ஆண்டிற்கு மாநில அரசு கோரிய தொகை ரூ. 771·07 இலட்சம்.

1978–79-ம் ஆண்டிற்கு மாநில அரசு கோரிய தொகை ரூ. 946·77 இலட்சம்.

* (விவரங்கள் இணைப்பில் காணவும்.)

*[334-ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.]

1979 ஏப்ரல் 7]

கலப்புத் திருமணம் செய்துகொண்டோருக்கு வழங்கப்பெற்ற தங்கப் பதக்கங்கள்.

வினா எண் 692—திரு. ஏ. செல்லப்பா: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்ற ஆண்டு 1977-78-ல் கலப்புத் திருமணம் செய்து கொண்ட எத்தனை பேருக்கு தங்கப் பதக்கம் கொடுக்கப்பட்டுள்ளது ?

(ஆ) இன்னும் தங்கப் பதக்கம் பெற வேண்டியவர்கள் எவரேனும் உள்ளனரா ?

விடை—

(அ) 79 பேருக்கு தங்கப் பதக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகள் அந்த உண்மையினைத் தெரிவித்து மனு செய்தால் அவர்களுக்குத் தங்கப் பதக்கம் காலதாமதமின்றி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 1977–78-ல் விண்ணப்பித்து, தங்கப் பதக்கம் பெற வேண்டியவர்கள் எவரும் இல்லை.

வலங்கைமான், அம்மாப்பேட்டை ஒன்றியங்களில் தாழ்த்தப் பெற்ற மக்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம்.

வினா எண் 693—திரு. அ. செல்லப்பா: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா— •

இந்த அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் வலங்கைமான் தொகுதியில் வலங்கைமான், அம்மாப்பேட்டை ஆகிய இரண்டு ஒன்றியங்களில் எந்தெந்த கிராமங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது ?

விடை—

தாழ்த்தப்பட்டவர்களுக்கு நடப்பாண்டில் (1978–79) எத்தனை வீடுகள் கட்டப்பட வேண்டும் என்பது குறித்து முடிவு செய்யப்பட்ட பின்னர் எந்தெந்த கிராமங்களில் வீடுகள் கட்டலாம் என்பது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

ஒத்தக்கால் மண்டபம் பேரூராட்சியில் கிளை நூலகம்.

வினா எண் 694—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் மதுக்கரை ஒன்றியத்திலுள்ள ஒத்தக்கால் மண்டபம் பேரூராட்சி கிளை நூலகம் கேட்டு விண்ணப்பித்ததா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன

விடை —

(அ) ஆம். மதுக்கரை ஒன்றியத்தில் ஒத்தக்கால் மண்டபத்தில் நூலகம் அமைக்கக் கோரி விண்ணப்பம் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரால், மாவட்ட நூலக அலுவலருக்கு அனுப்பப்பட்டது.

(ஆ) நடப்பு ஆண்டில் புதிய கிளை நூலகங்கள் திறக்க ஆணையேதுமில்லை என்றும், புதிய நூலகங்கள் திறக்க ஆணை கிடைக்கப்பெற்றவுடன் புதிய கிளை திறப்பது பற்றி பரிசீலிக்கப்படும் என ஒத்தக்கால் மண்டபம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு கோயம்புத்தூர் மாவட்ட நூலக அலுவலரால் பதில்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 ஏப்ரல் 7]

1977ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6ஆம் நாளைய கடித மூலம் அனுப்பப்பட்டது மேலும் அப்பகுதியில் ஊரக இயங்கு நூலக முகாம்கள் செயல்பட்டு, அங்குள்ளவர்களுக்கு நூலக வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

புதுப்பதிமலைப் பகுதியில் பள்ளிக் கட்டிடம்.

வினா எண் 695—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் மதுக்கரை ஒன்றியம் மாவுத்தம்பதி கிராமத்திலுள்ள புதுப்பதியில் வாழும் மலைவாழ் மக்களுக்கு பள்ளிக் கட்டிடம் கட்ட மதுக்கரை ஊராட்சி ஒன்றியம் திட்டம் போட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டி முடிக்கப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அடுத்த நிதி ஆண்டில் வேலை மேற்கொள்ளப்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தருமபுரி மாவட்டத்தில் சமூகநலப் பணிகளுக்கு ஒதுக்கப்பெற்ற தொகை.

வினா எண் 696—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு சமூக நலத்துறைஅமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(ஆ) 1978–79-ல் தருமபுரி மாவட்டத்திற்கு அரசு சமூக நலத்துறைக்கு எவ்வளவு தொகை ஒதுக்கியுள்ளது ?

(ஆ) என்னென்ன வகைகளில் செலவழிக்க திட்டமிடப்பட்டுள்ளது ?

விடை—

(அ) ரூ. 14,47,300.

(ஆ)

திட்டம்.	ஒதுக்கீடு.
(1)	(2)
	ரூபாய்.
(1) பெண்கள் நலம்	17,900
(2) பயிற்சி நிலையம்	11,500
(3) சிறப்புத் திட்டங்கள்—	
(அ) தட்டச்சுப் பயிற்சி	10,500
(ஆ) விதவைகளின் குழந்தைகளுக்கு இலவச புத்தகங்கள் வழங்குதல்.	5,400
(4) சிறார் நலம்	11,90,000
(5) பாலாஹார் (கேர் உதவி) ..	2,12,000
மொத்தம் ..	14,47,300

செஞ்சி வட்டத்தில் கிணறு வெட்ட வழங்கப்பெற்ற தொகை.

வினா எண் 697—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடை பாரா—

(அ) செஞ்சி வட்டத்தில் விவசாயிகளுக்கு புதிய கிணறுகள் வெட்டவும் பழைய கிணறுகளை ஆழப்படுத்தவும் 1976–77, 1977–78 ஆம் ஆண்டுகளில் வழங்கப் பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) இதில் கடனாகவும், மான்யமாகவும் வழங்கப்பட்ட தொகை எவ்வளவு ?

1979 ஏப்ரல் 7[

விடை—

(அ) செஞ்சி வட்டத்தில் விவசாயிகளுக்குப் புதிய கிணறுகள் வெட்டவும், பழைய கிணறுகளை ஆழப்படுத்தவும் 1976–77, 1977–78 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட கடனும், மான்ய தொகைகளும் வருமாறு—

	புதிய கிணறுகளை வெட்ட.		பழைய கிணறுகளை ஆழப்படுத்த.	
	கடன்.	மான்யம்.	கடன்.	மான்யம்.
(1)	(2)	(3)	(4)	(5)
	(ரூபாய் இலட்சத்தில்.)			
1976–77 ..	0.51	0.015	0.11	..
1977–78 ..	0.11	0.06	.001	..
மொத்தம்	0.62	0.075	0.12	..

(ஆ) கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு மான்யம் வழங்கப் படுவதில்லை.

மருத்துவத் துறையில் பட்ட மேற்படிப்புக்கு சேர்க்கப் பெற்ற மாணவர்கள்.

வினா எண் 698—திரு. ஆர். கிருஷ்ணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவத் துறையில் எம். டி., எம். எஸ். போன்ற பட்ட மேற்படிப்புகளில் கடந்த 10 ஆண்டுகளாக எத்தனை மாணவர்கள் சேர்க்கப்பட்டனர் ?

(ஆ) அதில் த்ாழ்ததப்பட்ட சமூகத்தினர் எத்தனை பேர் ?

விடை—

(அ) மற்றும் (ஆ): 1968-லிருந்து 1977 வரை மருத்துவ மேற்படிப்புகளில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது—.

படிப்பு விவரம்.	சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை.	சேர்க்கப்பட்டவர்களுள் தாழ்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
(1) பட்ட மேற்படிப்பு ..	2,069	123
(2) டிப்ளாமா மேற்படிப்பு ..	2,187	145

விளாத்திகுளம் நென்மேனி அணைத் திட்டம்.

வினா எண் 699—திரு. ஆர். கே. பெருமாள்: மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) விளாத்திகுளம் தொகுதியில் நென்மேனி அணைக் கட்டுத் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப் படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ); நென்மேனி கிராமத்தின் அருகில் அணைக்கட்டும் திட்டம் முன்பு இருந்தது. தற்போது இத்திட்டம் நீர்த் தேக்கத் திட்டமாக மாற்றப்பட்டு விரிவான ஆய்வு நிலையி லுள்ளது. எனவே எப்போது இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறுதியிட்டு கூறமுடியாது.

1979 ஏப்ரல் 7]

செஞ்சி நகரத்திற்கு பாதுகாக்கப்பெற்ற குடிநீர் வழங்கு திட்டம்.

வினா 700—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) தென் ஆற்காடு மாவட்டம் செஞ்சி நகரத்திற்குப் பாதுகாக்கப்பட்ட குடி நீர் வழங்குவதற்கு அரசு ஏதேனும் திட்டம் வகுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) குடிநீர் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குமுன் திட்டத்திற்கு நீர் ஆதாரம் அமைக்கும் பொருட்டு நதிப்படுகையில் மூன்று ஊறு கிணறுகள் (Infiltration wells) தோண்டப்பட்டுள்ளன. அக்கிணறுகளில் கிடைக்கக்கூடிய நீரின் தன்மை மற்றும் அளவைப் பொறுத்துதான் முழு திட்டத்தையும் நிறைவேற்றும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

Exemption to repatriates from payment of examination fees.

Q. 701—THIRU N. KITTAPPA: Will the hon. the Minister for Education be pleased to state—

(a) Whether repatriates from Sri Lanka and other countries have been exempted from paying examination fee for the S.S.L.C. Examination; and

(b) If so, the details thereof ?

விடை—

(அ) தனிப்படிப்பு மூலம் (பள்ளி மூலமாக அல்லாமல் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதும் பர்மா, இலங்கை அகதிகளுக்கு) மட்டும் தேர்வு கட்டண சலுகை அளிக்கப்படுகின்றது.

(ஆ) இத்திட்டத்தின் கீழ் 26—4—1967 நாளிட்ட அரசாணை எண். 610 மூலம் 1967 மார்ச்சு எஸ்.எஸ்.எல்.சி.தேர்வு முதற் கொண்டு அகதி மகளிர் மட்டும் அனுமதிக்கப்பட்டு வந்தனர். இத்திட்டம் தற்போது 12—7—1978 நாளிட்ட அர

சாணை 1231 மூலம் அகதி ஆடவர்க்கும் நீடிக்கப்பட்டுள்ளது. இதன்கீழ் தேர்வு எழுதுபவர்கள் 18 வயது நிரம்பியவராகவும், குறைந்த பட்சம் எட்டாம் வகுப்பு தேறியவராகவோ அல்லது பர்மா, இலங்கையில் அதற்கிணையான பள்ளிப் படிப்பு தேறியிருத்தல் வேண்டும். இதுவரை இச்சலுகையை இரண்டு இலங்கை (ஆடவர்) அகதிகள் மட்டும் பயன்படுத்தியுள்ளனர்.

தருமபுரி மாவட்டத்தில் தோண்டி எடுக்கப் பெற்ற சிலைகள்.

வினா 702—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) 1978ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் தருமபுரி மாவட்டத்தில் உட்கார்ந்த நிலையில் உள்ள ஆண் சிலைகள் தோண்டி எடுக்கப்பட்டனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

(இ) அவைகள் சுடுமண் பொம்மை வகைகளை சேர்ந்ததா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1978 ஆகஸ்டு திங்களில் இரண்டு உட்கார்ந்த நிலையிலுள்ள சுடுமண் பொம்மைகள் தர்மபுரியில் ஓர் ஆசிரியரிடமிருந்து தற்செயலாக கண்டு சேகரிக்கப்பட்டு தொல்பொருள் ஆய்வுத் துறைக்குக் கொண்டு வரப்பட்டது. மேற்படி சுடுமண் பொம்மைகள் தொல்பொருள் ஆய்வுத் துறைப் பணியாளர்கள் கல்வெட்டுப்படி எடுக்கும் பணிகளை மேற்கொள்ளும் போது கிடைக்கப்பெற்றன. இவை கிருஷ்ணா பள்ளத்தாக்கில் ஆட்சி புரிந்த இஷ்வாகு பரம்பரையின் கலைப்பாணி தமிழகக் கலைப் பாணியுடன் கலந்த அமைப்பைப் பிரதிபலிக்கின்றன.

(இ) ஆம்; இவைகள் சுடுமண் (Terra Cotta) வகையைச் சார்ந்ததாகும்.

1979 ஏப்ரல் 7]

வேலூர் அரசு மருத்துவ மனை மருத்துவ அதிகாரிகள்.

வினா 703—திரு. ப. சந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூரில் உள்ள அரசு மருத்துவ மனையில் போதிய எண்ணிக்கையில் மருத்துவ அதிகாரிகளை நியமிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

இந்த மருத்துவ மனையில் உள்ள மருத்துவர்களின் எண்ணிக்கை 35, சராசரியாக ஒரு நாளைக்கு 4,071 வெளிநோயாளிகளுக்கும், 502 உள் நோயாளிகளுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

வேலூர் அரசு மருந்தகத்தைச் சேர்ந்த என். ஜி. ஜி. ஓ. மருந்தகத்திற்கு ஒரு உதவி மருத்துவர் பதவி ஏற்படுத்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும் உதவி மருத்துவர்கள் நியமிக்க செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

Grants to Kalidasa Day Celebrations.

Q. 704—THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) Whether the Tamil Nadu Government have sanctioned any grants to the Kalidasa Day Celebrations in Madhya Pradesh: and

(b) If so, the details thereof?

விடை—

(அ) ஆம.

(ஆ) மத்தியப் பிரதேச முதல்வர், தமிழக முதல்வருக்கு விடுத்த வேண்டுகோளை ஏற்று, கல்வித் துறை நிலையாணை, எண். 1286, நாள் 12-7-1978-ல் தமிழக அரசு, மத்தியப் பிரதேச அரசுக்கு மகாகவி காளிதாசர் நினைவு விழா நிலையான நிதிக்கு ரூபாய் ஒரு இலட்சம் நன்கொடையாக வழங்கியுள்ளது.

[1979 ஏப்ரல 7

HOUSES DAMAGED BY FIRE AT THIYAGARAJAPURAM

Q. 705—THIRU N. KITTAPPA; Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) Whether a number of Houses have been damaged in fire at Thiagarajapuram near Kallakurichi about the 6th August, 1978; and

(b) If so, the details thereof?

விடை—(அ) மற்றும் (ஆ) 31—7—1978 அன்று கள்ளக்குறிச்சிக்கு அருகிலுள்ள தியாகராசபுரத்தில் தற்செயலாக தீவிபத்து ஏற்பட்டு அதனால் 68 கூரை வீடுகள் தீக்கிரையாகின. இதனால் ஏற்பட்ட இழப்பின் மதிப்பு சுமார் ரூபாய் 93,600 ஆகும். உயிர்ச் சேதம் எதுவுமில்லை. மான்யம் பெறத் தகுதி யுள்ள பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மான்யம் அளிக்கப்பட்டது.

அக்கினி ஆற்றின் குறுக்கே பாலம்.

வினா 706—திரு, எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பட்டுக்கோட்டையிலிருந்து பேராவூரணிக்கு பண்ணவயல் ஒட்டங்காடு வழியாகச் செல்லும் சாலையில் அக்கினி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

பூனைக்குத்தி ஆற்றின் குறுக்கே பாலம்.

வினா 707—திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

காலகம்-ஆவுடையார்கோவில் சாலையில் பூனைக்குத்தி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

விடை—

ஆம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1979 ஏப்ரல் 7]

திண்டுக்கல் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டுள்ளோர்.

வினா 708—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) 1977-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் உள்ளவாறு திண்டுக்கல் கல்வி மாவட்டத்தில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து இருப்பவர்களின் எண்ணிக்கை என்ன?

(ஆ) 1977–78-ம் ஆண்டில் அவர்களில் எத்தனை பேருக்கு வேலை கொடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) 1977-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30-ம் நாளைய நிலவரப்படி, திண்டுக்கல் துணை வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து கொண்டு வேலைக்காக காத்திருப்பவர்களின் எண்ணிக்கை 16,560 பேர்கள் ஆகும். திண்டுக்கல் துணை வேலை வாய்ப்பகம் பதிவேட்டில் காத்திருப்பவர்கள் பழனி, வேடசந்தூர் மற்றும் திண்டுக்கல் தாலுக்காக்களைச் சேர்ந்தவர்கள் ஆவர். திண்டுக்கல் கல்வி மாவட்டத்தைச் சேர்ந்த வேலை வாய்ப்பகத்தில் பதிந்து உள்ளவர்கள் விவரம் தனியாக குறிப்பிடுவதில்லை.

(ஆ) 291.

ஆயக்குடியில் அரசினர் உயர்நிலைப்பள்ளி.

வினா 709—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) பழனி வட்டம், ஆயக்குடி பகுதியில் அரசினர் உயர் நிலைப்பள்ளி ஒன்று கட்டித் தரக் கோரி அப்பகுதி மக்கள் அரசுக்கு விண்ணப்பித்திருந்தார்களா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) பழனி வட்டம் ஆயக்குடி பகுதியில் அரசினர் உயர் நிலைப்பள்ளி கட்டித்தரக் கோரி அப்பகுதி மக்கள் அரசுக்கு விண் ப்பித்து கருத்து ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) பிரச்னை எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1979 ஏப்ரல் 7

இராமநாதபுரம் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவுசெய்து கொண்டுள்ளோர்.

வினா 710—திரு. வ. மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் மொத்தம் எத்தனை பேர்கள் பதிவு செய்திருக்கிறார்கள்?

(ஆ) இதில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மலைஜாதியினர் முறையே எத்தனை பேர்?

(இ) கடந்த ஐந்தாண்டுகளில் ஆண்டு ஒன்றுக்கு எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

விடை.—

(அ) 1978-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ம் தேதி அன்றைய நிலவரப்படி 35,590 பேர்கள்.

(ஆ) தாழ்த்தப்பட்டவர்கள் 4,868 பேர்கள். மலைஜாதியினர் 59 பேர்கள்.

(இ)

ஆண்டு.	வேலையில் அமர்த்தப் பட்டவர்கள் எண்ணிக்கை.
1973	1,765
1974	1,662
1975	1,830
1976	1,490
1977	883
1978 நவம்பர் முடிய	1,087

979 ஏப்ரல் 7]

திருப்புவனம் அரசினர் மாணவர் இல்லக் கட்டிடம்.

வினா 711 : திரு. வ. மு. சுப்பிரமணியன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மானாமதுரைத் தொகுதி திருப்புவனம் அரசினர் மாணவர் இல்லத்திற்குப் போதிய வசதியுள்ள வாடகைக் கட்டிடம் கிடைக்காமையால் சிறிய கட்டிடத்தில் அதிக மாணவர்களைத் தங்க வைத்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதற்கு அரசே சொந்தக் கட்டிடம் கட்டித் தர ஆலோசித்துள்ளதா?

விடை—.

(அ) எல்லா வசதிகள் கொண்ட தகுந்த கட்டிடம் வாடகைக்குக் கிடைக்காததால் இரு தனித் தனி பகுதிகளாக விடுதி இயங்குகிறது.

(ஆ) தனியார் கட்டிடங்களில் இயங்கிவரும் விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் நிதி நிலைமையை ஒட்டி படிப்படியாகச் செயல்படுத்தப்படுகிறது. திருப்புவனம் மாணவர் விடுதிக்குக் கட்டிடம் கட்டுவது குறித்து இனி வரும் ஆண்டுகளில் உரிய தருணத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

பழையனூர் கிராமத்தில் கைத்தறி கூட்டுறவு நெசவாலை.

வினா 712—திரு. வ.மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு கைத்தறி, பஞ்சாலைகள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மானாமதுரைத் தொகுதியில் பழையனூர் என்ற கிராமத்தில் கைத்தறி கூட்டுறவு நெசவாலை திறப்பது பற்றி அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படத் தொடங்கும்?

விடை—.

(அ)&(ஆ). மானாமதுரையில் உள்ள பழையனூர் கிராமத்தில் சுமார் 500 நெசவாளிகள் உள்ளனர். இவர்களில் பெரும்பாலோர் மாஸ்டர் வீவர்களிடம் கூலிக்கு நெசவு செய்வதாகத் தெரிகிறது. இந்த நெசவாளிகளுக்கு தொடர்து வேலை

வாய்ப்பு அளிக்கவும் இவர்களின் நிலையை உயர்த்தவும் இங்கு ஒரு தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கம் அமைப்பது பற்றி அரசு ஆராய்ந்து வருகின்றது.

டி. மானசேரி சாலை.

வினா 713—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி டி. மானசேரிக்கு செல்லும் ரோடு பழுதடைந்து கிடப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அது பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை.—

(அ) ஆம்.

(ஆ) 1978-ம் ஆண்டு நவம்பரில் இச்சாலை பஞ்சாயத்து நிதியில் பழுது பார்க்கப்பட்டது. இச்சாலையில் கி.மீ. 1/8-10-ம் உள்ள ஓடையில் வெள்ள நிவாரணப் பணியின் கீழ் தாம் போகி கட்ட மதிப்பீடு ரூ. 10,700-க்கு வேலை அங்கிகரிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வேலை விரைவில் முடிக்கப்படும்.

கங்காகுளம் கால்வாயின் குறுக்கே பாலம்.

வினா 714—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி வன்னியம்பட்டி கொத்தங்குளம் ஊர்களுக்கு இடையில் உள்ள கங்காகுளம் கால்வாயின் குறுக்கே பாலம் கட்டும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை.—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1979 ஏப்ரல் 7]

காயல்குடி ஆற்றின் குறுக்கே பாலம்.

வினா 715—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவில்லிப்புத்தூர் தொகுதி வன்னியம்பட்டி-படிக்காசு வைத்தான்பட்டி ஊர்களுக்கு இடையில் ஓடும் காயால்குடி ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட உத்தேசம் அரசுக்கு உண்டா?

விடை: இல்லை.

அர்ஜீனா நதியின் குறுக்கே பாலம்.

வினா 716—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி, அர்சனாபுரம்—வத்ராயிருப்புக்கு இடையே அர்ஜீனா நதியின் குறுக்கே பாலம் கட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில் அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வாசுதேவநல்லூர் பகுதியில் சிறு தொழில்கள்.

வினா 717—திரு, ஆர். கிருஷ்ணன் : மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வாசுதேவநல்லூர் பகுதியில் அரசு ஏற்பாடு செய்துள்ள 56 சிறு தொழில்கள் எந்த அடிப்படையில் தொடங்கும் ?

(ஆ) எந்தெந்த தொழில்கள் ?

(இ) உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்ய அரசு வழி செய்துள்ளதா ?

(ஈ) தொழில் நடத்த கடன் எவ்வளவு ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) ஆர்வமுள்ள சிறு தொழில் முனைவோரை சந்தித்து அவர்களுக்கு விருப்பமுள்ள சிறு தொழில் துவங்க உள்ள சாத்தியக் கூறுகளையும், தொழில் நுணுக்க அறிவுரைகளையும், ஆங்காங்கே புதிய தொழில் துவங்க வாய்ப்புள்ள மூலப் பொருட்கள் போன்ற பிற வாய்ப்பான வசதிகளையும் எடுத்துக் கூறி, தொழில் துவங்க முன்வருவோருக்கு சிறுதொழில் தற்காலிக பதிவு சான்றிதழ்களை அந்த இடத்திலேயே வழங்கப்படும் திட்டத்தின் பகுதியாக வாசுதேவநல்லூரில் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 9-ந் தேதியில் சிறு தொழில் ஊக்குவிப்பு முகாம் ஒன்று நடத்தப்பட்டது. வாசுதேவநல்லூர் தீவிர சிறு தொழில் பதிவு முகாமில் தற்காலிக சிறு தொழில் பதிவுச் சான்றிதழ்கள் 57 வழங்கப்பட்டன.

மேலே கூறப்பட்ட தொழில் முனைவோரை, மாவட்ட தொழில் மைய அலுவலர்கள் நேரில் அணுகி, அவர்களுக்கு உரிமங்கள் விரைவில் கிடைக்கவும், வேண்டிய கடனுதவியை ஊரக தொழில் திட்டம், வங்கிகளிலிருந்து கிடைக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

(ஆ) வாசுதேவநல்லூரில் துவங்க விருப்பம் தெரிவித்த தொழில்கள் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

1.	விவசாய அடிப்படைத் தொழில்கள் அதாவது நெல் ஆலை, எண்ணெய் ஆலை	13
2.	வனப் பொருள் சம்பந்தப்பட்ட தொழில் ..	7
3.	கட்டிட பொருள்கள்	4
4.	ரெடிமேடு ஆடைகள்	7
5.	பொறியியல் சம்பந்தப்பட்ட தொழில்கள் ..	15
6.	சிறு தீப்பெட்டி தொழிற்சாலைகள் ..	8
7.	தோல் பதனிடும் தொழில்	1
8.	இதர வகைகள்	2
		57

1979 ஏப்ரல் 7]

(இ) மேற்கூறிய தற்காலிக சான்றிதழ் பெற்ற 57 தொழிற்சாலைகளும் வாசுதேவநல்லூர் பகுதியிலேயே கிடைக்கும் மூலப் பொருட்கள், அங்குள்ள மக்களின் தேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருப்பதால் அவற்றை விற்பதில் எந்த சிரமமும் இருக்காது என்று எதிர்பார்க்கப்படுகிறது. தீப்பெட்டி தொழில்களுக்கு மூலப் பொருள் கிடைக்கவும், தீப்பெட்டிகளை விற்பனை செய்யவும் கடையநல்லூர் தீப்பெட்டி சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் உதவும். துவக்கப் படவிருக்கும் சிறு தொழிற்சாலைகள் விற்பனை செய்வதில் சிரமம் இருந்தால் மாவட்ட தொழில் மையம் தேவையான உதவிகள் செய்யும்.

(ஈ) அரசு கடன் திட்டத்தின் கீழ் வாசுதேவநல்லூர் பகுதியில் திட்டக்கடன் பெற முன்வருவோருக்கு கடன் வழங்கப் படும். மேலும் வங்கிக் கடன், சிறுதொழில் முதலீட்டு நிறுவனம், நேஷனல் ஸ்மால் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன், முதலிய நிறுவனங்களிலிருந்து கடனுதவி பெற தேவையான உதவிகளை மாவட்ட தொழில் மையம் செய்யும். இவற்றின் திட்ட மதிப்பு சுமார் 12 இலட்சம் ரூபாயாகும்.

வேடந்தபாடி கிராம அரிசன மக்களுக்கு வழங்கப் பெற்ற வீட்டு மனைகள்.

வினா 718—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கலசபாக்கம் தொகுதி வேடந்தபாடி கிராம அரிசன காலனி மக்களுக்கு வீட்டுமனை மட்டும் கொடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எத்தனை பேருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது ?

(இ) அவைகளில் வீடுகட்டித்தர அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) வட ஆற்காடு மாவட்டம் கலசபாக்கம் சட்டமன்ற தொகுதி வேடந்தபாடி கிராமத்தில் உள்ள வீடற்ற அரிசன மக்களுக்காக 3.14 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு 34 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

(இ) இந்த மனைகளில் வீடு கட்டித்தருவது பற்றித் தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

எரும்பூண்டி அரிசன மக்களுக்கு வீட்டு மனைகள்.

வினா 719—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கலசபாக்கம் தொகுதி எரும்பூண்டி அரிசன காலனி மக்களிடமிருந்து வீட்டுமனை கேட்டு அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) எரும்பூண்டி காலனி மக்களிடமிருந்து வீட்டுமனை கேட்டு அரசுக்கு கோரிக்கை ஏதும் வரவில்லை. ஆனால் வட ஆற்காடு மாவட்ட ஆட்சியாளருக்கு அரிசன காலனி மக்களிடமிருந்து கோரிக்கை வந்துள்ளது. இக்கோரிக்கையினையொட்டி திருவண்ணாமலை அரிசன நல தனி வருவாய் ஆய்வாளர் 4 (1) திட்டத்தினை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைத்துள்ளார். போரூர் அரிசன நல தாசில்தாரை மேற்கண்ட நிலத்தைப் பார்வையிட்டு ஒரு அறிக்கை வைக்கும்படி மாவட்ட ஆட்சியாளர் கேட்டுள்ளார். அன்னாரின் அறிக்கை கிடைத்தவுடன் அரசுக்கு பிரிவு 4 (1) அறிவிக்கையை அனுப்பி வைப்பதற்காக மாவட்ட ஆட்சியாளர் கூறியுள்ளார்.

ஜவ்வாது மலையில் உயர்நிலைப்பள்ளிகள்.

வினா 720—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வட ஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலையில் உயர்நிலைப் பள்ளிகள் உள்ளனவா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

விடை—

(அ) ஆம். ஒரு உயர்நிலைப்பள்ளி உள்ளது.

(ஆ) ஜவ்வாது மலையில் ஜமுனா மருதூர் என்ற கிராமத்தில் வனத்துறையினரால் ஒரு உயர்நிலைப்பள்ளி நடத்தப்பட்டு வருகிறது. அப்பள்ளியில் மொத்தம் 156 குழந்தைகள் கல்வி பயிலுகின்றனர். 10 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர்.

1979 ஏப்ரல் 7]

வன்னியனூர் ஏரிப்பாசனம்.

வினா 721—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கலசபாக்கம் தொகுதி வன்னியனூர் கிராமத்தில் உள்ள ஏரியின் தண்ணீர் புன்செய் நிலங்களுக்கும் பாசனத்திற்கு பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஏக்கர் புன்செய் பாசனம் பெற்று வருகிறது ?

(இ) புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்ற அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 100·56 ஏக்கர்.

(இ) இல்லை.

வன்னியனூர் கிராம அரிசன காலனிக்கு பாதை அமைத்தல்.

வினா 722—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கலசப்பாக்கம் தொகுதியில் உள்ள வன்னியனூர் கிராம அரிசன காலனிக்கு ரோடு போட்டுத்தர நில ஆர்சிதம் செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது எப்போது ?

(இ) உடனடியாக ரோடு போட்டுத் தர அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) போளூர் அரிசன நல தனி தாசில்தார் அவரின் அவார்டு எண். 13/75–76, நாள் 5—3—1976-ல் வள்ளியனூர் கிராமத்தில் 0·64 ஏக்கர் நிலம் (கீழ் குறிப்பிட்டபடி) ஆர்சிதம் செய்யப்பட்டுள்ளது :—

சர்வே எண்.		விஸ்தீரணம்.
97–13ஏ 2		0·09
37–1பி1		0·08
102–8ஏ		0·05
102–9ஏ		0·08
109–5ஏ		0·03
103–3பி		0·01
103–4பி		0·03
109–4பி		0·03
107–44ஏ		0·05
107–47ஏ		0·03
107–42பி		0·05
107–41ஏ		0·09
107–40பி		0·02
மொத்தம்	.	0·64 ஏக்கர்.

(இ) வேலூர் அரிசன மேற்பார்வையாளரை ஆர்சிதம் செய்யப்பட்ட இடத்தில் பாதை அமைக்க தக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அலங்காரமங்கலம் ஏரி.

வினா 723—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) போளூர் வட்டம் அலங்கார மங்கலம் ஏரி (216/2) இரண்டு பிரிவாக உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், ஒரு பிரிவு ஏரி பல்லாண்டுகளாக மராமத்து செய்யப்படாமல் இருந்து வருகிறதா ?

(இ) அந்தப் பிரிவை மராமத்து செய்துதர அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

1979 ஏப்ரல் 7]

விடை—

(அ) மற்றும் (ஆ) ஆம்.

(இ) இந்த ஏரி கலசப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தி லிருந்து பொதுப்பணித்துறைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த ஏரியின் கீழ்ப்பகுதியின் கரை பாழடைந்த நிலையில் உள்ளது.

இதற்கு இதுவரை சிறப்பு மராமத்து பணி மேற்கொள்ளப்பட வில்லை. ஏரியின் கீழ்ப்பகுதியின் கரையினை உயர்த்தி ஒரு மதகும், உபநீர் போக்கியும் புதியதாக அமைத்து மேலும் சுமார் 40 ஏக்கர் புன்செய் நிலத்தை நன்செய் நிலமாக மாற்றுவதற் கான ஒரு செயல் திட்டம் சிறப்பு சிறு பாசனத் திட்டத்தின் கீழ் மேற்கொள்வது குறித்து பொதுப் பணித்துறையில் தல அதிகாரி களின் ஆய்வில் உள்ளது.

கடலூர் வட்டத்தில் ரீ சர்வே.

வினா 724—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு வரு வாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தென்னாற்காடு மாவட்டம் கடலூர் வட்டத்தில் எப்போது ரீ சர்வே நடத்தப்பட்டது?

(ஆ) சிதம்பரம் வட்டத்தில் எப்போது ரீ சர்வே நடத்தப் பட்டது?

(இ) மீண்டும் எப்போது இப்பணி மேற்கொள்ளப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) தென்னாற்காடு மாவட்டம், கடலூர் சிதம்பரம் வட்டங்களில் கீழ்க்கண்டவாறு ரீ சர்வே செய்யப் பட்டது:—

ஆண்டு ரயத்துவாரி ரீ சர்வே. (1)	எஸ்டேட் நிலங்கள் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நிலங்களின் ரீ சர்வே. (2)	மெட்ரிக் முறைப்படி ரீ சர்வே. (3)
	1. கடலூர் தாலூகா.	
1914–1916 ..	1957 சப்ளிமெண்டல் சர்வே.	1963—70
	2. சிதம்பரம் தாலூகா.	
1920-1921 ..	1957 சப்ளிமெண்டல் சர்வே.	1963—70

(இ) மீண்டும் ரீ சர்வே செய்வதற்கான செயற்குறிப்பு இல்லை. ஆனால் நிலப் பதிவுகளைப் புதுப்பிக்கும் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1979 ஏப்ரல் 7

பெண்ணாடம் அருணா சர்க்கரை ஆலைப் பகுதியில் சாலை வசதி.

வினா 725—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சிதம்பரம் வட்டத்தில் பெண்ணாடம் அருணா சர்க் கரை ஆலையிடமிருந்து வசூலிக்கப்பட்ட செஸ் நிதியிலிருந்து இதுவரை எவ்வளவு தூரம் ரோடு போடப்பட்டுள்ளது ?

(ஆ) இந்த ஆண்டு போட உத்தேசிக்கப்பட்டுள்ள தூரம் எவ்வளவு ?

விடை—

(அ) கரும்பு விளையும் பரப்பில் பெரும்பாலான பகுதி விருத்தாசலம் வட்டத்திலும், சிறிதளவே சிதம்பரம் வட்டத் திலும் உள்ளன. மேலும், சிதம்பரம் வட்டத்தில் சாலை போடு வதற்கு, பெண்ணாடம் அருணா சர்க்கரை ஆலை இதுவரை எந்த சாலைப் பணியையும் பரிந்துரை செய்யவில்லை. எனவே, கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சிதம்பரம் வட்டத்தில் இதுவரை எந்தச் சாலையும் போடப்படவில்லை.

(ஆ) சிதம்பரம் வட்டத்தில் இந்த ஆண்டு சாலை அமைக்கும் உத்தேசம் இல்லை.

கீரப்பாளையம் ஒன்றியத்தில் குழாய்க் கிணறுகள்.

வினா 726—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சிதம்பரம் வட்டம், கீரப்பாளையம் ஒன்றியத்தில் எத்தனை குழாய்க் கிணறுகள் 1978–79 இந்த ஆண்டில் இதுவரை இறக்கப்பட்டது ?

(ஆ) அவற்றுள் ஒன்றியம் எத்தனை ? குடிநீர் வாரியம் எத்தனை?

(இ) ஒவ்வொரு குழாய்க் கிணறுக்கும் ஆன செலவு எவ் வளவு?

1979 ஏப்ரல் 7]

விடை—

(அ) 10.

(ஆ) யாவும் குடிநீர் வடிகால் வாரியம்தான்.

(இ) விவரம் பின்வருமாறு :—

குடியிருப்பு கிராமத்தின் பெயர்.	குழாய்க் கிணறுக்கான செலவு. (ரூபாய்.)
வகை—1 (Category I).	
1. கடலையாத்தூர்	4,330·00
2. முகையூர்	51,529·60
3. ராமாபுரம்	40,196·70
4. ராமாபுரம் ஐய்யனார் காலனி	44,183·20
5. ராமாபுரம் வாலீஸ்பேட்டை	34,677·45
6. ராமாபுரம் கொல்லாத்தன்குறிச்சி ..	43,063·90
7. சோழத்தரம் கூட்டுரோடு	12,535·00
மொத்தம் ..	2,30,515·85
வகை—2 (Category II).	
8. வேளப்பாடி காலனி	46,043·35
9. கொடியாளம் புது காலனி	58,033·05
10. பெருங்காஹர்	55,478·00
மொத்தம் ..	1,59,554·40
(வகை 1 & 2) மொத்தம்	3,90,070·24

[1979 ஏப்ரல் 7

தியாகதுருக்கத்தில் வரலாற்றுச் சின்னங்கள்.

வினா 727—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள தியாகதுருகத்தில் வரலாற்றுக்குத் தொடர்பான பழம் பெரும் சின்னங்களும், பீரங்கிகளும் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து ஆராய்ச்சி ஏதேனும் மேற்கொள்ளப்பட்டு வருகிறதா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள தியாகதுருகத்தில் மலையின் மேல் வரலாற்றுச் சிறப்பு மிக்க கோட்டை அமைந்துள்ளது. கோட்டை கட்டப்பெற்ற காலம் கி. பி. 16ஆம் நூற்றாண்டு என கோட்டை அமைப்பைக் கொண்டு கருதலாம்.

கோட்டையைச் சுற்றி பழம்பெரும் சின்னங்களும், பீரங்கிகளும் இருக்கின்றன.

இக்கோட்டையை 1756-ல் பிரஞ்சுக்காரரும், 1760-ல் ஹைதர் அலியும், 1761-ல் ஆங்கிலேயரும், 1790-ல் திப்புசுல்தானும் கைப்பற்றி தங்கள் இராணுவத்தளமாக வைத்து வந்துள்ளனர். மேலும் தொடர்ந்து 1801ஆம் ஆண்டு வரை ஆங்கிலேயரின் முக்கியத் தளமாக இருந்து வந்துள்ளது. கி. பி. 17, 18-ம் நூற்றாண்டில் இக் கோட்டை இராணுவ முக்கியத்துவம் பெற்றிருந்தது.

இச் சின்னத்தை தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை, புராதன சின்னப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழப் பாதுகாத்து வருகிறது.

இக்கோட்டைக்குச் செல்வதற்கு சரியான பாதையில்லாமையால், படிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 ஏப்ரல் 7]

Running of Hotel in Express Bus Terminus in Madras.

Q. 728—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the space in the upstairs in the new buildings of the long distance bus terminus in Madras City in George town has been leased out to private parties to run a hotel; and

(b) the details there of ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பல்லவன் போக்குவரத்துக்கழக சென்னை விரைவுப் பேருந்து நிலையத்தின் முதல் தளத்தில் உள்ள சிற்றுண்டிச் சாலையின் ஒப்பந்தக்காரர் 1977ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30ம் தேதிக்கு முன் அறிவிப்புடன் இடத்தைக் காலி செய்துவிட்டதால் அவ்விடத்தில் சிற்றுண்டி சாலை நடத்துவதற்கு 1977-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17-ம் தேதியன்று ஒப்பந்தங்கள் கோரப்பட்டன. ஆனால், யாரும் ஒப்பந்தம் தர முன்வரவில்லை. எனவே, ஏற்கனவே ஒப்பந்தத்தின் பேரில் இங்கு வெற்றிலை பாக்குக் கடை, புத்தகக் கடை ஆகியவற்றை நடத்தும் திரு. பி. பி. அபுபக்கர் என்பவருக்கு பேச்சுவார்த்தை மூலம் சிற்றுண்டிச் சாலை நடத்தும் உரிமையும் ஒப்பந்தம் மூலம் அளிக்கப்பட்டது. இதற்கான மாத வாடகை ரூ. 3,701 ஆகும். இவ்வொப்பந்தம் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் தொழில் நுட்பக் குழுவின் பரிந்துரையையும், பல்லவன் போக்குவரத்துக் கழகக் குழுவின் ஒப்புதலையும் பெற்றுள்ளது. இவருடைய குத்தகைக் காலம் ஒப்பந்தப்படி 1982-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 2-ம் தேதி வரை உள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

Mountaineering Training for Forest Officials.

Q. 729—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state:—

(a) whether any training in Mountaineering is provided to the forest officials in this State; and

(b) if so, the details there of ?

விடை—

மலை ஏறும் பயிற்சி தமிழ்நாடு வனத்துறை அலுவலர்களுக்கு தமிழ்நாடு அரசாங்கத்தால் அளிக்கப்படவில்லை. டேராடூனில் அமைந்துள்ள இந்திய வன பயிற்சிக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு மலைப் பகுதிகளில் அமைந்து உள்ள வனப் பகுதிகளில் பணிபுரிவது சம்பந்தமான பயிற்சி வழங்கப் படுகிறது.

உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்.

வினா 730—திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:—

(அ) 1975-ஆம் ஆண்டிற்குப் பிறகு அரசினர் உயர்நிலைப் பள்ளிகளில் (பி. பிரிவு) பதவி உயர்வு அளிக்கப்பட்டு பணியில் அமர்த்தப்பட்ட தலைமையாசிரியர்களின் எண்ணிக்கை என்ன?

(ஆ) அவர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியத் தொகை யாது?

விடை—

(அ) 126.

(ஆ) மேற்படி தலைமையாசிரியர்களின் பணி இன்னும் வரன் முறை செய்யப்படாததால் அவர்கள் தேர்வு நிலை பள்ளி ஆசிரியர்களுக்கான ஊதிய விகிதத்தில் சம்பளம் பெற்று வரு கின்றனர். இவர்கள் சார்பில் பணி விதி முறைகள் வரையறுக்கப் பட்டு அரசாணை பிறப்பிக்கப்பட்ட பின்பு, இவர்களின் ஊதி யத்தை தலைமை ஆசிரியர்கள் பதவியில் நிர்ணயம் செய்ய இய லும். இது குறித்து பள்ளிக் கல்வி இயக்குநரால் அனுப்பப்பட்ட கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளது.

வடாற்காடு மாவட்டத்தில் கூட்டுறவுக் கடன் நிலுவை.

வினா 731—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள நிலவள வங்கி, கூட்டுறவு நாணயச் சங்கம், வேளாண்மை கூட்டுறவு வங்கி ஆகிய வெவ்வேறு அமைப்புகளுக்கு விவசாயிகளிடமிருந்து இன்று வரை வசூலாக வேண்டிய கடன் தொகை எவ்வளவு?

(ஆ) நிலுவை நிற்பதால் செயல்பட இயலாமல் உள்ள சங்கங்கள் இயங்குவதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை கள் யாவை?

1979 ஏப்ரல் 7]

விடை—

(அ) 1978ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ம் தேதியன்று மொத்தம் ரூ. 13,31·53 இலட்சம் நிலுவையாக இருந்தது.

(ஆ) நிலவள வங்கிகளைப் பொறுத்த மட்டில் 4 நிலவள வங்கிகள் கடன் வழங்கும் சக்தியற்று இருக்கின்றன. இந்த நான்கு வங்கிகளின் எல்லைக்குள், வணிக வங்கிகள் கடன் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளன. மேலும் வசதிபடைத்த கடன்தாரர்களிடம் கடுமையான நடவடிக்கை இல்லாமல், நேரில் அணுகுமுறையில் கடனை வசூலித்து நிலுவையை குறைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கல்வி இயக்குநர் அலுவலகத்தில் தொலைக்காட்சிப் பெட்டி.

வினா 732—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் தொலைக்காட்சிப் பெட்டி அமைக்கும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மத்திய அரசிடமிருந்து இதற்கு நிதி உதவி ஏதும் பெறப்பட்டுள்ளதா ?

(இ) இதன் விபரம் என்ன ?

விடை—

(அ) ஏற்கனவே ஓர் தொலைக்காட்சிப் பெட்டி (டி.வி.) இவ்வலுவலகத்தில் உள்ளது.

(ஆ) அதற்கென மத்திய உதவி பெறப்பட்டுள்ளது.

(இ) Dycnera Model தொலைக்காட்சிப் பெட்டி ரூ. 4,892-க்கு மத்திய அரசு நிதி உதவியில் வாங்கப்பட்டது. பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலக வளைவில் (Closed circute television) என்று அமைக்கும் முயற்சியையும் அரசு மேற்கொண்டு மத்திய அரசிடம் அதற்காக ரூ. 12 லட்சம் மானியமும் கோரியுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1979 ஏப்ரல் 7

மன்னார்குடி கூட்டுறவு பால் வழங்கு சங்க நிர்வாகம்.

வினா 733—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி கூட்டுறவு பால் வழங்கு சங்கத்தின் நிர்வாக இயக்குநர்கள் அண்மையில் ராஜினாமா செய்துள்ளனரா?

(ஆ) தேர்தல் நடத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

(இ) தனி அதிகாரி நியமிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

விடை—

(அ) ஆம்.

நிர்வாகக் குழுவில் துணை விதிகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பதினொரு உறுப்பினர்களில் ஐந்து பேர்கள் 1977-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 22-ம் தேதி மற்றும் 1977 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 ஆம் தேதியிலும், எஞ்சியுள்ள ஆறு உறுப்பினர்கள் 1978 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6 ஆம் தேதியிலும் தங்களது நிர்வாகஸ்தர் பதவியினை ராஜினாமா செய்துள்ளனர்.

(ஆ) மேற்படி சங்கம் தனி அலுவலரின்கீழ் 1978 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17 ஆம் தேதி முதல் இயங்கி வருவதால் தற்போது நிர்வாக இயக்குநர்களின் தேர்தல் நடத்துவதற்குரிய பிரச்சினை எழவில்லை. நிர்வாகக் குழு கலைப்பினை மேலும் நீடிப்பதற்கான சூழ்நிலை இல்லையெனில், சங்கத்தின் நிர்வாக இயக்குநர்களின் தேர்தல் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தனி அலுவலரின்கீழ் மேற்படி கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் 1978 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17 ஆம் தேதி முதல் ஓர் ஆண்டு காலம் இயங்க ஆணையிடப்பட்டுள்ளது.

(இ) மன்னார்குடி கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் இராஜினாமா செய்ததை அடுத்து, துணைப் பதிவாளர் அளவில் 1978 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17 ஆம் தேதி முதல் தனி அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

1979 ஏப்ரல் 7]

தெற்குளம்பட்டி கிராமத்தில் அரிசனக் குடியிருப்புக்கு சுடுகாடு வசதி ஏற்படுத்தல்.

வினா 734—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் தொகுதி, அயன்நாச்சியார்கோவில் கிராமம், தெற்குளம்பட்டி கிராமத்தில் வசிக்கும் அரிசன குடியிருப்புக்கு சுடுகாடு வசதி ஏற்படுத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

அயன்நாச்சியார்கோவில் மற்றும் தெற்குளம்பட்டி கிராமங்களில் 30 அரிசன குடியிருப்புகள் உள்ளன. இந்த அரிசனங்கள் பக்கத்துக் கிராமமான மல்லி கிராமத்தில் உள்ள ச.எண். 1356ல் தீர்வை விதிக்கப்பட்ட 14 சென்ட் தரிசு நிலத்தையும், ச.ந. 1067ல் மயானம் எனக் கிராமக் கணக்குகளில் தாக்கலாகியுள்ள 61 சென்ட் நிலத்தையும் மயானமாக உபயோகித்து வருகின்றனர். இரண்டு மயான இடங்களுக்கும் 20 லிங்ஸ் அகலமுள்ள வண்டிப்பாதை (Detailed Cart track) இருக்கிறது. இந்த மயான இடங்கள் இரண்டும் தெற்குளம்பட்டி கிராமத்திலிருந்து சுமார் 1 பர்லாங் தூரத்தில் உள்ளது. ஜாதி இந்துக்களுக்கு தனியாக மயானம் உள்ளது. பக்கத்துக் கிராமமான மல்லி உட்கடை பண்டிதன்பட்டி கிராமத்தில் உள்ள சுமார் 17 அரிசனக் குடும்பங்களும் மேற்கண்ட இரு இடங்களையே மயானமாக உபயோகப்படுத்தி வருகின்றனர். ஆதலால் சுடுகாடு வசதி ஏற்படுத்த தனியாக நில ஆர்ஜிதம் தேவையில்லை.

மாயூரத்தில் அண்ணா சிலைக்கான பராமரிப்புச் செலவு.

வினா 735—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகராட்சிப் பராமரிப்பில் பேருந்து நிலையம் அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்காக 1977-78ஆம் ஆண்டுக்கான பராமரிப்புச் செலவு எவ்வளவு?

விடை—

சிலைக்கு மேலே பொருத்தப்பட்டுள்ள 80 வாட்ஸ் பாதரச விளக்கிற்கான மின்சாரக் கட்டணம் ரூ. 105 மட்டும் இந்த ஆண்டு செலவிடப்பட்டுள்ளது.

திருமங்கலம் அரசினர் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம்.

வினா 736—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயது செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், மாயூரம் ஒன்றியம், திருமங்கலம் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கான கட்டிடம் கட்டி முடிப்பது தற்போது எந்த நிலையிலுள்ளது ?

விடை—

இப்பள்ளிக்கு கட்டிடம் கட்டுவதற்கான ஆணைகள வெளியிட்டதின் பேரில் பொதுப்பணித்துறை டெண்டர் அறிவிப்பு வெளியிட்டு எவரும் இப்பணியை எடுக்க முன்வராததால், 1979ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19-ஐ கடைசி நாளாக வைத்து மறு டெண்டர் விடப்பட்டுள்ளது. ஒப்பந்தக்காரர் குறித்து பொதுப்பணித் துறை முடிவு எடுத்தபின் கட்டிட வேலை துவங்க இயலும்.

சேத்தூர் வாய்க்கால் சீரமைத்தல்.

வினா 737—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், மாயூரம் ஒன்றியம், சேத்தூர் கிராம விவசாயிகள் சேத்தூர் வாய்க்காலை சீரமைத்தல் குறித்து அளித்த விண்ணப்பத்தையொட்டி அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

1979 ஏப்ரல் 7]

விடை—

விக்ரமனாறிலிருந்து பிரியும் ஏ. 24 சேத்தூர் வாய்க்கால் சீரமைப்புப் பணி ரூ. 4.85 லட்சத்திற்கு துரித மராமத்துத் திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்டு கும்பகோணம் திட்ட ஆய்வுக் கோட்டத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டு ரூ. 2.50 லட்சத்திற்கான வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. மேற்படி வாய்க்காலின் சில பகுதிகளின் மேம்பாட்டு வேலைக்காக காவிரிக் கோட்டம், தஞ்சாவூர் நிர்வாகப் பொறியாளரால் கோரப்பட்ட டெண்டர்கள் ரத்து செய்யப்பட்டு மேற்கண்ட வேலைகளை கும்பகோணம் திட்ட ஆய்வுக் கோட்டத்தினரால் மனுவில் கூறியபடி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

ராணிப்பேட்டையில் இலங்கை அகதிகளுக்கு வீடுகள் கட்டுதல்.

வினா 738—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராணிப்பேட்டையில் இலங்கை அகதிகளுக்கு அரசு அண்மையில் வீடுகள் கட்டித் தந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

(இ) அதில் மத்திய அரசு வழங்கியது எவ்வளவு ?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) ராணிப்பேட்டையில் தமிழ்நாடு குரோமேட்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட் கம்பெனியில் அகதிகள் வங்கியின் மூலமாக தாயகம் திரும்பி வந்தவர்களில் 169 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்த 169 நபர்களுக்கும் வீடு கட்டிக்கொள்ள வீடு ஒன்றுக்கு ரூ. 5,805 வீதம் ரூ. 9,81,045 மத்திய அரசிடமிருந்து கடனுதவி பெற்று வீடுகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலமாக கட்டப்பட்டுள்ளன. இந்த வீட்டு காலனிக்கு மத்திய அரசால் மானியமாக வழங்கப்பட்ட ரூ. 47,200-ஐப் பயன்படுத்தி குடிதண்ணீர் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1979 ஏப்ரல் 7

விபத்துக்காளாகும் தொழிலாளர்களுக்கு நட்ட ஈடு.

வினா 739—திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விபத்துக்காளாகிற தொழிலாளர்கள் நட்ட ஈடு பெற நட்ட ஈடுச் சட்டத்தின் செயல்பாட்டில் பெரும் காலதாமதம் ஏற்பட்டு வருவது அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், காலதாமதத்தைக் குறைக்க என்ன நடவடிக்கை முறைகளை அரசு அனுசரிக்கப் போகிறது ?

(இ) நட்ட ஈடுச் சட்டத்தை அமுல்படுத்துகிற பிரிவில் துரித செயல்முறைக்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

(அ) நட்ட ஈடுச் சட்டத்தைச் செயல்படுத்துவதில் கால தாமதம் ஏதும் இல்லை. ஆனால் நட்ட ஈடுச் சட்டத்தின் கீழ் உதவிப்பணத்தை வேலை அளிப்பவர்கள் தொடர்புடைய கூடுதல் இழப்பீட்டு ஆணையர்கள் அலுவலகத்தில் ஒப்படைப் பதில்தான் சிறிது தாமதம் ஏற்படுகிறது.

(ஆ) இத்தாமதத்தைத் தவிர்க்கத் துணை ஆணையருக் குத் தகுந்த அறிவுரைகள் தொழிலாளர் நல ஆணையரால் வழங் கப்பட்டுள்ளன.

(இ) நிலுவையில் உள்ளவற்றில் கவனம் செலுத்தி முடிக்க தொழிலாளர் நல ஆணையரால் சுற்றறிக்கை அனுப்பப்பட் டுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

குத்தாலம் ஒன்றியத்தில் பால வேலைகள்.

வினா 740—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், பெரம்பூரி லிருந்து கடக்கம் செல்லும் சாலையில் வீர சோழன் ஆற்றின் குறுக்கே ஒன்றிய நிதியிலிருந்து செலவு செய்து நெடுஞ்சாலை கிராம பணித்துறை மூலமாக பாலம் கட்டும் திட்டம் அரசு பரி சீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது தொடங்கப்பெறும் ?

1979 ஏப்ரல் 7]

விடை—

(அ) மற்றும் (ஆ) பரிசீலனையில் உள்ளது.

வினா 741—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், எழுமகளூர் பொரும்பூர் சாலையில் நண்டலாற்றின் குறுக்கே ஒன்றிய நிதியிலிருந்து செலவு செய்து நெடுஞ்சாலை கிராம பணித்துறை மூலமாக பாலம் கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது தொடங்கப்பெறும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) பரிசீலனையில் உள்ளது.

வினா 742—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், முத்தூரிலிருந்து வடகரை செல்லும் சாலையில் கடலாழி ஆற்றின் குறுக்கே ஒன்றிய நிதியிலிருந்து செலவு செய்து நெடுஞ்சாலை கிராம பணித்துறை மூலமாக பாலம் கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது தொடங்கப்பெறும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) பரிசீலனையில் உள்ளது.

வினா 743—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், கோமலிலிருந்து கங்காதரபுரம் செல்லும் சாலையில் நண்டலாற்றின் குறுக்கே ஒன்றிய நிதியிலிருந்து செலவு செய்து நெடுஞ்சாலை கிராம பணித்துறை மூலமாக பாலம் கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது தொடங்கப்பெறும் ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

விடை—

அ) மற்றும் (ஆ) பரிசீலனையில் உள்ளது.

வினா 744—திரு. இரா. இராசமாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் குத்தாலம் ஒன்றியம் பழைய கூடலூர் ஊராட்சி எல்லையில் வீரசோழன் ஆற்றின் குறுக்கே ஒன்றிய நிதியிலிருந்து செலவு செய்து நெடுஞ்சாலை கிராம பணித்துறை மூலமாகப் பாலம் கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது தொடங்கப்பெறும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) திட்டம் பரிசீலனையில் உள்ளது.

வினா 745—திரு. இரா. இராசமாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் குத்தாலம் ஒன்றியம் மாந்தை கப்பூர் சாலையில் நாட்டாற்றின் குறுக்கே ஒன்றிய நிதியில் இருந்து செலவு செய்து நெடுஞ்சாலை கிராம பணித்துறை மூலமாக பாலம் கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது தொடங்கப்பெறும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) பரிசீலனையில் உள்ளது.

வினா 746—திரு. இரா. இராசமாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் குத்தாலம் ஒன்றியம் வழுவூர் பூவாலை சாலையில் மகிமாலையாற்றின் குறுக்கே ஒன்றிய பொது நிதியிலிருந்து செலவு செய்து நெடுஞ்சாலை கிராம பணித்துறை மூலமாக பாலம் கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது தொடங்கப்பெறும் ?

1979 ஏப்ரல் 7]

விடை—

(அ) மற்றும் (ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

சிங்காநல்லூர் காமராஜ் அரிசன பகுதிக்கு குடிநீர், விளக்கு, நடைபாதை வசதிகள்.

வினா 747—திரு. எஸ். என். பழனிச்சாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை சிங்காநல்லூர் நகராட்சி 23-வது வார்டு காமராஜ் அரிசனப் பகுதிக்கு குடிநீர் வசதி, ஒளிவிளக்கு வசதி, நடைபாதை வசதி இல்லாமல் இருப்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) இந்தப் பகுதிக்கு நகராட்சி டிராக்டர்கள் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. நிதி பற்றுக்குறை காரணமாக புதிய தெரு விளக்குகள் அமைத்துத் தர நகராட்சியால் இயலவில்லை. பாதைக்காக தனியார் இடத்தை நில உரிமையாளரிடமிருந்து நில எடுப்பு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அரிசன நலத் துறை கோரப்பட்டுள்ளது.

பழனி இழுவை ரயில் மூலம் வருவாய்.

வினா 748—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பழனி மலையில் செல்லும் இழுவை ரயில் மூலம் ஆண்டுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது?

விடை—

பழனி மலையில் செல்லும் மின் இழுவை ரயில் மூலம் பழனித் திருக்கோயிலுக்கு கடந்த மூன்று பசலிகளில் கீழ் கண்ட வருமானம் வந்துள்ளது :—

பசலி.	செலவு போக நிகர வரவு.
(1)	(2)
1385 (1975–76)	2,01,372·88
1386 (1976–77)	3,23,289·39
1387 (1977–78)	3,32,562·98

நீலகிரி மாவட்டத்தில் திறக்கப்பெற்ற நுகர்பொருள் சங்கங்கள்.

வினா 749—திரு. க. அரங்கசாமி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1977–78-ல் நீலகிரி மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் கூட்டுறவு நுகர்பொருள் சங்கங்கள் புதிதாக திறக்கப்பெற்றன ?

விடை—

1977–78 ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் புதிதாக ஒன்றும் ஆரம்பிக்கப்படவில்லை.

ஆனால் 1978–79 ஆம் ஆண்டில் ஒரு கிராமத்திற்கு 'ஒரு கடை' என்ற திட்டத்தின் கீழ் 3 (மூன்று) கடைகள் நீலகிரி மாவட்டத்தில் திறக்கப்பட்டுள்ளன. மற்றும் 37 கடைகள் பல நோக்கு நுகர்வோர் கடைகளாக மாற்றப்பட்டுள்ளன.

தஞ்சை மாவட்டத்தில் தீப்பெட்டித் தொழில்.

வினா 750—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் தீப்பெட்டி தொழில் துவங்க செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில். விவரம் என்ன ?

1979 ஏப்ரல் 7]

விடை—

(அ) மற்றும் (ஆ): தஞ்சாவூரில் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் தொழிற் கூட்டுறவுப் பணி சங்கம் ஒன்று 1978-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 29-ம் தேதியன்று துவங்கப்பட்டது. இச்சங்கத்தில் இது வரை 69 சிறிய தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் அங்கத்தினர்களாக சேர்ந்துள்ளனர். இச்சங்கம் அங்கத்தினர்களுக்குத் தேவைப்பட்ட உதவிகளைச் செய்து கொடுப்பதன் மூலம், தீப்பெட்டி தொழில் வளரவும், பலருக்கு இத்தொழிலில் வேலைவாய்ப்புகள் கிடைக்கவும் வழிசெய்யும். இச்சங்கத்தின் எல்லை தஞ்சை மாவட்டம் முழுவதுமாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

3. தகவல் கோரல்.

(அ) மண்ணெண்ணெய் தட்டுப்பாடு— அமைச்சரிடம் அறிக்கை கோருதல்.

திரு. பொ. விஜயராகவன்: துணைத் தலைவர் அவர்களே, உணவுத் துறை அமைச்சர் அவர்கள் டெல்லி மாநகரத்திற்குச் சென்றுவிட்டு அங்கே மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு பற்றி மத்திய பெட்ரோலியம் அமைச்சரோடு பேச்சுவார்த்தையை முடித்துவிட்டு வந்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அவர்கள் இந்த அவைக்கு அதுபற்றி அறிக்கை தருவதாக சொன்னார்கள், தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம் இந்த அவையிலே நான் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்குப் பதில் அளிக்கிற நேரத்திலே நான் டெல்லி சென்று அங்கே இருக்கிற மத்திய பெட்ரோலிய அமைச்சரைச் சந்தித்துப் பேசிய பின்னால் இன்றைய தினம் 82-வது விதியின்கீழ் ஒரு அறிக்கை படிக்கிறேன் என்று சொன்னேன். ஆனால் இன்னும் அறிக்கை தயாராக—முழுமை ஆகாத நிலையிலே இருப்பதாலே அதைத் திங்கட்கிழமை இந்த அவையிலே வைக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1979 ஏப்ரல் 7

[முற்பகல் 10-00.]

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரவர்கள் டெல்லி சென்று வென்று வருகிறேன் என்று சொன்னார்கள். மண்ணெண்ணெயோடு வருகிறேன் என்று சொன்னார்கள். ஆனால் அறிக்கை கொடுக்கத் தாமதம் ஆவதைப் பார்க்கிற பொழுது எங்களுக்குச் சந்தேகமாக இருக்கிறது. மண்ணெண்ணெய் வருமா, வராதா என்பதைப்பற்றி அவையில் சொல்லலாமே. திங்கட்கிழமை வரையில் விளக்கு எரியுமா..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள், அறிக்கையைப் பார்ப்போம்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, திரு. அம்பிகாபதி அவர்களுக்கு அவநம்பிக்கையிருக்க வேண்டிய அவசியமே இல்லை.

(ஆ) என். ஜி. ஓ.க்கள் பிரச்சினை குறித்து.

திரு. ரா. உமாநாத்: துணைத் தலைவரவர்களே, என். ஜி. ஓக்கள் பிரச்னை சம்பந்தமாக நாங்கள் கொடுத்த அட்ஜார்ன்மெண்ட் மோஷன்ஸ் பெண்டிங்காக இருக்கிறது. முந்தாநாள் பேச்சு வார்த்தை நடக்கப் போவதாக பைனான்ஸ் மினிஸ்டர் அவர்கள் சொன்னார்கள். ஏதாவது நெகோஷியேஷன் நடந்ததா? அது எந்த ஸ்டேஜில் இருக்கிறது? அதை எப்பொழுது எடுக்கப் போகிறீர்கள் என்று தெரியவில்லை. இதுபற்றிச் சர்க்கார் சார்பாக ஏதாவது சொன்னால் பரவாயில்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களுக்கு இது தெரியாதது அல்ல. அரசு பேச்சு வார்த்தைகளை நடத்தி வருகிறது. தக்க நேரத்தில் அவை முன்னவரவர்கள் அதை இந்த அவைக்குத் தெரிவிப்பார்கள்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

மின் குறைப்புக் காரணமாக தொழிற்சாலைகள் இயங்க முடியாமல் மூடப்பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மின்குறைப்பு அரசு அறிவித்ததைவிட அதிகமாக இருக்கின்ற காரணத்தால் தொழிற்சாலைகள் சரிவர இயங்க முடியாமல் மூடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா, திரு. ஆ. நடராசன், திரு. கு. ரமணி, திரு. ஆர். வெங்கிடு, திரு. எ. ஆர். மாரிமுத்து, திரு. க. சுப்பு, திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், திரு. ஆர். கிருஷ்ணன், திரு. ஞானசிகாமணி, திரு. என். வரதராசன், திரு. மு. அம்பிகாபதி, திரு. பொ. உத்திராபதி ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச்சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். திரு. சுப்பு அவர்கள்.

திரு. க. சுப்பு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார வெட்டைப் பொறுத்தவரையில் சர்க்கார் அறிவித்ததற்குப் பிறகு புதிய உத்தரவைப் போட்டிருக்கிறார்கள். அந்த உத்தரவைப்பற்றி ஒத்தி வைப்புத் தீர்மானத்திலேயே குறிப்பிட்டு இருக்கிறேன்.

முதலிலே 30 சதவிதம் மின்சார வெட்டு இருக்கும் என்று அறிவித்தார்கள். சரி, பரவாயில்லை, இதோடு போகட்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால் கடைசியாக, வாரம் ஒரு நாள் கட்டாயமாகத் தொழிற்சாலையை மூடப்பட வேண்டுமென்ற அடிப்படையில் உத்தரவை அரசாங்கம் அனுப்பி இருக்கிறது. ஏற்கனவே கண்டினியூவஸ் பிராசஸ் என்ற நிலைமையில் உள்ள தொழிற்சாலைகளைத் தவிர, நூற்பு ஆலைகளை வாரத்திற்கு ஏழு நாட்கள் நடப்பது என்ற அடிப்படையில் ஏற்பாடு செய்து நடந்து வருகிறது. இப்பொழுது ஒரு நாள் கட்டாயமாக மூட வேண்டுமென்ற நிலைமை வந்தால் நான்கில் ஒரு பங்கு, ஆறில் ஒரு பங்கு ஸ்ட்ரெந்தைக் குறைக்க வேண்டி இருக்கும். லே-ஆப் கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இப்பொழுதே தொழிலாளர்கள் லே-ஆப் காரணமாகப் பாதிக்கப்படுகிறார்கள். நாம் சொல்வது ஒன்று, செய்வது ஒன்று என்ற நிலைமை இருக்கிறது. மதுரையில் இடையிடையே இரண்டு மணி, நான்கு மணி என்று மின்சார வெட்டு வருகிறது அதை எப்படி ஈடுகட்டுவது என்று தெரியாமல் தொழிற்சாலை

களிலே இருப்பவர்கள் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இப்படிப் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களைப் பாதிக்கும் உத்தரவை மிகவும் அமைதியாக யாருக்கும் தெரியாமல் Subtle ஆக அமைச்சர்களை தெரிந்தவர்கள்—இப்படிப்பட்ட உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறது. இதனால் தொழிலாளர்கள் எவ்வளவு பாதிக்கப்படுகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். எங்களுக்கு இராகவானநதம் அவர்கள் பதில் சொல்ல மாட்டார்கள். ஆனால் ஊரிலே இருப்பவர்கள் உட்கார விடமாட்டார்கள். இந்த மின்சார வெட்டின் காரணமாக ஏகப்பட்ட சிக்கல்கள் விளைந்திருக்கின்றன.

ஏறகனவே மின்சார உற்பத்தியில்—அனல் மின் நிலையங்கள் சரியாக இயங்க முடியாத நிலைமையில் சீர்கெட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. தூத்துக்குடி மின்சார நிலைய வேலையும், "பெல்" காண்ட்ராக்டுக்கு விட்டு தொடங்க வேண்டிய நேரத்தில் பல நிர்வாகக் கோளாறுகளின் காரணமாக அந்த வேலையும் தாமதப்படுகிறது. பல்வேறு திட்டங்களைத் தொடங்குகிறோம் என்று சொல்லப்படுகிறதே தவிர—விழாக்கள் தான் தொடங்கப்படுகின்றன, வேலைகள் தொடங்கப்படவில்லை. அந்த அடிப்படையில் தூத்துக்குடி மின்சார நிலைய வேலையும் தாமதப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக மின்சார வெட்டு வந்திருக்கிறது. ஆனால் நமக்கு வெட்டு வரவில்லை ஆகவே, அரசாங்கம் உடனடியாகக் கவனித்து, தொழிலாளர்களுக்கு வேலை பாதிப்பு ஏற்படும்பொழுது லே-ஆப் ஆவது—லே-ஆப் என்றால் பாதிச் சம்பளம்தான், அந்த லே-ஆப் கூடக் கிடையாது, அதுகூட இல்லாமல் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு வேலைக்குப் பாதுகாப்பைக் கருதி, முழு ஊதியம் கொடுக்க வேண்டுமென்று விவாதிக்க வேண்டுமென்ற அடிப்படையிலே ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்து இருக்கிறேன். எனவே, அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: துணைத் தலைவரவர்களே, நமது மின்சாரத் துறை அமைச்சரவர்கள் இந்த அவையில் மின்வெட்டு சம்பந்தமாக அன்றைக்கு அறிவித்த பொழுது உயர் மின்-அழுத்த மின்சாரம் எச். டி. லைன் மின்சாரம் — சப்ளை 30 சதவிதம் குறைக்கப்படும், தொழிற்சாலைகளுக்கு என்றும், அதற்குமேல் 7 நாட்களுக்குத் தொடர்ச்சியாக ஓடுகிற தொழிற்சாலைகளுக்கு ஒரு நாள் மின்சாரம் மறுக்கப்படும் என்றும் அன்றைக்குக் குறிப்பிட்டார்கள். ஆனால், இந்த அளவு, அது பெரும் அளவுக்கு பாதிப்புக்கு உள்ளாக்கும் தமிழக தொழிலாளர்களையும்,

1979 ஏப்ரல் 7] [திரு. க. சுப்பு]

ழில் களையும் என்று அதன் ஆழத்தை அன்றைக்கே நாம் கிரகித்துக் கொள்ள முடியவில்லையென்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. இப்பொழுது மில் முதலாளிகள் சங்கமே வெளியிட்டுள்ள அறிக்கையில், அவர்கள் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தில் இப்பொழுது 30 சதவிகிதம் எச். டி. லைன் மின்சாரம் குறைக்கப்படும்; தொடர்ச்சியாக 7 நாட்கள் நடக்கிற தொழிற்சாலைகளுக்கு ஒரு நாள் மின்சாரம் குறைக்கப்படும் என்று நிலைமையைத் தொடர்ந்து இரண்டையும் சேர்த்து 40 சதவிகிதத்திற்கு மேல் அது ஒட்டுமொத்தமாக குறைப்பாக ஆகிவிட்டது என்று அவர்கள் குறிப்பிட்டு 6 நாட்கள் ஓடுகின்ற தொழிற்சாலைகள், மில்கள் அத்தனையையும் ஒரு நாளைக்கு நிறுத்திவிடுவது—'லே-ஆஃப்' கொடுப்பது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படியானால், 1¼ இலட்சம் தொழிலாளர்களுக்கும், பஞ்சாலை தொழிலாளர்களுக்கும் இன்ஜினியரிங் தொழிற்சாலைகளுக்கும், பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. எச். டி. லைனில் ஓடுகிற அத்தனை தொழிற்சாலைகளும் பாதிக்கப்பட்டு, இலட்சக்கணக்கான விவசாயி மக்களுடைய வாழ்க்கை இதனால் பாதிக்கப்படுகிறது. ஒரு நாள் 'லே ஆஃப்' என்றால் பாதி சம்பளம்தான். அதனுடைய அம்சத்தைப் பற்றி நான் விளக்க வேண்டியதில்லை. அமைச்சருக்கே தெரியும்—என்ன கஷ்டத்தை உருவாக்கும் என்பது. அதே மாதிரி விவசாயிகளையும் எந்த அளவு பாதிக்கும் என்பதும் தெரியும் பல இடங்களில் டிரான்ஸ் பார்மருக்குப் பக்கத்தில் இருக்கும்படியான—நெருக்கத்தில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்குத்தான் ஓரளவு அரசு சொன்ன மின்சாரம் கிடைக்கிறது—தூரமான பகுதியில் இருக்கிற விவசாயிகளுக்கு மின்சாரம் கிடைக்கவில்லையென்றுதான் விஷயங்கள் வந்திருக்கின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலையில் மில்முதலாளிகள் என்ன சொல்கிறார்கள் எங்களிடத்தில் ஜெனரேட்டர் இருக்கிறது, மற்ற தொழிற்சாலைகளிடத்திலும் ஜெனரேட்டர்கள் இருக்கின்றன—கொஞ்சம்செலவு ஜாஸ்தியாகும். அவ்வளவுதான். ஆயினும், டீசல் கிடையாது. என்று சொல்கிறார்கள். அதனால்தான் முன்னாள் மாண்புமிகு உணவு அமைச்சரிடத்திலே கேள்வி கேட்கப்பட்டது. அது என்ன ஆயிற்று? இதனை ஒட்டியது அது. டீசல் இல்லாததால், ஜெனரேட்டர்களும் ஓடமுடியாது. ஹைடல் ஸ்டேஷன்களிலும் மின்சார உற்பத்திக் குறைவு—மின் துறை அமைச்சரவர்களும் மின்சாரத்தைக் குறைத்துவிட்டார். இந்த இரண்டும் சேர்ந்து மிகப் பெரிய ஆழமான பொருளாதார நெருக்கடிக்குக் கொண்டு போய்விட்டது. இலட்சக் கணக்கான மக்களை, விவசாயிகளை, தொழிலாளர்களைக் கஷ்டப்படுத்துகிற நிலையை மாற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை தேவையாக இருக்கிறது. நாம் ஏற்கனவே பார்த்ததை விட மிக ஆழமாகப் போகிறது. இந்த நிலைமைகள் முழுவதும் நமக்குத் தெளிவாகிறது. ஆகவே, அரசு ஒன்று, அந்தத் தொழிற்சாலைகளிலே அவர்களுக்குத் தொடர்ந்து மின்சாரம் கொடுப்பதற்கு எங்கேயிருந்து மின்சாரம் கிடைக்குமோ அங்கேயிருந்து பெற முயற்சியைச் செய்ய வேண்டும். கேரளாவி

லேயிருந்து அதிகம் பெற முடியுமானால், மைசூரிலேயிருந்து பெற முடியுமானால்---மைசூரே, கேரளாவிடமிருந்து வாங்குவது உண்டு ---இங்கேயிருந்து அங்கேயும் வாங்கப்படுகிறது---பெற வேண்டும் ---பக்கத்து மாநிலங்களிலேயிருந்து மின்சாரம் அதிகம் வாங்க முடியுமானால், நம்முடைய தெர்மல் ஸ்டேஷனில் அதிக மின் சாரம் உற்பத்தி செய்யப்படுமானால், இவை இரண்டுக்கும் மேலாக, ஜெனரேட்டர் வைத்திருக்கிற அத்தகைய தொழிற் சாலைகளுக்கும் கொஞ்சம் டீசல் அதிகமாகக் கொடுத்து, தொழில்களை நெருக்காமல் இருக்கிற நடவடிக்கையை அரசு உடனே எடுக்க வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால், வேலை யில்லா திண்டாட்டமும் பெரிய கஷ்டமும் ஏற்படும் என்பதை எடுத்துக்காட்டி, இந்தப் பிரச்னையை ஆழமாக விவாதிக்க, அவையினுடைய மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இலட்சக் கணக்கான மக்கள் மண்ணெண்ணெய் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். அதே போல், மின்சார வெட்டின் காரணமாக வீடுகளிலே இருக்கிற விளக்குகள் எரிய முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எப்பொழுது மின்சாரம் நிற்கும்? எப்பொழுது மின்சாரம் வரும் என்கிற உத்தரவாதமே பொதுவாக இல்லை. திடீரென்று நிற்கிறது, திடீரென்று வரு கிறது. சென்னையிலே கூட மின்சாரம் என்பதைப் பயன்படுத்தி கொள்ளை அடித்ததாகப் பத்திரிகையிலே செய்தி பார்த்தேன். இதனால், தொழில் துறையில் மிகப்பெரிய நெருக்கடி ஏற்பட்டி ருக்கிறது. தொழிலாளர்களுக்கு 'லே ஆஃப்'. $1\frac{1}{4}$ இலட்சப் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்குப் பாதிப்பு. வாங்குகிற சம்பளத்தைக் கொண்டே குடும்பம் நடத்த முடியாத நிலைமை யில், 'லே ஆஃப்'பினால் வேறு தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிற அபாயகரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கேரளாவிலே யிருந்து கேட்பார்களோ, மைசூரிலேயிருந்து கேட்பார்களோ, எங்கே கேட்பார்களோ, எங்களுக்குத் தெரியாது. மிகத் தேவை யான அளவு தொழிற்சாலைகள் இயங்குகிற அளவு பெற்றுத் தருவதுதான் அரசினுடைய கடமையாகும். மின்சாரமும் இல்லை, மண்ணெண்ணெயும் நாட்டிலே வெளிச் சந்தையிலே இல்லாமல் போகும் பயங்கர நிலைமை ஏற்பட்டிருப்பது மட்டு மல்ல. சென்னையிலே இருக்கிற வீடுகளுக்குப் பாதிப்பு, தொழிற் சாலைகளுக்குப் பாதிப்பு இன்று.

[முற்பகல் 10.10]

திரைப்பட நிலையங்களில் கூட படப்பிடிப்பு நடக்க முடிய வில்லை. இரண்டு நாட்களுக்கு முன்பு நான் ஏ.வி.எம். ஸ்டுடி யோவிற்கு போயிருந்தபோது நடிகர் திலகம் சிவாஜி கணேசன்

அவர்கள் அங்கே மேக்கப்போடு உட்கார்ந்திருந்தார்கள். என்ன அண்ணே என்று கேட்டதற்கு கரண்ட் இல்லை அதனால் படப் பிடிப்பு நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். வாகினி ஸ்டுடியோவிற்குப் போயிருந்தபோது, ரிக்கார்டிங் செய்வதற்காக அங்கே வந்திருந்த இசை இயக்குநர் எம்.எஸ். விஸ்வநாதன் அவர்கள் பரிதாபமாக உட்கார்ந்திருந்தார், என்ன விஷயம் என்று கேட்ட போது கரண்ட் இன்னும் வரவில்லை அதனால் ரிகார்டிங் செய்ய முடியவில்லை என்று தெரிவித்தார்கள். திரைப்படத் தொழில் கூட தூங்கிக் கிடக்கின்ற நிலையிலே........

திரு. ப. சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் ஸ்டுடியோவிற்கெல்லாம் சென்று பார்த்து விட்டு வந்திருக்கிறார். அவர் சினியாவில் சேரப்போகிறாரா என்று அறிய விரும்புகிறேன்?

திரு. இ. தமிழரசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் சினிமாவில் சேர்ந்திருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்?.......

திரு. எம். வின்சென்ட் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்களுக்கு ஸ்டுடியோக்களில் என்ன வேலை ? சினிமாவில் நடிக்கவாய்ப்பு தேடி வருகிறாரா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் சும்மா வேடிக்கைப் பார்க்கபோயிருப்பார். பாவம் விட்டுவிடுங்களேன் அவரை......(அவையில் சிரிப்பு).

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சினிமாவில் சேர்ந்து நடிக்க ஆரம்பித்துவிட்டேனா என்று உறுப்பினர்கள் கேட்டார்கள். என்னால் நடிக்க முடியும். அது எங்களுக்கும் தெரியும். ஆனால் நான் ஸ்டுடியோவிற்குச் சென்ற காரணம் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களும் இசை இயக்குநர் எம். எஸ். விஸ்வநாதன் அவர்களும் என்னுடைய நெருங்கிய நண்பர்கள். அவர்களைப் பார்க்கத்

தான் நான் போயிருந்தேன். வாகினி ஸ்டூடியோவில் 'ஆடி பாம்பே' என்ற ஒரு பாட்டை ரிகார்ட் பண்ணிக் கொண்டிருந்த வேளையில் தான் கரண்ட் நின்றுவிட்டது. இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நீங்கள் வீட்டையும் விடவில்லை. சினிமாவையும் விடவில்லை. ஆட்சியையும் விடவில்லை. அப்படிப் பட்ட நிலைமை மாற்றப்பட வேண்டும் என்றும், அதற்காக இந்த மின்வெட்டு சம்பந்தமாக மேலும் விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் இந்தப் பிரச்னை ஏற்கனவே எழுப்பப்பட்டு மின் பற்றாக்குறை காரணமாக அதை சரி செய்ய வேண்டும் என்று கேட்கப்பட்டது. உயர் அழுத் தத்தை பயன் படுத்துகிற தொழிற்சாலைகளுக்கு மின் வெட்டு அமுல் படுத்தப்பட்டது. கண்டினியூவஸ் பிராஸஸ் இண்டஸ் டிரீஸ், தொடர்ந்து இயங்க வேண்டிய தொழிற்சாலைகளுக்கு 15 சதவீதம் என்ற அடிப்படையிலும், நான்-கண்டினியூவஸ் பிராஸஸ் இண்டஸ்டிரீஸ், தொடர்ந்து இயங்க வேண்டிய அவசியம் இல்லாத தொழில்களுக்கு 30 சதவீதம் என்ற அடிப்படை யிலும் அமுல் படுத்தப்பட்டது. அதை ஒட்டி மாண்புமிகு உறுப் பினர் திரு. ரமணி அவர்கள் குறிப்பிட்டதைப் போல, குறிப்பாக டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ்-ஐ சேர்ந்தவர்கள் அது 40 சதவீதத்திற்கு வருகிறது என்று குறிப்பிட்டார்கள். அதற்கு காரணம் தொடர்ந்து இயங்குகிற தொழில்கள் என்கிற அடிப்படையில் நாள் முழுவதும் இயங்குகிற தொழில்கள் என்ற அடிப்படையில் அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கலாம். ஆனால் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். அமுல் படுத்தப்பட்டு இருக்கிற மின்வெட்டு தினசரி, இன்னும் சொல்லப்போனால் வினாடிக்கு வினாடி ஏற்படுகிற மின் உச்சத் தேவையிலே ஏற் பட்டதே தவிர மின் சக்தியில் அல்ல. அப்படி அதை கணக் கிட்டு 40 சதவீதம் என்று சொல்வது சரியாகாது. தினசரி எவ்வளவு உச்சத் தேவை என்ற அடிப்படையில்தான் அமுல் படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது டிமாண்ட் என்பது வேறு, கன்சம்ப்ஷன் என்பது வேறு. டிமாண்ட் என்பது ஒரு குறிப் பிட்ட அளவில் நாம் அந்த மின்சாரத்தை பயன்படுத்துவது, என்பது, கன்சம்ப்ஷன் என்பது நாம் அந்த மின்சாரத்தை நாள் முழுவதும் அல்லது ஆண்டு முழுவதும் பயன்படுத்தும் அளவு. நாம் இன்றைக்கு அந்த மின்வெட்டை டிமாண்ட் கட் என்ற அடிப்படையில்தான் போட்டிருக்கிறோம். சாதரணமாக அந்த

மின்வெட்டு இல்லாவிட்டால், மின் வெட்டு போடவில்லை என்று சொன்னால் 2 ஆயிரம் மெகாவாட்டிற்கு போகும். ஆனால் அமுல் படுத்தப்பட்டிருக்கிற காரணத்தால் அது குறைந்து இருக்கிறது. டிமாண்ட் தான் இப்பொழுது பிராப்ளம்—அதுதான் டிமாண்ட்.

டிமாண்ட் கட்டை பொறுத்தவரையில் நான் தெரிவிக்க விரும்புவது என்னவென்று சொன்னால் ஒட்டு மொத்தமாக கூட்டிப் பார்க்க வேண்டியது இல்லை. தினந்தோறும் எவ்வளவு பயன் படுத்துகிறோம். வினாடிக்கு வினாடி எவ்வளவு பயன் படுத்துகிறோம் என்பதைப் பொறுத்துத்தான் பார்க்க வேண்டும். இதனால்தான் அதை உச்சத் தேவை என்று கூறினேன்.

சில தொழிற்சாலைகளில் அவர்களே, தங்களிடத்தில் டீசல் ஜெனரேட்டர்கள் வைத்து இருக்கிறார்கள். அவர்களுக்கு டீசல் கொடுத்தால் போதும். தாங்களே உற்பத்தியை அதிகரித்துக் கொள்வதாகத் தெரிவித்துள்ளார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையில் மத்திய சர்க்காருக்கு கடிதம் எழுதினேன். நானே நேரில் சென்றபோது நம்முடைய மத்திய மின்சாரத்துறை அமைச்சர் அவர்களைப் பார்த்து, எப்படியாவது மின் வெட்டு அமலில் இருக்கிற மாநிலங்களுக்காவது டீசல் ஜெனரேட்டர்கள் பயன்படுத்துவதற்கு வேண்டிய டீசலை அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். மத்திய பெட்ரோலியம் அமைச்சர் பகுகுணா அவர்களையும் பார்ப்பதற்கு அன்று ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அன்று வேறு சில வேலைகள் அவருக்குத் தொடர்ச்சியாக இருந்ததால் சந்திக்க முடியவில்லை. மத்திய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களே, மத்திய பெட்ரோலியம் அமைச்சர் பகுகுணா அவர்களைக் கண்டு பேசுவதாக என்னிடத்தில் சொன்னார்கள். ஆகவே, இன்று ஏற்பட்டு இருக்கும் சூழ்நிலையில் உண்மையிலேயே நாம் கொஞ்சம் கவனமாக இருந்தால், இதை அதிக நாள் நீடித்துப் போகாமல் எவ்வளவு சீக்கிரத்தில் இந்த மின் வெட்டை ரத்து செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அதைச் செய்ய முடியும். அவர்கள் போதுமான அளவிற்கு டீசல் கொடுத்தால் 250 மெகாவாட் அளவிற்கு தமிழ்நாட்டில் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் சக்தி தனியாரிடத்தில் இருக்கிறது. டீசல் கொடுத்தால் அந்த அளவிற்கு உற்பத்தியைச் செய்து அதைச் சமாளிக்க முடியும்.

அதோடு கூட, ஆந்திரா, கேரளா ஆகிய மாநிலங்களில் இருந்து கூடுதல் மெகாவாட் மின்சாரம் வேண்டும் என்று கேட்டு இருக்கிறேன். ஆந்திரா மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் 50 மெகாவாட் மின்சாரம் உடனே தருவதாகச் சொன்னார்கள். நான் 100 மெகாவாட் தேவை என்று கேட்டேன் அவர்கள்

உடனடியாக 50 மெகாவாட் தருகிறேன், யோசித்து பின்னர் 100 தருகிறேன் என்று சொன்னார்கள். கேரளா மாநிலத்தில் உள்ள மின்துறை அமைச்சர் அவர்களோடு தொடர்பு கொண்டு அவர்கள் கூடுதலாகத் தரவேண்டும் என்று கேட்டு இருக்கிறோம். அது சம்பந்தமாக நம்முடைய மின்சார வாரிய அதிகாரிகள் கேரள அதிகாரிகளோடு கலந்து பேசி, அவர்களால் முடிந்த அளவிற்கு உதவி செய்வதாக ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள்.

ஆகவே, இன்று ஏற்பட்டு இருக்கும் பிரச்னை நீண்ட நாட்கள் இருக்கும் என்று நினைக்க வேண்டாம். எவ்வளவு சீக்கிரத்தில் இந்த மின் வெட்டு ரத்து செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் ரத்து செய்ய வேண்டும் என்ற அளவில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.. அதோடு மட்டுமல்ல, இந்த மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்காக நெய்வேலி அனல் மின் நிலையத்திலும், எண்ணூர் அனல் மின் நிலையத்திலும் தீவிரமான வேலை செய்யச் சொல்லி இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் சொன்னதுபோல், தூத்துக்குடி மின் திட்டம் 1978-ல் வந்து இருக்க வேண்டும். அதற்குக் காரணம் நிர்வாகக் கோளாறு அல்ல. இயந்திரக் கோளாறு ஏற்பட்டுவிட்டதால், அது வரவில்லை. அது வந்து இருந்தால் 280 மெகாவாட் மின்சாரம் நமக்குக் கிடைத்து இருக்கும். தூத்துக்குடியிலும், எண்ணூரிலும், நெய்வேலியிலும் அதிக உற்பத்தி செய்யப்பட்டால் இந்தப் பிரச்சினை வந்து இருக்காது. இருந்தாலும், இந்தப் பிரச்சினை ஏற்பட்டு விட்ட காரணத்தாலே இதைச் சீக்கிரத்தில் எப்படியாவது தீர்த்து வைக்க வேண்டும் என்று அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறது. ஏற்பட்டு விட்ட நெருக்கடியைச் சமாளிக்கத்தான் திட்டம் தயாரிக்கப்பட்டு இருக்கிறது. பெரும் தொழில் நடத்துபவர்களிடம் வேண்டுகோள் விட்டு இருக்கிறோம். வாரத்திற்கு ஒரு நாள் விடுமுறை தாருங்கள் என்று கேட்டு இருக்கிறோம். விடுமுறை இல்லாமல் பணி செய்ய வேண்டியதுதான். வாரத்திற்கு ஒரு முறை விடுமுறை விடுவதன் மூலம் அல்லது தொழிற்சாலைகளின் பணியை ''பேசிட் அவுட்'' செய்து பணி செய்தால் உச்சத் தேவையை பூர்த்தி செய்ய முடியும். இது சம்பந்தமாக மின்சார வாரியமும், தொழிற்சாலை அதிபர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் சந்தித்துப் பேசி, எந்த அளவிற்கு அந்த நெருக்கடியை—உற்பத்தியை பாதிக்காமல்—சமாளிக்கலாம் என்று வரையரை ஏற்படுத்த மின் வாரியம் செயல்பட்டு வருகிறது. இது சம்பந்தமாக எல்லா உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்து, இப்போது ஏற்பட்டு இருக்கும் நெருக்கடி தற்காலிகமானதுதான் என்ற அடிப்படையில், இதனால் பெரும் பிரச்னை பெரும் பொருளாதார நெருக்கடி நிச்சயமாக வந்து விடாது, வர விட மாட்டோம் என்பதைக் கூறி, ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கூறி அமர்கிறேன்.

[1979 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, பிற அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

3. தகவல் கோரல்—(தொடர்ச்சி)

(இ) தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் குறித்த ஒத்தி வைப்புத் தீர்மானம் குறித்து.

திரு. க. சுப்பு: துணைத் தலைவர் அவர்களே, சேரம்பாடி தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினை குறித்து நான் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்து இருந்தேன். அந்தப் பிரச்சினையில் கிட்டத்தட்ட 4,000 தொழிலாளர்கள் பாதிக்கப் பட்டு இருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேரும் இலங்கை அகதிகள். நான் 3—4—1979 அன்றே கொடுத்து இருக்கிறேன். மறுநாள் எடுத்துக் கொள்வதாகச் சொன்னார்கள். எடுத்துக் கொள்ளவில்லை. பிறகு அருப்புக்கோட்டை துப்பாக்கிச் சூடு பற்றி வந்து விட்டது. அது முடிந்து போய்விட்டது. இன்று எடுத்துக்கொள்வதாகச் சொன்னார்கள். இப்போது கூட அமைச்சர் இருந்தார். இதிலே இரண்டு அமைச்சர்கள் சம் பந்தப்பட்டு இருக்கின்றனர். ஒன்று தொழிலாளர் நலத்துறை அமைச்சர். மற்றொன்று, கோவில் மந்திரி—திரு. ஆர். எம். வீரப்பன்— அறநிலையத்துறை அமைச்சர்—அவர் இங்கே ** அதை இன்று எடுத்துக்கொண்டால் நல்லது. நான் வேண்டுமானால் அதை வாசித்து விடட்டுமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் விதி 42-ன்கீழ் கொடுத்து இருக்கிறீர்கள். அது விதி 41-ன் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானமாக மாற்றப்பட்டு இருக்கிறது.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் முதலில் 42-ன் கீழ் அனுமதிக்கிறேன் என்று சொன்னார். பிறகு 41-ன் கீழ் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொன்னால் எப்படி? கடைசி யாக டிசைட் செய்தது என்ன?

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1979 ஏப்ரல் 7

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்களும், மற்ற கட்சியைச் சேர்ந்தவர்களும் கொடுத்து இருக்கிறார்கள். அத்தனையும் விதி 41-ன்கீழ் எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது.

(முற்பகல் 10-20.)

திரு. க. சுப்பு: லாக் அவுட் செய்து, இன்றைக்கு 4,000 தொழிலாளர்கள் தெருவிலே நிற்கிறார்கள். அவர்கள் எல்லாம் இங்கே உள்ளவர்கள் அல்ல; இலங்கை அகதிகள். இந்த ஊர்க்காரர்கள் யாரும் இல்லை. நான் அதைப்பற்றி ஏற்கனவே தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அது முதலில் 41-வது விதியின் கீழ் எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்தது; அப்போது லாக் அவுட் இல்லை. பின்னால் லாக் அவுட் ஏற்பட்டவுடன் என்னுடைய தீர்மானம் 42-வது விதியின்கீழ் எடுத்துக் கொள்ளப் படும் என்று பேரவைத் தலைவர் சொல்லியிருக்கிறார்கள். 42-வது விதியின்கீழ் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லி விட்டு, மறுபடியும் 41-க்குப் போவது சரியல்ல; அதை எப்படி 41 ஆக மாற்ற முடியும்?

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, நானும் 42-ல் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அந்தத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படவிருப்பது 41-லா அல்லது 42-லா என்பதை அவையிலே வைத்துப் பார்த்து விளக்கம் அளிக்கலாம். இப்போது அந்தப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளாததால் அதுபற்றி மேற்கொண்டும் விவாதிக்க வேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: லாக் அவுட்டுக்கு முன்னால் 41-ல் கொடுத்தேன். இப்போது லாக் அவுட் இருக்கிறது. ஆகையால் 42-லேதான் எடுத்துக் கொள்ள வேண்டும். சம்பந்தப்பட்ட அமைச்சரவர்களும் இங்கே இல்லை. * * * லீடர் ஆஃதிஹவுசும் இங்கே இல்லை. பாவம். மின்சாரத்துறை அமைச்சர் ஏதோ விளக்கம் சொல்கிறார். * *

***மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரவர்கள் சொன்னதைப்போல, 41-லே மாற்றப்பட்டிருக்கிறது என்ற தகவல்தான் என்னிடம் இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல 42-லே எடுத்துக் கொள்ள ஒப்புக்கொண்டிருந்தால் பேரவைத் தலைவரவர்கள் வந்த பின்னால் அதுபற்றி முடிவு செய்வார்கள்.

திரு. க. சுப்பு : * * *

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, உறுப்பினர்கள் இப்படி வாய்க்கு வந்தபடி எல்லாம் சொல்லக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : சம்பந்தப்பட்ட அமைச்சரும் கிடையாது; லீடர் ஆஃப் தி ஹவுசும் கிடையாது. இப்போது இந்த மந்திரி பதில் சொல்ல ஆரம்பித்துவிட்டார். (மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் உள்ளே வந்தார்கள்). லாக் அவுட் ஆகி, இன்றைக்கு 4,000 தொழிலாளர்கள் வெளியே நிற்கிறார்கள். அவர்கள் இந்த ஊர்க்காரர்கள் அல்ல; அத்தனை பேரும் இலங்கை அகதிகள்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தேயிலைத் தோட்டக் கழகம் சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்கிற பிரச்சனை முடிவுக்கு வந்து விட்டது. தொழிலாளர்களோடு சமரச ஒப்பந்தம் செய்யப்பட்டு விட்டது. லாக் அவுட் நீக்கப்பட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : இவ்வளவு நேரம் சபை நடந்துகொண்டிருக்கிறது. இதுவரையில் சமாதானம் ஏற்பட்டுவிட்டது என்று சொல்லவில்லை. நல்ல முடிவு ஏற்பட்டுவிட்டால் அதை சபைக்குச் சொல்லலாம் அல்லவா. அதைப்பற்றி நான் அட்ஜார்ன்மென்ட் மோஷன் கொடுத்தது, கால் அட்டன்ஷனாக மாற்றப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். முக்கியமான தகவல்களைச் சொல்வதற்கு லீடர் ஆஃப் தி ஹவுசும் இங்கே இல்லை. இப்போது அறநிலைய மந்திரி பதிலாக இந்தத் தகவலைச் சொல்கிறார்.

It shows how we are being mis-informed.

* * *மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவ ரவர்களே, இந்தப் பிரச்சனை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு, பரிசிலனையில் இருக்கிறபோது, நேற்று அந்தப் பிரச்சனை பரிசீலிக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு, முடிவு பெற் றிருக்கிறது. சபையிலே அந்தப் பிரச்சனையை எடுத்துக் கொண் டிருந்தால் அந்த அறிவிப்பைக் கொடுத்திருப்போம். அந்தத் தகவலைத் தரக் கூடாது என்ற எண்ணம் இல்லை. அவையிலே வருகிறபோது தெரிவிக்கலாம் என்று இருந்தோம். இப்போது உறுப்பினர் அவர்கள் அந்தப் பிரச்சனையை எழுப்பியதால் சபைக்கு இந்தத் தகவலைத் தெரிவித்தேன்.

திரு. க. சுப்பு : அப்படியானால் அதைப்பற்றி விவாதித்து விடுவோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சரவர் களுக்கு கிடைத்த தகவல் அடிப்படையில் சொல்கிறார்கள். முழுமையாகத் தகவல் கிடைத்த பிறகு, அதுபற்றிய அறிக்கை வந்த பின்னால் எடுத்துக் கொள்ளப்படும். இத்துடன் இந்தப் பிரச்சனையை விட்டுவிடலாம்.

மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் பேசும்போது* * *.

என்று சொன்ன வார்த்தைகளை சபைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. க. சுப்பு : அதெல்லாம் நகைச்சுவைக்காகச் சொல்லப் பட்டது. அதையும் நீக்கிவிட்டால் சபையில் சுவாரசியம் இல்லா மல் போய்விடும்.

* * *.

திரு. செ. சொக்கலிங்கம் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்புறம் உங்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டரைச் சொல்லுங்கள். இப்போது உட் காருங்கள். திரு. சுப்பு அவர்கள் * * * என்று சொன்ன தையும் நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : அதை ஏன் நீக்க வேண்டும். முதல மைச்சர் சொல்லியிருக்கிறார். அது அவைக் குறிப்பில் இருக் கும்போது இப்போது சொன்னதை மட்டும் ஏன் நீக்க வேண்டும்? அது இருக்கலாம்.

* * *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

[1979 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்போது அதெல்லாம் சம்பந்தப்படவில்லை: அதனால் அதையும் நீக்கும் படி உத்தரவிடுகிறேன்.

அடுத்து அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி. . .

1. ஒழுங்குப் பிரச்சனைகள்—தொடர்ச்சி.

(ஆ) எப்பொழுது எழுப்பப் பெற வேண்டும் என்பது குறித்து.

திரு. துரை முருகன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் 41-வது விதியின் கீழ் கொடுத்திருக்கும் தீர்மானத்திற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் பதிலளித்த பிறகு நீங்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பலாம்.

THIRU DURAIMURUGAN: I am sorry, I am raising a point of order. Allow me. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள்.

திரு. துரை முருகன்: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட பிரச்சினை குறித்து மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

" திருவில்லிபுத்தூர் தொகுதி.

திரு. துரை முருகன்: பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொண்டாகிவிட்டது. ஆகவே பாயின்ட் ஆஃப் ஆர்டர் பிறகு எழுப்பலாம். தாமரைக்கனி அவர்கள். . . .

[1979 ஏப்ரல்

திரு. இரா. தாமரைக்கனி : திருவில்லிபுத்தூர் தொகுதி எஸ் கொடிக்குளம் பஞ்சாயத்து..........

திரு. துரை முருகன் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார்......

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத தலைவரவர்களே, ரூல் 41 முடிந்த பிறகு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம் என்று தாங்கள் சொன்னீர்கள். அதுபோன்றே முடிந்த பிறகு எழுப்பலாம். . . .

திரு. துரை முருகன் : என்னுடையது வேறு பிரச்சினை....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள்.

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர் எப்போது வேண்டுமானாலும் எழுப்பலாம்.......

5. கவன ஈர்ப்பு.

திருவில்லிபுத்தூர் கமாபட்டி விவசாய கூட்டுறவுக் கடன் சங்கம் குறித்து.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 41-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட பிரச்சினை குறித்து மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"திருவில்லிபுத்தூர் தொகுதி எஸ். கொடிக்குளம் பஞ்சாயத்து, கமாபட்டியில் உள்ள எஸ். பி. எஸ். பி. எல். 85 கூட்டுறவு விவசாய நாணய சங்கம் செயல்படாமலும், விவசாயிகள் கடன் பெற முடியாமலும் செலுத்திய முதலுக்கு வட்டி பெற முடியாமலும் இருப்பதாலும், விவசாயிகளிடம் ஏற்படும் பதட்ட நிலை குறித்து".

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில், கமாபட்டி. விவசாய கூட்டுறவு கடன் சங்கம், 1309 சிறு விவசாயிகள் மற்றும் 462 பெரிய விவசாயிகள் ஆக மொத்தம் 1,771 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது. இவர்களில் 740 சிறு விவசாயிகள் மற்றும் 60 பெரிய விவசாயிகள் ஆக 800 உறுப்பினர்கள் கடன் பெற்றிருக்கிறார்கள். உறுப்பினர் கடன் மொத்தம் ரூபாய் 9·68 இலட்சம் நிலுவையில் உள்ளது. இதில் ரூபாய் 8·65 இலட்சம் தவணை தவறிய நிலுவையாகும். தவணை தவறிய நிலுவை 89 விழுக்காட்டை எட்டியுள்ளது (குறுக்கீடு.)

1. ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

(ஆ) எப்போது எழுப்பப் பெறவேண்டும் என்பது குறித்து.—தொடர்ச்சி.

திரு. துரை முருகன் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்....
..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் பேசிக் கொண்டிருக்கிறார். உட்காருங்கள்.

திரு. துரை முருகன் : பாயிண்ட் ஆப் ஆர்டர், பாயிண்ட் ஆஃப் ஆர்டர், பாயிண்ட் ஆஃப் ஆர்டர்........ மைக்கைப் போடுடா.......

(இவ்வாறு சொல்லிக்கொண்டே மைக்கை குத்தி உடைத்து, தன் முன்னுள்ள இருக்கையைத் தூக்கி, குலுக்கிக் குலுக்கிக் கொண்டு கூச்சலிட்டுக்கொண்டிருந்தார்.)

(திருவாளர்கள் மதுராந்தகம் ஆறுமுகம், சுப்பு ஆகியோரும் மற்றும் சிலரும் இருக்கையில் இருந்தே ஏதோ ஏதோ கூறினார்கள். காதில் விழவில்லை.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லோரும் முதலில் உட்காருங்கள்.

திரு. துரை முருகன் : பாயிண்ட் ஆப் ஆர்டர்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாயிண்ட் ஆப் ஆர்டரைப் பிறகு எடுத்துக் கொள்ளலாம். அமைச்சர் அறிக்கையை முடிக்கட்டும்.

திரு.அ. ரகுமான்கான் : பாயிண்ட் ஆப் ஆர்டர் அலவ் பண்ணாவிட்டால் ராஸ்கல் உதைப்பேண்டா.

திரு. க. சுப்பு : பாயிண்ட் ஆப் ஆர்டர் அலவ் பண்ணி விடுங்களேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதுதான் பிறகு எடுத்துக் கொள்ளலாம் என்று முன்பே கூறிவிட்டேனே.

திரு. அ. ரகுமான்கான் : (தம் கால் செருப்பைக் கழற்றி கையில் எடுத்துக்கொண்டு காட்டி) போடா ராஸ்கல், தெனாவட்டா ஆயிடுத்தா, பாயிண்ட் ஆப் ஆர்டர் அலவ் பண்ணலேன்னா உதைப்பேண்டா, பாயிண்ட் ஆப் ஆர்டர் அலவ் பண்ண மாட்டியா ? (இப்படி பல முறை உரத்த குரலில் கூறிக் கொண்டிருந்தார்).

5. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி.

திருவில்லிபுத்தூர் கமாபட்டி விவசாய கூட்டுறவு கடன் சங்கம் குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. சே. ஏ. கிருஷ்ணசாமி—(தொடர்ச்சி) இச்சங்கம் மத்திய வங்கிக்கு ரூ. 9·24 இலட்சம் தரவேண்டியுள்ளது. இதில் 91 விழுக்காடு அதாவது ரூ. 8·49 இலட்சம் தவணை தவறிய கடனாகும். உறுப்பினர்களின் தவணை தவறிய கடன்கள் 50 விழுக்காட்டிற்கும் அதிகமானால் கிராம விவசாயக் கூட்டுறவு கடன் சங்கம், மத்திய வங்கியிடமிருந்து மேலும் கடன் பெறும் தகுதியை இழக்கிறது. 1977–78-ல் உறுப்பினர்களின் தவணை தவறிய கடன்கள் 76 விழுக்காடாக இருந்தது. இருப்பினும் வரட்சி நிவராணத் திட்டம் செயல்படுத்தப்படும் பகுதியில் இச்சங்கம் இருப்பதால், நிலுவை இல்லாத மற்றும் புதிய உறுப்பினர்களுக்கு புதிய கடன் வழங்க விதிவிலக்கு உள்ளது. இவ்வகையில் 1977–78-ல் தகுதியுள்ள உறுப்பினர்களுக்கு ரூ. 2·56 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. 1978–79லும் இச்சங்கம் தகுதியுள்ள உறுப்பினர்களுக்கு புதிய குறுகியகால விவசாயக் கடன் வழங்கப்போதிய நிதி உதவி அளிக்குமாறு மத்திய கூட்டுறவு வங்கிக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. நிலுவையுள்ள உறுப்பினர்களுக்குப் புதிப் கடன்கள் வழங்க இயலாது.

உறுப்பினர்கள் செலுத்திய மூலதனத்திற்கு வட்டி கொடுப்பது வழக்கத்தில் இல்லை. ஆயினும் கூட்டுறவுச் சங்கங்கள் ஈட்டும் இலாபம் உறுப்பினர்கள் செலுத்திய மூலதனத்திற்கேற்ப பகிர்ந்தளிக்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளாக இச்சங்கம் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு தொடர்ந்து நட்டத்தில் இயங்கியதால் இலாபத்தைப் பகிர்ந்தளிக்கும் நிலை எழவில்லை.

ஆண்டு. (1)	நட்டம். (2) ரூபாய்.
1974–75	1,062·69
1975–76	42,563·85
1976–77	68,827·09

உறுப்பினர்கள் பெற்ற கடன்களை வட்டியுடன் கெடு தேதிகளில் செலுத்தாமையால்தான் இச்சங்கத்திற்குத் தொடர்ந்து நட்டம் ஏற்பட்டுள்ளது. கடனையும் வட்டியையும் செலுத்தத் தவறிய உறுப்பினர்கள் மூலதனத்திற்கு மட்டும் இலாபத்தில் பங்குத் தொகையை எதிர்பார்ப்பது வியப்பளிக்கிறது.

1. ஒழுங்குப் பிரச்சினை—(தொடர்ச்சி).

(ஆ) எப்போது எழுப்பப் பெறவேண்டும் என்பது குறித்து.— தொடர்ச்சி.

திரு. துரைமுருகன் : பாயிண்ட் ஆப் ஆர்டர்..........

[முற்பகல் 10·30]

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்பப்பட்டால் கூடுமானவரை அதை அனுமதித்து இருந்தால் அவை நிம்மதியாக நடைபெற்றிருக்கும். பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்புகிறவர்களுக்கு ஒரு களங்கம் கற்பிக்கக்கூடாது. பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லும் போது அதிலே பிரச்னை இருக்கலாம். பிரச்னை இல்லாமல் இருக்கலாம். அதை அனுமதிக்கத் தேவையில்லை. அது மறுக்கப்படுகிறது என்ற நிலையை உருவாக்கிவிட்டீர்கள். இப்போது உடனடியாக என்ன அந்த பிரச்னை என்று கேளுங்கள். அது ஏற்பு உடையதாக இருந்தால் அதை அனுமதியுங்கள். அது ஏற்பு உடையது இல்லை என்றால், தாங்கள் அனுமதிக்க வேண்டாம். அதற்கு மாறாக தாங்கள் நடந்து கொண்டால் இந்தச் சட்டமன்றம் அமைதியாக நடைபெறாத ஒரு சூழ்நிலை உருவாகும் என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேராசிரியர் அவர்களுக்கு வருத்தத்தோடு சொல்லிக்கொள்வது........

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர், 81-வது என்று சொன்னால்

"A member may, with the permission of the Speaker என்று போடப்பட்டிருக்கிறது.
ரூல்ஸ் 83, ஐ உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"Rule 83(1)—Any member may at any time submit a point of order" Not with the permission

பர்மிஷன் கிடையாது.

"Any member may at any time submit a point of order for the decision of the Speaker"

அப்படித்தான் இருக்கிறது. அதற்குப் பிறகு நோ பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று நீங்கள் சொன்னால் We are bound by it.

பாயிண்ட் ஆப் ஆர்டர் raise பண்ணுவதற்கு பர்மிஷன் தேவை யில்லை. பர்மிஷன் இல்லாமல், அனுமதி இல்லாமல் எழுப்பக் கூடாது என்று 81-வது விதியை இம்போஸ் பண்ணக்கூடாது. அதனால் இந்தக் குழப்பம் ஏற்பட்டது. மந்திரி அவர்கள் படித்துக்கொண்டே வந்தார். அவர் உரக்கப் படித்துக் கொண்டு வந்தார். அது அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் புரியவில்லை. சட்டசபையில் ஒரே குழப்பம். நீங்கள் இதற்கெல்லாம் ரூலிங் கொடுக்க வேண்டும். ரோலிங் வேண்டாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இங்கே பேராசிரியர் அவர்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்புகிறபோது அனுமதி கொடுத்திருக்கலாம் என்று சொன்னார்கள். நான் சொல்வது, பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்புவதற்கு தாங்கள் அனுமதிக்க வில்லை என்று சொல்லவில்லை. ஏற்கனவே, 41-வது விதியின் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட்டு விட்டது. ஆகவே, அந்தத் தீர்மானம் முடிந்த பிறகு பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம். நான் அனுமதிக்கிறேன் என்று சொன்னீர்கள். ஆனால், துரை முருகன் அவர்கள் அதைக் கேட்டு அமரவில்லை. (குறுக்கீடு) அவர் தொடர ஆரம்பித்து, தாங்கள் பிறப்பித்த ஆணையை மாற்ற வேண்டும் என்பதற்காகவோ அல்லது மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்பதற்காகவோ, அவர்கள் செய்த காரியங்கள் முறைதானா ? என்பதை தயவுசெய்து தாங்கள் தெரிவிக்க விரும்புகிறேன். அதிலே, நம்முடைய உறுப்பினர் சுப்பு அவர்கள் விதிகளைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். விதி 83 (4) பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்ப வேண்டுமென்றால்,

"Rule 83 (4)—A point of order may be raised in relation to the business before the House at the moment ;

Provided that the Speaker may permit a member to raise a point of order during the interval between the termination of one item of business and the commencement of another if it relates to maintenance of order, in, or arrangement of business before the House."

ஆகவே, நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது தாங்கள் அனுமதி மறுக்கவில்லை. இந்தத் தீர்மானம் முடிந்த பிறகு எழுப்பலாம் என்று சொன்னீர்கள். அதை கேட்டுக் கொண்டு துரைமுருகன் அவர்கள் அதை எதிர்க்க வேண்டும் என்பதற்காக தாறுமாறாக நடந்து கொண்டதும், மைக்கைப் பிடித்து எடுத்தெறிவேன் என்று சொல்வதும், வெளியிலே வன்முறை நடந்தால், அதைக் கண்காணிக்க காவல்துறை இருக்கிறது, உள்ளே இந்த சட்டமன்றத்தில் வன்முறை நடந்தால், சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதற்குத் தாங்கள்தான் உத்திரவாதம் தர வேண்டும்.

1979 ஏப்ரல் 7]

*திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே எழுப்பப்பட்ட பிரச்சினை என்ன என்பது கூட அல்ல முக்கியம். நீங்கள் 41-வது விதியின்கீழ் ஒரு பிரச்சனையை எழுப்புவதற்கு ஓர் உறுப்பினரை அழைத்தீர்கள், அந்த நேரத்தில் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று ஒழுங்குப் பிரச்னை ஒன்று எழுப்ப தங்களின் அனுமதியை உறுப்பினர்கள் கேட்டார்கள். அந்த ஒழுங்குப் பிரச்னை 41வது விதியின் கீழ் தரப்படுகின்ற பிரச்னை பற்றியும் இருக்கலாம். அதைவிட உடனடியாக அவையின் கவனத்தைத் திருப்புவதற்கு அவசியமான ஒன்றாகவும் இருக்கலாம். அதை அனுமதித்து கேட்ட பிறகு தாங்கள் அந்த ஒழுங்குப் பிரச்னை தவறு என்று கூடத் தீர்ப்பு அளிக்கலாம்.

அடுத்து பிரச்னை தொடங்குவதற்கு முன்னால் உறுப்பினர் எழுப்ப விரும்பிய ஒழுங்குப் பிரச்னையை தாங்கள் அனுமதிக்க மாட்டேன் என்று கூறினீர்கள். இதனால் தங்களது உரிமை பறிக்கப்படுவது போன்ற ஒரு உணர்வு உறுப்பினர்களுக்கு ஏற்படுத்தப்பெற்றதன் தொடர்பாகத்தான் இப்படிப்பட்ட நிலை உருவானது. அதன் தொடர் நிகழ்ச்சிகளைச் சற்றுமுன் நாம் பார்த்தோம்.

முதலிலேயே அந்த ஒழுங்குப் பிரச்சனைக்குத் தாங்கள் அனுமதி கொடுத்திருப்பீர்களேயானால் (குறுக்கீடு) அவர் அனுமதி கேட்ட போது, அடுத்த பிரச்னை தொடங்கப்படாத ஒரு நிலை இருந்தது. பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப அனுமதி கொடுத்திருந்தாலும் அதைச் சொல்வதற்கு ஒரு நிமிடந்தான் ஆகியிருக்கும். அது பாயின்ட் ஆப் ஆர்டராகக் கூட இல்லாமல் இருக்கலாம் அல்லது அது தேவையில்லை என்று தாங்கள் எளிய முறையில் தள்ளியிருக்கவும் முடியும். அப்படித் தீர்த்திருக்கக்கூடிய பிரச்னை அது. தாங்கள் அனுமதியில்லை, அனுமதியில்லை என்று திரும்பத் திரும்ப மறுத்ததின் காரணமாக உறுப்பினர்கள் தங்களது உரிமை பறிக்கப்படுகிறது என்ற உணர்வின் அடிப்படையில் ஏற்பட்ட விளைவுகள்தான் இவை என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நமது விதிகளில் தெளிவாக இருக்கிறது. ஒரு ஒழுங்குப்பிரச்னை என்றாலும்கூட ஒரு பிசினஸ் முடிந்த பிறகுதான் எழுப்ப வேண்டும், அதுவும் தங்களுடைய அனுமதியின் பேரில் எழுப்ப வேண்டும் என்றிருக்கிறது. அதைத்தான் படித்துக் காட்டினேன். பாயின்ட் ஆப் ஆர்டரை அனுமதிக்கக்கூடாது என்பதல்ல. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் இதற்குள் உணர்ச்சி வசப்பட்டு விட்டார்

[1979 ஏப்ரல்

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு சுப்பு அவர்கள் 83-ஆம் விதியை படித்திருக்கிறார். எல்லாவற்றையும் சேர்த்துப் படிக்க வேண்டும்.

திரு. ர. ஜெபமணி: பேரவை உப தலைவர் அவர்களே, இப்போது வது எப்படியிருந்தாலும், உப தலைவர் அல்லது தலைவர் உட்கார்ந்திருக்கின்ற நாற்காலிக்குத் தனி மரியாதை இருக்கிறது என்பதை நாம் அறிவோம். இங்கு நடப்பதைப் பார்த்து விட்டு இந்த நாட்டு மக்கள் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்றால், மக்களுடைய வரிப் பணத்தை பாழாக்கிக்கொண்டு இருக்கிறோம் என்றுதான் நினைப்பார்கள். கடமை, கண்ணியம் கட்டுப்பாடு என்பதையெல்லாம் உறுப்பினர்கள் இப்போது காற்றில் பறக்க விட்டுக் கொண்டிருக்கிறார்கள். (ஆளும் கட்சித் தரப்பிலிருந்து கைதட்டல்) இதை நான் ஒருவருக்கு மட்டும் சொல்லவில்லை. எல்லோருக்கும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன். எந்தப் பிரச்னையாக இருந்தாலும் சரி சபாநாயகருக்கு நாம் மரியாதை கொடுக்க வேண்டும். (தி.மு.க. தரப்பிலிருந்து: உபதேசம் தேவையில்லை....) நான் நாட்டு மக்களுக்கு சொல்லுகிறேன். உங்களுக்குச் சொல்லவில்லை. இந்த நாட்டு மக்கள் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள், சண்டை போடவா இங்கு வந்திருக்கிறோம். நாட்டுமக்களின் நலனுக்காக பல திட்டங்களைப்பற்றி பேசி, அரசு உடனடியாக இந்த இந்தக் காரியங்களைச் செய்ய வேண்டும் என்று சொல்வதற்காக வந்திருக்கிறோம். மக்களுக்காகப்பேசுவதற்கு நேரம் போதவில்லை ஐந்து நிமிஷம் பத்து நிமிஷம் என்று கட்டுப்படுத்தவேண்டியிருக்கிறது. வீண் தகராறு செய்தே சிலர் அவை நேரத்தை இப்படி வீணாக்குவது என்றால் அதற்கு அனுமதி கொடுக்கவில்லை என்றால் அடித்துப் போடுவோம் என்று சொல்லுகிறார்களே இதற்குத்தானா வந்திருக்கிறோம்...... (குறுக்கீடு).

திரு. கே. கந்தசாமி: இந்த அவையின் மரியாதையோடும், கண்ணியத்தோடும் எனது கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நாட்டின் ஜனநாயகத்தின் மொத்த உருவமாக அமைந்திருக்கிறது இந்த மாமன்றம்.

இங்கு மக்களுடைய பிரச்னைகளைத்தான்—திரு. ஜெபமணி அவர்கள் குறிப்பிட்டதுபோல் எத்தனையோ உயிர்ப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண வேண்டியிருக்கிறபோது, சிலவற்றுக்கு தாங்கள் அனுமதி கொடுக்கிறீர்கள். சிலவற்றுக்கு மறுக்கிறீர்கள். ஆனால் தினந்தோறும் இங்கு நடப்பதைப் பார்த்து மிகவும் வேதனைப்படுகிறேன். வேதனைப்படுகிறேன்; வெட்கப்படுகிறேன்.

நேற்று 10, 20 பேர்கள் கிராமத்திலிருந்து வந்தார்கள், அனுமதிச் சீட்டு வாங்கிக் கொடுத்தேன். சபை நடவடிக்கைகளை எல்லாம் பார்த்தார்கள். பின்னால் என்னிடம் சொல்லுகிறார்கள், இந்த தெருச்சண்டையைப் பார்ப்பதற்கா நாங்கள் இங்கு

வந்தோம் என்று கேட்கிறார்கள். இதை பார்த்து நான் மிகவும் வெட்கப்படுகிறேன். நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்ல வில்லை, மாண்புமிகு சபாநாயகர் அவர்களைப் பார்த்து மாண்பு மிகு உறுப்பினர்கள் இப்படிப் பேசலாமா, இது சரியா தினந் தோறும் இப்படி நடந்தால் இது சபைதானா?

[முற்பகல் 10-40]

திரு. க. சுப்பு : நாக்கை அடக்கிப் பேச வேண்டும்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மைக்கை உடைத் ததற்காக நிச்சயமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு ப. சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, நாட்டுப் பிரச்னைகளை விவாதிப்பதற்காக ஏற்பட்டிருக்கின்ற ஒரு புனித மான அவையிலே, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் பல நேரங்களிலே நடந்திருப்பதை நாம் பார்த்துக் கொண்டு வருகிறோம். பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லிக் கொண்டு, இந்த அவையின் மரபை மீறுகின்ற வகையில் நிலைமைகள் நடைபெற்றுக் கொண்டு வருவதையும் நாம் பார்த்துக் கொண்டு வருகிறோம். சமீப காலத்திலே கூட ஒரு நிகழ்ச்சி, அதாவது லைட் வெயிட்டைத் தூக்கி எறிந்த

திரு. ஆ. நடராசன் : நான் பேசியாக வேண்டும். சந்திரனை எந்த விதியின் கீழ் பேச அனுமதித்தீர்கள் நான் உட்கார முடியாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர் கள் விதி 83 (4) பிரிவைப் படித்துக் காட்டினார்கள். விதி 64 (2) பிரிவிலே—

"Whenever the Speaker rises, no member shall speak or continue his speech but immediately resume his seat"

என்று தெளிவாக விதி இருக்கிறது. எந்தப் பிரச்சினை எழுந் தாலும், முதலில் தலைவர் அவர்களின் அல்லது அவைத் தலைவர் அவர்களின் அனுமதியைப் பெற்றுத்தான் எழுந்திருக்க வேண்டும் என்று எல்லா இடங்களிலும் பரவலாக சொல்லப்பட்டிருக்கிறது. நான் இப்போது எழுந்திருக்க வேண்டாம், பேசி முடிந்ததும் அனு மதிக்கிறேன் என்றேன். அவர் பேச எழுந்திருப்பதற்கு முன்பு

தாங்கள் இந்தப் பிரச்னையை எழுப்பவில்லை. தாமரைக்கனி அவர்கள் விதி 41 ன் கீழ் ஒரு பிரச்னையை எழுப்பினார்கள். அதற்குப் பிறகு தாங்கள் சொல்லலாம் என்றுதான் நான் சொன்னேன். நான் அனுமதி மறுக்கவில்லை. இந்தப் பிரச்னை முடிந்தபிறகு சொல்லுங்கள் என்றேன். அதற்குப் பிறகும்கூட (குறுக்கீடு) தொடர்ந்து தாங்கள் பேசிக் கொண்டும், மைக்கை உடைத்தும், அதற்குப் பின்னாலே ரகுமான்கான் அவர்கள்..........

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே எதிர்க் கட்சிகள் சார்பில் பல நேரங்களில் இப்படி நடக்கும்போது, 'எக்ஸ்பஞ்' செய்து கொண்டிருக்கின்ற ஒரு கருத்து இருக்கிறது. எனவே, இதை 'எக்ஸ்பஞ்' பண்ண வேண்டியதில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதுவும் இருக்கட்டும் என்றுதான் சொல்கிறேன். மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் செருப்பை எடுத்துக் காண்பித்தார்கள். அதுவும் பத்திரிகையிலே வரட்டும், இருக்கட்டும். அவர் காண்பித்த படியே

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே.........

திரு. க. சுப்பு : தாங்கள் பேசிக் கொண்டிருக்கும்போது மந்திரி அவர்கள் மட்டும் அனுமதியில்லாமல் எழுந்து பேசலாமா அவரை பனிஷ் பண்ணுவீர்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : செருப்பைக் காண்பித்து, செருப்பாலே அடிப்பேன், வாடா, போடா என்றெல்லாம் திரு. ரகுமான்கான் சொன்னார்கள். எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அவைபற்றியெல்லாம் ஒன்றும் சொல்லாமல் இருப்பது உண்மையிலேயே வருத்தம் அளிக்கிறது.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தாங்கள் இந்தச் செய்தியைச் சொல்கிறபோது, நான் இந்த இடத்தில இருக்கிறேன். அப்படி நடைபெற்றிருந்தாலும், அதை நான் பார்த்திருக்க முடியாது. தவிர, நான் அமைச்சர் ராமச்சந்திரன் அவர்களிடம் ஆலோசனை கூறிக் கொண்டிருந்தேன். அந்த நேரத்தில் இதையெல்லாம் நான் கவனிக்கவில்லை. அப்படி ஏதாவது நடைபெற்றிருக்குமானால், என் கட்சியின் சார்பாக ஆழ்ந்த வருத்தத்தையும், மன்னிப்பையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் அப்படி பேசிக் கொண்டிருக்கும்போது, மைக்கை உடைத்து........

திரு. க. அன்பழகன் : பிரச்னையை வளர்க்க வேண்டாம். சுமுகமாக முடியுங்கள். நடைபெற்ற காரியங்களுக்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், ஆளுங் கட்சியின் சார்பாக எந்த அளவுக்கு உணர்வைத் தூண்டினார்கள் என்பதையும் அவரவர்கள் மனசாட்சிக்கு அவர்கள் எடுத்துக் கொள்ளட்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுடைய பெருந்தன்மையை மதிக்கிறேன். ஆனால் நீங்கள் சொல்லியும் கேட்காமல் திரு. துரை முருகனும், ரகுமான்கானும் இந்த அவையின் மதிப்பைக் குறைக்கத் தக்கவகையில் நடந்துகொண்டார்கள் என்பதை எண்ணும்போதுதான் வருத்தமாக இருக்கிறது.

மொத்தத்தில் அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களையும் வேண்டிக்கொள்கிறேன். இந்த மாமன்றத்திற்குத் தனி மரியாதை பாரம்பரியம் இருந்து வந்திருக்கிறது. அதைக் காப்பாற்றும் பொறுப்பு உறுப்பினர்களுக்கு இருக்கிறது என்பதை அவர்கள் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஆகவே, தலைவரோடு ஒத்துழைக்குமாறு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

5. கவன ஈர்ப்பு (தொடர்ச்சி).

திருவில்லிபுத்தூர் சமாபட்டி விவசாய கூட்டுறவுக் கடன் சங்கம் குறித்து (தொடர்ச்சி).

*திரு. இரா. தாமரைக்கனி : இந்த விவசாய நாணய சங்கம் இருக்கும் பகுதி ஒரு அணைக்கட்டுப் பகுதி. மூன்று போகம் சாகுபடி செய்யக்கூடிய இடமாகும். அந்த இடம். மேற்கொண்டு கிணறுகளில் நல்ல முறையில் தண்ணீர் இருக்கின்றது.

[திரு. தாமரைக்கனி] [1979 ஏப்ரல் 7

விவசாய நாணயச் சங்கத் தலைவர் இப்போது வரிகொடா இயக்கத் தலைவராக மாறிவிட்டார். ஒவ்வொரு வீடாகப் போய் யாரும் விவசாய நாணயச் சங்கத்தில் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டாம் என்று சொல்லிக் கொண்டு வருகிறார். விவசாய நாணயச் சங்க செகரடரி வசூல் செய்ய முனையும்போது, 'உங்கள தலைவர் கொடுக்கவேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்' என்று சொல்லி அந்த செக்ரடரியை அடிக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. விவசாய நாணயச் சங்கத்தில் உறுப்பினராக உள்ள கிராம முன்சீப் அவருடைய பெயரால் உறவினர்கள் பெயரால் இரண்டு லட்சம் ரூபாய் கடன் வாங்கி அதைத் திருப்பிக் கட்டாமல் கோர்ட்டில் ஸ்டே வாங்கியிருக்கிறார். அது மட்டுமல்லாமல் அந்த ரூபாயைக் கொண்டு நிலம் வாங்கவும், தியேட்டர் கட்டிடவும் முயற்சி செய்து கொண்டிருக்கிறார். இதுபற்றி வருவாய்த் துறை அமைச்சரிடம் சொல்லப்பட்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட நாணயச் சங்கத் தலைவர் மீதும், வி. எம். மீதும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சிறு விவசாயிகள் மேம்பாடு, திட்டத்தின்கீழ் சங்கத்தின்மூலம் மாட்டு லோன், ஆட்டு லோனுக்கு சம்பந்தப்பட்ட டி. ஆர். ரெகமண்ட் பண்ணியிருக்கிறார். இது பற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா? விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் தன்னுடைய உரையிலே எடுத்து வைத்த விவரங்களை எல்லாம் அரசு கவனத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தில் குறை செய்தவர்கள், குற்றம் செய்தவர்கள் மீது விரைந்து இந்த அரசு நடவடிக்கையை எடுக்கும் என்று உறுதி கூறி, அதே நேரத்தில் இன்றைக்கு இந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் கடன் கொடுக்க முடியாத காரணத்தாலே நியாயமாகச் செலுத்த முடியாத விவசாயிகள் கூட கடனைப் பெற முடியாத ஒரு அவல நிலையில் இருக்கிறார்கள் என்றும் அவர்களுக்கு ஒரு உரிய பரிகாரத்தை இந்த அரசு அளிக்கவேண்டுமென்றும் மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் தன்னுடைய விளக்கத்திலே கேட்டுக்கொண்டார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்களுடைய மேலான கவனத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன். தாங்கள் குறிப்பிட்ட இந்தப் பகுதி வறட்சி நிவாரணத் திட்டம் செயல்படுத்தப்படுகிற பகுதி என்ற காரணத்தாலே இந்தச் சங்கத்திலே யார் யார் இன்று வரை நிலுவை இல்லாமல், தவணை பாக்கி இல்லாமல் கடன்களைச் செலுத்திக் கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் நிச்சயமாக கடன் வசதி செய்து தரப்படும்.

1979 ஏப்ரல் 7] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

அதாவது தகுதியுள்ளவர்கள் என்று நான் குறிப்பிடுகிறபோது, நிலுவை இல்லாத உறுப்பினர்கள், புதிய உறுப்பினர்கள் ஆகிய இந்த இரண்டு வகையான உறுப்பினர்களுக்கு நிச்சயமாக அந்தப் பகுதியில் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு கடன் நிதி உதவி அளிக்குமாறு மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு அரசு அறிவுறுத்தியுள்ளது. ஆனால் நிலுவையிலுள்ள உறுப்பினர்களுக்கு நிச்சயமாக புதிய கடன்கள் வழங்க இயலாது. இவ்வகையில் 1977–78-ல் தகுதியுள்ள உறுப்பினர்களுக்கு அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் 2,56,000 ரூபாய் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இன்னும் தகுதியுள்ள உறுப்பினர்கள் இருப்பார்களேயானால், நிலுவை இல்லாத புதிய உறுப்பினர்களாக இருப்பார்களேயானால் நிச்சயமாக மத்தியக் கூட்டுறவு வங்கியினுடைய வாயிலாக அந்தப் பகுதியில் இருக்கிற பெரு மக்களுக்கு வறட்சி நிவாரணத் திட்டத்தின் அடிப்படையில் நிச்சயமாகக் கடன் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உறுதி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 10·50]

6. வரவு-செலவுத் திட்டம் 1979–80 வாக்கெடுப்பு —(தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண். 2—மாநில ஆயத்தீர்வை.

(ஆ) கோரிக்கை எண். 4—பொது விற்பனை வரிகளும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாநில ஆயத் தீர்வை பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—, நிர்வாகம் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம் தொடரும்.

*மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் எல்லாம் பேசுகின்றபோது அதிலே இருக்கின்ற சில சங்கடங்களையெல்லாம் சொன்னார்கள். பலர் ஆதரித்துச் சொன்னார்கள். ஒரு முனை வரி வேண்டுமென்று சொன்னார்கள், பலமுனை வரியை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள், கள் குடிப்பதற்கு மட்டும் அனுமதிக்க வேண்டுமென்று சொன்னார்கள். மதுவிலக்குச் சட்டத்தால் அமுல்படுத்த முடியாது, பிரச்சாரத்தாற்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1979 ஏப்ரல் 7

முடியும் என்று சொன்னார்கள். இவைகளையெல்லாம் எண்ணிப் பார்க்கிறபோது மதுவிலக்கைப் பற்றி முதலிலே நான் பேச வேண்டுமானால் பிரச்சாரத்தாலே மட்டும் முடியாது என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். அதேபோல் சட்டத்தால் மட்டுமே முடியாது என்பதையும் ஏற்றுக்கொள்கிறோம். சட்டமும் இருக்க வேண்டும், பிரச்சாரமும் இருக்கவேண்டும், இரண்டையும் கலந்து நீங்கள் பிரச்சாரமும் செய்யவேண்டும், ஆதரவும் கொடுக்க வேண்டும், சட்டமும் அமலில் இருக்கவேண்டும். அப்போது தான் இது வெற்றிகரமாக நடைபெறும் என்பதை நான் முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் நான் உங்களுடைய கவனத்திற்கு ஒன்றை இந்த நேரத்திலே கொண்டுவர ஆசைப்படுகிறேன். இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ள எல்லா மாநிலங்களையும் எண்ணிப்பார்த்தால அரசியல் விழிப்புணர்ச்சி இந்த மாநிலத்தில் தான் இருக்கிறது. மற்ற மாநிலங்களைக் குறைவாகச் சொல்வதாக யாரும் கருதக் கூடாது. தமிழகத்திலே தான் இருக்கிறது, இங்கே இருக்கிற விழிப்புணர்ச்சி வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லை என்பதை நான் உறுதியாகவும் தைரியமாகவும் சொல்வேன். அப்படி இருப்பதற்கு என்ன காரணம் என்று எண்ணிப் பார்த்தால் இங்கே இருக்கிற அரசியல் தலைவர்கள், அரசியல் கட்சிகள், பொது வாழ்க்கையில் இருக்கக்கூடியவர்கள் எல்லாம் தங்களுடைய எண்ணங்களைக் கூறுகிறபோது தெளிவாகவும் நிதானமாகவும் இருந்துகொண்டு சொல்வது தான் காரணம். இங்கே கேட்க வருகிறவர்களும் நிதானமாக இருந்து தன்னிலை மறக்காமல் கேட்கிறபோது கருத்து விளக்கங்களைப் பெற்று அரசியல் விழிப்புணர்ச்சி பெற்றிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். மாலை நேரங்களிலே நாம் எல்லாம் பிரச்சாரம் செய்கிறோம். பிரச்சாரம் செய்யப் போகிறவர்களும், கேட்க வருகிற கூட்டமும் ஒரே மாதிரியாக நிலையாக இருக்கிறபோது தான் நம்எண்ணம் நிறைவேறுகிறது என்பதால் இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ள எந்த மாநிலத்தினை எடுத்துக்கொண்டாலும் சரி தமிழகத்தைப் போல் அரசியல் விழிப்புணர்ச்சி உள்ள மாநிலம் வேறு எந்த மாநிலமும் இல்லை என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். ஆகவே மதுவிலக்கு தேவை, ஆனால் சட்டமும் தேவை, நம்முடைய பிரச்சாரமும் தேவை என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய பல உறுப்பினர்கள் எல்லாம் ஒரு முனை வரியாக எல்லாவற்றையும் கொண்டுவரவேண்டுமென்றும் கேட்டார்கள். ஆனால் ஒரு முனை வரியிலும், பல முனை வரியிலும் இருக்கிற சங்கடங்களையும் நன்மை தீமைகளையும் அவைகளையெல்லாம் ஆராய்ந்து அவர்கள் பேசினார்களா அல்லது ஆராயாமல் சொன்னார்களா இல்லையென்றால் தெரிந்து வேண்டு

மென்றே சொன்னார்களா என்று எண்ணிப் பார்க்கிறபோது தெரிந்து வேண்டுமென்றே திரு உத்திராபதி அவர்கள் சொல்லியிருக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன். அதிலே இருக்கிற சங்கடம் என்ன என்றால் ஒரு முனை வரியால் குறைச்சலாக உற்பத்தியாகிற பொருள் எது என்று நன்றாகத் தெரிந்து கொள்வது, இறக்குமதி செய்கிற பொருள் எது என்று நன்றாகத் தெரிந்துகொள்வது, அதை விற்பனை செய்கிறபோது, அதை பயன்படுத்துகிறபோது அவற்றிற்கு ஒரு முனை வரி போட்டால் தான் இலகுவாக இருக்கும். ஆனால் ஆயிரக்கணக்கான பொருட்கள், கண்டுகொள்ள முடியாத பொருட்கள் வருகிறபோது ஒரு முனை வரி போட்டால் அது ஏமாற்றுவதற்கு வழிவகை செய்யும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அது மட்டுமல்ல. ஏழைகளுக்கு எது நன்மை என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். நான் உங்களுக்குச் சொல்ல வேண்டுமானால் இன்றைக்கு 136 பொருட்களுக்கு ஒரு முனை வரி நான் நேற்றுச் சொல்கிறபோது 325 கோடி ரூபாய் விற்பனை வரியே வந்திருக்கிறது என்று சொன்னேன். 57 கோடி ரூபாய் இந்த வருடம் அதிகம் என்று சொன்னேன். அதைச் சொல்கிற போது அந்த 325 கோடி ரூபாயில் 80 சதவீதம் ஒரு முனை வரியில் வசூலிக்கப்பட்டது என்றால் நீங்கள் இப்போது ஏற்றுக் கொண்டிருப்பீர்கள், ஒரு முனை வரி எவ்வளவு அதிகமான பொருட்களுக்கு இருக்கிறது என்பதை நீங்கள் தெரிந்துகொள்வீர்கள்.

ஒன்றை நான் சொல்கிறேன். இப்படி வரிகளைப் போடும் பொழுது அரசுக்கு எது இலாபம், வியாபாரிகளுக்கு எது சங்கடம் இல்லை, உற்பத்தியாகும் பொருள்கள் எப்படி விற்பனையாகும் என்பதையெல்லாம் ஆண்டுக்கு ஒரு முறை அரசு ஆலோசித்து முடிவெடுக்கிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திருசுவாமிதாஸ் அவர்கள்பேசிக் கொண்டிருக்கும்பொழுது சுதந்திரா பார்ட்டியைப் பற்றிய பேச்சு வந்தது. பலமுனை வரி பெரிய வியாபாரிகளுக்கு நன்மை பயக்குமா, ஒருமுனை வரி நன்மை பயக்குமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால் ஒருமுனை வரி போட்டு விட்டால், பலமுனை வரி என்றால் 50,000 ரூபாய் வருமானம் வரை வரி இல்லை, ஒருமுனை வரியானால் 5 ரூபாய்க்குச் சாமான் வாங்கினாலும் சரி, எத்தனை ரூபாய்க்குச் சாமான் வாங்கினாலும் சரி, 50,000 ரூபாய்க்குக் குறைவாக வியாபாரம் செய்கிற வணிகர்கள் அந்த வரியைச் செலுத்த வேண்டுமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகையால்தான் பலமுனை வரி, ஒரு முனை வரி என்னும் பொழுது, சிறு வியாபாரிகளுக்கு பலமுனை வரி நன்மை செய்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசும்பொழுது திரு. துரை கலியமூர்த்தி அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். பல விஷயங்களைச் சொல்லும் பொழுது அவருடைய நகரத்தைப் பற்றியெல்லாம் சொல்லி, சென்னைக்குக்கூட ஒன்றைச் சொன்னார்கள். சென்னையிலே வணிகவரித் துறை அலுவலகமெல்லாம் நெருக்கமாக இருக்கிறது, போனால் எங்களுக்குச் சங்கடமாக இருக்கிறது என்று. ஆனால் திரு. துரை கலியமூர்த்தி அவர்கள், வணிகவரித் துறை அலுவலகத்திற்குச் சென்று அங்கே கணக்குக் கொடுக்க வேண்டிய நிலையில் இல்லை என்பது எனக்குத் தெரியும். ஆனாலும், ஏன் சொன்னார் என்று நினைத்துப் பார்த்தால் இந்த அரசுக்கு வருமானம் அதிகம் வரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாநிலத்திலே இருக்கின்ற பல இடங்களில் வணிகவரித்துறைக்குச் சொந்தக் கட்டடம் இல்லை என்பது உண்மைதான். ஆனால் ஒன்றன்பின் ஒன்றாக இப்பொழுதான் கட்டிக்கொண்டு வந்திருக்கிறோம்.

இப்பொழுது சில மாதங்களுக்கு முன் விருதுநகரில் பல இலட்ச ரூபாயில் கட்டடம் கட்டி இன்றைக்கு வணிகவரித்துறை அங்கே நடந்துகொண்டிருக்கிறது.

அதைப்போல, சென்னைக்கும் 74 இலட்சம் ரூபாயில் ஒரு கட்டடம் கட்ட அனுமதி வழங்கியாகிவிட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலத்தான் மதுரைக்கு 37.5 இலட்சம் ரூபாயில் ஒரு கட்டடம் கட்ட அனுமதி வழங்கி இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராசன் அவர்கள் பல விவரங்களைச் சொன்னார்கள். அவர்கள் பல விவரங்களைச் சொல்கிறபொழுது, அதிகாரிகள் தவறு செய்கிறார்கள், பெரிய பெரியவியாபாரிகளோடு தொடர்பு வைத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் அவர்களைத் தாழ்மையோடு கேட்டுக் கொள்வேன், ''அதிகாரிகள் தவறு செய்கிறார்கள், நான் நிரூபிக்கிறேன்'' என்று சொன்னார்கள், அவைகளைத் தெரிவித்தால் அதன்மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இப்பொழுதுதான் இந்த ஆண்டு கண்காணிப்புக் குழு (Vigilance Cell) அதிகாரிகள் தவறு செய்தால். அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க ஏற்படுத்தியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 7] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வராஜ் அவர்கள் பேசும் பொழுது ஒன்றைச் சொன்னார்கள். நல்ல நோக்கத்தோடு சொன்னார்கள். நமது மாநிலத்தைதவிட அண்டை மாநிலத்தில் கெமிகல்ஸ் எல்லாம் வரும்பொழுது விற்பனை வரி குறைவாக இருப்பதாலே நமக்கு நஷ்டம் இல்லையா என்று கேட்டார்கள். அப்படி நஷ்டம் இருந்தாலும், அவைகளையெல்லாம், மற்ற மாநிலத்துடன் ஒப்பிட்டுப் பார்த்துத்தான், அண்டை மாநிலத்தில் எப்படி வரி போட்டு இருக்கிறார்கள் என்பதைப் பார்த்துத்தான் நாம் அவைகளைப் போடுகிறோம் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள், உணவுப் பொருள்களுக்கு வரிபோடுகிறார்கள் என்று. நான் தெரிவித்துக் கொள்கிறேன். நெல், அரிசி, கோதுமை, சோளம், கம்பு, ராகி, தினை, வரகு, சாமை, தவிடு, முட்டை, இறைச்சி, மீன் இவைகளுக்கெல்லாம் வரியில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-00]

ஆனால், இவைகளுக்கெல்லாம் வரி இல்லையென்கிற விஷயங்களை எல்லாம் படித்தபொழுது, நீங்கள் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும், கோழிக்கு வரி இருக்கிறது. முதலிலே அந்த, வரியைப் போடுகிறபொழுது......

(மாற்றுத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் தலைமை.)

கால்நடைகளைக் கொண்டு வருகிறபொழுது, வாங்குகிறபொழுது அதை வியாபாரத்திற்காக வாங்குகிறார்களா அல்லது உணவுப் பொருளுக்காக வாங்குகிறார்களா என்று தெரியாமல் சில சங்கடங்கள் இருந்தன என்று முதலிலே தெரிவிக்கப்பட்டது. ஆகவே, கால்நடைகளுக்கு வரி இல்லையென்று இந்த அரசு தெரிவித்தது. ஆனால், நடுத்தர மக்களும், ஏழைகளும் இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களும் கேட்டுக்கொள்கிற காரணத்தால், கோழிக்குப் போடுகிற வரியும் இன்று முதல் நீக்கப்படுகிறது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி நீக்குகிறபொழுது அரசுக்கு நஷ்டம் ரூபாய் 4 இலட்சம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும் அரசு அதை நீக்குகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றைச் சொன்னார்கள் இங்கே பேசுகிறபொழுது. சினிமா கொட்டகைகளுக்கெல்லாம் ஒட்டுமொத்த வரி (Compounding Tax) போடுவதாலே சில நஷ்டங்கள் வருகின்றன என்று சொன்னார்கள். சில பேர்கள் சொன்னார்கள். சினிமாக்களுக்கு ஒட்டு மொத்த வரி (Compounding Tax) போடுவதாலே, 2, 3 ஷோவுக்கு வரியைச் செலுத்திவிட்டு 7, 8

(திரு. எஸ். டி. சோமசுந்தரம்) [1997 ஏப்ரல் 7

ஷோ போடுகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், இதைப் பார்க்கிற பொழுது, ஒட்டுமொத்த வரி (Compounding Tax) போட்ட பிறகு வரி அதிகமாக வருகிறது. ஆனால், இன்றைக்கு (Local Boards) ஊராட்சி மன்றங்கள், நகர மன்றங்களுக் கெல்லாம் வருமானம் குறைந்திருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், வருகிற வரி யில் எப்படிப் பிரிக்கிறார்கள் என்றால், முனிசிபாலிட்டிகளுக்கு 60 சதவீதம், அரசுக்கு 40 சதவீதம் ஆகப் பிரிக்கப்படுகிறது. பஞ்சாயத்து யூனியன் அண்ட் பஞ்சாயத்து, இவர்களுக்கெல்லாம் வருகிற வரியில் 40 சதவீதமும், 60 சதவீதமும் என்று பிரிக்கிறார்கள். ஆனால், எப்படி அதிகரித்திருக்கிறது என்றால் 1977-ல் முனிசிபாலிட்டீஸ் கிரேட் 2, கிரேட் 3 இவைகளுக்கு மொத்தமாக வந்த பணம் ரூபாய் 1,33,73,182. ஆனால், இப் பொழுது வந்தது எவ்வளவு என்றால், ரூபாய் 1,38,22,179.26 பைசா. ஆகையினாலே, இப்பொழுது வந்திருக்கிற விகிதாச்சாரத் தில் அவர்களுக்கு வருகிற பர்சன்டேஜ் அதிகமாகத்தான் வரு கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதே போல், பஞ்சாயத்தை எடுத்துக்கொண்டால், 1977-ல ரூபாய் 2,33,26,989 ஆனால், இப்பொழுது வந்திருப்பது, ரூபாய் 3,06,13,240 என் பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி வருகிற பொழுது முதலிலே இருந்ததைவிட இப்பொழுது அதிகமாக இலாபம் வருகிறது என்பதை அவருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் இங்கே இல்லை. ஆனால், ஒன்றைச் சொல்லியிருக்கி றார்கள். திறமையாகப் பணிபுரியும் அலுவலர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுதுதான், 6 மாதங்களுக்கு முன்னால் அப்படி திறமையாக வேலை செய்பவர் களுக்காக, ரூபாய் 1,500 முதல் ரூபாய் 2500 வரையிலும் அதி காரிகளுக்குக் ரொக்கப்பரிசு கொடுப்பதற்கும் முதலமைச்சருடைய நற்சாட்சிப் பத்திரம் வழங்குகிற முறையிலும் இந்த அரசு திட்டம் உண்டாக்கியிருக்கிறது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றொன்று, கல்யாண மண்டபங்களுக்கு வரி போட வேண்டு மென்பது. இன்றைக்கிருக்கிற சட்டப்படி கல்யாண மண்டபங் களுக்கு வரி போட முடியாது. அங்கே இருக்கிற (Local Boards) முனிசிபாலிட்டீஸ், கார்ப்பரேஷன் எல்லாம் இன்றைக்கு வரியைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கெல்லாம் வரியைப் போட முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள் கிறேன்.

1979 ஏப்ரல் 7] (திரு. எஸ். டி. சோமசுந்தரம்)

இப்படி வணிக வரியைப் பொறுத்தவரையிலும், எவ்வளவு அதிகமாக வருவாய் வந்திருக்கிறது என்று நாங்கள் சொல்லும் போது, நாங்கள் ஏழை, எளியவர்களிடத்திலே—அவர்களைக் கசக்கிப் பிழிந்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஏழை எளியவர்களை நாங்கள் கசக்கிப் பிழியவில்லையென்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். பணக்காரர்களிடத்திலேதான் வரி வசூலித்து இருக்கிறோம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் இங்கே ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். வரியைப் பற்றி பேசுகிறபோது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள்—சட்டமன்றத்தில் இங்கே அவர் பேசுகிறபோது சொல்லியிருக்கிறார். அதை நான் அவர் இருக்கிறபோது தான் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். இன்றைக்கு இங்கே அவர் வந்திருக்கிறார் திரு. சங்கரய்யா அவர்கள் சொல்கிறார்கள். ''என்ன செல்வாக்குப் பயன் படுத்தப்பட்டதோ, பெரிய நில உரிமையாளர்கள் நிலப் பிரபுக்கள் சந்தித்து எந்தவிதமாக செயல்படுத்தப்பட்டதோ எந்த விதமான செல்வாக்குப் பயன்படுத்தப்பட்டதோ தெரியவில்லை. இதனால் விவசாய வருமான வரிச்சட்ட முன் வடிவு இங்கே வரவில்லை என்பதை அவர்கள் சொன்னார்கள்.'' நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசு உங்களுக்கு எல்லாவற்றையும் சொல்ல முடியாவிட்டாலும், உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அரசு 14 நாட்களாக அவசரமாக திடீர் ஆய்வு செய்தது. அது எப்பொழுது என்றால் சட்டமன்றம் நடந்துக் கொண்டிருக்கிற போது கூட, பிப்ரவரி 22-ம் தேதியும், பிப்ரவரி மாதம் 23-ம் தேதியும், சென்னையில் திடீர் ஆய்வு செய்தது. திடீர் ஆய்வு இது. அதைப்போல நவம்பர் மாதத்திலிருந்து 4 மாதம் வரையிலும் திடீர் ஆய்வு செய்யப்பெற்றது. இதற்கு முன்னால் இப்படிப்பட்ட ஆய்வு யாரும் செய்ததில்லை என்பதை நான் பெருமையோடு இந்த அவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்படி திடீர் ஆய்வு செய்ததைக் கணக்கிட்டால் 14 நாட்கள் தான், ஆனால் ஆய்வு செய்யப்பட்ட வியாபார இடங்கள் 109. அந்த வரி எல்லாம் எப்படி வந்தது? ஏழை எளியவர்களை எல்லாம் நாங்கள் கசக்கிப் பிழிந்து வாங்கப்பட்ட வருவாய் அல்லவது. ஆனால், எப்படி நாங்கள் நடவடிக்கை எடுத்தோம் என்று சொன்னால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். நான் சொல்லப்போவது இல்லை. சென்னையில் இருக்கிற மிகப் பெரிய நகை வியாபாரி, சென்னையில் இருக்கக்கூடிய மிகப் பெரிய வைர வியாபாரி இவர்களிடத்தில்தான் வரி வசூலிக்கப்பட்டது. பதிநான்கே நாட்களில் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வசூலிக்கப்பட்டது. அதை நான் சொல்கிறபோது 9,39,80,032 (ஒன்பது கோடியே 39 லட்சத்து எண்பதாயிரத்து முப்பத்திரண்டு ரூபாய்) கணக்கிலே காட்டப்படாத வரி வசூலிக்கப்பட்டது. இது கணக்கிலே வராத காரணத்திற்காக போடப்பட்டது.

இதனால் அரசுக்கு எவ்வளவு வந்தது? சொன்னார்களே இங்கே நாங்கள் சின்ன வியாபாரிகளை கசக்கிப் பிழிகிறோம். என்று—இதை நான் இந்த அவைக்குச் சொல்வதற்கு காரணம், எங்களைப்பற்றி— என்னையும்பற்றி திரு. சங்கரய்யா அவர்கள் பேசியிருக்கிறார்கள். அதற்காகத் தான் நான்......

திரு. என். சங்கரய்யா: தலைவர் அவர்களே,

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நான் சொல்லி முடித்து விடுகிறேன். அதற்குப் பிறகு நீங்கள் பேசலாம்.

அரசுக்கு வந்தது மட்டும எவ்வளவு தெரியுமா? 1 கோடியே பத்தொன்பது லட்சத்து பத்தொன்பதாயிரத்து அறு நூற்று ஐம்பது ரூபாய். இதையெல்லாம் நான் சொல்வதற்கு காரணம் நாங்கள் எப்படி அதையெல்லாம் செய்திருக்கிறோம் என்பதை இந்த அவை தெரிந்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டும் அல்ல எனக்கு அதை சொல்வதற்கு சந்தர்ப்பத்தை இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் உருவாக்கிக் கொடுத்திருப்பதற்காகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பெரிய வியாபாரிகள் எல்லாம் உங்களை வந்து பார்த்து வரிகளைத் தள்ளி விடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். நான் சொல்கிறேன் அவர்களுக்கு

திரு. என். சங்கரய்யா மறுபடியும் எழுந்திருக்கிறார்..

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நான் சொல்வதையெல்லாம் சொல்லி முடித்து விடுகிறேன். நீங்கள் கடைசியில் பேசலாம். வேறு யாராவது வேண்டுமானாலும் பேசலாம். நான் என்ன சொல்கிறேன் என்றால், நான் மிகத் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன், மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள், திரு. அழகர்சாமி அவர்கள், திரு. மாரிமுத்து அவர்கள், திரு. ஜேம்ஸ் அவர்கள் எல்லாம் கூட இதே சட்ட மன்றத்திலே சொல்கிறார்கள். பெரிய முதலாளிகள் செல்வாக்கு படைத்தவர்கள் அவர்களுக்கெல்லாம் என்னவாயிற்று? ஏன் அவர்களிடம் இருந்து வரி வசூலிக்கப்படவில்லை என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். டாடா பின்லே லிமிடெட், கோயம்புத்தூரில் இருக்கிறது. அவர்கள் இதுவரையில் வரி கட்டிவந்தது எவ்வளவு தெரியுமா? 10 லட்சம், 15 லட்சம்—இது வரி மட்டும். ஆனால் இந்த ஆண்டு எவ்வளவு வந்திருக்கிறது—வசூல் செய்திருக்கிறோம் தெரியுமா—தெரிந்தால் ஆச்சரியப்

படுவீர்கள் 97.75 லட்சம் வரி. ஆனால் இப்படிப்பட்டவர்கள் எல்லாம் இங்கே சொல்கிறார்கள். திரு.சங்கரய்யாவைப் பார்த்துச் சொன்னால் அவர்கள் வருவாய்த்துறை அமைச்சரையாவது, முதலமைச்சரையாவது பார்த்து 10 லட்சம் கொடுத்தால் கூட போதுமே என்று கூட அவர்கள் சொல்லியிருக்கலாம்.

(முற்பகல் 11–10)

அது மட்டுமல்ல, உங்களுக்குச் சொல்கிறேன், கணக்கிலே வராத பணத்திற்கு இது வரையிலும் வரியே கொடுக்கப்படவில்லை. மகாவீர் ப்ளான்டேஷன் லிமிடெட், கோயம்புத்தூர் நிறுவனத்திடமிருந்து வசூலிக்கப்பட்டது 14 லட்சம், இது வரையில், கடந்த ஆண்டு வரையில் இவ்வளவு இல்லை. அதே போல், கோயம்புத்தூரிலிருக்கிற கூட்டுறவு ஹோல்சேல் சொசைடி—கோவாப்பரேடிவ், கோவாப்பரேடிவ் என்று சொல்விவிட்டு ஒரு வருஷத்திற்கு 13 லட்சம், 14 லட்சம் என்றுதான் கொடுத்து வந்தார்கள். ஆனால் என்ன நிலைமை என்றால் அது கோவாப்பரேடிவ் அல்ல. அங்கே ஏமாற்றிக் கொண்டு வந்து இருக்கிறார்கள். இந்த ஆண்டு எப்படி வசூலித்திருக்கிறோம் தெரியுமா? 83.87 லட்சம் ரூ. 10 லட்சம் கொடுத்து வந்த இடத்தில். இப்படிப்பட்டவர்களிடத்தில் எல்லாம் எப்படி வரி வசூலித்துக் கொண்டிருக்கிறோம் உங்களுக்குச் சொன்னால்தான் நல்லது என்ற அடிப்படையில் சொல்கிறேன். டாட்டா எஸ்டேட்ஸ் இந்தியா, குன்னூர் போன ஆண்டு வரை செலுத்தியது 10 லட்சம். இந்த ஆண்டு அவர்களிடம் வாங்கி இருப்பது எவ்வளவு தெரியுமா? 1 கோடிக்கு 15 லட்சம் குறைவு—85 லட்சம் ரூபாய் வரி வசூலித்திருக்கிறோம். இதைச் சொல்வதறகுக் காரணம், யாரும் எங்களை வந்து பார்க்கத் துணிவு கூட இல்லை. இதை நாங்கள் இங்கே மிகமிக தைரியமாகவும் நல்ல தூய்மையோடும் தெரிவித்துக் கொள்கிறேன். பாவேந்தன் பாரதிதாசன் சொன்னதைப்போல் “எமை நத்துவாய் என எதிரிகள் கோடியிட்டு அழைத்தாலும் தொடேன்”.

நான் பாரதிதாசனைப் போல் கவிஞன் அல்ல. ஆனால் கருத்து வேகத்தில் அவர்களுக்கு நான் பதில் சொல்வேன், எதிரி அல்ல. நான் தைரியமாகச் சொல்வேன். தாயைப் போல அன்பு உடையவர்கள் சொன்னாலும், எனை நத்துவாய் என்று சொன்னாலும் தொடமாட்டேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதை நான் சொல்கிறபோது திரு. சங்கரய்யா போன்றவர்களுக்குப் புரியாது என்றால் அவர்களுக்குப் புரிகிற பாஷையில் சொல்ல வேண்டுமானால் பொதுவுடைமைக் கருத்தைச் சொன்ன கார்ல் மார்க்ஸ்—அவர் தவறு செய்யமாட்டார்—அவர் தவறு

செய்தாலும், இங்கேயிருக்கும் முதலமைச்சர் அவர்களோ, நானோ தவறு செய்ய மாட்டோம் என்பதற்காக மட்டுமல்ல, எந்தெந்த நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறோம் என்பதற்காக எடுத்துக் காட்டியிருக்கிறேனே தவிர, இதிலே பாதிக்கப் பட்டவர்கள் யாருக்கும், எங்களை வந்து பார்க்கக் கூட தைரியம் வரவில்லை. இப்படியெல்லாம் பிடிக்கிறார்கள் என்று என்னிடத்திலே சொலவதற்குக் கூட தைரியம் வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, உங்களுக்குச் சொல்வேன், இங்கே என்னிடத்தில் இருக்கிறது, ஏறக்குறைய 625 பெயர்கள் வைத்து இருக்கிறேன. இவைகளையெல்லாம், ஒவ்வொன்றாகப் பிடிக்க இருக்கிறோம். மேலும் சொல்வேன், இப்படியெல்லாம் இந்த அரசு மேலும் செய்ய இருக்கிறது என்பதை மிக மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசுகிறபோது சிலவற்றைச் சொன்னார்கள். இன்றைக்கு இருக்கிற முறையில் வியாபாரிகளிடமும், அதே நேரத்தில் பொதுமக்களுக்கும், அதிகாரிகளுக்கும் இடையே நல்ல சுமுகமான சூழ்நிலை ஏற்படவில்லை என்று சொன்னார்கள். அவைகளை எல்லாம் நீக்குவதற்காகத்தான மாநில "வணிகவரி ஆலோசனைக் குழு" என்று ஒரு கமிட்டி மாநில கமிட்டி என்ற வகையில் அமைக்க இருக்கிறோம். அதற்கு வருவாய்த் துறை அமைச்சர் தலைவராக இருப்பார். அதேபோல் மாவட்டங்களில் வணிகவரி ஆலோசனைக் குழு என்று இருக்கும். அந்தக் குழுவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைவராக இருப்பார். இதையெல்லாம் இந்த அரசு செய்வதற்குத் தயாராக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் இவைகளையெல்லாம் சொல்லி, இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் இவைகளையெல்லாம் சொல்கிறபோது, யார் யார் எதைச் சொன்னார்களோ, எதைக் குறித்து வெட்டுத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்களோ அவற்றிற்கு எல்லாம் பதில் சொல்லியிருக்கிறேன். ஆகவே, அவைகளைத் திரும்பப் பெற்று இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பேசும்போது நான பேசியதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்த விற்பனை வரி சம்பந்தமாக நடைபெற்ற விவாதத்தில் நான் பங்குகொள்ளவில்லை. நான் பட்ஜெட் விவாதத்தின போது பேசியதிலிருந்து ஒரு விஷயத்தை அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள் என்று கருதுகிறேன். அதாவது, விவசாய வருமான வரியைப் பொறுத்தமட்டில் போடப்பட்ட பொறுக்குக் கமிட்டி அதனுடைய அறிக்கையைத் தந்தவுடன்,

1979 ஏப்ரல் 7] [திரு. என். சங்கரய்யா]

அதைக்கொண்டுவந்து சட்டமாக இந்தத் தொடரிலேயே நிறைவேற்ற இருந்தோம் என்று அமைச்சர் சொன்னார். ஆனால் அந்தக் கமிட்டி தன்னுடைய அறிக்கையைத் தராததால் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று எங்கள் கட்சியைச் சேர்ந்த தோழர் என். வரதராஜன் என்னிடம் தெரிவித்தார். இன்றைக்குக்கூட, இந்த வருவாய்த் துறை அறிக்கையில் கூட முடிவு இதுதான் என்று தெரியவில்லை. அது ஏன் என்று கேட்டேன். விற்பனை வரி சம்பந்தமாக அரசாங்கத்தின் நடவடிக்கையைப்பற்றி நான் எதுவும் பேசவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரர்களே, நான பேசியது 1979-ம் ஆண்டு மார்ச் திங்கள் 21-ம் நாள் என்று சொல்கிறேன். அவர்கள் பேசிய வரி சம்பந்தமாகச் சொல்கிறேன். அந்தக் குழுவிலே இடம் பெற்றிருக்கிற யாராவது ஒரு உறுப்பினர் வரமுடியவில்லை என்றாலும்கூட, எல்லோருடைய எண்ணங்களையும், கருத்துக்களையும் சொல்ல வேண்டும் என்பதற்காக எல்லோருடைய கருத்தையும் அறிந்து கொள்ளுகின்ற அளவுக்கு பொறுக்குக் கமிட்டி போய் கொண்டிருக்கிறது. எல்லோருடைய, எல்லாத் தரப்பினுடைய எண்ணங்களையும் தெரிந்து கொள்வதற்காக ஒவ்வொருவரையும் கேட்டுத்தான் நடந்து கொண்டிருக்கிறது. நான் இங்கே கூட சொல்வேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்கள் தவறாகக் கருதமாட்டார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் வேண்டியும், விரும்பியும் தள்ளிப்போடப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்களுடைய நேர்மையில், நல்லெண்ணத்தில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது; அதை நான் மறுக்கவில்லை. ஆனால் அவர் எந்த அளவுக்கு இருக்கிறாரோ அதில் 50 சதவீதம் அளவுக்காவது நாங்கள் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார்கள். ஒரு கட்சித் தலைவராக இருக்கிறார்கள். கோபுரத்தில் இருக்கிறார்கள். மிக உயர்ந்த இடத்தில் இருக்கிறார்கள். அவர்கள் எவ்வளவு உயரத்தில் இருக்கிறார்களோ அந்த அளவுக்கு எண்ணத்தையும் உயர்த்திக்கொண்டால் அதற்கு கலசம் வைத்ததுபோல் இருக்கும். யார்மேலும் அவதூறு பேசக்கூடாது. பொதுவாழ்க்கையில் ஈடுபடுகிறவர்கள் தைரியமாக கருத்துக்களை எடுத்துவைக்க முன்வர வேண்டும். இன்றைக்கு பொதுவாழ்க்கைக்கு நல்ல திறமையானவர்கள், தூய்மையானவர்கள் வந்திருந்தாலும், திறமையான தூய்மையான பலர் வெளியே இருக்கிறார்களே, அவர்கள் ஏன் பொதுவாழ்க்கைக்கு வரவில்லை என்று எண்ணும்போது அந்த கேள்விக்கு இதுவரையில் என்னால் பதில் காணமுடியவில்லை.

[திரு. எஸ். டி. சோம சுந்தரம்] 1979 ஏப்ரல் 7

ஆனால் இப்போது கிடைத்து விட்டது. யார் வேண்டுமானாலும் யார் மேல் வேண்டுமானாலும் பழி சுமத்தலாம் என்ற நிலை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் சுமத்தும் போது, யார் வேண்டுமானாலும் பழி சுமத்தலாம் என்ற பதில் இப்போது கிடைத்திருக்கிறது.

திரு. என். சங்கரய்யா: அமைச்சவரர்கள் பெரிய அளவில் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். பட்ஜெட்டிலே நான் விற்பனை வரியைப்பற்றி அல்லது ரெவின்யூ இலாக்காவைப்பற்றி அவர்கள் நினைக்கிற மாதிரி தவறாக எதையும் குறிப்பிடவில்லை. இன்றைக்கு இருக்கிற போக்கில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டேன். வருவாய்த் துறையின் காலதாமதத்தைப் பற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சொல்லப் பட்டது. உண்மையிலே நிலச் சீர்திருத்த அம்சங்களில் தீவிரமாக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். பொறுக்குக்குழுவின் கருத்துக்களைச் சீக்கிரம் கொண்டுவர வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். கட்சித் தலைவராக இருக்கிற எனக்கு உயர்ந்த எண்ணம் வேண்டுமென்று சொன்னார்கள். பொதுவாழ்வில் இருக்கிற ஒருவன் ஒரு மாநில அரசின் வரி, வருமானம் பற்றிய கொள்கை சரியான முறையில் சீக்கிரமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று எடுத்துரைப்பதில் தவறு இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): விவாதம் முடிவுற்றது. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

கோரிக்கை எண் 2—மாநில ஆயத்தீர்வை.

திருவாளர் த. வேணுகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

திருவாளர்கள் ரெ. வீ. சவுந்தரராஜன், சி. கோவிந்தராசன், பொ. விஜயராகவன் ஆகியோர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாக கருதப்பெற்றன.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) பேரவை முன்னுள்ள கேள்வி:—

"மானியக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 75,30,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது,

11-20

கோரிக்கை எண் 4.

பொது விற்பனை வரிகளும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம்.

திரு. செ. சதாசிவம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

திருவாளர்கள் ப. சுந்தரம், வி. கே. கோதண்டராமன், பொ. விஜயராகவன் ஆகியோர் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): பேரவை முன்னுள்ள கேள்வி:—

"மானியக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,62,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(இ) கோரிக்கை எண் 1—நிலவரித்துறை.

(ஈ) கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள்கள்—நிர்வாகம்.

(உ) கோரிக்கை எண் 41—இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.

(ஊ) கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.

(எ) கோரிக்கை எண் 48—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு.

கோரிக்கை எண் 1.

நிலவரித்துறை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"நிலவரித்துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 4,87,29,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்."

திரு. த. வேணுகோபால் : தலைவரவர்களே, நிலவரி வசூல் செய்வதில் பொது மக்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் இடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளைப் பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 1—நிலவரித்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,87,29,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. செ. சதாசிவம் : தலைவரவர்களே, புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட திருச்சி மாவட்டத்திலுள்ள அரவக்குறிச்சி பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குள் எல்லா கிராமங்களுக்கும் நிலவரி ரத்து செய்தும் விவசாய வருமான வரியை வசூலிப்பதை நிறுத்துவதைக் குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,87,29,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, நஞ்சை 3 ஏக்கர், புஞ்சை 6 ஏக்கர் வரையுள்ள நிலங்களுக்கு நிலவரி உள்ளிட்ட அனைத்து வரிகளையும் ரத்து செய்வது பற்றி விவாதிக்க—

'' மானியக் கோரிக்கை எண் 1—நிலவரித்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,87,29,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும். ''

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

(ஈ.) கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ.69,76,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும். ''

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, முத்திரைத்தாள் விற்பனையாளர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதால் விற்பனையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது பற்றி விவாதிக்க—

'' மானியக் கோரிக்கை எண் 3—முத்திரைத்தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 69,76,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும். ''

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, கோர்ட் ஸ்டாம்புகள் பெறுவதற்கு இன்னும சில நேரங்களில் தட்டுப்பாடு ஏற்படுவது குறித்து விவாதிக்க—

'' மானியக் கோரிக்கை எண். 5—முத்திரைத்தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 69,76,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும். ''

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

உ. கோரிக்கை எண் 41.

இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,86,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. சு. பாலன்: தலைவரவர்களே, சென்னையில் வெள்ளம் போன்ற பெருமழையின் காரணமாக தண்ணீர் வடிய புதிய திட்டங்கள் தீட்டுவது குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 6,86,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. செ. சதாசிவம்: தலைவரவர்களே, 1977 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ம் நாள் திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரவக்குறிச்சி பஞ்சாயத்துக்குள் குடகநார் அணை உடைப்பின் காரணமாக உயிர் இழந்த மக்களின் குடும்பத்திற்கு இதுவரை உதவித்தொகை கொடுக்காதது மணல் மேடிட்ட விவசாய நிலங்களின் ஒரு பகுதியை செப்பனிடாதது குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 6,86,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. தே. ஞானசிகாமணி: தலைவரவர்களே, விளவங்கோடு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இடங்களில் ஏற்பட்ட பெரு வெள்ளம் மழை காரணமாக ஏற்பட்ட நஷ்டங்களுக்கு உதவிகள் செய்யாதது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 6,86,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

1979 ஏப்ரல் 7]

(ஊ.) கோரிக்கை எண். 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்,

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண். 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 15,59,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 15,59,79,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. ரெ. வீ. சவுந்தரராஜன்: தலைவரவர்களே, புதிதாக அமுலிலிருக்கும் கேளிக்கை வரிச் சட்டத்தினால் ஊராட்சி, பேரூராட்சி மன்றங்களுக்கு ஏற்பட்டிருக்கும் இழப்பை ஈடு செய்ய வேண்டியதின் அவசியம் குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 15,59,79,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 15,59,79,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

எ. கோரிக்கை எண். 48—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

'' மானியக் கோரிக்கை எண். 48—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும். ''

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

'' மானியக் கோரிக்கை எண். 48—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,00,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும். ''

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

'' மானியக் கோரிக்கை எண். 48—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,00,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும். ''

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. பொ. விஜயராகவன் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

'' மானியக் கோரிக்கை எண். 48—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,00,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும். ''

என்ற வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெற்றிருக்கின்றன.

*மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கைகளில் *மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு என்ன செய்ய வேண்டும்

(335 — 376ம் பக்கத்தில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பு III— ஆக அச்சிடப் பெற்றுள்ளது.)

1979 ஏப்ரல் 7]]திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

என்பதைப்பற்றி எல்லாம் இதற்கு முன்னால் அவர்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறது. இருந்தாலும் அவர்கள் சொல்கிற சில விளக்கங்களைச் சுருக்கமாகச் சொன்னால், தங்கள் எண்ணங்களைச் சொன்னால் அரசுக்கும், பொதுமக்களுக்கும் நன்மையாக இருக்கும். நான் ஒருசில வார்த்தைகளை மட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் வருவாய்த்துறை என்றால் நீண்ட நாட்களாக இருந்து வருகின்ற ஒரு துறை. அந்தத் துறை இன்று க்ஷீணித்துப் போயிருக்கிறது. வருவாய்த்துறை தாயாக இருக்கிறபோது பல குழந்தைகளைப் பெற்ற பிறகு அந்தத் தாய் கவனிக்கப்படாமல் க்ஷீணித்த நிலையில் இருக்கிறது. ஆனாலும் பொதுமக்களுக்கு நன்மை செய்ய முடியாத காரணத்தால் இந்த அரசு அந்தத் துறையின் மேம்பாட்டிற்காக பல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். உதாரணமாகச் சொல்லவேண்டும் என்றால் இந்திய துணைக் கண்டம் ஒரு விவசாய நாடு. தமிழ் நாடு, ஒரு விவசாய நாடு. ஆனால் இப்படிப்பட்ட ஒரு விவசாய நாட்டில், விவசாயத்தை நம்பிக்கொண்டிருக்கிற ஏழை எளியவர்கள் சரியாகக் கவனிக்கப்படவில்லை என்று இங்கே பல மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். உங்களுக்குத் தெரியும்—ஒருவர் 8 ஏக்கர் நிலம் வைத்திருக்கலாம், 10 ஏக்கர் நிலம் வைத்திருக்கலாம். ஆனால் பட்டா யார் பேரிலோ இருக்கும். இன்னும் கூட்டுப் பட்டாவாக இருக்கும். இப்படி கூட்டுப் பட்டா இருக்கும்போது, அவர்கள் கடன் வாங்க முடியாது. வங்கிக்கு சென்றாலும் அரசாங்கத்திடம் சென்றாலும் யார் யார் மீது அந்தக் கூட்டுப்பட்டா இருக்கிறதோ, அவர்கள் அத்தனைபேரும் கையெழுத்துப் போட வேண்டும். அப்படி எல்லாம் கடன் வாங்கும்போது பல சங்கடங்கள் இருக்கின்றன. அது உங்களுக்குத் தெரியும். இந்தச் சங்கடங்களைப் போக்குவதற்கு முந்தய அரசு ராமநாதபுரம் மாவட்டத்திற்கு மட்டும் தனியாகப் பட்டா போட்டு, ரெவின்யு ரெக்கார்ட்ஸ்களையெல்லாம் சரி செய்யவேண்டும் என்பதற்காக முயற்சிகள் எடுத்துக்கொண்டது, அதுவும் ஒரே மாவட்டத்தில் செய்தால் போதாது என்று விட்டுவிட்டது உங்களுக்குத் தெரியும். நம்முடைய மாநிலத்தில் இருக்கிற விவசாய நிலப் பரப்பளவு 50,075 சதுர மைல். ஆனால் இன்றைக்கு இந்த நிலத்திலே இருக்கிறவர்கள் யார் யார் சிறிய விவசாயிகள், யார் பெரிய விவசாயிகள் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. இருந்தாலும் சிறிய விவசாயிகளுக்கு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உதவி செய்ய முடியும். இவைகளையெல்லாம் சரிசெய்வதற்கு அந்த நிலங்களை யெல்லாம் அளந்து, கூட்டுப்பட்டா இல்லாமல், அவைகளையெல்லாம் சர்வே செய்து, கல் போட்டு, பட்டா வழங்கி, பட்டா புத்தகங்கள் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இந்த அரசு செய்ய இருக்கிறது. அப்படி செய்கிறபோது அதனால் அவர்கள் விரைவாக கடன் வாங்க முடியும்.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1979 ஏப்ரல் 7

[முற்பகல் 11-30]

நிலம் மாற்றம் செய்ய முடியும். பரிவர்த்தனை செய்ய முடியும். விற்க முடியும். இப்படிப்பட்ட நன்மைகளையும் நீண்ட காலம் இருந்த எந்த குறைபாடுகளையும் நீக்க முடியும். கிராம மணியக்காரர்கள், கிராம கணக்குப்பிள்ளைகள் பட்டா போட்டுக்கொள்ள யார் வேண்டு மானாலும் இப்போது போய்ப் பார்த்துக்கொள்ள முடியும். இப்படிப்பட்ட பல சங்கடங்களைப் போக்குவதற்கு இந்த அரசு ஐந்து ஆண்டுகளில் 10 ஆயிரம் ஏக்கர்களை தனிப்பட்டா செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை உங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே மாதிரி கிராமங்களையும் செய்ய வேண்டும். இப்போது நிலங்களுக்கு செய்த பிறகு கிராமங்கள் சீரமைக்கப்பட வேண்டும். எவ்வளவோ கிராமங்கள் இருக்கின்றன. சில கிராமங்களில் ஜனத் தொகை அதிகமாக இருக்கிறது. சில கிராமங்களில் ஜனத்தொகை குறைவாக இருக்கிறது. இவைகளை எல்லாம் எண்ணிப்பார்த்து கிராமங்களுடைய ஜனத்தொகை வருவாய், நிலப்பரப்பு, இவைகளை எல்லாம் பார்த்து இன்றைக்கு சீரமைப்பு செய்ய இந்த அரசு எண்ணியிருக்கிறது என்பதை சொல்வதோடு—இவைகளைப்பற்றி எல்லாம் உங்களுடைய கருத்துக்களை தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே, 180 லிருந்து 200 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட கிராமச் சத்திரம் எல்லாம் பாழடைந்து இருக்கிறது. அவைகளை எல்லாம் சரி செய்ய இந்த அரசு இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். சரகத்தைப் பற்றி ஒன்று சொல்ல வேண்டும். தமிழகத்தில் சரகம் (Firka) என்று சொல்லும்போது, ஒரு சரகத்தில் (Firka) 10 கிராமங்கள் இருக்கும், இன்னொரு சரகத்தில் (Firka) 30 கிராமங்கள் இருக்கும். இன்னொரு சரகத்தில் (Firka) 40 கிராமங்கள் இருக்கும். இவைகளையெல்லாம் பார்க்கிறபோது, அங்கேயிருக்கிற வருவாய் ஆய்வாளர் Revenue Inspector) ஒரு சரகத்தில் (Firka) 10 கிராமங்களைப் பார்ப்பார். ஒரு வருவாய் ஆய்வாளர் (Revenue Inspector) 40 கிராமங்களைப் பார்க்கிறார். இதையெல்லாம் சீரமைத்து சரகத்தை (Firka) பிரித்து, சீரமைப்பது மட்டுமல்ல, இன்றைக்கு ஏறத்தாழ 750 சரகங்கள் (Firkas) இருக்கின்றன. வருவாய் ஆய்வாளர்களை (Revenue Inspectors) எடுத்துக்கொண்டால் வேலை அதிகமாக இருக்கிறது. வேலைகள் எதையும் தாலுகா ஆபிஸ்களுக்குச் சென்று நடத்த முடியவில்லை என்று சொல்லப்படுவதால், இதை சரி செய்வதற்கு இரண்டே ஆண்டுகளில் 350 சரகங்களை (Firkas) அதிகமாக ஏற்படுத்த இருக்கிறோம் என்பதை உங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, வருவாய் ஆய்வா

ளர் (Revenue Inspector) எங்கே குடியிருப்பார் என்றால், அவர்களுக்குரியத் தலைமையிடத்தில் இருக்க மாட்டார்கள். எங்காவது குடியிருப்பார்கள். கிராமத்து ஜனங்கள் பார்க்கப் போனால் இவர்களை கண்டு பிடிக்க முடியாது. ஆகவே, எல்லா வருவாய் ஆய்வாளர்களும் எல்லா வருவாய்த்துறை அதிகாரிகளும், அவர்களுக்குரிய தலைமையிடத்தில் இருக்க வேண்டும். என்றுகண்டிப்பாக—அரசு உத்தரவு போட்டிருக்கிறது. இப்படி போடுகிற போது மிக குறைவாக சம்பளம் வாங்குகின்ற வருவாய் ஆய்வாளர் (Revenue Inspector) எங்கு இருப்பார்கள் என்று கேட்கக்கூடும். ஆகவே தான் வருவாய் ஆய்வாளர்கள் (Revenue Inspector) தலைமையிடத்தில் தங்க வேண்டும் என்பதற்காக இன்று வீட்டு வசதி வாரியம் மூலமாக கட்டிடங்கள் கட்ட வேண்டும் என்று உத்தரவு போட்டு 200 கட்டிடங்கள் கட்டி முடியும் தருவாயில் இருக்கிறது. இந்த ஆண்டும் 200 கட்டிடங்கள் கட்டப்பட இருக்கிறது என்கின்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன்.

கட்டிடம் கட்டுவது மட்டுமல்ல, ரெவின்யூ இன்ஸ்பெக்டர் எங்காவது சென்று விடுவார். எங்கு போய் பார்க்க வேண்டும் என்று முன்கூட்டியே, தெரிவிக்க வேண்டும். ஒரு வாரத்தில் இத்தனை நாட்கள் அவருடைய வீட்டில் இருக்க வேண்டும். வீடும் அலுவலகமும் ஒன்றாகச் சேர்ந்து இருக்க வேண்டும் என்று அரசு முடிவு எடுத்திருக்கிறது. எங்கே போனாலும் சரி போர்டில் எழுதி வைத்துவிட்டுப் போகவேண்டும். எந்தெந்த நாட்கள் வீட்டில் இருக்க வேண்டும், எந்தெந்த நாட்கள் வெளியில் இருக்க வேண்டும் என்ற திட்டங்கள் போடப்பட வேண்டும். நான் இவைகளை எல்லாம் சொல்வதற்குக் காரணம், இதைப்பற்றி உங்களுடைய எண்ணங்களை சொல்ல வேண்டும். உங்களுடைய கருத்துக்களை எல்லாம் சொல்வதற்காகத்தான், இதையெல்லாம் சொல்கிறேன். நீங்கள் பேசும்போது, மாவட்டங்களை எல்லாம் சிறியதாக ஆக்க வேண்டும் என்று சொன்னீர்கள். நான் சொல்வது மேலேயிருந்து வராமல் கீழேயிருந்து போகவேண்டும் என்பதற்காகத் தான் இவைகளை எல்லாம் கோடிட்டுக் காட்டினேன். அப்போது தான் கீழேயிருக்கின்ற ஏழை எளிய மக்கள் நன்மைகளைப் பெறமுடியும் என்பதைச் சொல்லி, உறுப்பினர்கள் எல்லாம் தங்கள் அரிய யோசனைகளை எல்லாம் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய முன்னுரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: பேரவை தற்காலிகத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்ட மானியக் கோரிக்கைகளில் பிரதானமாக கிராமப்புற மக்கள் பெரிதும் பாதிக்கக்கூடிய நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் சம்பந்தமாக முக்கியமாக சில யோசனைகளை நான் கூற விரும்புகிறேன்.

அரசாங்கத்தின் சார்பிலே அளிக்கப்பட்ட அறிக்கையில் சாகுபடிக்கு லாயக்கான நிலங்கள் ஒப்படைப்பு சம்பந்தமாக அவர்கள் ஒரு முன்னுரிமை கொடுத்து, வரிசைப்படுத்தி யிருக்கிறார்கள். அதிலே, ஏழை நிலமில்லாத மக்கள் கடைசி வரிசையிலே 8-வது வரிசையிலே வைக்கப்பட்டிருக்கிறார்கள். இரண்டாவதாக நிலமில்லாத அரிசனங்களும், பழங்குடி மக்களும் வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், முதலிலேயும், இடையிலேயும் 1, 3, 4 வரிசைகளிலே மாஜி ராணுவத்தினர், ராணுவத்திலே இப்போது உள்ளவர்கள், பார்டர் செகியூரிடி போர்சைச் சேர்ந்தவர்களை இதிலே போடப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்டவர்களுக்கும் நிலம் அளிக்க வேண்டும். ஆனால், அவர்கள் எல்லாம் மத்திய அரசாங்கச் சிப்பந்திகள். அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பை, நிலங்களை அளிக்க மத்திய அரசிலே ஏராளமான பணம் உண்டு. அப்படி இருக்கும்போது, உண்மையிலே இந்த சாகுபடிக்கான நிலங்களைப் பெறுவதற்கு இவாகள் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நிலமற்ற ஏழை விவசாயிகள் 8-வது வரிசையிலே இந்தப் பட்டியலிலே இருக்கிறார்கள். அப்படியிருந்தால், இன்றைக்கு அவர்களுக்கு சாகுபடி நிலங்கள் கிடைக்கப் போவதில்லை. ஆகவே, மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குச் சொல்லி, தங்களுடைய சிப்பந்திகளுக்கு அவர்கள் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லி, இதை எடுத்துக் காட்டி, இந்த அரிசன விவசாயிகள், பழங்குடிகளுக்கு அடுத்தாற்போல், இதர ஏழைகள் நிலமில்லாத ஏழைகளுக்கு இந்த சாகுபடிக்கு லாயக்கான நிலங்களை ஒப்படைக்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், இந்த அறிக்கையிலேகூட குறிப்பிடப்பட்டிருக்கிறது. அரசாங்கத்திலே உள்ளவர்கள் இப்படிப்பட்ட நிலங்களை ஒப்படைப்பு கூடாது, அதைத் தடை செய்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இதற்கு முன்காலத்திலே பெரிய அதிகாரிகள் சிலர் இப்படிப்பட்ட நிலங்களை ஒப்படைப்பு செய்திருப்பதாக சில புகார்கள் சொல்லப்பட்டுள்ளது. எனவே, அப்படிப்பட்ட புகார்களை அறிந்து, அதிலே உண்மைகள் இருப்பின், அரசாங்கத்திலே உள்ள பெரிய அதிகாரிகள் இப்படிப்பட்ட நிலங்களைத் தங்கள் பெயரிலே ஒப்படைப்பு செய்து கொண்டிருந்தால், அவைகளை ரத்து செய்து, உண்மையாகவே தேவைப்படும் ஏழை நிலமில்லாதவர்களுக்கு அந்த நிலங்களைக் கொடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், 1-4-1978 முதல் 31-10-1978 வரையில், 29,707 பேர்களுக்கு 29,746·37 ஏக்கர் நிலங்களை ஒப்படைப்பு செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. கிராமத்திலே உள்ள மக்களுக்கு யார் யார் நிலம் பெற்றிருக்கிறார்கள் எப்பதை அறிந்து கொள்வதற்க்காக அந்தக் கிராமத்திலே உள்ள பஞ்சாயத்துக்

காரியாலத்திலே ஒரு பிரசுரமாக வெளியிட்டால், அதன் மூலமாக உண்மையிலே பயன் அடைந்தவர்களாக இருக்கமுடியுமா, ஏழைகளுக்கு நிலமில்லாதவர்களுக்கு போய்ச் சேர்ந்ததா என்பதை அறிந்து கொள்ளும் வகையிலே, அதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டு மனை வழங்குவதிலே 5 பேர்கள் கொண்ட குடும்பத்திற்கு 250 ரூபாய் என்று ஒரு வரம்பு வைக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இருக்கின்ற விலைவாசி உயர்விலே இது சரிப்படாது. இன்று சாதாரணமாக தஞ்சை மாவட்டத்திலே, கீழ் தஞ்சையிலே ரூ. 7 கூலியாகக் கொடுக்கச் சட்டப்படி பார்த்தால், ஒருவர் 30 நாட்களுக்கு 210 ஆகிவிடுகிறது. அவர் மனைவியும் வேலை செய்தால், இந்த வரம்பை மீறி அவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க முடியாது. இப்படி இந்த வரம்புக்குள் வாராத ஒரு அபாயம் இருக்கிறது. 5 பேர்களுக்கு அதிகமாக உள்ளக் குடும்பத்திலே 300 ரூபாய் என்று வரம்பு வைக்கப்பட்டிருக்கிறது. எனவே, அப்பேர்ப்பட்ட இந்த வரம்பு ஒத்து வராததால், இந்த அரசாங்கத்தின் கொள்கையை கணிசமான அளவுக்கு உயர்த்த வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, தஞ்சை மாவட்டத்திலே ஆதினம் செய்யக்கூடிய நிலத்தில், ஏற்கெனவே ஒப்படைக்கப்பட்ட காலத்திலே, அந்த நிலத்தை ஆதினம் செய்தவர்களுக்கே கொடுக்க வேண்டுமென்று அறிவிக்கப்பட்டது. ஆனால், சர்வே செய்யக்கூடிய நேரத்தில் இன்றைக்கு அதிலே கட்டிடம், குடிசை இருக்கின்றது என்று சொல்லி, அவர்களுக்கு அந்த நிலத்தை ஆதினம் செய்யவில்லை. அந்த நிலத்திலே அவர்களுக்கு உரிமை இல்லை. எனவே, அவர்களுடைய இந்த தாவாவை சுமுகமான முறையிலே தீர்த்து வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு பி.டபிள்யூ.டி. யில் மாநிலப் பாதை அல்லது தேசியப் பாதை ஆகியவற்றில் இருக்கக்கூடியவர்கள் கூட 1977 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் தேதி வரைக்கும் அவர்கள் வெளி

[முற்பகல் 11-40]

யேற்றப்படமாட்டார்கள் என்று விளம்பரத்திற்காக அறிவிக்கப்பட்டது. ஆனால், அது உண்மையிலேயே அமுல்படுத்தப்பட்டதா என்பதை நான் கேட்க விரும்புகிறேன். அதையும் முறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்குப் பெரிய அளவில் விளம்பரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. என். சங்கரய்யா] [1979 ஏப்ரல் 7

சென்னையிலுள்ள ஆதி ஆந்திரர்கள் முனிசிபல் தொழிலாளர்களாக இருந்து இந்த நகரத்தின் மிகவும் கடுமையான சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆதி ஆந்திரர்களுக்கு 750 சதுர அடி நிலம் கொடுக்கப்பட்டு இயன்ற அளவு மனை கட்டிக் கொள்கிறார்கள். அதற்கு கிரவுண்ட் ஒன்றுக்கு 3,000 ரூபாய் என்ற விகிதத்தில் விலை வாங்கப்படுகிறது. இதைச் செய்ய வேண்டுமா என்று அரசாங்கம் சிந்திக்கக் வேண்டும். அவர்களுக்கு இலவசமாக அந்த மனை நிலத்தை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு மதுரை நகரத்திலே கீழ் பகுதியில் ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகில் 300 சுகாதாரத் தொழிலாளர்கள் காலனி அமைத்துக் கொண்டு மதுரை நகரின் கடுமையான சுகாதார வேலைகளைச் செய்து வருகிறார்கள். அவர்கள் தாங்கள் தங்கியிருக்கும் நிலத்திற்குப் பட்டா வேண்டுமென்று கேட்டு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனுச் செய்து கொண்டிருக்கிறார்கள். ரெவின்யூ அமைச்சர் அவர்களும், அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களும் அக்கறை செலுத்தி அந்த 300 குடும்பங்களுக்கும் மனைப்பட்டா கொடுக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தண்ணீர் வரியைப் பொறுத்த வரைபெரிய குறைபாடு இருக்கிறது. அந்த அறிக்கையில் 1977 செப்டம்பர் போடப்பட்ட ஆய்வுக்குழு இன்னும் அறிக்கை தரவில்லை. முடிவு தெரிந்தவுடன் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே மிக அதிகமாகத் தண்ணீர் தீர்வை வாங்குவதாகப் புகார்கள் வருகின்றன. விவசாயிகள் அவ்வாறு கூறுகிறார்கள். சீக்கிரத்தில் ஆய்வுக் குழு அறிக்கை கிடைத்து சாதாரண சிறு நிலங்கள் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு குறைந்த கட்டணம் விதிக்கின்ற முறையில் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வணிகப் பயிர் வரி என்று போட்டதில் ஒரு பகுதியினருக்கு ரத்து செய்து விட்டார்கள். ஒரு சில பயிர்கள் மீது வணிக வரியை நீக்கி இதையும் விவசாய வருமான வரியோடு இணைத்து மொத்தததில் சாதாரண விவசாயிகளுக்கு நில வரியை ரத்து செய்ய வேண்டும். ஏற்கெனவே விவசாய வருமான வரியில் 10,000 ரூபாய் வரை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கெல்லாம் வருமான வரி இருக்கிறது. விவசாய வருமான வரியை பிரதானமான வருவாய்த் துறையாக எடுத்துக் கொள்ள வேண்டும். வருமானத்திற்கேற்ப வரி செலுத்துவதுதான் நியாயம். சிறு நிலக்காரர்களைப் பொறுத்த வரை நில வரியை ரத்து செய்ய வேண்டும்.

1979 ஏப்ரல் 7] [திரு. என். சங்கரய்யா]

அடுத்தபடியாக, நிலச் சீர்திருத்தம் பற்றிக் குறிப்பிட விரும்பு கிறேன். ஏறத்தாழ ஒரு கோடி ஏக்கருக்கும் அதிகமாக சாகு படி இருக்கும் மாநிலத்தில் நாம் 18 ஆண்டுக் காலமாக நிலச் சீர்திருத்தத்தை அமல்படுத்தி வருகிறோம். பல அரசாங்கங்கள் 1961-ம் ஆண்டில் இருந்து 1979 ஆம் ஆண்டு வரை நிலச் சீர் திருத்தத்தை அமல் செய்து வருகின்றன. இன்றைக்கு அறிக்கை யில் என்ன கூறப்பட்டிருக்கிறது என்றால் இப்போது ஏற்பட்டுள்ள நிலைமை என்னவென்றால், நிலச்சீர்திருத்தச் சட்டத்தின்படி கடைசியாக அறிவிக்கப்பட்ட உபரி நிலம் வெறும் 98,334 ஏக்கர் தான். ஒரு கோடி ஏக்கர் சாகுபடியில் உள்ள தமிழ்நாட்டில் 98,334 ஏக்கர் நிலந்தான் உபரி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதுவரை பிரித்துக் கொடுத்திருக்கும் நிலம் 73,805 ஏக்கர்தான். அதைப் பயன்படுத்தியவர்கள் 49,986 பேர்கள்தான். இந்த 49,986 பேர்களுக்கு 73,805 ஏக்கர் நிலங்களைக் கொடுக்கக் கூடிய காரியம் 1961-ம் ஆண்டிலிருந்து 1979 ஆம் ஆண்டு வரை நடைபெற்று இதுதான் நிலச்சீர்திருத்தச் சட்டத்தின் மூல மாக அடையக்கூடிய பலன் என்றால் அவர்களுடைய எதிர் பார்ப்பு எவ்வளவு கீழாக இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைக்கு இந்த மாநிலத்தில் மட்டுமல்லாது பல மாநிலங்களிலும் நிலக் குவியல் எவ்வாறு இருக்கிறது என்பதற்கு நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் மூலம் இவ்வளவு குறைவான அளவுதான் நிலம் கிடைத்திருக்கிறது என்பதைப் பார்க்கும் போது அதைக் கவனத்தில் கொள்ளவேண்டுமென்று விரும்பு கிறேன்.

அதற்கு என்ன காரணம்? 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று வைத்தால் அது ஒரு சாதாரண அளவு அல்ல. அது சாதாரண ஏக்கர் என்ற முறையில் 12 ஏக்கர் முதல் 60 ஏக்கர் வரை ஒரு குடும்பம் வைத்துக் கொள்ளலாம் என்று வருகிறது. 5 பேர் களுக்கு மேற்கொண்ட குடும்பம் 24 ஏக்கர் முதல் 120 ஏக்கர் வரை வைத்துக் கொள்ளலாம் என்று வருகிறது. அது போக, ஸ்ரீதனம் என்ற முறையிலே 8 ஏக்கர் முதல் 40 ஏக்கர் வரை வைத்துக் கொள்ளலாம் என்று வருகிறது. குடும்பம் என்று வந்தால் தனிப்பட்ட நபரைக் கூட ஒரு குடும்பம் என்று கருதி அவர்களுக்கும் ஒரு பங்கு எடுத்துக் கொள்கிற நிலைமை இருப்ப தால் தான் தமிழ்நாட்டிலே நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் எந்த விதமான பயனையும் கொடுக்கவில்லை.

அது மட்டுமல்ல, வடபாதிமங்கலம் தியாகராஜ முதலியார், அவருக்குச் சொந்தமான நிலங்கள் 3,911 ஏக்கர் கரும்புப் பண்ணை நிலங்கள் என்று வைக்கப்பட்டிருக்கின்றன. நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்படி மிகப் பெரிய நிலப்பிரபுக்களிடமிருந்து நிலத்தை எடுத்து அந்த வட்டாரத்திலே உள்ள விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டும். ஆனால், அப்படிக் கொடுக்கப்படாமல் அந்த விவசாயிகள் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். நான் இந்த

அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த ஏக்கர் நிலத்தை தஞ்சை மாவட்டத்திலே உள்ள விவசாயிகளுக்குக் கொடுத்துவிடலாம், அந்த கார்ப்பரேஷனைக் கலைத்து விடலாம். கரும்பு வேண்டுமென்றால் அந்த விவசாயிகளே கொடுப்பார்கள். ஆகவே, கரும்பு உற்பத்தி பாதிக்கப்படாது. கீழ்த் தஞ்சை மாவட்டத்தில் உள்ள இந்தப் பிரச்சினையை அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள், உபரி நிலத்தை எடுத்தால் அதற்கு நஷ்ட ஈடு 3,500 ரூபாய்க்குமேல் போகாமல் அதுதான் அதிகபட்சம் என்ற முறையிலே எடுக்கப் படும் என்று சொன்னார்கள். அதற்கான சட்டம் இன்னும் கொண்டுவரப் படவில்லை. இந்தக் கூட்டத் தொடரிலேயே அது கொண்டுவரப்பட்டு இதற்கு அதிகமாகப் பெற்றவர்களிடமிருந்து தொகையைத் திரும்பி வாங்க வேண்டும்.

அந்த நிலத்தை யார் பெற்றார்களோ அவர்கள்தான் அந்தத் தொகையைக் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. நான் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு யோசனையைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு 50 ஆயிரம் பேர்களுக்கு 70 ஆயிரத்து சொச்சம் ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அரசியலமைப்புச் சட்டத்தில் அவர்களுக்கு தொகை கொடுப்பது தவிர்க்கமுடியாது என்று சொன்னாலும் கூட அரசாங்கமே அவர் களுக்கு அந்த தொகையைக் கொடுத்து, விவசாயிகளுக்கு நிலத்தை இலவசமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து, குத்தகை விவசாயிகளை எடுத்துக் கொள்ளுங்கள். இங்கே ஒரு பெரிய பிரச்சினை. 4 லட்சத்து 7 ஆயிரத்து 924 பேர்கள்தான் குத்தகை விவசாயிகள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்திருக்கிறார்கள். அது பெரிய குறைவான எஸ்டிமேட். உண்மையிலேயே தமிழ்நாட்டிலே ரொம்பப் பேர்கள் இருக்கி றார்கள். குத்தகைதாரர் பதிவுச் சட்டம் கொண்டு வரப்பட்ட நேரத்திலே கிராமங்களிலே பல நிலப்பிரபுக்கள் அவர்களைத் தடுத்து விட்டார்கள். ஒரு கோடி ஏக்கருக்கு மேல் சாகுபடியாகக் கூடிய தமிழ்நாட்டிலே 6 லட்சத்து 13 ஆயிரத்து 843 ஏக்கர் வரைக்கும்தான் பதிவாகியிருக்கிறது. ஆகவே, குத்தகை விவசாயிகளுக்குப் பல பாதுகாப்புச் சட்டங் களைக் கொண்டு வருகிறோம் என்று சொன்னாலும்கூட, அந்தச் சட்டங்கள் எல்லாம் இப்போது பதிவுசெய்துகொண்டு இருக்கிற 4 லட்சத்து 7 ஆயிரத்து 924 பேர்களுக்குத் தான் நன்மை அளிப்ப தாக இருக்கும். அதுதான் உண்மையா? ஆகவே, நான் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகச் சொல்கிறேன். இப்போது இருக்கிற டெனன்ஸி பதிவுச் சட்டத்தை மீண்டும் கால வரம்பை நீட்டித்து அதிகாரிகளைப் போட்டு, பொதுஜன ஸ்தாபனங்கள், விவசாயி

களின் சங்கங்கள் இவைகளை வைத்துக் கொண்டு கிராமங்களுக்குச் சென்று பக்கத்திலே உள்ள கிராம மக்கள் சொல்கிற வாய் மொழி சாட்சியத்தின் அடிப்படையிலே இவர்தான் நிலத்தை உழுகிறார் என்று சொல்கிற சாட்சியத்தை ஏற்றுக் கொண்டு அந்த அடிப்படையிலே பதிவுசெய்தால் உண்மையாகவே லட்சக்கணக் கான பேர்கள் இருக்கிறார்கள், அவர்கள் தடுக்கப்பட்டிருக்கிறார் கள். அவர்களையும் பதிவுசெய்வதற்கும் அதன் மூலம் அவர் களுக்கும் இந்த குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டங்கள் பயன்படுகின்ற வகையில் ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

1955 ஆம் ஆண்டு குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் 4 ஏ பிரிவு நீக்கப்பட்டதைப்பற்றி இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அது மட்டும் போதாது. இன்றைக்கு யாராவது ஒருவர் தன்னுடைய நிலம் என்று சொல்லி நில மீட்சி உரிமை இருக்கிறது என்று சொல்லி நிலத்தை வேண்டுமென்று கேட்டால் சாதாரணமாகக் கொடுத்துவிட முடியாது. அவர் நிலத்தின் மூலம் உள்ள வருமானத்தைத்தான் பிரதானமாகச் சார்ந்திருக்கிறாரா என்பது பிரதானமாக விசாரிக்கப்படவேண்டும்.

[முற்பகல் 11-50]

ஏனென்றால் அவருக்கு இதர தொழில் அல்லது இதர வியாபாரம் இருந்தால் அவருக்கும் ஏன் நில உரிமையைக் கொடுக்க வேண்டும்? எனவே அப்படி எடுப்பதில் சில நிபந்தனை களை விதிக்க வேண்டும். அவர்களையும் குத்தகை விவசாயிகள் என்று கருதி, நில மீட்சி உரிமை என்று அவர்களும் கேட்டால், இப்பொழுது குத்தகை விவசாயிகளுக்கு இருக்கின்ற இந்த நிலமும் பறிபோய்விடும். ஆகவே, அவர்களுடைய வேறு வருமானத்தை பிரதானமாகப் பார்க்க வேண்டும். இரண்டாவதாக அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அருகிலேயிருந்து நேரடியாகச் சாகு படியிலே ஈடுபடுகிறார்களா என்பதையும் பார்த்த பிறகுதான் இந்தப் பிரச்னையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படியில்லையென்றால் நில மீட்சி என்று வரும் பொழுது குத்தகை விவசாயிகளைப் பெரிதும் பாதிக்கும் என்ப தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொரு திருத்தத்தையும் கொண்டு வர வேண்டும். குத்த கைக்கு நிலத்தைக் கொடுத்திருப்பவர்கள் அவர்களுடைய பங்கை ஏற்க மறுத்தால். ரசீது கொடுக்க மறுத்தால் இன்றைக்கு அதை 'காக்னிசபில் அஃபென்ஸ் ஆக, அரசாங்கத்தால் அங்கரிக் கப்பட வேண்டிய குற்றமாக ஆக்க வேண்டும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். பலயிடங்களிலே 3,500 ரூபாய் ஆகக் குறைப்பது என்ற தகவல் கொடுத்த பிறகு—அது மட்டுமல்ல,

இன்றைக்கு இந்தக் குத்தகையை நாம் குறைப்பது என்று அறிவித்த பிறகு, நிலப்பிரபுக்கள் பல குத்தகை விவசாயிகளை வெளியேற்றுவதற்கு முயற்சி செய்கிறார்கள். 1956 ஆம் ஆண்டு நியாய வாரச் சட்டத்தின்படி, 1961 ஆம் ஆண்டு பொது டிரஸ்டின் நிர்வாகத்தை முறைப்படுத்துதல் சட்டத்தின்படி நஞ்சை இல்லாவிட்டால் $33\frac{1}{3}$ சதவீதம் பகுதி கொடுக்க வேண்டும், நஞ்சையாக இருந்தால் 40 சதவீதம் கொடுக்க வேண்டும் என்று இருப்பதை வருவாய்த் துறை அமைச்சரவர்கள் அரசாங்கத்தின் சார்பில் சொல்கின்ற, மொத்த விளைச்சலில் 25 சதவீதம் கொடுக்கப்படும். 75 சதவீதம் உழைக்கும் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் என்பது 1952-ம் ஆண்டிலேயே இந்தியாவின் திட்டக் கமிஷன் நிலச் சீர்திருத்தக் குழு கொண்டு வந்த யோசனை. இன்றைக்கு அதை அமலுக்குக் கொண்டு வரும்பொழுது, தமிழ்நாட்டில் ஏற்கனவே குத்தகைக்கு விட்டிருப்பவர்கள், நிலத்தைக் குத்தகைக்காரர்களிடமிருந்து பறிப்பதற்கு முயற்சி செய்கிறார்கள். இதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும். இந்தச் சட்டமும், 25 சதவீதம் கொடுத்தால் போதும் என்ற சட்டமும், இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்படவேண்டும். இதற்கு முன்பாக நிலத்தை விட்டு வெளியேற்றப்படுகின்ற காரியங்கள் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அதற்கான காரியங்களையும் செய்யவேண்டும்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமேயானால், எங்களுக்குக் கிடைக்கின்ற தகவல், நேற்றைக்குக் கூட மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்களிடத்திலே கொடுத்திருக்கிறேன். ஒரு உதாரணத்திற்காகச் சொல்லுகிறேன், திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குனேரி தாலுக்காவில், பத்தின்ப்பாறை என்ற இடத்தில் நிலச்சுவான்தார்கள், அந்த நிலத்தில் மூன்று தலைமுறைகளாக விவசாயம் செய்து கொண்டு இருந்தவர்களை வெளியேற்றுவதற்கு முயற்சிக்கிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால், முத்திரை மரக்காலால் அளப்போம் என்று சொல்கிறார்கள், ரசீது வேண்டுமென்று கேட்கிறார்கள். நிலச்சுவான்தார்கள் போலீசாரின் ஆதரவோடு செயல்பட்டு குத்தகை விவசாயிகளை வெளியேற்றுகின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, நாங்குநேரி தாலுக்கா, ஆயக்குளம், அரியக்குளம் ஆகிய இடங்களில் போலீசாரின் துணைகொண்டு குத்தகை விவசாயிகளை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபட்டு, போலீசாரின் பாதுகாப்போடு அவர்கள் அறுவடை செய்துகொண்டு போகிறார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது.

இன்றைக்கு ஒன்றைக் கூற விரும்புகிறேன். மேற்கு வங்கத்தில் குத்தகை விவசாயிகளுக்குச் சாதகமாக ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். கோர்ட் பிரச்னை என்று வருகிறபொழுது, யார் குத்தகை விவசாயி என்ற பிரச்னை வருகிற

பொழுது தமிழ்நாட்டிலே அந்தப் பொறுப்பு, குத்தகை விவசாயி என்று நிரூபிக்கின்ற பொறுப்பு குத்தகை விவசாயியின் தலை மேல் இருக்கிறது. ஆகவே, அவர்கள் மிகவும் சிரமப்படு கிறார்கள். ஆனால், மேற்கு வங்கத்திலே, இடது சாரி முன்னணி சர்க்கார் வந்த பிறகு, ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்தது. அது என்னவென்றால், ஒருவர் மற்றொருவரின் நிலத்தில் பயிர் செய்தால் அவர்தான் குத்தகை விவசாயி என்று கருதப்படுகிறார். இவர் குத்தகை விவசாயி அல்ல என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பு நிலச்சுவான்தாரின் தலையிலே போடப்பட்டிருக் கிறது. ஆகவே, கோர்ட்டுக்கு இழுத்தடித்து குத்தகை விவசாயி அல்ல என்று நிலப்பிரபு கூற விரும்பினால் அல்ல என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பு நிலச்சுவான்தாரின் தலையில் போடப் பட்டிருக்கிறது. குத்தகை விவசாயிகளுக்கு அந்தப் பொறுப்பு இல்லை. ஆனால் தமிழ்நாட்டிலே தங்களுடைய நியாயத்தைக் கூட கூற முடியாமல் குத்தகை விவசாயிகள் இருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய அரசாங்கம், மேற்கு வங்கத்தில் இடைக் காலத்தில் கொண்டுவரப்பட்ட, குத்தகைப் பாதுகாப்புக்காகக் கொண்டு வந்த சட்டத்தைப் பரிசீலித்து அது பொருத்தமாகப் பட்டால்—எங்களுக்கு அது பொருத்தமாகத்தான் படுகிறது— ஒரு நிலத்திலே பயிர் செய்யக்கூடிய விவசாயி குத்தகை விவசாயி என்று கருதி, அவ்வாறு இல்லை என்ற பிரச்னை வருகிற பொழுது, அவ்வாறு இல்லை என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பு குத்தகை விவசாயிக்கு இல்லை. நிலப்பிரபுக்களுக்குத்தான் அந்தப் பொறுப்பு என்று திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்து இந்த மாநில அரசாங்கம், வருவாய்த் துறை அமைச்சரவர்கள் உடனடியாகக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் கணக்குப்படி 30 இலட்சம், 40 இலட்சம் குத்தகை விவசாயிகள் இருக்கிறார்கள், ஆனால் இங்கு கொடுக்கப்பட் டிருப்பது மிகவும் குறைவாக இருக்கிறது. அவர்களைப் பாது காக்க வேண்டியது மிகவும் அவசியம்.

அதற்கடுத்தபடியாக நான் இங்கே குறிப்பிட விரும்புவது கூலியைப் பற்றி. கிழக்குத் தஞ்சை மாவட்டத்திலே மட்டும் அன்றைக்கு வருவாய்த் துறை அமைச்சரவர்கள், அந்தக் கூலி ஜூன் முதல், செப்டம்பர் 30 ஆம் தேதி வரை ரூ. 7·20 என்றும், அக்டோபர் முதல் மே மாதம் 31 ஆம் தேதி வரை ரூ. 6·60 அல்லது தானியம் அல்லது ரூபாயும் சேர்த்து, என்று சொன் னார்கள். இதிலே, நமக்கு என்னப் புரியவில்லையென்றால் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரைக்கும் இன்றைக்கு அது பழைய தஞ்சை அல்ல. இரு போகம் சாகுபடி, மூன்று போக சாகுபடிகள் நடைபெறுகின்றன. வருஷம் பூராவும் விவசாயம் நடைபெறக்கூடிய மாவட்டமாக தஞ்சை மாவட்டம் மாறிவிட்டது. அப்படி மாறி இருக்கக்கூடிய நேரத்திலே, ஜூன்

TRUTH ALONE TRIUMPHS

முதல் செப்டம்பர் வரை 4 மாதங்களுக்கு ரூ. 7·20-ம், பாக்கி இருக்கக்கூடிய 8 மாதங்களுக்கு ரூ. 6·60-ம் என்று குறைந்த கூலியை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருப்பது சரியல்ல என்பது எங்களுடைய கட்சியினுடைய வாதம். இப்பொழுது மூன்று போக சாகுபடி என்ற அளவைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு, முரண் பாடான நிர்ணயத்தை மாற்றி, வருஷம் பூராவும் ரூ. 7·20 என்ற வீதத்தில் கீழத் தஞ்சை மாவட்டத்தில் கூலி கொடுக்க உத்தரவாதம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பெண்களுக்கு என்று தனி கூலி போட வில்லை என்று நாம் சொல்கிறோம். நாற்று நடுதல், களை எடுத்தல் அல்லது இதர வேளாண்மை வேலைகளுக்கெல்லாம் ஊதியம் ரூ. 5·60 பைசா என்று போடப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இந்த வேலைகள் குறைவான கடினத்தைக்கொண்ட வேலைகள் அல்ல. இன்றைக்கு ஆண், பெண் வித்தியாசத்தை மட்டும் பார்க்காமல், களை எடுத்தலும், நாற்று நடுதலும் கடுமையான வேலை என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆகவே, அவர்களுக்கும் ரூ. 7·20 என்ற அளவிலாவது கூலியை வருஷம் பூராவும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

வயது வராதவர்கள் என்ற பிரிவினையை இதிலே கொண்டு வந்திருக்கிறார்கள். அது அவ்வளவு சரியாக படவில்லை. காரணம் என்னவென்றால், வயது வராதவர்களுக்கு ஜூன் முதல் செப்டம்பர் 30 வரை நாள் ஒன்றுக்குக் கூலி ரூ. 4; மற்றவர் களுக்கு ரூ. 7·20; இதிலே, வயது வராதவர்களுக்கு ரூ. 3·20 பைசா குறைகிறது. ஆனால், இங்கே வயது வராதவர்கள் என்று சொல்லக்கூடியவர்களிடத்திலே நிலப் பிரபுக்கள் இலேசாக வேலை வாங்குகிறார்கள் என்று கருதியிருக்கிறார்களே அது தவறு. 15, 16, 17 வயது வாலிபர்களிடத்திலே, சாதாரண மாக மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக வேலை வாங்கு வார்கள். ஆகவே, வித்தியாசம் தேவையில்லை. வேலையைப் பொறுத்து கூலியை நிச்சயித்திருக்கிறோம். ஆகவே, அவர் களுக்கும் அந்தக் கூலியைக் கொடுக்க வேண்டுமென்ற வகையில், வயது வராதவர்கள் என்ற ரகத்தை நீக்கிவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், இன்றைக்கு அறுவடைக்கு கீழத் தஞ்சை மாவட்டத்திலே 54 லிட்டருக்கு 6 லிட்டர் நெல் தான் என்று கூலியை அரசாங்கம் ஊர்ஜிதம் செய்திருக்கிறது. அதற்குப் பதிலாக, 54 லிட்டருக்கு 9 லிட்டர் நெல் கொடுக்க வேண்டு மென்பது விவசாயிகளுடைய கோரிக்கை. ஓரளவு அவர்களு டைய வாழ்க்கைத் தரத்தை அபிவிருத்தி செய்யவேண்டும்; அவர்கள் தான் அறுவடை செய்கிறார்கள்; அவர்கள் தான், வேலை செய்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய அறுவடை கூலியை 54 லிட்டருக்கு 6 லிட்டர் என்பதற்குப் பதிலாக 9 லிட்டர் என்று மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1979 ஏப்ரல் 7] [திரு. என். சங்கரய்யா]

கடைசியாக நான் குறிப்பிட விரும்புவது, தமிழ்நாட்டில், இருக்கின்ற இதர ஜில்லாக்கள் என்ன பாவம் செய்திருக்கின்றன? மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்களுடைய சொந்த மாவட்டமான, மேற்குத் தஞ்சை மாவட்டம் என்ன பாவம் செய்திருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. கீழ்த் தஞ்சையிலே கூலி ரூபாய் 7.20 ; மேற்கு தஞ்சை மாவட்டத்திலே குறைவான கூலி ; தஞ்சை மாவட்டத்தை ஏன் இரண்டாகப் பிரிக்க வேண்டும்? தமிழகத்தை ஏன் இரண்டாகப் பிரிக்க வேண்டும்? கிழக்குத் தஞ்சாவூரிலே விவசாயிகள் போராடியது போல், கீழ வெண்மணியிலே ஏற்பட்டதுபோல் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்பட்ட பிறகுதான் அந்தக் கூலி வரும் என்று சொன்னால், அது விரும்பத்தக்கது அல்ல. ஆகவே, குமரி முதல் சென்னை வரை மாநிலம் முழுவதும் கிழக்குத் தஞ்சை மாவட்டத்திலே இன்றைக்குக் கொடுக்கப்பட்ட கூலியை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவர விஞ்ஞான ரீதியான காரணங்கள் இருக்கின்றன— அதற்குப் பதிலளிக்க முடியாத காரணங்கள் இருக்கின்றன ; விவசாயக் கூலிகளுடைய வாழ்க்கைமுறை இருக்கிறது; அவர்களுடைய குடும்பத்தை அபிவிருத்தி செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, மாநிலம் முழுவதும் ஒரே முறையைச் செயலாக்க வேண்டுமென்ற அத்தியாவசியத்தை உணர்ந்து, இந்தக் கூலியையாவது அரசாங்கம் மாநிலம் முழுவதும் அமுலுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு இதே போல்தான்

[நண்பகல் 12-00]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கிழக்குத் தஞ்சாவூருக்கு Fair Wages Act என்று சொல்லி அது பல ஆண்டுகளாக பின்பற்றப்பட்டு வருகிறது. எஞ்சிய பகுதிகளுக்கு Under the minimum wages act of 1948-ல் குறைந்த பட்ச ஊதியத்தை நிர்ணயித்துக்கொண்டிருக்கிறோம். இப்பொழுதுகூட அந்த குறைந்த பட்ச ஊதியத்தை நிர்ணயிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு ஒரு குழு அமைத்து அந்தக் குழு விரைவில் தன்னுடைய பரிந்துரையை வழங்கயிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அனேகமாக, இந்த மாதத்திற்குள்ளேயே அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அளித்து விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அனேகமாக அது முடியும் தறுவாயில் இருப்பதால் இந்த மாதத்திற்குள் அளித்துவிடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு தொழிலாளர்கள் நல அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. நான் கூறுவது என்னவென்றால், நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் என்றாலே அது நியாயமான கூலியாகிவிடாது. நிர்ணயிக்கப்பட்ட கூலி என்பது குறைவாக இருக்கிறது. குறைந்த பட்ச ஊதியத்தைவிடக் கம்மியாக

இருக்கிறது என்பதுதான் உண்மை. விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் விவசாயிகளுக்கு10 ரூபாயாவது குறைந்த பட்சகக் கூலியாக இந்தியா பூராவும் இருக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். விவசாயத்தில், வேளாண்மையில் செழிப்பு ஏற்பட ஏற்பட விவசாயியினுடைய நியாயமான பங்கை, அந்தப் பிரதான உற்பத்தியாளனுக்குக் கொடுக்க வேண்டிய தேவையான பங்கைக் கொடுக்காமல் போனால், விவசாயத்துறை முன்னேற்றம் அடையாது. தமிழ்நாடு முழுவதும் ஒரே மாதிரியான கூலி கொடுக்கப்பட வேண்டும். நிர்ணயிக்கப்படும் ஊதியம் குறைந்த பட்ச ஊதியத்தைவிட உயர்ந்ததாக இருக்க வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களையும் வேறு வேறாகப் பிரிக்கக்கூடாது. கிழக்குத் தஞ்சை, மேற்குத் தஞ்சை என்று எந்த விதத்திலும் பிரித்துக் கூலி நிர்ணயிப்பது நியாயமானது அல்ல. ஆகவே, அரசாங்கம் இதைப் பரிசீலித்து ஒரே விதமான கூலியைத் தமிழகம் முழுவதும் மாவட்டங்கள் தோறும் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நில உச்ச வரம்புச் சட்டத்தில் நிறைய குறைபாடுகள் இருக்கின்றன. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பல முயற்சிகளைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். அரசாங்கம் அதைப்பற்றி ஆராய்ந்து நடவடிக்கைகள் எடுக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். அதை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 18 ஸ்டாண்டர்ட் ஏக்கர் நிலம் தான் ஒரு குடும்பத்திற்கு உச்ச அளவு என்று வைத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே உள்ள நிலப் பிரபுக்கள் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலம்தான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அதை நம்ப முடியவில்லை. ஏராளமான நிலங்கள் ஒரே குடும்பத்தில் உள்ள பல பேருக்கு, பல குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. பினாமி பெயர்களிலும் இருக்கிறது. இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தை எடுத்துக்கொண்டால் நிறைய இதில் குறைபாடுகள் இருக்கின்றன. அவைகளை எல்லாம் திருத்தி அமைக்க வேண்டும். மலைப் பிரதேசங்களுக்கு இந்த உச்சவரம்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. மலைப் பிரதேசங்களில்தான் விலை உயர்ந்த விளைபொருள்கள் உற்பத்தியாகின்றன. அந்த நிலப்பிரபுக்களுக்கு இந்த நில உச்ச வரம்புச் சட்டம் பொருந்தாது என்பதை மாற்றியாக வேண்டும். அதேபோல பழத் தோட்டங்கள் இவைகளுக்கு அந்தச் சட்டம் கிடையாது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அது மட்டும் அல்ல. அந்தச் சட்டம் கோயில் மடம் ஆதீனங்களுக்குச் சொந்தமான நிலங்களுக்குப் பொருந்தாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது மிகவும் தவறான எண்ணம். இன்றைக்கு முக்கால்வாசி விவசாயிகள் வேலை செய்வது அந்தக் கோயில், மடங்களில் வேலை செய்பவர்கள்................

1979 ஏ ரல் 7]

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள். இன்னும் 10 பேர்கள் பேசயிருக்கிறார்கள்.

திரு. என். சங்கரய்யா : இனறைக்குக் கேரளாவில்கூட நிலச் சட்டத்திலே மடங்களுக்கும் கோயில் நிலங்களுக்கும் பாது காப்பு கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்து விட்டது. 1954 ஆம் ஆண்டிலேயே ஏற்பாடு செய்து விட்டது. அந்த நிலங்கள் விவசாயிகளுக்கு உடமையாக்கப்பட வேண்டும். கேர ளத்திலே உதாரணம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, தமிழ்நாட்டி லும் அந்தத் திட்டம் கொண்டு வரப்பட வேண்டும். அந்த விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுக்கா விட்டால், நமது காங்கிரஸ் கட்சி உறுப்பினர் முன்பு குறிப்பிட்டது போலப் பசுமைப் புரட்சி என்பது வேறுவிதமான புரட்சியாகிவிடும். அதனால், விளையும் விளைபொருள்களுக்குக்கூட, உற்பத்தியா கும் பொருள்களுக்குக்கூட விற்பனை செய்வதற்கு மார்க்கெட் இருக்காது என்று கூறிக்கொண்டு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களிடத்திலே சில கருத்துக்களைக் கூறிக்கொள்ள கடமைப் பட்டிருககிறேன்.

வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் நிலைமையைப் பெரிதும் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். நான் அவர்களிடத்திலே நல்ல மதிப்பு வைத்திருக்கிறேன். அர சாங்கம் சரியான முறையில் இயங்க, சரியான வகையில் நட வடிக்கைகள் எடுக்க நிலப் பிரபுக்களும், முதலாளிகளும் விட மாட்டார்கள். அவர்கள் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தத் தான் நினைப்பார்கள். இதைத்தான் நான் கூறினேன். என்னை நேரிலேயே கேட்டிருந்தாலும்கூட இதே விளக்கத்தைக் கொடுத்திருப்பேன் என்று கூறி ஏற்கெனவே தூதுக் குழுவாக அமைச்சர் அவர்களிடத்திலே சென்றபோது இந்த மாநில அர சாங்கம் தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் நல்ல காரியங் களைச் செய்யும் என்று கூறினார்கள். அதை நிறைவேற்ற வேண் டும் என்று கூறி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, இனறைய தினம் அவைமுன் உள்ள வருவாய்த்துறை மானியக் கோரிக்கைமீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எனனுடைய கருத் துக்களைச் சொல்ல விழைகிறேன்.

நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், வருவாய்த் துறையில் பல்வேறு பகுதிகளில் தேயிலை, காப்பி போன்றவற்றின் மூலம் அரசாங்கத்திற்கு வருமானம் வந்தாலும்கூட, அநத மாவட்டத்தில் சமீபத்தில் ஏற்பட்ட புயல், வெள்ள, மழையின் காரணமாக அந்தப் பகுதி மிகவும் பாதிக்கப்பட்டு இருந்தும்,

அங்கே 200-க்கும் மேற்பட்ட உயிர்கள் சேதம் அடைந்து உள்ளன என்றாலும் நூற்றுக் கணக்கான வீடுகள் இடிந்துள்ளன என்றாலும், ஆயிரக்கணக்கான கால்நடைகள் சேதம் அடைந்துள்ளன என்றாலும், ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய பூமிகள் மணல் மேடுகளாக ஆகி உள்ளன. அந்த மணல் மேடுகளை அகற்றி இன்னும் சரியானபடி செய்து தர இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைச் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

ஒரு சில பகுதிகளில் அப்படி மணல் மேடு இருப்பது நீக்கப்பட்டிருப்பினும்கூட, அவைகள் அங்கே கிராமங்களில் உள்ள பெரியவர்கள், வசதி படைத்தவர்கள், அரசு மட்டத்தில் தெரிந்தவர்கள் ஆகியவர்களுக்குத்தான் அந்தச் சலுகைகள் உடனடியாகக் கிடைத்து இருக்கிறது. ஏழை எளியவர்கள் பூமியை இன்னும் சீர்செய்யவில்லை. அங்கேயெல்லாம் மணல் மேடுகள் அப்படியே இருக்கின்றன என்று சொன்னால் நிச்சயமாக அது மிகையாகாது. இந்த அரசு இந்த நடவடிக்கைகளில் அக்கறை காட்ட வேண்டும்.

நீலகிரி மாவட்டத்தில் அதிகமான அளவில் உற்பத்தியாவது உருளைக்கிழங்கு, அதை வெளியிடத்திற்கு எடுத்துச் செல்லப் போக்குவரத்து வசதி சரியில்லை. உருளைக்கிழங்கிற்கு மார்க்கெட் தேட வேண்டும் என்றால் மேட்டுப்பாளையம் எடுத்துக் கொண்டு வர வேண்டும். அதற்கு வாடகை கொடுத்து வண்டி அமர்த்தி கொண்டு வரமுடியாத நிலையில் விவசாயிகள் இருக்கிறார்கள். அந்த உருளைக்கிழங்கிற்கு வரும் பூச்சியைப் போக்க மருந்து அடிக்க வேண்டும் என்றால் அந்தப் பூச்சி மருந்து விவசாயத்துறையில் இலாபம் சம்பாதிக்கும் நோக்கத்தில் விற்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் விவசாயக் கிடங்கில் விற்பதை விட இரண்டு ரூபாய் குறைவாகத் தனியார் துறையில் கிடைக்கிறது. இதைப் பற்றி முக்கியமாகக் கவனிக்க வேண்டும். அங்கே உருளைக்கிழங்கு போதுமான உற்பத்தி இல்லாததாலும், அதற்குக் கட்டுப்படியான விலை கிடைக்காததாலும், உருளைக்கிழங்கு சரியான விலையை நிர்ணயம் செய்ய வேண்டும். அதே நேரத்தில் உருளைக்கிழங்கிற்கு உபயோகிக்கப்படும் எருவுக்கு மத்திய சர்க்கார் விலை குறைத்து இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதே போல் யூரியாவிற்குக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், உருளைக்கிழங்கிற்கு உபயோகிக்கப்படும் அம்மோனியம் சல்பேட்டுக்குக் குறைக்கப்படவில்லை. அப்படிக் குறைதது இருப்பதும் மிகவும் குறைவு. 1 மூட்டைக்கு 15 பைசாதான் குறைத்து இருக்கிறார்கள். அதிகமான அளவிற்கு மானியம் கொடுத்து அந்த உரம் கிடைக்க அரசு வழிவகைகளைச் செய்ய வேண்டும்.

அதே நேரத்தில் தேயிலை, காப்பியை எடுத்துக் கொண்டாலும், அங்கே தேயிலை கணிசமான அளவிற்கு உற்பத்தியான போதிலும், போதுமான அளவிற்கு 'மேட் டீ' என்று சொல்லி பக்குவப்படுத்திய டீக்கு அதிக கிராக்கி வெளிநாட்டில் இருக்கிறது. அதைச் செய்வதற்கு சில பாக்டரிகள் இருக்கின்றன. அந்த பாக்டரிகளை அதிகரிக்கவும், அந்த அதிகரிக்கப்பட்ட பாக்டரிகளை 'மேட் டீ' தயாரித்து, அதிகமான அளவில் அவற்றை விற்பனை செய்வதற்கு மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், அங்கே பல்வேறு கால்நடைகள் ஏராளமான அளவிற்குச் சேதம் அடைந்துள்ளன. அந்தக் கால்நடைகள் விரிவு செய்யப்பட்டால்தான் விவசாயம் அதிக அளவில் பெருகுவதற்கு உதவியாக இருக்கும். ஆகவே, ஒவ்வொரு பகுதியிலும், குறிப்பாகக் கிராமப் பகுதியில் உள்ளவர்கள் அதிகமான கால்நடைகளைக் குறைவான விலையில் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

ஏப்ரல்-மே மாத சீசன் நீலகிரி மாவட்டத்தில் ஆரம்பம் ஆக இருக்கிறது. அந்த நேரத்தில் வெளியூரில் இருந்து—இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து—உல்லாசப் பிரயாணிகள் வர இருக்கின்றனர். அந்த நேரத்தில் அவர்கள் எல்லாம் வருவதற்குப் பேருதவியாகப் பாதை வசதிகள் இருக்குமா என்று தெரியவில்லை. அங்கேயுள்ள பாதை செப்பனிடும் பணிகள் இந்த மாதம் 30-ம் தேதிக்குள் முடிந்து விடும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் அடுத்து 2 மாதம் ஆனாலும் அது முடிவடையுமா என்பது சந்தேகமாக இருக்கிறது. ஏனென்றால் ஏக காலத்தில், எல்லா இடங்களிலும் அந்தப் பாதை செப்பனிடும் பணிகள் ஆரம்பமாகி இருக்கின்றன. அதே நேரத்தில் பாதைகளுக்கு வேலை செய்யத் தேவைப்படும் கருங்கல், ஜல்லி, மணல், சிமிண்ட் தேவை. அதனைச் செய்வதற்கும் ஆட்கள் அதிகம் தேவை. நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஆட்கள் மிகவும் குறைவு. அவர்கள் தாழ்வான பகுதிகளான மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர், சேலம் போன்ற மாவட்டங்களில் இருந்து வர வேண்டியிருக்கிறது. அப்படியே வந்தாலும் அவர்களால் 24 மணி நேரமும் வேலை செய்ய முடியவில்லை. குளிருக்குப் பயந்து ஓடி விடுகிறார்கள். ஆகவே, உடனடியாக முதலில் குன்னூர்—மேட்டுப்பாளையம் பாதையைச் செப்பனிட்டு விட்டு, அதற்குப் பிறகு கோத்தகிரி—மேட்டுப்பாளையம் மற்ற இதர பாதைகளைச் செப்பனிட அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. உச்சி] [1979 ஏப்ரல் 7

(பிற்பகல் 12–10)

அதே நேரத்தில், கடலூர் பகுதியில் 3,500 ஏக்கர் ஜமீன் லானடை பல்லாண்டுகாலமாகச் சிறு விவசாயிகள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலத்தை அவர்கள் 4 ஏக்கர், 5 ஏக்கர் என்ற அளவுக்குட்பட்டு, தங்களுடைய அனுபோகத்தில் வைத்திருக்கிறார்கள். அதற்குப் பட்டா இன்னும் கொடுக்க வில்லை. ஆனால் இப்போது அரசு செக்ஷன் 17-ன்கீழ் ஒரு உத்தரவைப் போட்டிருக்கிறது. அதன்படி அந்தப் பூமியை அவர்கள் தங்களுடைய தேவைக்காக விற்கமுடியாமல் திண் டாடிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலத்திற்குப் பட்டா இல்லாததால் அரசு மூலமாகவோ அல்லது வங்கி மூலமாகவோ லோன் வாங்கி அந்த நிலத்தை அபிவிருத்தி செய்ய முடியவில்லை. தங்களுடைய அத்தியாவசியத் தேவைகளுக்காகக் கூட தங்கள் கைவசம் இருக்கிற நிலத்தை விற்க முடியவில்லை என்றால் அந்த பூமியை அவர்கள் வைத்து என்ன பிரயோஜனம் என்று கேட் கிறேன். ஆகையால் செக்ஷன் 17-ஐ நீக்க இந்த அரசு முன் வரவேண்டும். அந்த 3,500 ஏக்கர் நிலத்தில் 10 ஏக்கர், 5 ஏக்கர் என்று சிறு விவசாயிகள் தங்கள் கைவசத்தில் வைத்து அனுபவித்து வருகிற பூமிக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை, 5,000 ஏக்கர், 6,000 ஏக்கர் பூமியைத் தேயிலைத் தோட்டம், காப்பித் தோட்டம் என்று வைத்துக் கொண்டு, மீதி பல ஆயிரக்கணக்கான ஏக்கர் பூமியைத் தரிசுக் காடாகப் போட்டிருக்கிறார்கள் பெரிய பெரிய தோட்ட அதிபர்கள். அந்த நிலத்தை இந்த அரசு கையகப்படுத்தி, அதை ஏழை எளிய மக்களுக்கும், இலங்கைத் தமிழர்களுக்கும், அங்கே வசிக்கின்ற இந்திய கிறிஸ்துவர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் பங்கிட்டுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது அந்த ஜமீன் பூமியை ஒரு சிலர் தங்களுடைய தொழிலுக்காக உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை அங்கிருந்து வெளியேற்ற வேண்டும். உண்மையி லேயே நீண்டகாலமாக அந்த நிலத்தை அனுபவித்துக் கொண் டிருக்கிற ஏழை எளிய மக்களுக்கே அந்த பூமியைப் பட்டா செய்து கொடுக்க வேண்டும். அந்த ஜமீன் பூமியைப் பொறுத்தவரை யில் எந்தவிதமான தகராறும் இல்லாமல், கோர்ட்டிலும் இல்லாமல் இருப்பது கிட்டத்தட்ட 3,500 ஏக்கர்தான். அதை உடனடியாகப் பட்டா செய்து கொடுக்க வேண்டும்.

1979 ஏப்ரல் 7] [திரு. கே. உச்சி]

கூடலூர் பகுதியில் ஓவாலையில் தோட்டம் அதிகமாக இருக்கிறது. அங்கே வன இலாகாவுக்குச் சொந்தமான பூமி சுற்றிலும் இருக்கிறது. குறிப்பாக முதுமலை பஞ்சாயத்துப் பகுதியில் வன இலாகா நிலம் இருக்கிறது. அந்தப் பகுதியிலுள்ள கிராம மக்கள் விவசாயம் செய்வதை எல்லாம் யானைகளும், விலங்குகளும் அழித்து விடுகின்றன. அதுமட்டுமல்லாமல் வன விலங்குகளால் அவர்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு உள்ளாகிறார்கள். ஆகவே, அங்குள்ள மக்களை அங்கிருந்து வெளியேற்றி, அவர்களுக்கு மாற்று இடம் கொடுத்து அவர்களுடைய வாழ்க்கைக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் புயலால், பாதிக்கப்பட்ட பகுதிகள், உதகை, மஞ்சூரம், புக்கத்துறை. அங்கே வீடுகளை இழந்தவர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்ட ஜப்பான் டெண்டுகளில் இன்னும் நூற்றுக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கடந்த காலத்தில் பணியால் வாடினார்கள். இப்போது மழை வருகிறது. மழை வரும்போது அங்கு டெண்டுகளில் வாழமுடியாது.

முதலமைச்சர் அங்கே விஜயம் செய்தபோது வீடுகளை இழந்த அந்த மக்களுக்கு உடனடியாக வீடுகளைத் கட்டித் தருவதாகச் சொன்னார்கள். அதற்கு அடிக்கல்லும் நாட்டினார்கள். இப்போதும் அந்த அடிக்கல்தான் அங்கே இருக்கிறதே தவிர, 5, 6 மாதம் ஆன பின்னாலும் வீடுகள் கட்டப்படவில்லை. உடனடியாக அதிலே கவனம் செலுத்தி, ஏழை எளிய மக்கள், அன்றாடத் தினக் கூலிகளாக இருக்கிற அந்த மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். கூடலூரில் சேரன்பாடி பகுதியில் சிலோன் அகதிகள் வேலை செய்கிறார்கள். இப்போது அங்கே தகராறு இருக்கிறது. தேயிலைத் தொழிற்சாலையில் லாக் அவுட் நடந்து, வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். இப்போது சமரசம் ஏற்பட்டு விட்டது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தத் தகராறையும் நிறுத்தி வைத்து அந்த மக்களுக்கு வாழ வழி காட்ட வேண்டுமென்று சொல்லி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், நன்றி. வணக்கம்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவையை அலங்கரித்துக் கொண்டிருக்கிற தற்காலிகத் தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளில் சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு கொடுத்ததற்காக நான் முதலிலே நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. எஸ். ஆர். இராதா] [1979 ஏப்ரல் 7

இந்த வருவாய்த் துறையைப் பொறுத்தமட்டில் தாலுக்கா அலுவலகங்கள் என்று எடுத்துக் கொண்டால் பல்லாண்டு கால மாக எந்தவிதமான மாற்றங்களும் இல்லாமல் தாலுக்கா அலுவலகங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டாக வேண்டும்.

இன்றைக்கு தாலுக்கா அலுவலகங்களில் இருக்கின்ற வேலை களைப் பொறுத்த வரையில் அதிகமான அளவுக்கு வேலைகள் வளர்ந்து கொண்டிருக்கிற இந்த நேரத்திலே ஒரு 100 ஆண்டுகள், 50 ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப்பட்ட கட்டிடங்களில் அந்த அலுவலகங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்தக் கட்டிடங்கள் அப்படியே இருக்கின்றனவே தவிர எந்தவிதமான மாற்றங்களும் செய்யப்படவில்லை. அங்கே வழியெல்லாம் டேபிள்களைப் போட்டு வைத்து அலுவலர்கள் உட்காரக் கூட இடம் இல்லாத வகையிலே வேலைகளைச் செய்து கொண் டிருக்கின்ற நிலையினைப் பார்க்கிறபோது அது மிகப் பரிதாபகர மாக இருக்கின்றது. தமிழ்நாட்டினுடைய வருவாய்த் துறை என்று சொல்லப்படுகின்ற அந்தத் துறை மிக முக்கியமான துறை. அப்படிப்பட்ட துறையினைக் கையிலே வைத்துக் கொண்டிருக்கிற அலுவலர்கள் பணி செய்கின்ற முறையினைப் பார்க்கின்றபோது உள்ளபடியே பரிதாபகரமாக இருக்கிறது என்பதை இந்த நேரத் தில் நான் மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

வருவாய்த்துறையைச் சீர் செய்வதென்றால் முதலில் தாலுக்கா அலுவலகங்களில் இருக்கின்ற அந்த அலுவலர்களுக்குச் சில வசதி களை ஏற்படுத்திக் கொடுத்து அவர்கள் நல்ல முறையிலே பணி யாற்றுவதற்கு, சிறப்பான முறையிலே பணியாற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல ஆர்.டி.ஓ. ஆபீஸாக இருந்தாலும் சரி, கலெக்டர் ஆபீஸாக இருந்தாலும் சரி அங்கே அலுவலகங்களில் வேலை அதிகரிக்கப்படுகிறதே அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. அவர்களுக்குரிய வசதிகளைச் செய்து கொடுத்த பிறகு அவர்கள் வேலையைச் செய்கிறார்களா என்று பார்க்க வேண்டியது அரசினுடைய கடமை என்ற வகையில் அதைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைய நிலைமையில் வாரத்தின் திங்கட்கிழமை மக்க ளுடைய குறை தீர்க்கின்ற நாள் என்று வைத்திருக்கிறார்கள். இந்த முறை சில ஆண்டுகளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அது ஏதோ சடங்குக்காக நடைபெற்று வருவது

போல் நடந்துகொண்டிருக்கிறதே தவிர உண்மையிலேயே மக்களின் குறைகள் தீர்கின்றனவா என்றால் தீரவில்லை என்பதைத்தான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட வேண்டும்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்வேன். சாதாரண ஏழை எளியவர்கள், கிராமத்திலே இருந்து வருகிறவர்கள், அதாவது தாலுக்கா அலுவலகங்களிலோ, ஆர். டி. ஓ. அலுவலகத்திலோ, கலெக்டர் அலுவலகத்திலோ தங்களுடைய குறைகளைச் சொல்லவேண்டும் என்று வருகிறவர்கள் தாங்கள் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கின்ற நிலைமையைப் பார்க்கின்றோம். ஆகவே மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக என்றே மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நேரடியான அலுவலர்களை நியமித்து அவர்கள் மூலமாக அந்தக் குறைகளை மக்கள் சொல்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அவ்வாறு அந்த ஏழை மக்களின் குறைகளைக் கவனிப்பதற்கு ஆவன செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பட்டா கொடுப்பது பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அது ஒரு பெரிய விளம்பரத்திற்குரிய பொருளாகவே மாறி இருக்கின்றது. ஆனால் மாண்புமிகு அமைச்சரவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு இந்தப் பட்டாக்கள் கொடுப்பது எல்லாம் முறையாக இருக்கவேண்டும் என்று சில காரியங்களைத் திட்டமிட்டுச் செய்து வருகிறார்கள். நான் அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் கூட ஒன்றைச் சுட்டிக் காட்டினார்கள். அதாவது பட்டா பெறுகின்ற சிலருக்குப் பட்டா வாங்க வேண்டும் என்று கூடத் தெரியாது என்று குறிப்பிட்டார். எந்த இடத்திலே பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது என்றுகூடத் தெரியாத நிலை இருக்கின்றது. ஆகவே பட்டா கொடுக்கின்றபோது அதனைப் பெறுபவர்கள் அதனை அனுபவிக்கின்ற அளவுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் அதனைத் திட்டமிட்டுச் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

அதேபோல விற்பனை வரியைப் பற்றிச் சொல்லவேண்டி இருக்கிறது. கர்ணம், பட்டாமணியம் போன்றவர்கள்தான் இன்றைக்கு ராஜாக்களாக இருக்கிறார்கள். ஒரு ஊரிலேயே ராஜா என்று சொன்னால் உள்ளபடியே கர்ணமும், பட்டாமணியமும்தான். அவர்கள்தான் மிகவும் ஆற்றல் பெற்றவர்களாக இருக்கிறார்கள். மற்ற அரசு அலுவலர்களை இடமாற்றம் செய்வது போல இவர்களையும் இட மாற்றம் செய்யவேண்டும். இவர்களை மாற்றுவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இங்கே நான் ஒரு யோசனை சொல்வேன்.

[திரு. எஸ். ஆர். இராதா] [1979 ஏப்ரல் 7

சாதாரணமாக, பட்டாமணியம் வேலைக்கு ஆட்களை நியமிக்கின்றபோது அந்த ஊரிலேயே மிகப் பெரிய பணக்காரராகவும் செல்வாக்கு படைத்தவர்களாகவும் இருப்பவர்கள் தான் அவ்வாறு நியமிக்கப்படுகிறார்கள். அந்த நிலைமை இன்றைக்கும் இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட ஒரு நிலை இல்லாமல் சாதாரணமாக படித்தவர்கள் அந்த வேலைக்கு வரவேண்டும். ஓரளவு வசதி படைத்தவர்களால் ஜாமீன் ஏற்கின்ற நிலையில் படித்த மற்றவர்கள் அந்த வேலைக்கு வருவதற்கு முயற்சி எடுக்கின்றபோது அவர்களுக்கு அந்த வேலையைக் கொடுத்து அவர்களைப் பட்டாமணியம், கர்ணம் என்று நியமிக்கின்ற நிலை வரவேண்டும். அப்படி இல்லாமல் பெரிய பணக்காரர்கள்தான் அந்த வேலைக்கு வர முடியும் என்கின்ற நிலையை மாற்றவேண்டும். இதனை மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனிப்பார்கள் என்று நான் நினைக்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் பேசும்போது பினாமி நிலம், பினாமி நிலம் என்று குறிப்பிட்டார்கள். அந்தப் பினாமி நிலம் எல்லாம் எப்படி உருவாகிறது? அதையெல்லாம் உருவாக்குபவர்கள் இந்தக் கர்ணமும், பட்டாமணியமும்தான். இந்த இரண்டு பேரால் தான் அந்த மாதிரி பினாமி நிலங்கள் எல்லாம் உருவாகின்றன.

(பிற்பகல் 12-20)

இரண்டு பேர்களையும் ஒழித்துக் கட்டவேண்டும். ஒழித்துக் கட்ட முடியாது. யார் யார் பேரிலேயோ நிலவரியைக் கேட்கிறார்கள். நிலம் இருக்காது. ஆனால், வரி மட்டும் வரும். ஆள் இருக்கமாட்டார்கள். அந்த அக்கிரமங்களுக்கு யார் காரணம் என்று சொன்னால் அந்தக் கர்ணம், பட்டாமணியம்தான். மாண்புமிகு அமைச்சர் கொஞ்சம் பரிதாபம் காட்டக்கூடியவர். அவர் இவர்கள் மீது பரிதாபம் காட்டக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் சொல்லப் போனால் அவர்களையெல்லாம் விரைவிலே ஒரு வழிக்குக் கொண்டுவர வேண்டும்.

அதேபோல ரெவின்யூ போர்டு என்று ஒன்று இருக்கிறது. அது உயர்ந்த இடத்தில் இருக்கிறது. அவர்கள் என்ன உத்தரவு போடுகிறார்கள், எங்களுக்குத் தெரியாது. சாதாரணமாகக் கீழே இருக்கிற அதிகாரிகள் ஒன்று எழுதி அனுப்புவார்கள். அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சிபாரிசு செய்து ரெவின்யூ போர்டுக்கு அனுப்புவார். ரெவின்யூ போர்டில் உட்கார்ந்து இருக்கிற அதிகாரிகள் எல்லாவற்றையும் மாற்றி வேறு புதிய ஒரு உத்தரவைப்

1979 ஏப்ரல் 7] *[திரு. எஸ் ஆர். இராதா]*

போடுவார்கள். இந்த ரெவின்யூ போர்டைப் பற்றி பழங் காலத்தில் பேசுவார்கள். எனக்கு ஞாபகம் வருகிறது—மதியழகன் அவர்கள் வருவாய்த் துறை அமைச்சராக இருந்தபோது இந்த ரெவன்யூ போர்டை ஒழித்துக்கட்டுவோம் என்று சொன்னார்கள். ஆனால், அது பேச்சுவார்த்தையிலே தான் இருக்கிறது. நடைமுறைக்கு இன்னும் அது வரவில்லை.

அதுபோல் பினாமி நிலம், ஜமீன்தாரி சொத்துக்கள் இழப்பீடு என்று வருகிறதே தவிர, ஜமீனதாரிகள் இன்னும் இருக்கிறார்கள். அவர்களுடைய நிலங்களை யாரும் குறைத்து விடவில்லை. உதாரணமாக, மதுரை மாவட்டத்தில் ஒரு ஜமீன்தார் இருக்கிறார். அவருக்கு 1,500 ஏக்கர் இருக்கிறது. 1,500 ஏக்கர் வைத்திருக்கிறார் என்று சொன்னால் அது முழுவதும் தோப்பு. லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான வருமானம் வருகிறது. அவர் அந்தத் தோப்பை வைத்து அரசியல் நடத்துகிறார். அந்த ஜமீன்தாரை யாரும் போய்ப் பார்க்கமுடியாது. இன்றைக்கு அந்தச் சட்டம் அவரிடம் போகாது. காரணம், ஒரு தோப்பு வைத்து இருக்கிறார். அவர் எந்த மரங்களை வெட்டினாலும் இந்த கர்ணம், பட்டாமணியம் ஒன்றும் செய்யமுடியாது. அரசியல்வாதிகள் அவர் கையில் அடக்கமாக இருக்கிறார்கள். அந்த நிலையை மாற்ற வேண்டும் என்று சொன்னால் அமைச்சர் அவர்கள் கொஞ்சம் தீவிரமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதை அவர் செய்வார் என்ற நம்பிக்கை இருக்கிறது. அவர் நேர்மையானவர், நாணய மானவர் என்றெல்லாம் சங்கரய்யா அவர்கள் சொன்னார்கள். நான் ஒன்றைத் தங்கள் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன். 1979-ம் ஆண்டு மார்ச் திங்கள் 8-ம் தேதி அன்று இதே மாமன்றத்தில் தி.மு.க. உறுப்பினர் தாழை மு. கருணாநிதி அவர்கள் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் மீது ஒரு குற்றச் சாட்டைச் சொன்னார்கள். அவர் சொல்கிற நேரத்தில் ஆட்சியில் இருக்கிறவர்கள் நிர்வாகத்தில் தலையீடு செய் கிறார்கள் என்று சொல்லிவிட்டு, வருவாய்த் துறை அமைச்சராக இருக்கிற எஸ். டி. எஸ். அவர்கள் என்னுடைய தொகுதியில் தலையிட்டிருக்கிறார்கள். அவர் ஜாதிக்காரர், கட்சிக்காரர், தகுதி, திறமை படைத்தவர்கள் இருக்கிற நேரத்தில், அவர் சொந்தக்காரர் என்ற காரணத்தால் தமிழ் ஆசிரியர் பதவிக்கு சிபாரிசு செய்திருக்கிறார், அதை என்னால் நிரூபிக்க முடியும் என்று எடுத்து சொல்லியிருக்கிறார். அதுபோல இன்னொரு குற்றச் சாட்டையும் சொன்னார்கள். திருவாரூரில் டிரில் மாஸ்டர் பதவிக்கு அவர் ஜாதிக்காரர் என்பதற்காக ரெவன்யூ அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டார் என்று பேசுகிறபோது அமைச்சர் அவர்கள் இங்கே இல்லை. ஆனால், அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்வது எல்லாம் இந்த மன்றத்தில் சாதாரண வாடிக்கையாகச் சொல்லக்கூடிய

வார்த்தையாக ஆகிவிட்டது. ஆனால், யாரும் பொறுப்பு ஏற்றுக் கொண்டதும் இல்லை. ஏன் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று யாரும் கேட்டதும் இல்லை. அதை யார் வேண்டுமானாலும் சொல்லலாம். சட்ட மன்றத்தில் உரிமைக்குழு என்று ஒன்று இருப்பதுபோல், பொறுப்பு குழுக் இருக்கவேண்டும். இப்படி ஒரு உறுப்பினர் குற்றச்சாட்டு சொல்வார்களானால், அதற்குப் பொறுப்பு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லி, யார் குற்றம் சாட்டப்படுகிறார்களோ, அவர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுத்து உதவ வேண்டும் எனறு கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்

திரு. என். கிட்டப்பா : அந்த அங்கத்தினர் இந்த அவையில் இப்போது இல்லாத காரணத்தால்.........

திரு. எஸ். ஆர். இராதா : நீங்கள் சொன்னதற்கு நன்றி. அவர் இல்லை என்று எனக்குத் தெரியும். கொஞ்ச நாட்களாக இல்லை என்று தெரியும். அவர் 8-ம் தேதியில் இருந்தே இல்லா விட்டாலும் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இங்கே சங்கரய்யா அவர்கள் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டி இருக்கிறார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக, அவர் நேர்மையானவர், நாணயமானவர் என்றெல்லாம் பாராட்டினார்கள். ஆனால், தஞ்சை மாவட்டத்தில் ஒரு தி.மு.க. உறுப்பினர் தன் ஜாதிக்காரர், சொந்தக்காரர் என்பதற்காக அமைச்சர் அவர்கள் தலையிடுகிறார் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அப்படிக் குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமானால், முன்னால் பல ஆண்டுகளாக நடைபெற்றுக் கொண்டிருந்த குற்றச்சாட்டுகளைச் சொல்ல முடியும். எந்தக் குற்றச்சாட்டுகளாக இருந்தாலும் அவை நிரூபிக்கப்பட வேண்டும். இப்போது அவர் இல்லை என்பது எனக்குத் தெரியும். ஆனால், இதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்காகக் குறிப்பிடுகிறேனே தவிர அவர் சொல்லுகின்ற இந்த குறை எந்த அளவுக்கு உண்மை என்பது எனக்குத் தெரியும். ஆனால், இங்கு பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று சொல்லுகின்ற நேரத்தில் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு இங்கே அதற்கு ஒரு விதிமுறையை உண்டாக்க வேண்டும், குற்றச்சாட்டுகளை நிரூபிக்க வேண்டும் என்று கேட்கிற போது, அதற்கான பொறுப் பேற்றுக்கொள்கிறேன் என்று சொல்வது மட்டும் பதிலாகிறதே

1979 ஏப்ரல் 7] [திரு. எஸ். ஆர். இராதா]

தவிர யாரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டதாகத் தெரிய வில்லை. ஆகவே, இதற்காக ஒரு வழிமுறையை வகுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். எனக்கு இருக்கிற ஆசையெல்லாம் திரு. சுப்பு அவர்கள் பேசும்போது முதல் அமைச்சரையும் பார்க்க முடியாது, யமனையும் பார்க்க முடியாது என்று சொன்னார்கள்.........

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ; நண்பர் சுப்பு அவர்கள் இங்கு ஒன்றைச் சொன்னார்கள். ஆனால், அவர் இங்கு இல்லையே என்று திரு. கிட்டப்பா அவர்கள் சொன்னார்கள். நான் ஒன்றை சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். நான் இதற்கு முன்பு இதைப்பற்றி சொல்லியிருக்கிறேன். சுப்பு அவர்கள், ஏதோ நான் சொந்தக்காரர்கள் என்பதற்காக செய்தேன் என்று சொன்னார்கள். எனக்குச் சொந்தக்காரர்கள் யார் என்று கண்டுபிடித்துச் சொன்னதற்காக நன்றி என்று அன்றைக்கு நான் சொல்லியிருக்கிறேன். ஆனால், ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எனக்கு யார் சொந்தக்காரர்கள் என்றால் திராவிட சமுதாயம் தான் எனக்குச் சொந்தக்காரர்கள். இதை நான் உதட்டளவில் சொல்லவில்லை, உள்ளத்தால் சொல்கிறேன். நானே தலையிட்டு அவரை அங்கே போடவேண்டும், இவரை இங்கே போடவேண்டும் என்றெல்லாம் நான் சொல்ல வில்லை என்பதை இப்போதும் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் பேசுகிறபோது இதற்குப் பொறுப்பேற்றுக் கொள்வதாகச் சொல்லியிருக்கிறார். நானும் இதற்குப் பொறுப்பேற்று, இதைப் பற்றி விசாரணை நடத்துவதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், அன்றைக்கே இதுபற்றிப் பதில் சொல்லியிருக்கிறார்கள். நான் அன்றைக்கே இந்த விவரங்கள் எல்லாம் கொடுத்தேன். சீக்ரெட் நம்பர் எல்லாம் கொடுத்தேன். இன்னும் கூடுதல் விவரங்கள் வேண்டுமானாலும் திங்கட்கிழமையன்று சொல்லு கிறேன். அவருக்குச் சிரமம் இல்லாமல் இருப்பதற்காக இன்னும் விவரங்களை எல்லாம் சொல்லுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : சுப்பு அவர்கள் எனக்குச் சிரமம் ஏற்படுவதைப்பற்றி கவலைப்பட வேண்டிய தில்லை. நான் அப்போதே சொன்னேன். எனக்கு வேண்டிய வர்கள் என்பதற்காக யாரையும் எந்த இடத்திலும் போட வில்லை. யார் யாரை எந்த இடத்தில் போடவேண்டும் என்று வருவாய்த்துறை நினைக்கிறதோ — எந்த இடத்தில் யார் இருக்க வேண்டும், யார் நல்ல அலுவலர்கள், யார் நல்ல

ஆபீசர்கள், யார் இந்த நிலைமையிலே நல்ல முறையில் சமாளிப்பார்கள் என்றெல்லாம் பார்த்துப் போடுகின்ற உரிமை அரசுக்கு இருக்கிறது, என்றாலும் அவர்கள் அன்றைக்கு ஒரு பெயரைச் சொன்னார்கள். அப்படி அந்தப் பெயர் உள்ளவர்கள் இருக்கிறார்களா என்று கேட்டேன். அவர் வருவாய்த்துறை வாரியத்தில் வராந்தாவில் கூடப் போகவில்லை என்று சொன்னார்கள். ஆகவே இதில் யாரும் தலையிடவில்லை என்பதைச் சொல்லிக் கொள்வதோடு, இன்னின்ன அதிகாரிகள் இன்னின்ன இடத்தில் தேவைப்படுகிறார்கள் என்றிருந்தால், அவர்களை அந்த இடங்களுக்குப் போடுவதற்கு அரசுக்கு உரிமையிருக்கிறது என்பதை அன்றைக்கே நான் சொல்லியிருக்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : ஒரு நிமிடம். தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் திராவிட சமுதாயம் தான் எனக்குச் சொந்தம் என்று சொன்னார்கள். திராவிட சமுதாயத்தில் சேர்ந்த எங்களைப் போன்றவர்கள் அமைச்சர் அவர்களின் சொந்தக்காரர்களாக இருப்பதில் மகிழ்ச்சி. அந்த முறையில்தான் தாழை அவர்கள் சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மகிழ்ச்சி.

திரு. எஸ். ஆர். இராதா : தற்காலிகத் தலைவர் அவர்களே, வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுக்கின்ற நேரத்தில் சிலவற்றைத் தெரிவித்தார்கள். அன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தில் எப்படியிருந்தார்கள் என்பது தெரியும். அவர்கள் பெரிய பொறுப்புகளை வகிக்கின்ற நேரத்தில் எங்களைப் போன்ற சாதாரணமானவர்கள் அந்தக் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஓகோ ஓகோ என்றிருந்த காலத்தில், ஏதாவது ஒரு காரியத்திற்கு சிபாரிசு செய்யச் சொல்லி அவர்களிடம் போனால், இதைப் பார்த்துச் செய்யுங்கள் என்று தான் சொல்வார்களே தவிர, உடனடியாக உத்தரவு போட்டுக் கொடுங்கள் என்று சொல்ல மாட்டார்கள். சட்டப்படி இதைப் பார்த்துச் செய்யுங்கள் என்று சொல்லக்கூடிய ஒருவர் மீது குற்றச்சாட்டுகளைக் கூறினார்கள். இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம்.

(பிற்பகல் 12-30)

இப்படி குற்றம் சாட்டுவதும், அதை வேண்டுமென்றே சொல்வதும் முறைதானா? அதேபோல் இங்கே நண்பர் சுப்பு அவர்கள் பேசுகின்றபோது சொன்னார்கள், நான் முதல் அமைச்சர் அவர்களைப் பார்க்க முடியவில்லை என்று. அவர்கள் இப்படி அடிக்கடி சொல்லிக்கொண்டு வருவதற்கான காரணம்

தெரியவில்லை. ஆனால், எனக்கிருக்கிற கவலை எல்லாம், அவர்கள் எமனையும் பார்க்க முடியவில்லை என்று சொல்வதற்காக நான் ரொம்ப வருத்தப்படுகிறேன். குறைந்த வயதானவர், அவருக்கு எமன் தெரியாது. அதை அவர் ஏற்க மாட்டார்கள். அவர் எமனைப் பார்க்கக்கூடாது. நண்பர்கள் வராந்தாவில் சொன்னார்கள். . .

திரு. க. சுப்பு : முதல் அமைச்சரைச் சம்மன் கொடுத்தாலும் பார்க்க முடியாது; அதைப்போலத்தான் எமனையும் பார்க்க முடியாது என்று சொன்னேன்.

திரு. எஸ். ஆர். இராதா : சம்மன் அவசியம் இல்லை. இன்றைக்கு நண்பர் அவர்களுக்கு நன்கு தெரியும். அவர் மீண்டும் எமன் என்று பேசுவதற்கு வருத்தப்படுகிறேன். பல்வேறு பிரச்னைகளைப்பற்றி பேச வேண்டியிருக்கிறது. தயவு செய்து யாரும் குறுக்கிட வேண்டாம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : இன்னும் 15 பேர்கள் பேச வேண்டியிருக்கிறது. சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ர. ஜெபமணி : தற்காலிகத் தலைவர் அவர்களே, இவர்களுக்கு எமன்மேல் நம்பிக்கை இருக்கிறதா ?

திரு. எஸ். ஆர். இராதா : பேரவை தற்காலிகத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பெரியவர் அவர்கள் மிகுந்த கவலையோடு எங்களைப் பார்த்து, எமன் மீது நம்பிக்கை இருக்கிறதா என்று கேட்டார்கள். எங்களைப் போன்றவர்களுக்குக்கெல்லாம் எமன் மேல் நம்பிக்கை கிடையாது. ஆனால், நம்பிக்கை இருக்கின்ற பெரியவருக்காக எடுத்துச் சொன்னேன். பெரியவர் தூங்குகின்றபோது, எமனைப் பற்றிய கவலை வரும். இதைத் தவிர, இதிலே வேறு ஒன்றும் இல்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : எமன் பிரச்னை முடிந்துவிட்டது. விவாதத்திற்கு வாருங்கள்.

திரு. ர. ஜெபமணி : தற்காலிகத் தலைவர் அவர்களே, எமன் இல்லை என்று மாண்புமிகு இராதா அவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தால், இந்தப் பிரச்னை பற்றி வந்திருக்கக் கூடாது. எமனைப் பற்றி அவர்கள் பேசியிருக்கக்கூடாது.

திரு. எஸ். ஆர். இராதா : இன்றைக்குத் தலைமை ஏற்றிருக்கின்ற இந்த அரசு, ஒரு சினிமாப் படம் எடுத்திருக்கிறது. அதைப் பார்த்திருப்பவர்களுக்குத் தெரியும். 'எமனைப் பார்த்துச் சிரிப்பதா' என்று அதிலே ஒரு பாட்டு வருகிறது.

திரு. ர. ஜெபமணி : எமனே இல்லை என்று சொல்கிறீர்கள். சிரிப்பு எப்படி வந்திருக்கும் ?

திரு. எஸ். ஆர். இராதா : எமனைப் பார்த்து சிரிக்க வேண்டுமென்ற நிலையிலேதான் எங்களைப் போன்றவர்கள் இருக்கிறார்கள். அதைத்தான் சொல்கிறோம்.

திரு. ர. ஜெபமணி : முதலிலே எமனே இல்லை என்று சொன்னார்கள். இப்போது எமனைப் பார்த்துச் சிரிக்கிறோம் என்று பேசுகிறார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. பி. எச். பாண்டியன்): எமனைப் பற்றிப் பேசவேண்டாம், திருப்பித் திருப்பி, வருவாய்த் துறையைப் பற்றிப் பேசுங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பில் இன்றைக்கு பல்வேறு நல்ல காரியங்களை இந்த அரசு செய்திருக்கிறார்கள். குறிப்பிட்ட நேரத்திலே செய்ய வேண்டிய காலங்களிலே தேவைக்கும் அதிகமான அளவிலே செய்திருக்கிறார்கள். பாராட்டு. அதேபோல், இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும், ஜமீன்தார்களுக்கு இழப்பீடு என்று பல்வேறு காரியங்கள் நடைபெற இருக்கின்றது. இதிலே அமைச்சர் அவர்கள் தேவையான கவனம் செலுத்தி, இதை முறைப்படுத்தி செய்ய வேண்டும். ஜமீன்தார்களுக்கு இழப்பீடு கொடுப்பது நீண்ட நாட்களாகப் பேசப்படுகிறது. ஜமீன்தார்கள் ஒழிப்புச் சட்டம் கொண்டு வந்தாலும், அவர்களை ஒழிக்க முடியவில்லை. பெரிய பெரிய ஜமீன்தார்கள் வளர்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, இதற்கெல்லாம் வழிவகை தேடுகின்ற நடவடிக்கைகளை எடுத்து, அவர்களை எல்லாம் ஒழிக்க முடியவில்லை என்று சொன்னாலும், அரசியல் சட்டப்படி எந்த வகையிலே தடுக்க முடியுமோ அதை இந்த அரசாங்கம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த அளவிற்கு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு உங்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. ஆர். சி. சுப்பிரமணியம் ; பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த அத்தனை மானியங்களையும் வரவேற்று என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். இந்த ஆண்டு ஏற்பட்ட

1979 ஏப்ரல் 7] [திரு. ஆர். சி. சுப்பிரமணியம்]

புயல், பெருமழை காலங்களில் அரசு எங்களுடைய மாவட்டத்தில் கடலாடி, இராமநாதபுரம் போன்ற பகுதிகளில் ஏற்பட்ட புயல் காலங்களில் அரசாங்கம் செய்த உதவிகளை, நடைமுறைகளைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அதோடு நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் புயல், வெள்ளம் ஏற்பட்டவுடனே எங்கள் பகுதிக்கு வந்து அங்குள்ள மக்களுடைய குறைகளை எல்லாம் கேட்டு அவர்களுக்கு வேண்டிய உதவிகளை எல்லாம் செய்தார்கள். அதற்காக என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக வருவாய்த்துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அதோடு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரும் இவரோடு சேர்ந்த மற்ற அதிகாரிகளும் இரவென்றும் பகலென்றும் பாராமல் கடுமையான அந்தப் புயல் காலங்களில் கடற்கரைப் பகுதிகளில் இருந்தவர்களைக் கட்டாயப்படுத்தி மேட்டுப் பகுதிக்கு அழைத்து வந்து அவர்களைக் காப்பாற்றி அவர்களுக்கு உணவு கொடுத்து எடுத்துக் கொண்ட சிரமங்களுக்காக தொகுதி மக்களின் சார்பாகப் பாராட்டாமல் இருந்தால் நன்றி தவறியவர்களாவோம். ஆகவே, மீண்டும் ஒரு முறை மாவட்ட ஆட்சித் தலைவரையும் அவருடைய பொறுப்பிலுள்ள அத்தனை பேரையும் பாராட்டி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகின்றேன்.

குடிசையில் வாழ்கின்ற மக்களுக்கு குடிசையிழந்தவர்களுக்கு 100 ரூபாயும் கொடுத்து அரிசியும் கொடுத்து உதவினார்கள். அதற்காக நம்முடைய அரசாங்கத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது. கடலாடி பகுதியில் மீனவர்கள் போட் சேதமானவர்களுக்கு வலை கொடுத்து போட் கொடுத்து உதவியது போல் விசைப்படகு இழந்தவர்களுக்கும் விசைப்படகைக் கொடுத்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

புயலால் பாதிக்கப்படக்கூடிய இடமான கடலாடி தொகுதியிலுள்ள முத்துப்பேட்டை, சேதுக்கரை, முகையூர் போன்ற இடங்களில் பாதுகாப்புக் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பெரும்பாலும் ரெவின்யூ இன்ஸ்பெக்டர், தாசில்தார் ஆகியவர்கள் அந்த மாவட்டத்தையே சுற்றிச் சுற்றி மாறுதல் செய்து கொண்டு வருகின்ற நிலைமை இருக்கிறது. ரெவின்யூ இன்ஸ்பெக்டராக இருப்பவர்கள் கொஞ்ச காலத்திற்குப் பின்னால் டெபுடி-தாசில்தாராக வந்துவிடுகிறார்கள். டெபுடி-தாசில்தார் கொஞ்ச காலத்தில் தாசில்தாராகி விடுகிறார். ஆகவே, சுற்றிச் சுற்றி அந்த மாவட்டத்திற்குள்ளேயே வரும் காரணத்தால் பொதுமக்களுக்குப் பெரிய இடைஞ்சல் ஏற்படுகின்றது. சில விருப்பு வெறுப்புகள் ஏற்பட்டு லவிதமனாப தொல்லைகள் கொடுக்கமு னைகிறார்கள். அந்த

செர்வீசை ஸ்டேட் செர்வீசாக மாற்றி மாநில அளவில் பி.டி.ஓ-க் களை மாற்றுவதுபோல் இவர்களையும் மாற்ற அரசாங்கம் உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடலாடி, செல்வனூர், சிக்கல் போன்ற பிர்க்காக்களை ஒன்றாக இணைத்து சாயல்குடியில் தாலூகா அலுவலகம் அமைத்துக் கொடுப்பதற்கு பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன. நம்முடைய அரசாங்கம் அதைத் தாலூகாவாக மாற்றி அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்தில் இனிஷியல் சர்வே நடந்தே பல ஆண்டுகள் ஆகிவிட்டன. அமைச்சர் அவர்கள், மீண்டும் சர்வே செய்து லாண்ட் ரெக்கார்டுகளை ஒழுங்குமுறைப்படுத்த ஏற்பாடு செய்யப்படும் என்று சொன்னார்கள். ரீசர்வே செய்து நிலம் சம்பந்தப்பட்ட ரிகார்டுகளை ஒழுங்குபடுத்த நம்முடைய அரசாங்கம் எல்லாவித முயற்சிகளையும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் எங்களுடைய மாவட்டத் தில் நீர்ப்பாசன வசதி இல்லாமல் பாதிப்பான நிலைமையில், கஷ்டமான நிலைமையில் தரிசு நிலங்களாக இருந்து கொண்டு இருக்கின்றன. அந்த நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்து வதற்கான முயற்சியை வருவாய்த்துறை அமைச்சர் அவர்களும் அரசாங்கமும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் திட் டத்தை உடனடியாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று அன்புடன் வேண்டுகிறேன். இராமநாதபுரம் மாவட்ட அலு வலகங் களைப் பொறுத்தவரை இராமநாதபுரம் அன்ட் மதுரை என்று இருக்கக் கூடிய நிலையை மாற்றி மாவட்டத் தலைநகரை உடனடி யாக ஏற்படுத்தாவிட்டாலும் அந்த மாவட்டத்தில் இருக்கக் கூடிய பெரிய ஊர்களுக்கு, டவுன்களுக்கு அந்த அலுவலகங்களை மாற்றிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மாவட்டப் பிரிவினையை உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொண்டு பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். வணக்கம்.

(12.40)

*திரு. செ. சதாசிவம்: மதிப்பிற்குரிய தாற்காலிக சபா நயாகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின் பேரில் என்னுடைய ஒரு சில கருத்துக்களைக் கூற விழைகிறேன். முத லிலே இயற்கையின் சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலே

1979 ஏப்ரல் 7] [திரு. செ. சதாசிவம்]

1977ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12ஆம் தேதி ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக அதிகமாகப் பாதிக்கப்பட்ட பகுதி என்னுடைய தொகுதி என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நேரத்திலே அந்தப் பகுதிக்கு அரசும் பல நன்மைகளைச் செய்தாலும் குறிப்பிட்ட சில வேலைகள் விட்டுப்போனதுபற்றி நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அந்த நேரத்திலே என்னுடைய பகுதியிலே 30 பேர்கள் உயிரிழந்திருக்கிறார்கள். அவர்களிலே 2 பேர்களுக்கு, அவர்களுடைய குடும்பங்களுக்குத்தான் நட்ட ஈடுத் தொகை கொடுக்கப்பட்டுள்ளது. அப்படிச் சொல்கின்ற நேரத்திலே குடும்பத் தலைவன் என்று பல இனங்களிலே பிரிக்கப்பட்டாலும் அந்த 30 பேர்களிலே இன்னும் சிலருக்குக் நட்ட ஈடுத் தொகை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வேண்டுமென்றால் அந்த புள்ளிவிவரங்களைக் கேட்டால் நான் அவைகளை அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கிறேன.

அந்தப் பகுதியிலே குடகனாறு உடைந்ததால் பெரிய சேதம் ஏற்பட்டது என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதன் காரணமாக மண்மேடிட்ட பெரும் பகுதிகளை சிறிய விவசாயிகளுக்கு அரசினுடைய செலவிலும், பெரிய விவசாயிகளுக்கு பாதிச் செலவிலும் அரசு அப்புறப்படுத்திக் கொடுத்தது. ஆனால், ஈசநத்தம் கிராமத்தில் உள்ள மணல் மேடிட்ட பகுதி விடுப்பட்டுப் போய்விட்டது. அங்கே மண் மேடிட்ட பகுதி இருக்கிறது, அதை அரசு அப்புறப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வெள்ளத்தின் காரணமாகவும், வறட்சியின் காரணமாகவும் விவசாயிகளுடைய நிலவரி தள்ளப்படுகிறது. முன்பு 25 காசு இருந்தது. இப்போது 37 பைசாவுக்குக் கீழே இருந்தால் தள்ளுபடி செய்யப்படுகிறது. விவசாயமே அழிந்து போய் விட்டது என்ற காரணத்தால்தான் தள்ளுபடி செய்யப்படுகிறது அந்த நேரத்திலே விவசாய வருமான வரி மட்டும் அந்தப் பகுதியிலே வசூலிக்கப்படுகிறது என்பதை நான் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அது நிச்சயமாகத் தள்ளுபடி செய்யப்பட வேண்டும். அமைச்சர் அவர்கள் இல்லையென்று சொல்கிறார்கள். நான் அங்கே போய் இருந்த நேரத்தில் சொன்னார்கள். தள்ளுபடி செய்கிறேன் என்று சொன்னால் மிக்க மகிழ்ச்சி.

அடுத்து, பட்டா புத்தகங்கள் வழங்கப்படுவது 1972ஆம் ஆண்டிலே கொண்டுவரப்பட்டது இந்த மாநிலத்திலே. ஆனால், அது பெயரளவிலே மட்டும், குறியீட்டு அளவிலே மட்டும் இருக்கிறதே தவிர, எந்த வழியிலே அதைச் செய்யவேண்டுமென்று கருதினோமோ அதைச் செய்யவில்லை. இன்றைக்கு

[திரு. செ. சதாசிவம்] [1979 ஏப்ரல் 7

விவசாயிகள் கையிலே வெறும் பட்டாப் புத்தகங்கள்தான் இருக்கின்றன. அதை நல்ல முறையிலே செய்தால் இன்றைக்கு விவசாயிகளுக்கு இருக்கிற பல்வேறு குறைகளை நிவர்த்திக்க முடியும். கிராம அதிகாரிகளிடம் சென்று அத்தாட்சி கேட்கிற நிலைமை மாறிவிடும். குறிப்பாக நிலத்தின் அளவு கூட்டுப் பட்டாவாக இருப்பதைத் தனிப்பட்டாவாக மாற்றியது, அந்த அந்த ஆண்டுகளுக்கான அடங்கல் கணக்குகள், அவர்கள் வாங்கிய கடன்களைக் குறிப்பது இப்படிப்பட்ட விவரங்களையெல்லாம் அதிலே குறிப்பிட்டால் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கும். ஆகவே, இந்த ஆண்டு மேற்கொண்டு நல்ல அளவில் அதைச் செய்ய வழிவகை செய்ய வேண்டும்.

அடுத்து, சப்-ரிஜிஸ்திரார் ஆபீஸிலே நிலத்தினுடைய மதிப்புப் புத்தகம் வைத்திருக்கிறோம். ஒவ்வொரு கிராமத்தினுடைய நிலங்களினுடைய மதிப்புகளைப் பற்றிய புத்தகங்கள் இருக்கின்றன. ஆனால் அவைகளில் நீண்ட நாட்களுக்கு முன்னால் கிராம அதிகாரிகள் தங்களுடைய இஷ்டப்படி செய்திருக்கிற குறைகள் இருக்கின்றன. பல்வேறு இடங்களில் நிலத்தினுடைய மதிப்பிற்கே ஸ்டாம்ப் வாங்கக்கூடிய சூழ்நிலை இருப்பதால் அதைச் சரியான முறையிலே மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தண்ணீர் தீர்வை, இதுதான் நாட்டிலே பெரிய பிரச்சினை, விவசாயிகளிடத்திலே ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்சினைகளுக்கு அடிப்படை விஷயம் இது, அரசு இதைக் கவனிக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். அதற்காக ஒரு கமிட்டி போட்டு ஆராய்ந்து ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதற்கு திட்டம் இருக்கிறது. அதற்காக சமீபத்திலே மாவட்டங்களிலே போய் உயர்மட்ட கமிட்டி மட்டும் இல்லாமல் தனியாக அதிகாரிகள் குழு வந்தது. அதிலே நாங்கள் எல்லாம் சொல்லியிருக்கிறோம்,

இந்தத் தண்ணீர்த் தீர்வையைப் பொறுத்தமட்டில் முதல் தரம் என்றும். இரண்டாம்தரம் என்றும். அதுவன்னியில் தனியாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறது, முதல் தரத்திலே இருக்கும் வழிவகைகளையும், இரண்டாவது தரத்திலே இருக்கின்ற வழிவகைகளையும் பிரிக்கும்பொழுது ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்,

இன்றைக்கிருக்கும் நிலைமையில். காவிரியாற்றின் தண்ணீரை ஆண்டு பூராவும் கொடுக்கும் சூழ்நிலையைப்போல் எங்கள் பகுதியில் ஓடும் அமராவதி ஆற்றில் கிடையாது. ஆறு மாதங்கள்தான் இருக்கிறது, ஆனால் இந்த இரண்டும் ஒரே கிளாசிலே—பர்ஸ்ட் கிளாஸ் சோர்ஸ் என்ற நிலைமையிலே வருகிறது. இரண்டாவது வகுப்பிலே செல்லும் தண்ணீர்த் தீர்வையை — இரண்டு

1979 எப்ரல் 7] [திரு. செ. சதாசிவம்]

கிராப்புக்குத் தண்ணீர் கொடுத்தால் இரண்டாவது சோர்ஸ் என்று கூறக்கூடிய நிலைமையிலே இருக்கிறது, ஆனால் அந்தத் தண்ணீர்த் தீர்வை ஒரு போகத்திற்குக் கொடுக்கப்பட்டாலும் இரண்டாவது நிலையிலே விதிக்கக்கூடிய வரி பூராவும் வசூலிக்கின்ற நிலைமை இருக்கிறது. எனவே, செகண்ட் கிளாஸ் சோர்ஸிலேயிருக்கும் தண்ணீர்த் தீர்வையைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாம் போட்டிருக்கின்ற தண்ணீர்த் தீர்வை 10 ரூபாய், 12 ரூபாய், 15 ரூபாய் என்றாலும்கூட, மொத்தத் தீர்வையெல்லாம் சேர்ந்து 100 ரூபாய்க்கு மேல் ஒரு ஏக்கருக்கு வருகிறது, அதற்குமேல் பெட்டர்மெண்ட் லெவி என்று அவர்களுக்கு வரும்பொழுது அவர்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்,

விவசாய வருமான வரி கமிட்டியைப்பற்றி அமைச்சரவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். நானும் அந்தக் கமிட்டியில் இருப்பதால் சொல்கிறேன், அந்த விவசாய வருமான வரியை எந்த அளவிற்கு மிக நேர்மையாகப் போட வேண்டுமென்று விரும்புகிறோமோ அதில் அமைச்சரவர்கள் தீவிரமாகப் பங்கு காட்டுகிறார்கள், அதை நாங்கள் வரவேற்கிறோம். இந்த வரி போடுவதால் வெளியிலேயிருக்கும் விவசாயிகளின் நிலைமை பாதிக்கப்படக்கூடாது. அவர்களுக்கு நல்லமுறையிலே அதை அமைக்க வேண்டுமென்ற திட்டத்தின் அடிப்படையிலே அவர்கள் இயங்குவதை எங்கள் கட்சியின் சார்பாக நான் நிச்சயமாக வரவேற்கிறேன், ஆனால் அந்த வரி போடும் நேரத்தில் விவசாயிகளின் நிலைமைகளைத் தெரிந்து அதற்கு வேண்டிய அளவிற்கு ஆவனவற்றைச் செய்ய வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்,

கிராம அதிகாரிகளைப்பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன், கிராம அதிகாரிகளைப் பொறுத்த அளவில், இன்றைக்கும் அவர்களைப்பற்றி கிராமப் பிரச்னைகளிலே பல்வேறு நிலைமைகளிலே மாறுபாடு இருந்தாலும். இன்றைக்கு அவர்கள் கொடுக்கின்ற கணக்கு இல்லாமல் இருந்தால் இந்த ரெவின்யூ இலாக்காவே நிச்சயமாகச் செயல்பட முடியாது, ஆகவே, அவர்களுக்கு விதித்திருக்கும் அளவில், குறிப்பிட்ட அளவில், 60 வயதுக்கு மேல் உள்ள அதிகாரிகளை நாம் வேலையிலிருந்து நீக்கிவிட்டு. புதிதாக இப்பொழுது அமைக்கத் திட்டமிட்டிருக்கிறோம், இப்பொழுது யாரை நியமிக்க இருக்கிறோமோ அவர்களின் வயது 60 என்று ஆகும்பொழுது வேண்டுமானால் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தலாம். ஏற்கனவே இருந்து கொண்டிருப்பவர்களை 60 வயது ஆனாலும் அவர்களை நீடித்து, அவர்கள் தொடர்ந்து இருப்பதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

[திரு. செ. சதாசிவம்] [1979 ஏப்ரல் 7

அடுத்து, அமராவதி ஆற்றுப் பிரச்னையைப்பற்றி ஒரேயொரு கருத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன், அமராவதி ஆற்றில் தண்ணீர்த் தீர்வையைப் பொறுத்தவரையில், அமராவதி வாய்க்காலை ரீ-மாடல் செய்தபொழுது வாய்க்காலில் வைத்திருக்கும் பம்புசெட்டுகள் மூலம் எடுக்கும் தண்ணீருக்குத்தான் தீர்வை என்ற முடிவு செய்யப்பட்டுள்ளது, அதனால் அந்தத் தீர்வை வாய்க்காலுக்கு மட்டும்தான் பொருந்துமே தவிர, அமராவதி ஆற்றுக்குப் பொருந்தாது. ஆனால் அமராவதி ஆற்றுக்கும் சேர்த்துத் தண்ணீர்த் தீர்வை போட வேண்டுமென்று, சமீபத்தில் ஜீ.ஓ. போட்டு ஆற்றில் உள்ள பம்பு செட்டுகளுக்கும் தண்ணீர்த் தீர்வை போடப்பட்டது. அமைச்சரிடத்திலே நாங்கள் அதற்கு மனுகொடுத்து நிறுத்தி வைத்திருக்கிறோம், இவைகளை நன்றாகக் கவனித்து வாய்க்காலுக்கு மட்டும்தான் செய்ய வேண்டுமே தவிர. அமராவதி ஆற்றுக்கும் சேர்த்துச் செய்யக் கூடாது என்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. வீ. அர்ச்சுனன்: மதிப்பிற்குரிய பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று இந்த வருவாய்த்துறை மானியக் கோரிக்கையின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன், இன்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்து இரண்டாண்டுக் காலத்தில் ஏறக்குறைய நிலமற்ற விவசாயிகளுக்கு 29 ஆயிரம், 30 ஆயிரத்திற்கு மேல் பட்டா வழங்கப்பட்டு அந்த ஏழை எளிய மக்கள் நல்லமுறையில் செயலாற்றி வருகிறார்கள்.

அதைப்போல ஏழை எளிய பாட்டாளிப் பெருங்குடி மக்கள். வீடு இல்லாமல். வசதியில்லாமல் இருக்கின்ற ஏழைக் குடிமக்களுக்கு இன்றையதினம் ஏறக்குறைய 45,000 வீட்டுமனைப் பட்டா ஜாரி செய்து கொடுக்கப்பட்டுள்ளது,

அதைபோல இராணுவ வீரர்களுக்கு—அதாவது, இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களுக்கும். அதைப்போலவே. சென்ற ஆட்சிக் காலத்தைவிட இப்பொழுது ஏறக்குறைய 27,000 அங்க ஊனமுற்றவர்களுக்கு இராணுவ வீரர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளது,

[பிற்பகல் 12-50]

அதேபோன்று, வட ஆற்காடு மாவட்டம், செங்கற்பட்டு மாவட்டம், தர்மபுரி மாவட்டம், மதுரை மாவட்டம் போன்ற பகுதிகளிலே, சில மாவட்டங்களிலே, ஓய்வுபெற்ற இராணுவ வீரர்கள், அங்க ஊனமுற்றவர்கள் சென்ற காலத்திலே எங்களுக்குப் பட்டா வழங்கவில்லை. 40 ஆண்டுக்காலம். 30 ஆண்டுக்

1979 ஏப்ரல் 7] [திரு. வீ. அர்ச்சுனன்]

காலம் விவசாயம் செய்கிறோம். பட்டா வழங்கவில்லை. உங்கள் ஆட்சிக் காலத்திலாவது பட்டா வழங்கவேண்டுமென்று மனு செய்திருக்கிறார்கள், ஆகவே, அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்வது என்னவென்றால், இன்னும். யார், யாருக்கு பட்டா வழங்க வேண்டுமோ அவர்களுக்குப் பட்டா வழங்க உறுதுணையாக இருந்து செயலாற்ற வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்,

ஏழை, எளிய மக்கள் பல பகுதிகளிலே 10 வருடம், 12 வருடம் வீடு கட்டி வாழ்ந்து கொண்டிருந்தும் குறிப்பாக. வட ஆற்காடு. ஆரணி தொகுதியிலே, பிள்ளையார் கோயில் தெரு என்று சொல்லக்கூடிய தெருவிலே 125 வீடுகளில் 15 வருஷங்களாக வாழ்ந்திருந்தும். அவர்களுக்குப் பட்டா வழங்கவில்லை. கொசப்பாளையம். வண்டிமேடு, கவுண்டராயன்மேடு, அதே போல் முனிசிபாலிட்டிக்கு எதிரிலே இருக்கும் ஈ.வே.ரா. பெரியார் நகரில் 250 வீடுகளிலுள்ளோருக்கு பட்டா வழங்கப்படவில்லை. பேரறிஞர் அண்ணா நகரிலே, 250 வீடுகள் கட்டி, ஏறத்தாழ 20 ஆண்டுகாலமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இன்னும் பட்டா வழங்கவில்லை, அதே போன்று பல ஏழை எளிய மக்களுக்கு இன்னும் பட்டா வழங்கப்படவில்லை, அரசானது அதில் தலையிட்டு அவர்களுக்குப் பட்டா வழங்க ஏற்பாடு செய்யுமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்,

அதே நேரத்திலே ஏரி, புறம்போக்குகளிலே 20.25 வருஷம் பயிர் செய்து ஜீவித்துக் கொண்டு, வாய்தா கட்டிக் கொண்டு வருகிறார்கள். ஆனால். அங்கேயும் பட்டா இல்லை என்று சொல்லி, ஆறாம் நெம்பர் நோட்டீஸ் கொடுக்கப்பட்டு, விவசாயப் பொருள் அப்புறப்படுத்தப்பட்டு. ஏழை விவசாய மக்கள் பாதிக்கப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்று அவர்கள் வேதனைப்பட்டுக் கொண்டு கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எங்கே சென்று வாழ முடியும்? 40 ஆண்டுக் காலம், 20 ஆண்டுக்காலம் வாழ்ந்த நிலத்தை விட்டு—கிணறு எடுத்து, பயிர் செய்த நிலத்தை விட்டு வெளியேற்றப்பட்ட நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கும் போதுமான பட்டா வழங்கும் வகையில் நீங்கள் செயல்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்,

கள் இறக்குவோர், மரம் ஏறும் தொழிலாளிகள் இந்த அவசரச் சட்டத்தின்கீழ் பாதிக்கப்பட்ட சூழ்நிலையில் இருக்கிறார்கள், அன்றாடம் கண்ணீர் சிந்திக்கொண்டிருக்கிறார்கள், அவர்கள் இம் மாநிலத்தை விட்டு, வெளி மாநிலம் செல்கின்ற நிலையிலேயிருக்கிறார்கள், அவர்களுக்கு நம் அரசானது எப்படியாவது, புறம்போக்கு மனைகளை, வீட்டு மனைகள், ஜாரி செய்து கொடுத்து, பட்டா வழங்கி, விவசாயம் செய்ய லோன் கொடுத்து. வாழ வழி செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்,

பொற்கொல்லர்கள்—தங்கக் கட்டுப்பாட்டின் காரணத்தால் பொற்கொல்லர்கள் பல லட்சக்கணக்கான பேர், வாழ்க்கையற்று, வாழமுடியாத சூழ்நிலையில் பல தொழில்களுக்கும் சென்றிருக்கிறார்கள், வெளி நகரங்களுக்கும் சென்றிருக்கிறார்கள், அந்த ஏழை எளிய மக்களுக்கு உதவிப்பணம் கொடுத்து, இல்லாவிட்டால் பாங்கு மூலமாகக் கடன் கொடுத்து, வீடு கட்டிக் கொடுத்து. அவர்கள் வாழ இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

பல தொகுதிகளிலே. பல மாவட்டங்களிலே. பல கிராமங்களிலே. மணியக்காரர், கணக்குப்பிள்ளை அட்டூழியம் பயங்கரமாக இருக்கிறது,

ஒருவர் ஒரு சர்டிபிகேட் வாங்கச் சென்றால் 10 ரூபாய் கொடுக்க வேண்டும், 2 ரூபாய் கொடுக்க வேண்டும், 5 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள், மிகச் சுலபமாகக் கேட்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே காலனி மக்களுக்கும் கவுண்டர்களுக்கும் தகராறு ஏற்பட்டு அந்த தகராற்றின் காரணத்தால் அவர்களைச் சர்டிபிகேட் வாங்கிவரச் சொல்லியிருக்கிறார்கள். சர்டிபிகேட் வாங்கச் செல்லும்போது சர்டிபிகேட்டுக்கு 2 ரூபாய் கொடுங்கள் என்று கேட்டிருக்கிறார்கள், அந்த ஏழை அரிசன மக்கள் எங்கே செல்வார்கள். அந்தக் குடியானவர்கள் 2 ரூபாய்க்கு எங்கே செல்வார்கள்? நான் இங்கே சட்டசபையை முடித்துக் கொண்டு நேரிடையாக சென்று விசாரித்த போதும் கூட நான் அப்படி பேசவில்லை நான் அப்படி கேட்கவில்லை என்று சொல்லிவிட்டார்கள், இதையெல்லாம் வன்மையாகக் கண்டித்து அவர்கள் மேல் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கணக்குப்பிள்ளை என்று சொல்கிறார்கள் இந்த கணக்குப் பிள்ளைகளிடத்தில்தான் ஊழல் அதிகமாக இருக்கிறது. கரும்பு மகசூலை கரம்பு என்று எழுதுகிறார்கள் கரம்பை கரும்பு என்று எழுதுகிறார்கள், அவர்களை எல்லாம் தாலுக்காவிட்டு தாலூக்கா மாற்றி அவர்களுக்கும் இப்படி வாங்க வேண்டிய தேவையில்லாமல் வேண்டிய சம்பளம் கொடுத்து நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும், என்று கேட்டுக் கொள்கிறேன், என்னை பேச அழைத்ததற்காக சபைத் தலைவர் அவர்களுக்கும் பெரியோர்களுக்கும் நன்றி தெரிவித்து அமர்கிறேன்,

<u>*திரு. ர. ஜெபமணி</u> : மாண்புமிகு தற்காலிக சபாநாயகர் அவர்களே. வருவாய்த்துறை மானியங்களின்மீது ஜனதா கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்,

1979 ஏப்ரல் 7] [திரு. ர. ஜெபமணி]

நாம் வருவாய்த்துறை என்று சொல்லிக் கொள்கிறோம். விவசாயிகளுக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும்—கடன்கள் வழங்கப்பட வேண்டும் என்று பேசிக் கொள்கிறோம், ஆனால் வாங்கிய கடனையே கொடுக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள், அவர்கள் மீது நிலத்திற்கு வரி, தண்ணீருக்கு வரி, செஸ் வரி, அடிஷனல் செஸ் வரி, என்று பல வரிகள் போட்டு, நிலச் சொந்தக்காரர்கள் எல்லாம் நிலம் வேண்டாம் என்று ஓடிவிடும் அளவிற்கு வரிச் சுமையை அவர்கள் மீது திணித்திருக்கிறோம்,

அத்தோடு நமது வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சேல்ஸ்ப் டாக்ஸில் நிறைய பணம் சேர்த்திருக்கிறோம் என்று சொல்லி பெருமைப்பட்டார்கள், எனக்கும் அந்தப் பெருமை சேரும். இதிலே அதிகமாக வரி வந்திருக்கிறபோது, விவசாயிகளிடத்தில் வேறு வரி வாங்க வேண்டுமா என்று கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

நிலத்தை வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு சலுகைகள் கொடுக்கப்படவேண்டும், ஆனால் அவர்கள் அந்த நிலத்திற்கு ஏன் சொந்தக்காரர்களாகப் பிறந்தோம் என்று பயப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், யாரும் தனியாக சுதந்திரமாக ஒரு ஏக்கர் நிலம் கூட சொந்தம் என்று சொல்ல முடியவில்லை. ஆனால் வரியைக் கட்டாமல் இருக்க முடியவில்லை, இந்த விஷயங்களை எல்லாம் நன்கு பரிசீலிக்க வேண்டும். இங்கே பேசுகிற போது கூட எடுத்துச் சொன்னார்கள் என்று நினைக்கிறேன், நிலச் சொந்தக்காரர்கள் அவர்கள் வேறு ஏதாவது தொழில் செய்து கொண்டிருந்தால் அந்த நிலம் அவர்களுக்கு இருக்கக்கூடாது என்று பேசியிருக்கிறார்கள், நான் உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன், விவசாயிகள் என்றால் முதலில் யார்? கலப்பை எடுத்துக் கொண்டு உழுகிறார்களே அவர்களா, நடுகிறார்களே, தண்ணீர் பாய்ச்சுகிறார்களே, களை எடுத்து அறுவடை செய்கிறார்களே, அவர்களா குத்தகை எடுக்கிறார்களே, அவர்களா? இவர்களில் யார் விவசாயிகள்? இவர்கள் எல்லாம் கூலியாட்கள்—தொழிலாளர்கள் வேலை செய்பவர்கள். அவர்களை விவசாயிகள் என்று சொல்ல முடியாது. உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்று சொல்கிறார்கள், நிலம் அவனுக்கு எப்படிச் சொந்தம்? உழுபவனுக்கு கலப்பைதான் சொந்தம்; அவர்கள்—நடுபவர்கள், களை எடுப்பவர்கள், அறுவடை செய்பவர்கள் எல்லோரும், தொழிலாளர்கள், அவர்களுக்கு வேண்டிய கூலி நிர்ணயிக்கப்பட வேண்டும், அவர்களுக்கு வேண்டிய உதவிகள் கொடுக்கப்பட வேண்டும் என்று இதிலேயே இருக்கிறது, கொடுக்கப்படுகிறது. அடுத்து குத்தகைக்காரர்கள், அவர்களுக்கு வேறு தொழில் கிடையாது, அவர்கள் ஒரு இடைத்தரகர்கள், அவர்களுடைய செல்வாக்கை நன்கு பயன்படுத்திக் கொண்டு குத்தகை என்ற பெயரால் எவ்வளவு நிலம் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம்,

[திரு. ர. ஜெபமணி] [1979 ஏப்ரல் 7

இந்த நிலம் என்பது இல்லாவிட்டால், இந்த நிலம் உணவு அளிக்காவிட்டால் ஒருவரும் உயிர்வாழ முடியாது.. நிச்சயமாகச் சொல்கிறேன் இந்த நிலம் வைத்திருப்பவர்களுக்கு பஞ்சாயத்து ஒன்றியங்களில் போடக்கூடிய வரிகளைத் தவிர வேறு எந்த வரியையும் நிலச் சொந்தக்காரர்களுக்குப் போடக்கூடாது, ஆனால். அந்த நிலச் சொந்தக்காரர்கள் எல்லாம் கிராமங்களில் இருக்கிற மணியக்காரர்களிடத்திலும், கணக்குப்பிள்ளைகளிடத்திலும் கைகட்டிக்கொண்டு இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது, ''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்'' என்று சொன்ன திருவள்ளுவர் இருந்தால் இந்நேரம் தலைகுனிந்திருப்பார் இதைப்பார்த்து. விவசாயிகளான நிலச் சொந்தக்காரர்கள் எல்லா வரிகளையும் கட்டிவிட்டு தங்கள் வயிற்றில் ஈரத்துணியைக் கட்டிக்கொண்டு இருக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது, இந்தக் கிராம அதிகாரிகள் முன்சீப் என்று அழைக்கப்பட்டாலும் சரி, மணியக்காரர், கணக்குப் பிள்ளை என்று சொன்னாலும் சரி, அவர்களை எல்லாம் கிராமத் தலைவர்களாக, கிராம அதிகாரிகளாக மாற்ற வேண்டும்.

(பிற்பகல் 1-00)

அவர்கள் முன்சீபாக இருப்பார்கள், கர்ணமாக இருப்பார்கள். கர்ணத்தை வேண்டுமானால் அக்கௌண்டெண்ட் என்று போடுங்கள். கிளார்க் என்று செய்யுங்கள். எல்.டி.சி. சம்பளம் கொடுங்கள். கிராம முன்சீப்பாக இருப்பவர்கள்—யு.டி.சி. என்று போடுங்கள். அவர்களுக்குக் கீழே வேலை செய்பவர்களை, பியூனாக, 4-ம் தரப் பணியாளர்களாகக் கருதிச் செய்யுங்கள். அந்த ஊர் மக்களுக்கு ஒரு ஆபீஸ் வையுங்கள். அந்த கிராம நல அதிகாரிக்கும் ஆபீஸ் இருக்கும். தற்போது கணக்குப்பிள்ளை வீட்டுக்குப் போவதற்கு மக்கள் பயப்படுகிறார்கள். ஏதாவது தருகிறாயா, இல்லை 20 மடங்கு தீர்வை எழுதி விடுவேன் என்று மிரட்டுகிறார்கள். இதுதான் தற்போது தமிழகத்தில் உள்ள உண்மையான நிலை. அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும்.

நிலச் சொந்தக்காரர்கள் என்று சொன்னால் அவர்கள் 2—3 ஏக்கர் சொந்தமாக நிலம் வைத்துக் கொள்ளவேண்டும். குத்தகைக்காரர்கள் கூலிகளை வைத்துக்கொள்கிறபோது. நிலச்சொந்தக்காரர்கள் வைத்துக் கொள்ளக்கூடாதா ? பெரிய தொழிற்சாலை வைத்து இருப்பவர்கள் பலப்பல லைசென்சு பெற்றுக்கொண்டு, தங்கள் தொழிலை சீலிங் இல்லாமல் பெருக்கிக்கொண்டே போகிறபோது விவசாயிகளை மட்டும் ஏன் இப்படி சீலிங் வைத்து, அந்த நிலத்தில் பட்டா இல்லாதவனுக்கு உரிமை இல்லாதவனுக்கு தருகிறீர்கள். வரி கட்ட வேண்டாம் என்று எல்லோரும் சொ[illegible]றார்கள். இதிலே தீவிர

1979 ஏப்ரல் 7) [திரு. ர. ஜெபமணி]

வாதம் காட்டக்கூடாது. (மணியடிக்கப்பட்டது) ஐயா, 10.15 நாளைக்குப் பிறகு இன்று தான் பேசுகிறேன். மணி அடித்தால் உட்கார்ந்து விடுவேன். சபாநாயகர் அவர்களிடத்தில தலைவரிடத்தில் எனக்கு அவ்வளவு மரியாதை. இந்தப பிரச்னை மீது சுருக்கமாகப் பேசி விடுகிறேன். நிலம் வைதது இருபபது பாவம் என்று கருதக்கூடாது. அவன் உணவை உறபததி செய்து கொடுக்கிறான். அவன் மீது ஏகப்பட்ட வரியைப் போடக்கூடாது, அவன் என்றைக்குமே கடனகாரனாகவேதான் இருக்கிறான். அவன் வரி கொடுக்கவேண்டும் என்ற நம்பிக்கை ஏற்படும் வகையில் நியாயமான முறையில் இருக்கவேண்டும்.

அடுத்ததாக, வருஷாவருஷம் வெள்ளம் வருகிறது. வெள்ள நிவாரணமும் வருகிறது. சென்னையில் 50 கிலோ அரிசி கொடுக்கிறோம், அல்லது 100 ரூபாய் கொடுக்கிறோம். வேஷ்டி, புடவை, லுங்கி கொடுக்கிறோம் என்று சொன்னால், ஒவ்வொரு வருஷமும் இப்படி வெள்ளம் வந்து, அந்த மக்கள் என்றென்றும் பிச்சைக்காரர்களாக இருக்கவேண்டுமா ? எல்லோருக்கும் உயர்வான இடத்தில் வீடுகளைக் கட்டிக் கொடுத்து விட்டால், பள்ளமான பகுதிகளை மேடாக ஆக்கி விட்டால், இந்த வெள்ளத்தால் பாதிக்கப்படும் நிலைமை வராது அல்லவா, நகரமும் அழகாக இருக்கும். அதை விட்டு விட்டு மழை வருஷா வருஷம் பெய்ய வேண்டும், அவர்கள் கார்ப்பரேஷன் பள்ளியில் வந்து தங்க வேண்டும் இப்படி அரசாங்கமும் கொடுக்கவேண்டும் என்று இருந்தால் அரசாங்கப் பணமும் வீணாகிறது, மக்கள் அவதியும் பெருகுகிறது. மத்திய சர்க்கார் இதற்காக 10 கோடி கொடுத்ததாகச் சொல்கிறார்கள். இந்த மாநில சர்க்கார் அதற்காக அதிகமாக நிதி ஒதிக்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதையெல்லாம் செய்வதை விட்டு விட்டு, அந்த வெள்ளத்தால் பாதிக்கப்படுகிற மக்களுக்கு, மேடாக இருக்கிற பகுதியில் வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும். அதேபோல் உங்கள் பகுதியில் தண்ணீர் தேங்கியிருக்கிறதா, அதற்கு சலுகை வழங்க சிபாரிசு செய்யவேண்டுமா 5 ரூபாய் கொண்டு வா என்று லஞ்சம் கேட்பதும் ஒழியும். 5 ரூபாய் கொண்டு வா என்றால் எங்கேயிருந்து கொண்டு வருவது ? (மணியடிக்கப்பட்டது) ஜெய் ஹிந்த்.

* <u>திரு. எச். ஜி. ஆறுமுகம் :</u> மாண்புமிகு பேரவைத் தற்காலிகத் தலைவரவர்களே, நிலவரித் துறைக்கு 4,87,29,000 ரூபாயும், முத்திரைத்தாள்கள்—நிர்வாகத்திற்கு 69,76,000 ரூபாயும், இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்புக்கு 6,86,000 ரூபாயும், இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்பதற்கு 15,59,79,000 ரூபாயும், ஜமீன்தார்களுக்கு இழப்பீடு என்ற

தலைப்பின்கீழ் 8,00,000 ரூபாயும் இந்த அரசு ஒதுக்கியிருப்பதைப் பாராட்டி, என்னுடைய தொகுதி சேர்ந்திருக்கிற தர்மபுரி மாவட்டம் பற்றியும் பர்கூர் தொகுதியைப் பற்றியும், சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு நில வரி, வருவாய்த்துறைமீது பேசுகின்ற போது இங்கே இந்த அரசு பொறுப்பேற்ற பின்னால் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் 15 ஆண்டு காலம் 20 ஆண்டுகாலம் காடு, மேடாகக் கிடந்த பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை இன்றைக்கு பயிர் செய்கின்ற அளவுக்கு மாற்றியிருப்பது மட்டுமல்லாமல் புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபிறகு பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய மக்களுக்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்கள் மூலம் பட்டா வழங்கியிருப்பதை நான் பாராட்டுகிறேன்.

அதே நேரத்தில் தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், வனத்துறையைப் பொறுத்த மட்டில், அங்கே 20, 30 ஆண்டு காலமாக புறம்போக்கு நிலமாக, மேய்ச்சல் காடாகக் கிடந்த நிலங்களை ஏழை எளிய மக்கள் இரண்டு ஏக்கர், 3 ஏக்கர் என்று எடுத்து, மேடாக இருந்த அந்த நிலத்தில் பல்லாண்டு காலம் பாடுபட்டு, இன்றைக்கு விவசாயத்திற்கு ஏற்றநிலமாக மாற்றி, அந்த நிலத்திலே விவசாயம் செய்துவருகிறார்கள். அந்த நிலத்தில் எல்லாம் இன்றைக்கு வனத்துறையினர் செடிகள் வைக்கிறார்கள். தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், நிலம் இல்லாத ஏழை எளிய மக்களுக்கு, இதுவரையில் மேடாக இருந்த நிலத்தை பயிர் செய்வதற்கு ஏற்றபடி மாற்றி, பல்லாண்டு காலமாக அனுபவித்து வருகின்ற அந்த ஏழை எளிய மக்களுக்கு எந்தவிதமான தொந்தரவுகளும் கொடுக்காமல் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பட்டா வழங்குவதில் இன்றைக்கு பல தில்லுமுல்லுகள் நடைபெறுகின்றன. எப்படி என்றால், தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், புரட்சித் தலைவர் அரசு பொறுப்பேற்ற பின்னால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வீட்டுமனைப் பட்டாவாகவும், நிலப்பட்டாவாகவும் வழங்கி வருகிறது. ஆனால் வட்டாட்சித் தலைவருக்குக் கீழே உள்ள அதிகாரிகள் பல நிலங்களுக்கு பட்டாக்களை எழுதி வைத்துக்கொண்டு, ஏழை எளிய விவசாயிகளுக்கு அதை வழங்காமல் இருக்கிறார்கள். அதற்குக் காரணம் தாலூகா ஆபீசில் லஞ்சம் தாண்டவமாடுகிறது. பட்டாவை அந்த ஏழை எளிய மக்களுக்கு கொடுக்க வேண்டுமென்றால் 100 ரூபாய், 200 ரூபாய் வேண்டுமென்று கேட்கிறார்கள். இந்த 100

ரூபாய், 200 ரூபாய்க்கு வழியில்லாத ஏழை விவசாயிகள் ஒன்றும் செய்யமுடியாமல் தவிக்கிறார்கள். கீழ்நிலையில் இருக்கிற அதிகாரிகள் அப்படி நடந்துகொள்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் அதைக் கவனித்து, லஞ்சத்தை ஒழிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பர்கூர் தொகுதியில் மஜீத் கொல்ல அள்ளி, தொகரப்பள்ளி, லாலிபட்டி பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏழை எளிய மக்கள் வனத்துறை நிலத்தில் விவசாயம் செய்து வருகிறார்கள். இன்றைக்கு அந்த நிலத்தில் எல்லாம வனத் துறையினர் செடி வைப்பதற்காக அந்த நிலத்தை உழுகின்ற ஏழை விவசாயிகளை மிரட்டுகிறார்கள். 20 ஆண்டு காலம், 30 ஆண்டு காலமாக அவர்கள் பயிர் செய்து வரும் அந்த நிலத்தை அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டு மென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு அமைச்சரவர்கள் ரெவின்யூ கிராமங்களைப் பிரிப்பதாகச் சொன்னார்கள். அதை நான் பாராட்டுகிறேன். தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில காவேரிபட்டி னத்தை ஒரு தாலூகாவாகப் பிரிப்பது அரசின் பரிசீலனை யில் இருக்கிறது. காவேரிபட்டினத்தை ஒரு தாலூகாவாகப் பிரிப்பதைப்பற்றி எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் பர்கூர் யூனியனை எந்தக் காரணத்தைக் கொண்டும் காவேரிப் பட்டினத்தோடு கண்டிப்பாகச் சேர்க்கக் கூடாது என்று அந்தத் தொகுதி மக்கள் சார்பாகவும் என்னுடைய சார் பாகவும் கேட்டுக்கொள்கிறேன்.

பர்கூர் யூனியன் இப்போது கிருஷ்ணகிரி தாலூகாவோடு இணைந்திருக்கிறது. விவசாயப் பொருட்களை வியாபாரம் செய்வதற்கும் மற்ற எல்லாக் காரியங்களுக்கும் கிருஷ்ண கிரி தான் இன்றைக்கு மையமாக இருக்கிறது. ஆகவே, கிருஷ்ணகிரி வட்டத்தில் பர்கூர் யூனியன் இருக்க வேண்டும்; எந்தக் காரணத்தைக் கொண்டும் பர்கூர் யூனியனை காவேரிப் பட்டினம் தாலுக்காவுடன் சேர்க்கக்கூடாது என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு தர்மபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி டாம் ஒன்றுதான் தஞ்சாவூர் போல் விவசாயி களுக்கு தண்ணீர் பாய்ச்சுகின்ற நிலையில் இருக்கிறது. வேறு எந்த வசதியும் இல்லை. அங்கே இன்றைக்கு ஒரு போகத் திற்கு ஒரு ஏக்கருக்கு 100 ரூபாய், 200 ரூபாய் வரி போடு கிறார்கள். நெல் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொல்லுகின்ற இந்த நேரத்தில், விலைபொருள்களுக்கு

[திரு. எச். ஜி. ஆறுமுகம்] [1979 ஏப்ரல் 7

போதுமான விலையும் கிடைக்காத இந்த நேரத்தில் அவர்களால் 100 ரூபாய், 200 ரூபாய் என்று வரி போட்டால் எப்படி அந்தப் பணத்தைக் கட்ட முடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையால் இந்த 100 ரூபாய், 200 ரூபாய் வரி என்பதை மாற்றி, அதைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

எனக்கு முன்னாலே பேசிய நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. அர்ச்சுனன் அவர்கள் இந்தக் கர்ணம் போன்றவர்களின் கொடுமை தாங்க முடியவில்லை என்று குறிப்பிட்டார். அது அவருடைய தொகுதியில் மாத்திரமல்ல, தமிழகம் முழுவதும் இன்றைக்கும் இந்தக் கர்ணங்களின் கொடுமை தாங்க முடியாத நிலையில்தான் இருக்கிறது. ஏழைகள் அவர்களைச் சந்தித்து ஒரு சர்டிபிகேட் வாங்க வேண்டும் என்றால் கூட 10 ரூபாய், 20 ரூபாய் என்று அவர்களுக்குக் கொடுக்க வேண்டி இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.சி. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னது போல் கர்ணம், முன்சீப் போன்றவர்களை வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டும். மற்ற அரசு ஊழியர்களை வேறிடங்களுக்கு மாற்றுவது போல் இவர்களையும் வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டும். அதற்கு ஆவன செய்ய வேண்டும் இந்த அரசு என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

அடுத்து, தருமபுரி மாவட்டத்திலே இரண்டு கோட்டாட்சி அலுவலகங்கள் இருக்கின்றன. இன்னொரு கோட்டாட்சி அலுவலகம் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்வதாக செய்தி வந்திருக்கிறது. அதே நேரத்திலே கிருஷ்ணகிரிக்கு ஒரு கோட்டாட்சி அலுவலகம் ஏற்படுத்தித் தருவதற்கு இந்த ஆண்டு ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து, நமது அரசு, கோடிக்கணக்கான ரூபாய்களை நாம் ஏரிகளுக்காகச் செலவிட்டு வருகிறோம். ஆனால் அந்த ஏரிப் பகுதிகளில் பலர் ஆக்கிரமிப்பு செய்கிறார்கள். அப்படி ஆக்கிரமிப்பு செய்கிறவர்கள் யாராக இருந்தாலும், அப்படி ஆக்கிரமிப்பு செய்து ஏரிகளிலே விவசாயம் செய்கின்றவர்களைக் காலி செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்

கொள்ள ஆசைப்படுகிறேன். அது மட்டுமல்ல, ஓடை புறம் போக்கு நிலங்களில் விவசாயம் செய்தால் அந்த இடங்களிலிருந்து காலி செய்ய வேண்டும் என்று நான் வேண்டுகோள் விடுத்துக்கொள்கிறேன்....(மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. பி.எச். பாண்டியன் : சீக்கிரம் முடியுங்கள்.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : அடுத்து ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிக் கொள்கிறேன். செக் போஸ்ட் பற்றிச்சொல்ல விரும்புகிறேன். அதாவது ஆந்திரா எல்லையிலே செக்போஸ்ட் போடும்படி கேட்டுக் கொள்கிறேன். ஆந்திராவுக்குப் பக்கத்திலே குருவிநாயனப்பள்ளி என்ற ஊரின் எல்லையை ஒட்டி செக் போஸ்ட் போட வேண்டும். ஆனால் இப்போது செக் போஸ்ட் இந்தப் பக்கம் இருக்கிறது. இதனை நான் மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே அந்த செக் போஸ்ட்டை எல்லையை ஒட்டியே ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு பேச வாய்ப்பளித்த மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த வருவாய்த் துறை மானியத்தின் மீது கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த வருவாய்த் துறை மிக முக்கியமான துறை. இது தான் கிராமப் பகுதிகளிலே அதிகமான காரியங்களைச் செய்ய வேண்டி இருக்கிறது. பல காரியங்களை ஒழுங்காகச் செய்ய வேண்டியது இந்த வருவாய்த் துறைதான்.

இப்போது நாம் தொடர்ந்து போட்டுக் கொண்டு வருகின்ற நிலச் சீர்திருத்தச் சட்டமானாலும் சரி, வாரம் குத்தகை போன்றவை சம்பந்தப்பட்ட சட்டங்களானாலும் சரி இன்னும் கிராமங்களின் நலனுக்காகப் போடப்படுகின்ற எந்தச் சட்டங்களானாலும் சரி இந்தத் துறைதான் அனைத்தையும் சரியாக அமல் படுத்த வேண்டும். அந்த வகையிலே இந்தச் சட்டங்கள் கடந்த காலத்தில் சரியான முறையிலே அமல் நடத்தப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் அது அவ்வளவு திருப்திகரமாக இல்லை. எதிர்பார்த்த பலனை அளிக்க வில்லை என்பதை நன்கு தெரிந்து கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

[திரு. சோ. அழகர்சாமி] [1979 ஏப்ரல் 7

இந்தப் புத்தகத்திலே கூட சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் பல இடங்களிலே குத்தகை சம்பந்தமான சட்டங்கள் சரியாக அமல் நடத்தப்பட வில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. பல இடங்களில் தொடர்ந்து மூன்று தலை முறையாக அனுபவித்துக் கொண்டு வந்த இடங்களில் உள்ளவர்களுக்கெல்லாம் பாதகமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இன்றைக்கு உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால், திருநெல்வேலி மாவட்டத்தில் பத்தயப் பாறை கிராமத்திலே தொடர்ந்து மூன்று தலை முறையினர் விவசாயம் நடத்திக் கொண்டு வந்தனர். அந்த நிலத்திலேயிருந்து நிலச்சுவான்தார் அந்தோணி கோஸ்டா பெர்ண்டோ என்பவர் அங்கிருந்தவர்களை வெளியேற்றி இருக்கிறார். அதோடு மட்டுமல்ல, இன்று அவர்கள் சாகுபடி செய்து கொண்டிருந்த நெல்லைக் கூட அந்த நிலச்சுவான்தார் தன்னுடைய அடியாட்களை வைத்து அறுவடை செய்துவிட்டார். அத்தோடு அங்கே விவசாயம் செய்த விவசாயிகளின் மீது ஒரு வழக்கையும் போடக் கூடிய ஒரு மோசமான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இந்த நிகழ்ச்சியைப் பார்க்கின்றபோது இந்தச் சட்டங்கள் எல்லாம் சரியாக அமல் நடத்தப்படவில்லை என்பது தெரிய வருகிறது.

சாகுபடி யார் செய்கிறார்கள், எப்படி செய்கிறார்கள் என்பது பற்றி எல்லாம் பதவியில் உள்ளவர்களுக்கு எல்லாம் தெரியாது. சாகுபடி செய்வதற்கான உரிமையை வழங்குவதிலே இன்று அந்த வருவாய்த் துறை தவறி இருக்கிறது. இன்னும் தவறிக் கொண்டிருக்கிறது. சரியாக அந்த நிலங்களை விநியோகிக்க வேண்டும் என்றால் அந்தக் கிராமத்தில் உள்ள எல்லாக் கட்சிகளையும் ஒன்று சேர்த்து மக்கள் குழு மூலமாக யார் யாருக்கு நிலம் இருக்கிறது, யார் யார் அந்த நிலத்தை உழுகிறார்கள் என்று பார்த்து அமுல் படுத்த வேண்டிய ஒரு திட்டம் ஒன்றும் இல்லை. அது மாதிரி எடுத்துக் கொண்டால் நெல்லை மாவட்டத்தில், நெல்லை தாலுக்காவில் வேளார்குளம் என்னும் இடத்தில் இனாம் நிலத்தை இன்னொருவருக்கு விற்று விட்டார். அந்த நிலத்தை மூன்று தலை முறையாக அங்குள்ள அரிசன ஏழை மக்கள் வேளாண்மை செய்து வந்தார்கள். அப்படி அந்த நிலத்தை வாங்கிய நில முதலாளி சாகுபடிசெய்யும் ஏழை அரிசன விவசாயிகளை அந்த நிலத்தில் இருந்து வெளியேற்ற அவர்கள் மீது ஹைக்கோர்ட் வரை வழக்கு போட்டு அவர்கள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். சாதாரண நிலம் இல்லாத ஏழை அரிசன விவசாயிகள் எப்படி கோர்ட்டுக்குப் போக முடியும். அந்த நிலங்களையெல்லாம் இனாம்தாரர்களும், நிலச்சுவான்தார்களும் பறிக்கக் கூடிய நிலை இருக்கிறது. அந்த ஏழை விவசாய மக்களுக்கு அந்த நிலங்களையெல்லாம் சொந்தமாக பட்டா வழங்க வேண்டும். அவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதில் இந்த அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய மாவட்டத்தில் அம்பாசமுத்திரம் ஊர்க்காடு ஜமீனிலே, அந்த ஜமீன் வாரிசான கே. ராணி-காந்திமதி நாச்சியார் அவர்களுடைய நிலத்தை உச்சவரம்பு சட்டத்தின் கீழ் எடுத்துக் கொண்டு 14 வருடங்கள் ஆகின்றன. எடுத்துக் கொண்டதாக அறிவித்து 6 ஆண்டுகள் ஆகின்றன. இருந்தாலும் ஒரு வித நடவடிக்கையும் எடுக்க வில்லை. அது மட்டுமல்ல, அந்த அம்மையார் அந்த நிலத்தை, உபரி நிலத்தை வேறு ஒருவருக்கு விற்று விட்டார். அதை வாங்கியவர் அந்த நிலத்தில் சாகுபடி செய்தவர்களை வெளியேற்றி இருக்கிறார்கள். ஆனால் நிலைமை என்ன ? அந்தச் சாகுபடி செய்தவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது. வருவாய் துறை அதிகாரி ஆனாலும் சரி, போலீஸ் அதிகாரி ஆனாலும் சரி, அவர்கள் யாருக்கு உதவிக்குப் போகிறார்கள் ? ஏழை விவசாயிகளுக்கு உதவி கிடையாது. நிலச்சுவான்தார்களுக்குத் தான்துணை போகிறார்கள். ஆகவே, மூன்று தலை முறையாக அங்கே அந்த நிலத்தை அனுபவித்துக் கொண்டு வந்தவர்கள் அந்த நிலத்தில் இருந்து வெளியேற்றக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக 25: 75 என்று வாரத்தை போட்டிருக்கிறீர்கள். எப்படி அந்த நிலத்தை எடுக்கப் போகிறீர்கள். உங்களால் எப்படி தடுத்து நிறுத்த முடியும். போலீஸ் அதிகாரியையோ அல்லது வருவாய்த்துறை அதிகாரியையோ நம்பினால் முடியாது. கேரளாவிலும், மேற்கு வங்கத்திலும் இந்த உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டு வந்த போது மக்கள் கமிட்டியைப் போட்டார்கள். அந்தக் கமிட்டிதான் யார் யார் சொந்த சாகுபடி செய்கிறார்கள், யார் யார் நிலம் வைத்திருக்கிறார்கள், யார் யாருக்குக் கொடுக்கவேண்டும் என்பதைப் பார்த்து உண்மை நிலையைச் சொல்ல முடியும். இந்தப் போலீஸ் அதிகாரிகளாலோ, அல்லது வருவாய்த் துறை அதிகாரிகளாலோ முடியாது. யார் உண்மையிலே சாகுபடி செய்யவில்லையோ அவர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்த நல்ல நோக்கத்தோடு கொண்டு வந்த அந்தச்சட்டத்தை நிறைவேற்றக்கூடிய முறையில், அங்கு அந்த நிலத்தை சாகுபடி செய்பவர்களுக்கே சொந்தமாக்க வேண்டும் என்று சொல்வதை ஒத்துக் கொள்கிறீர்கள். அதை ஒத்துக் கொண்டாலும், நிறைவேற்றுவதிலே நடவடிக்கை சரியாக எடுப்பதில்லை. மக்கள் கமிட்டி ஒன்றை அமைத்து, அதிலே அதிகாரிகளையும் சேர்த்து. அந்த நிலங்களை உண்மையான சாகுபடியாளர்களுக்கே கிடைக்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து மனைப்பட்டா. இது ஒழுங்காகக் கொடுக்கப்படுகின்றதா என்றால் இல்லை. உதாரணமாக, திருச்சியிலே உறையூரிலே நவாப் தோட்டத்திலே இனாம் நிலத்திலே தொடர்ந்து குடியிருந்து வருகிறார்கள். இன்றைக்கு அவர்கள் இந்த இனாம் நிலத்திலேயிருந்து வெளியேற்றப்பார்க்கிறார்கள். நாம் எவ்வளவோ சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறோம்.

இதற்கும் ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வரவேண்டும். இப்போதுள்ள சட்டத்தின் காரணமாக அவர்கள் கோர்ட்டுக்குப் போகிறார்கள். ஆகவே, ஒரு திருத்தம் கொண்டு வந்தால் தான் இதைச் செய்ய முடியும். அப்படி ஒரு திருத்தம் கொண்டு வந்து அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதேமாதிரி புறம்போக்கு நிலம். இப்படிப்பட்ட புறம்போக்கு நிலங்களிலே குடியேறி இருக்கிறார்கள். ரொம்ப நாட்களாக இப்படிப்பட்ட நிலங்களிலே குடியேறி இருக்கிறார்கள். உதாரணமாக, திருமங்கலத்திலே மரவங்குளத்திலே சர்வே நெம்பர் 23/2-லே பெருமாள், தவசி, வீராணம் போன்ற 7 பேர்கள் ரொம்ப நாட்களாக குடியிருக்கிறார்கள். ஆனால், மதுரை நகரத்திலே குடியிருக்கின்ற ஒரு ஏகபோக உரிமையாளருக்கு அவருக்கு வீடு இருக்கிறது, வாடகை வருகிறது, இருந்தும் அவர் பெயரிலே அதிகாரிகள் பட்டாக் கொடுத்திருக்கிறார்கள். அவர் இப்போது அந்தப் பட்டாவைக் காட்டி, அவர்களை வெளியேற்றுகின்றார்கள்.

(பிற்பகல் 1-20.)

அந்த பட்டாவை வாங்கியிருக்கிறவர்கள் ஏற்கனவே இருந்து கொண்டிருப்பவர்களை வெளியேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இப்போது பட்டா வாங்கியிருப்பவர்கள் நிலம் உள்ளவர்களா இல்லாதவர்களா ? எப்படிப்பட்டவர்கள் ?

திரு. சோ. அழகர்சாமி : இங்கேயிருப்பவர்கள் சாதாரண ஜனங்கள். சலவைத் தொழிலாளி, சவரத் தொழிலாளி, இவர்கள் தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த இடத்தை மதுரையிலுள்ள ஒருவர் தான் பட்டா வாங்கியிருக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு வந்து—இவருக்கு மதுரையில் நிலம் இருக்கிறது, சொந்த வீடு எல்லாம் இருக்கிறது—இவர் இந்த இடத்தை பட்டா வாங்கியிருக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு இங்கேயிருக்கிறவர்களை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார். இதைப்பற்றி எத்தனை மனுக்கள் அனுப்பினாலும் அதை எடுத்துக்கொள்வதில்லை. வருவாய்த்துறை இப்படிப்பட்ட சங்கடமான ஒரு நிலைமையை செய்து கொண்டிருக்கிறது.

1979 ஏப்ரல் 7] [திரு. சோ. அழகர்சாமி]

மயிலாடும்பாறை என்ற இடத்தில் பழமுதிர்சோலை—அந்த இடம் சோலையே இல்லை, அதை சோலை என்று சொல்லி நில உச்சவரம்புச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு வாங்கி அந்த இடத்திலுள்ள களம், கிணறு இவைகளை எல்லாம் வேறு ஒருவருக்கு விற்றுவிட்டு, இதை வாங்கியவர் இப்போது, போலீசையும் உதவிக்கு வைத்துக்கொண்டு, அங்கேயிருப்பவர்களை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார். நான் அவரிடமிருந்து விலைக்கு வாங்கியிருக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு, அங்கேயிருக்கின்ற கிணற்றில் தண்ணீர் எடுக்கக் கூடாது, களத்தை உபயோகிக்கக்கூடாது என்றெல்லாம் சொல்லிக்கொண்டு, அங்கேயுள்ளவர்களை அப்புறப்படுத்துகின்ற முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார். வருவாய்த்துறை வாரியத்திற்கும் இந்த காரியம் நன்றாக தெரியும் என்று நினைக்கிறேன்.

நில உச்சவரம்புச் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்கின்ற முறையில், நிலத்தை அபகரித்து வைத்துக்கொண்டு, இப்படிப்பட்ட சில பெரிய மனிதர்கள் சாதாரண மக்களை வெளியேற்றவும், இடைஞ்சலையும் உண்டு பண்ணிக் கொண்டிருப்பதோடு, தானும் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொண்டிருக்கிறார்கள். இதன் பேரில் எல்லாம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டா புத்தகம் கொடுக்கப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. பட்டா புத்தகத்தைப் பார்த்தால், மூன்று பேர்களுக்கு சேர்ந்து 30 ஏக்கர் இருக்கிறது என்று சொன்னால், மூன்று பேர்களுடைய பெயர்களையும் எழுதி, 30 ஏக்கர் என்றும் போட்டு பட்டாப் புத்தகம் கொடுத்துவிடுகிறார்கள். மூன்று பேர்களில் யார் யாருக்கு பத்து ஏக்கர், என்ன சர்வே நம்பர் என்று போடுவதில்லை. இன்னின்ன சர்வே நம்பர் இன்னின்னாருக்கு என்று குறிப்பிட்டுக் கொடுத்தால்தான் லோன் முதலியவை வாங்குவதற்கு பயனுள்ளதாக இருக்கும். பாங்க் பாஸ் புத்தகம் மாதிரி இருக்க வேண்டும். பாங்கில் பணத்தை போடுகிறோம், போடும்போதும், வரவு வைத்துக் கொள்கிறார்கள், எடுக்கும்போது, செலவு எழுதிக் சொள்கிறார்கள். அந்த மாதிரி நிலத்தை விலைக்குக் கொடுத்தாலும், வாங்கினாலும் அவைகள் எல்லாம் இந்த பட்டா புத்தகத்தில் எழுதிக் கொடுக்கவேண்டும். அப்படி இப்போது கொடுக்கப்படுவதில்லை. இதையும் சரியான முறையில் எழுதிக் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போன்றுதான் வீட்டுமனை கொடுக்கிறோம். ஒரு சென்ட் அரை சென்ட் என்றெல்லாம் இருப்பது போதாது. கரெக்டாக மூன்று சென்டுக்கு குறையாமல் என்று இருக்க வேண்டும்.

[திரு. சோ. அழகர்சாமி] [1979 ஏப்ரல் 7

தாலூக்கா ஆபீஸிலிருந்து ஏதாவது பேப்பர் போக வேண்டும் என்றால் தாலூகா ஆபீஸ், ஆர். டி. ஓ. ஆபீஸ், அதற்குப் பின்னால் கலக்டர் ஆபீஸ் இப்படி போக வேண்டியிருக்கிறது. இப்படி நான்கைந்து இடங்கள் எதற்கு இருக்க வேண்டும்? இத்தனையும் கழிந்த பின்னால் ரெவின்யூ போர்டுக்கு வரவேண்டும். சாதாரணமாக ஒரு கண்மாய் வெட்ட வேண்டுமென்றாலும் கூட, அதற்காக ஸி. ஈ. போன்றவர்களை எல்லாம் பார்த்து ரிப்போர்ட் வாங்கின பின்னாலும் முடிவு எடுப்பதற்கு ரெவின்யூ போர்டுக்கு வந்து கவர்ன்மென்டுக்கு வரவேண்டியிருக்கிறது. என்னுடைய எம். எல். ஏ. அனுபவத்திலேயே கடந்த 10, 15 ஆண்டு காலமாக இப்படியேதான் போய்க்கொண்டு இருக்க வேண்டியிருக்கிறது. இதில் சிலவற்றை நீக்கிவிடலாம். தாலூகா ஆபீஸ் கழிந்தவுடன் கலெக்டர் ஆபீஸ் என்று வந்துவிட வேண்டும். எதற்கு ஆர். டி. ஓ. ஆபீஸ் மத்தியில் ஏன் என்று தெரியவில்லை. நிர்வாகச் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்றெல்லாம் சொல்லுகிறோம், ஆகவே தாலூகா ஆபீஸ் என்று கழிந்தவுடன் கலெக்டர் ஆபீஸ் என்று வந்துவிடவேண்டும். இடையில் ஆர். டி. ஓ. ஆபீஸ் என்றிருப்பது தேவையில்லை. இதை அரசு பரிசீலனை செய்து பார்த்து முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நிலச் சீர்திருத்தம் செய்வது, வீட்டு மனை வழங்குவது, பட்டா செய்து கொடுப்பது, இவற்றில் எல்லாம் நன்கு கவனம் செலுத்த வேண்டும். நகர்ப்புற நிலங்களுக்கு உச்சவரம்பு கொண்டு வந்ததின் காரணமாக மிச்சம் கிடைத்த இடங்களை எல்லாம் நிலம் இல்லாதவர்களுக்கு ஓரளவுக்கு கிடைப்பதற்கு வழி செய்து கொடுக்க வேண்டும். குத்தகை சாகுபடி செய்யக்கூடியவர்களை வெளியேற்றிக்கொண்டிருக்கக்கூடிய நிலைமை இருந்து கொண்டேயிருக்கிறது. இப்படிப்பட்ட நேரங்களில் குத்தகை சாகுபடி செய்கின்றவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும். 1979 ஜூலை வரைக்கும் பாக்கியில்லாமல் இருந்தால் வெளியேற்ற வேண்டாம் என்று சொல்லியிருந்தால் என்ன பலன் கிடைக்கும். பழைய பாக்கியில் ஒரு தவணை செலுத்தினாலும் கூட முந்திய பாக்கிகளை எல்லாம் செலுத்தியதாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் சட்டம் கொண்டு வரப்பட்டு, பலர் பாதுகாக்கப் பட்டிருக்கிறார்கள்.

நீங்கள் என்ன செய்தீர்கள்? 1979 ஜூலையில் குத்தகை பாக்கி செலுத்தவில்லை என்றால் வெளியேற்றப்படுவார்கள் என்று சொன்னீர்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே குத்தகை பாக்கியிருந்தால், ரத்து செய்யப்பட்டது. ஆனால், நீங்கள் 1979 ஜூலை வரையில் பாக்கி என்று சொன்னால், அவர்களால் செலுத்த முடியவில்லை என்று சொன்னால் வெளியேற்றப் போகிறீர்களா? அல்லது அந்தக் கடனை ரத்து செய்யப் போகிறீர்களா?

1979 ஏப்ரல் 7] [திரு. சோ. அழகர்சாமி]

இப்போது, 25—75 என்று சட்டம் கொண்டு வருகின்ற நேரத்திலே, அவர்களால் 100, 200 கூட கட்ட முடியாத ஒரு நிலைமையில் ஒவ்வொரு இடத்திலும் இந்த விவசாயிகளுக்கு மேலும் தண்டத் தீர்வை, தண்ணீர் தீர்வை போட்டால், அவர்களால் எப்படிக் கட்ட முடியும்? ஓடையிலே ஓடுகின்ற தண்ணீருக்குக்கூட, ஒரு ஏக்கருக்கு ரூபாய் 40, ரூபாய் 50 என்று தீர்வை போடப்படுகின்றது. எனவே, கிராமப் பகுதிகளிலே இருக்கின்ற ஏழை விவசாயிகளுக்கு உதவி செய்கின்ற வகையிலே ஒரு சட்டத்தைக் கொண்டுவர முடியாவிட்டாலும், ஒரு திருத்தத்தையாவது கொண்டு வந்து அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என் கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. மா. மணிமாறன்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை சம்பந்தமாக நான் சார்ந்திருக்கும் கழகத்தின் சார்பாக இரண்டொரு கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

வருவாய்த் துறையைப் பொறுத்தமட்டில், நிலவரி வருமானத்தை வைத்துக் கொண்டுதான், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இந்த மானியத்தை வைத்திருக்கிறார்கள். இந்த மானியத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்துக் கொண்டிருப்பதற்காக நான் மிகவும் பெருமைப்படுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உண்மையிலேயே விவசாயக் குடும்பத்திலே இருந்து வந்திருக்கிறார்களே தவிர * * அப்படி வந்திருக்கின்ற காரணத்தால், பெரிதும் கவனத்தோடு கேட்டு, அவர்கள் உதவி செய்வார்கள் என்ற நம்பிக்கையில் என் உரையைத் தொடங்குகிறேன்.

விவசாயத்தைப் பொறுத்தமட்டில் 1963-லே நிலத்திற்கு வரி கூடுதலாக்கப்பட்டது.

திரு. துரை கோவிந்தராசன்: பாயின்ட் ஆப் ஆர்டர், பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற போது வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் * * * என்று சொன்னார். அப்படியென்றால் மற்ற அமைச்சர்கள் * * * என்பதுபோல் இந்த அவையிலே நினைக்கின்ற ஒரு நிலைமை ஏற்படுகிறது. அப்படியென்றால் * * என்கிற நிலைமையெல்லாம் வரும். எனவே, மற்ற அமைச்சர்களை இப்படி திசை திருப்பக்கூடிய நிலைமையிலே இருக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : மாண்புமிகு உறுப்பினர் * பற்றிச்சொன்ன அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலே இருந்து நீக்க வேண்டும் என்று உத்தர விடுகிறேன்.

திரு. மா. மணிமாறன் : தலைவர் அவர்களே, 1963 -ல் நிலவரி திருத்தப்பட்ட பிறகு, பிறகு 1976-லே எமர்ஜென்சி காலத்திலே திருத்தப்பட்டது. அப்போது பல அட்டூழியங்கள் அரசு தரப்பில் நடந்தது, அதிகாரிகள் நிலவரியை வசூலிக்க வில்லை. 1976 ஜூலையிலே அந்தத் திருத்தச் சட்டம் அமுலுக்கு வந்தது. அதற்குப் பின்னாலும் இதை வசூலிக்க முடியவில்லை. 1977-லே வசூலிக்கலாம் என்றார்கள். 1977-லே தேர்தல் வரப் போகின்றது என்ற காரணத்தால் அப்போது நிலவரி வசூலிக்காமல் தள்ளி வைக்கப்பட்டது. அதற்குப் பிறகு தேர்தல் நடந்தது, நீங்கள் வந்து விட்டீர்கள். அடுத்த கூடுதல் நிலவரியை மழை, வெள்ளம் ஏற்பட்ட காரணத்தால் 1978-79 ஆம் ஆண்டு வசூலிக்கலாம் என்று நீங்கள் தள்ளி போட்டீர்கள். தயவு செய்து இதையும் மாற்றி விடுங்கள்.

நிலவரி மூலம் ரூபாய் 4.75 கோடி வரவிருக்கிறது. இதிலே, கூடுதல் நிலவரி எதிர்பார்ப்பது 2.35 கோடி. ஆக மொத்தம் 7 கோடி எதிர்பார்க்கப்படுகிறது. நீங்கள் போட்டிருக்கும் பட்ஜெட்டோ 849 கோடி. இந்த ஏழு கோடியை தள்ளுபடிசெய்வதால், என்ன குறை வந்துவிடப் போகிறது. இன்றைக்கு விவசாயிகள் பல்வேறு வகைகளிலே கஷ்டப்படுகிறார்கள். வெள்ளம், புயல் போன்றவற்றால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். உற்பத்தியும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் நிலவரியை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : பேரவையின் அனுமதியோடு இன்னும் சிறிது நேரத்திற்கு இந்தக் கூட்டத்தின் நேரத்தை நீட்டிக்கிறேன்.

(பிற்பகல் 1-30)

திரு. மா. மணிமாறன் : நீங்கள் வேண்டாத நேரத்தில் பூச்சி மருந்தைக் கொடுக்கிறீர்கள். வேண்டாத நேரத்தில் உரத்தைக் கொடுக்கிறீர்கள். இன்றைக்கு உங்களிடம் வைக்கப்படும் கோரிக்கை நிலவரி நீக்கப்பட வேண்டுமென்பது. 1929-ல் ஆங்கிலேயர்களே நீக்கியிருக்கிறார்கள். டாக்டர் கலைஞர் புஞ்சைக்கு வரியை ரத்து செய்திருக்கிறார். அதுபோன்று விவசாயிகளுடைய

1979 ஏப்ரல் 7] [திரு. மா. மணிமாறன்]

நிலங்கள் முழுவதற்கும் நில வரி நீக்கப்பட வேண்டும். இந்த வரியிலிருந்து அரசுக்கு 6-3/4 கோடி ரூபாய்தான் வருகிறது. அந்த ரூபாயை எதிர்பார்க்காதீர்கள். இல்லை என்றால் இன்னொரு அருப்புக்கோட்டையை உருவாக்கி குண்டடி பட்டவர்கள் காதில் ரகசியம் சொல்லும் நிலைமையை முதல்வர் உருவாக்க வேண்டாம்.

அரசு துறையில் பல்வேறு நேரங்களில் உச்சவரம்பின்கீழ் லாண்ட் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அது எடுத்தது தெரியாமல் பல விவசாயிகள் நெல்லை முதலாளிக்கு அளந்து கொண்டிருக்கிறார்கள். நில ஒப்படைப்பிற்குப் பின் முதலாளிகள் செய்கிற தவறால் ஏழை விவசாயிகள் அரசு நிலத்தை எடுத்த ஆண்டிலிருந்து ஒப்படைப்பு செய்த ஆண்டு வரை உள்ள தீர்வையை விவசாயிகள் அளக்க வேண்டி இருப்பதால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். இதுபற்றி அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த ஆண்டில் 1978-79-ல் எடுக்கப்பட்ட நிலம் ஏறத்தாழ 98,000 ஏக்கர் நிலம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே அரிசனங்களுக்கு 21,000 ஏக்கர் நிலமும், பழங்குடியினருக்கு 25,000 ஏக்கர் நிலமும், ஏனைய சமூகத்தினருக்கு 52,000 ஏக்கரும் கொடுத்திருக்கிறார்கள். லாண்ட் கொடுப்பதில் டாக்டர் கலைஞர் காலத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கு நிலம் பெறுவதில் ஆறாவது இடத்தில் இருந்தவர்களை இரண்டாவது இடத்திற்கு மாற்றினார்கள். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் தவிர மற்றவர்களுக்கு 52,000 ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது, இந்த ஆட்சியில். இது நியாயமா? இதற்கு என்ன காரணம்? அதிகாரிகள், கர்ணம் ஆகியவர்களைக் கையில் வைத்துக் கொண்டு பினாமியாக நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு இது கொடுக்கப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கு அந்த நிலத்தைப் பங்கிட்டுக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த வகையில் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடியிருப்பு மனைப் பட்டா பல்வேறு நேரங்களில் அளிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே நிதானமாகச் செல்வதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நிதானமாகச் செல்லும் அதே நேரத்தில் நிறைவாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கூடலூர் பகுதியில் நிலங்களைக் கொடுக்கும்போது சில அரிசனங்களுக்கு கூட புறம்போக்கு நிலத்தை விட்டுக் காலி

பண்ணக்கூடிய நிலைமை ஏற்பட்டது. வருவாய்த் துறையினரும் காவல் துறையினரும் அங்கு சென்று அவர்களைக் காலி செய்த போது அரிசனக் குடும்பங்களை அல்லல்படுத்தும் நிலை ஏற்பட்டது. பெண்களிடத்தில் தகாத முறையிலும் நடந்து கொண்டதால் லூயில் என்பவர் மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்டு தற்கொலை செய்துகொண்டார் இந்த ஆட்சியில்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள். ஐந்து நிமிடத்திற்கு மேல் ஆகிவிட்டது.

திரு. எஸ். வி. இராமசாமி : * *

திரு. மா. மணிமாறன் : ஒன்றே ஒன்றைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். தாழ்த்தப்பட்டவர்களுக்கு சுடுகாட்டுப் பிரச்சினை முக்கியமான பிரச்சினை. அந்தப் பிரச்சினைபற்றி காவல் துறைக்காக முதல்வர் அவர்கள் இல்லாவிட்டாலும், முன்னவர் அல்லது அரிசன நல அமைச்சர் சொல்கிறார்கள். ஆனால் அந்த இரு துறையும் காரணம் அல்ல உங்கள் துறையாகிய வருவாய் அலுவலர்கள் சுடுகாடு கஸ்டமரிரைட் ஜாதி இந்துக்களுக்குத் தான் உண்டு என்று கூறி அரிசனங்களை தடுக்கிறார்கள். அதிலே நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். பதில் உங்களுடைய (மணியடிக்கப்பட்டது.)

திரு. என். கிட்டப்பா : * *

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : மாண்புமிகு உறுப்பினர் திரு எஸ். வி. இராமசாமி பேசியதையும் அதற்குப் பிறகு திரு. கிட்டப்பா அவர்கள் பேசியதையும் நீக்க வேண்டுமென்று ஆணையிடுகிறேன்.

பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 1979-ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 9 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-36 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கலின் ஆணைக் கிண்ங்க ...கறறப்பெற்றது.

1979 ஏப்ரல் 7]

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ.) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

136. 7—9—1971 ஆம் தேதியன்று வருவாய்த் துறையில் வெளியாகி 8—9—1971 ஆம் தேதியிடப்பட்ட தமிழ் நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம் II பிரிவு 1-ல் (ஆங்கிலத்தில்) வெளியான II-1/3987/(ப)1971 ஆம் எண். அறிவிப்பில் திருத்தம் ஒன்று செய்வது குறித்து 15—12—1978 ஆம் தேதியிடப்பெற்ற வருவாய்த் துறையின் 2902 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் மீதான குத்தகை உரிமையை பதிவு செய்தல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1969) 18(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பட்டது).

(ஆ.) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

155. உடுக்குறியிடாத வினா-விடை பட்டியல் (651 முதல் 750 வரை)

கோரிக்கை எண். 1-க்கான வெட்டுத் தீர்மானங்களின் துணைப பட்டியல், 6—4—1979 அன்று உறுப்பினர்களுககு அனுப்பப்பெற்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு I.

187 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 675க்கான விடையைக் காண்க.

பனையேறும் தொழிலில் உயிரிழந்தவர்களுக்கு வழங்கப்படும் ரூபாய் 5,000 நிவாரணத்தொகை பெற்ற குடும்பங்களின் பட்டியல்.

வரிசை எண்ணும் அரசாணை எண்ணும்.	இறந்தவர்/ஊனமடைந்தவர் பெயரும், முகவரியும்.	நிவாரணத்தொகை வழங்கப்பட்டவரின் பெயர்.	இறந்தவருக்கு உறவு முறை.
(1)	(2)	(3)	(4)
1 2221 பொதுத்துறை (சட்டம் ஒழுங்கு), நாள் : 1978-ம் ஆண்டு ஜூன் திங்கள் 7-ம் தேதி.	திரு. கந்தசாமி நாடார், பொத்தனூர் கிராமம், நாமக்கல வட்டம், சேலம் மாவட்டம்.	திருமதி முத்தாயி அம்மாள்.	மனைவி.
2 723 வருவாய்த்துறை, நாள் : 1978-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 27-ம் தேதி.	திரு. சண்முக நாடார், தலைவனூர் கிராமம், தென்காசி வட்டம், திருநெல்வேலி மாவட்டம்.	திருமதி கன்னியம்மாள்.	மனைவி.
3 747 வருவாய்த்துறை, நாள் : 1978-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 4-ம் தேதி.	திரு. பெரிய நாடார், தத்தாத்திரிபுரம் கிராமம், நாமக்கல் வட்டம், சேலம் மாவட்டம்.	திருமதி ராமாயி அம்மாள்.	மனைவி.

4	878 வருவாய்த்துறை, நாள் : 1978-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26-ம் தேதி.	திரு. அய்யாவு நாடார், அக்கர விளை கிராமம், பத்மனாப புரம் வட்டம், கன்னியா குமரி மாவட்டம்.	திருமதி செல்லாச்சி.		மனைவி.
5	952 வருவாய்த்துறை. நாள் : 1978-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 28-ம் தேதி.	திரு. எஸ். ஞானப்பிரகாசம், ஆரல்வாய்மொழி கிராமம், தோவாளை வட்டம், கன்னியாகுமரி மாவட்டம்.	திருமதி மேரி அஞ்சலி.		மனைவி.
6	983 வருவாய்த்துறை, நாள் : 1978-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 7-ம் தேதி.	வேலுசாமி (படுகாயமடைந்து மரணமுற்றவர்), வண்ணிக் கோனேந்தல் கிராமம், சங்கரன் கோவில் வட்டம், திருநெல்வேலி மாவட்டம்.	வேலுசாமி ..	..	..
7	214 வருவாய்த்துறை, நாள் : 1979-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 24-ம் தேதி.	திரு. முத்தையா தேவர், ஆத்துவளி கிராமம், சிவகிரி சார் வட்டம், திருநெல்வேலி மாவட்டம்.	வாரிசுதாரர் ..	..	வாரிசுதாரர்.
8	226 வருவாய்த்துறை, நாள் ; 1979-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 24-ம் தேதி.	திரு. முத்து, வடக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் கிராமம், ஸ்ரீ வில்லிபுத்தூர் வட்டம், ராமநாதபுரம் மாவட்டம்.	வாரிசுதாரர் ..	..	வாரிசுதாரர்.
9	227 வருவாய்த்துறை, நாள் : 1979-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 24-ம் தேதி.	திரு. மாரியபாளைய நாடார், திசயன் விளை கிராமம், நாங்குநேரி வட்டம், திருநெல்வேலி மாவட்டம்.	திருமதி மார்க்ரேட்	..	மனைவி.

இணைப்பு II.

[198 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 691-க்கான விடையைக் காண்க.]

1977-78.

	மாநில அரசு கோரிய தொகை.	மத்திய அரசின் ஒதுக்கீடு.
	(ரூபாய் இலட்சங்களில்.)	
(1) தேசிய நெடுஞ்சாலை—		
(அ) மேம்பாடு வேலைகள்	500.00	470.00
(ஆ) சாலை பராமரிப்பும் செப்பனிடலும்	193.85	163.45
(2) மத்திய சாலை நிதித்திட்ட வேலைகள்	77.22	41.78
மொத்தம் ..	771.07	675.23

1978-79.

	மாநில அரசு கோரிய தொகை.	மத்திய அரசின் ஒதுக்கீடு.
(1) தேசிய நெடுஞ்சாலை—		
(அ) மேம்பாடு வேலைகள்	672.51	480.00
(ஆ) சாலை பராமரிப்பும் செப்பனிடலும்	184.25	128.93
(2) மத்திய சாலை நிதித்திட்ட வேலைகள்	90.01	55.50
மொத்தம் ..	946.77	664.43

இணைப்பு III.

[278 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க].

இயற்கையின் சீற்றங்கள்.

தீ, வெள்ளம் முதவியன போன்ற இயற்கையில் சீற்றங்கள் நேர்கின்றபோது, குடிமக்கள் பலர் பாதிக்கப்படுகின்றனர். நிவாரண உதவி அவர்களுக்கு உடனடியாகத் தேவைப்படுகிறது. தீ விபத்துக்கள், பொதுவாக உள்ளூர்ப் பகுதிகளை மட்டுமே பாதிக்கின்றன. பெரும் புயல்கள் வீசுகையில் பெரும் நிலப் பகுதியில் வாழுகின்ற ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப் படுகின்றனர். அதனால் பல இடையூறுகளும் சேதங்களும் உண்டாகின்றன. வட கிழக்கு பருவக் காற்றினால் இம் மாநிலத் தில் பெருமளவு மழை பெய்கிறது. சில ஆண்டுகளில் இம் மாநிலத்தில் இயல்பான அளவிற்கு மழை பெய்கிறது; பிற ஆண்டுகளில் புயலும் மழையும் தாக்க சொத்து சேதமும் உயிர் சேதமும் ஏற்பட்டு வந்துள்ளது. 1978 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவ மழையின் காரணமாக நவம்பர் முதல் வாரத்தில், நமது மாநிலத்தில் கடுமையான மழை பெய்தது; அதன் விளைவாக வெள்ளம் ஏற்பட்டது; நிலச்சரிவுகள் ஏற்பட்டன. நவம்பர் இறுதி வாரத்தில் கடுமையான சூறாவளிக் காற்று அடித்ததனால் மீண்டும் மழை பெய்தது. டிசம்பர் இறுதி வாரத்தில் கடுமை யான மழை தொடர்ந்து பெய்தது. இம்மாநிலத்தின் பெரும் பகுதிகளில் கடுமையான மழை பெய்ததனாலும், வெள்ளம் ஏற் பட்டதனாலும், பெருமளவில் சொத்து சேதமும் உயிர் இழப் பும் ஏற்பட்டன. இம் மாநிலத்தில், நவம்பர் மாதத்தில் மட் டும் பெய்த கடுமையான மழையினாலும் வீசிய புயல் காற்றி லும் பொது, மற்றும் தனியார் ஆகிய இரு துறைகளில் சுமார் 39·3 கோடி மொத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக மதிப் பிடப்படுகிறது. ஏற்பட்ட சேதங்கள் குறித்து மதிப்பிட்ட பிறகு, அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு இடிந்த வீடுகளைக் கட்டிக் கொடுக்கவும், தேவைப்பட்ட இடங்களிலெல் லாம் வீடிழந்து தவிப்போருக்கு மறு வாழ்வு அளிக்கவும் அரசு முடிவு செய்தது. அரசு இக்காரியத்திற்காக, திட்டம் ஒன் றைத் தயாரித்து, ரூ. 13·14 கோடி செலவிற்கும் அனுமதி வழங்கியது. இந்த இடர்பாடுகளைச் சமாளிக்க இயலும் வகை யில் நிதியுதவி வழங்கக் கோரி இந்திய அரசை, மாநில அரசு கேட்டுக் கொண்டது. நவம்பரில் வீசிய புயலாலும், பெய்த மழையினாலும் ஏற்பட்ட பெருமளவு சேதங்கள் பற்றி கருதிப் பார்த்து, இந்திய அரசு ரூ. 10·11 கோடி திட்ட முன் நிதி யுதவிக்கு அனுமதி வழங்கியது. மாநில அரசு, இந்திய அரசு கொடுத்த நிதியுதவியைக் காட்டிலும் அதிக தொகைக்கு அனுமதி

வழங்கியிருந்தது என்பது தெரியவரும். 1979 ஆம் ஆண்டு மார்ச்சு இறுதிக்குள் இந்த செலவுத் தொகை முழுவதையும் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

2. தீ, வெள்ளம் ஆகியவைப் பொறுத்தவரையில் வழக்கமாக கொடுக்கப்படும் நிதியுதவியானது, பின் வருமாறு இவ்வாண்டில் திருத்தியமைக்கப்பட்டது.

தீ, வெள்ளம் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், குடிசை முழுவதும் சேதமடைந்திருந்தால் 100 ரூபாயும், குடிசையின் ஒரு பகுதி சேதமடைந்திருந்தால் அதற்கு 50 ரூபாயும், வீடுகளை மீண்டும் கட்டுவதற்கு மானியமாகக் கொடுக்கப்படுகிறது. துணிமணிகளுக்காக சேதமடைந்த குடிசையில் உள்ள ஒவ்வொருவருக்கும் ரூ. 25 கொடுக்கப்படுகிறது. இவை தவிர இவ்வாண்டில் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களைப் பொறுத்தவரையில், பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 கிலோ அரிசியும், ஒரு லிட்டர் மண்ணெண்ணையும், ஒரு புடவையும், ஒரு வேட்டியும் இலவசமாகக் கொடுக்க அரசு முடிவு செய்தது. இந்த முறையானது. புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சாதாரணமாக உதவி அளிப்பதற்குப் பின்பற்றப்படும் 1933 ஆம் ஆண்டு நில மேம்பாடு உழவர் கடன்கள் (பொது) விதிகளின்படி, புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டவர்களும், தகுந்த சொத்து அல்லது மற்றொரு நபரின் பிணயத்தின்பேரில் வீடுகளைப் புதுப்பிப்பதற்கான கடன்களைப் பெற தகுதியுடையவர்களாவர். அரிசனங்களுக்கு இந்தக் கடன் வட்டியில்லாமல் வழங்கப்படுகிறது. இவ்வாண்டில், ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படுகிற கடனின் உயரளவு வரம்பானது ரூ. 1,000 என்பதிலிருந்து ரூ. 2,000 ஆக அரசு உயர்த்தியது. மேலே குறிப்பிடப்பட்ட விதிகளுக்குட்பட்டு, வட்ட ஆட்சியரும் தனித் துணை வட்ட ஆட்சியரும் இக்கடன்களை வழக்கமாக வழங்குகின்றனர்.

இதைத் தவிர, பெரும்பான்மையான மக்களுக்கு, உழவர்களுக்கு, மீனவர்களுக்கு, அரசு மற்றும் உள்ளாட்சி மன்றப் பணியாளர்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் பற்றி கருதிப் பார்த்து, அரசு பின்வரும் சிறப்பு நிவாரணப் பணிகளை மேற்கொண்டது:—

(1) நீலகிரி மாவட்டத்தை மட்டும் பொறுத்த வரையில் சேதமடைந்த குடிசைகளுக்கு (அவற்றில் அதன் உரிமையாளர் குடியிருந்தாலும் சரி; இல்லையாயினும் சரி; அதனைப் பொருட்படுத்தாமல்) ஒரு சிறப்பு இனமாகக் கருதி, அதிகரிக்கப்பட்ட ரொக்க மானியம் ரூ. 200 வழங்கப்பட்டது. அதே குடிசையில் அதன் உரிமையாளரும், வாடகைக்கு குடியிருப்போர் ஒரு

1979 ஏப்ரல் 7]

வர் அல்லது பலர் குடியிருந்தால் கொடுக்கப்படும் ரொக்க மானிய மாகிய 200 ரூபாயை உரிமையாளருக்கும் குடியிருப்பவர்களுக் கும் சரிசமமாகப் பகிர்ந்து கொடுக்கப்படும்.

(2) பிற மாவட்டங்களைப் பொறுத்த வரையில், குடிசை ஒன்று முழுவதும் சேதமடைந்திருந்தால் அதன் உரிமையாளருக்கு ரூ. 100 மானியமாகக் கொடுக்கப்பட்டது; ஒரு பகுதி மட்டும் சேதமடைந்த குடிசையின் உரிமையாளருக்கு ரூ. 50 மானிய மாகக் கொடுக்கப்பட்டது. சேதமடைந்த குடிசையில் வாழ் கின்ற உரிமையாளருக்கும் வாடகைக்குக் குடியிருப்பவர்களுக்கும் வெள்ளம் மற்றும் புயல் போன்ற இயற்கையின் சீற்றங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலையான நிதியுதவி முறையிற்கிணங்க, ஒரு புடவை, ஒரு வேட்டி (அல்லது லுங்கி) ஆகியவை கொண்ட உடைகளும், 5 கிலோ அரிசியும் கொடுக்கப்பட்டுள்ளன.

(3) சிறு உழவர்களுக்கு, இலவசமாக விதைகள் கொடுக்கப் பட்டதோடு, உரங்களுக்காக 25 சதவீதம் மானிய உதவியும் வழங்கப்பட்டது.

(4) நைட்ரஜன் உரத்தை சிறு உழவர்களுக்கு வழங்குவதற் காக, அதன் விலையில் 25 சதவீதம் உதவித் தொகையாகவும் எஞ்சிய 75 சதவீதம் கூட்டுறவுக் கடனாகவும் கொடுக்கப்பட் டது.

(5) பயிர்களை மீண்டும் பயிரிடுவதற்கான ஊக்க உதவித் தொகையாக தென்னம்நாற்றுகளை சிறு விவசாயிகளுக்கு இலவசமாகப் பகிர்ந்து கொடுத்தல்; பாதிக்கப்பட்ட வாழைப் பயிர், கரும்புப் பயிர், ஆகியவற்றைப் பொறுத்தவரையில், சேத மடைந்த நிலங்களுக்காகவும் செலவிற்காக, சிறு விவசாயிகளுக் கும் குத்தகைதாரர்களுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 100 மானி யத் தொகை வழங்குதல்; வெற்றிலைக் கொடிக்காலுக்கும் சிறு விவசாயிகளுக்கும் குத்தகைதாரர்களுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 500 மானிய உதவி வழங்குதல்.

(6) உருளைக் கிழங்கு பயிர்களுக்காக, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 250 மற்றும் தனிப்பட்ட விவசாயி ஒருவருக்கு ரூ. 1,000 என்ற உச்சவரம்பிற்கு உட்பட்டு அடுத்த பயிரை பயிர் செய்வதற் காக விதைகளின் செலவில் 25 சதவீதம் உதவித் தொகையை வழங்குதல். காய்கறிச்செடி விதைகள் இலவசமாக வழங் கப்படும்.

(7) ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1000 மற்றும் கிணறு ஒன்றுக்கு ரூ. 1,000 என்ற உச்சவரம்பிற்கு உட்பட்டு, சிறு விவசாயிகளின் நிலங்கள்/கிணறுகளைப் பொறுத்தவரையில், மணல் மேடிட்ட நிலங்களையும், கிணறுகளையும் சீரமைப்பது குறித்த பணி இல வசமாக மேற்கொள்ளப்பட வேண்டும்; ஏனையோரைப் பொறுத்தவரையில், 50 சதவீத உதவித் தொகை வழங்கப்

படும்; தற்போது வழங்கப்படுகிற உதவித் தொகையில், மண் வளப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் ஏற்கனவே அனுபவித்து வருகின்ற சலுகைகள் அடங்குகின்றன. நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், மணல்மேடிட்ட நிலப் பகுதியை சீரமைப்பதற்காக மட்டுமின்றி, வண்டலை மட்டப்படுத்தும் பணிக்காகவும், அமுக்கும் பணிக்காகவும், கற் சுவர்களைக் கட்டும் பணிக்காகவும் உதவித் தொகை வழங்கப்படும்.

(8) நெசவாளர்கள், பணி இல்லங்களாக பயன்படுத்தும் வீடுகள் சேதமடைந்திருந்தால், வீடு ஒன்றுக்கு ரூ. 200 உதவித் தொகையும் ரூ. 300 கடன் தொகையும் கொடுப்பதன் மூலமும், தறிகள், துணைக் கருவிகள் முதலியவை சேதமடைந்திருந்தால் தறி ஒன்றுக்கு ரூ. 125 உதவித் தொகை கொடுப்பதன் மூலமும் அவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படும்.

(9) மீனவர்களுக்கு பின்வருமாறு நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது:—

(1) கட்டு மரங்கள்—

(அ) முழுவதும் சேதமடைந்திருந்தால்.	ஒவ்வொன்றுக்கும் ரூ. 2,000.
(ஆ) ஒருபகுதி சேதமடைந்திருந்தால்.	ஒவ்வொன்றுக்கும் ரூ. 1,000.

(2) நாட்டுப்படகுகள், படகுகள்.—

(அ) முழுவதும் சேதமடைந்திருந்தால்	ஒவ்வொன்றுக்கும் ரூ. 4,000.
(ஆ) ஒரு பகுதி சேதமடைந்திருந்தால்	ஒவ்வொன்றுக்கும் ரூ. 2,000.

(3) நைலான் வலைகள்.—

முழுவதும் சேதமடைந்திருந்தால்	ஒவ்வொன்றுக்கும் ரூ. 3,000.

மேற்சொன்ன நிவாரணம் 50 சதவீதம் உதவித் தொகையாகவும், 50 சதவீதம் கடனாகவும் வழங்கப்படும் கடன் தொகைக்கு வட்டி கிடையாது. அது 30 தவணைகளில் வசூலிக்கப்படும்.

(10) சென்னை மாநகரத்திலும், அதனுடைய எல்லையோரப் பகுதிகளிலும், கடற்கரை மாவட்டங்களிலும் 1978 டிசம்பர் கடைசி வாரத்தில் பெய்த கடுமையான மழையினால் பெரும்பாலான மக்கள் பாதிக்கப்பட்டனர். தினக்கூலிகள்

1979 ஏப்ரல் 7]

நிறைந்த கடற்கரை மாவட்டங்களில், அவர்கள் சாதாரண நிலைமை திரும்பி நிவாரணப் பணி முகாம்களிலிருந்து அவர்களுடைய குடும்பங்களுக்கு திரும்பிய பிறகும்கூட சிறிது காலத்திற்கு அவர்களுக்கு உதவி தேவைப்படுகிறது. எனவே, கீழ்க்கண்ட இனங்களில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் இலவசமாக 50 கிலோ அரிசி வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசு கட்டளையிட்டது :—

(அ) குடிசைகள் முழுவதுமாகவோ அல்லது ஒரு பகுதியோ சேதமடைந்திருந்து அரசிடமிருந்து ரொக்கத் தொகை பெறத் தகுதியுள்ள குடும்பங்கள்.

(ஆ) சென்னை மாநகராட்சியால் அல்லது ஏனைய அரசு அல்லது அரசுச் சார்பில்லாத நிறுவனங்களால் நடத்தப்பெறும் நிவாரணப் பணி முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு இந்த முகாம்களில் உணவு வழங்கப்பட்ட குடும்பங்கள்.

(இ) எந்தக் குடிசைவாசிகள் மழையினாலும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டு, நிவாரண முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்படாமலும் ஆனால் மோசமான பருவநிலையினால் தங்களுடைய தொழிலைத் தொடர முடியாமலுமிருந்து சென்னை மாநகராட்சியாலும் ஏனைய அரசு சார்பில்லாத நிறுவனங்களாலும் அவர்களுடைய வீடுகளில் உணவு வழங்கப்பட்டதோ அத்தகைய குடிசைவாசிகள் அனைவருக்கும்.

(11) கடுமையான மழையினாலும். நிலச்சரிவினாலும் பாதிக்கப்பட்ட நீலகிரி மாவட்டத்தில் உள்ள அரசுப் பணியாளர்களது வீடுகளுக்கு அல்லது ஏனைய சொத்துக்களுக்கு இழப்பு அல்லது பாதிப்பு ஏற்பட்டது. எனவே, அவர்கள் உடனடி நிதியுதவி கேட்டனர். ஆகவே, அரசு 10 மாத சமத் தவணைகளில் வசூலிக்கத்தக்க முன்பணமாக உயர்ந்தளவு 400 ரூபாய் என்பதற்குட்பட்டு ஒரு மாத அடிப்படைச் சம்பளத்தை வட்டியில்லா முன்பணமாக வழங்க அரசு அனுமதியளித்தது. இதைப் போலவே, நீலகிரி மாவட்டத்தில் உள்ள அரசுப் பணியாளர்களுக்கு குளிர்கால ஆடை முன்பணமாக 300 ரூபாய் வழங்கவும் அனுமதிக்கப்பட்டது. இந்த முன்பணம் 20 மாத சம தவணைகளில் வட்டியுடன் வசூலிக்கப்படத்தக்கதாகும். நீலகிரி மாவட்டத்திலுள்ள அரசுப் பணியாளர்கள் மற்றும் நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த ஆனால் வேறு இடத்தில் பணிபுரிகின்ற எந்த அரசுப் பணியாளர்களின் சொத்துக்கள் 1978 நவம்பரில் நீலகிரி மாவட்டத்தில், கடுமையான மழையினாலும் நிலச் சரிவினாலும் மோசமாகப் பாதிக்கப்பட்டனவோ அத்தகைய அரசுப் பணியாளர்கள் ஆகியவர்களைப் பொறுத்தமட்டில் காலக்கெடு முடிவதற்கு முன்பே கூடுதல் அகவிலைப்படியை (ADADA) திருப்பி வழங்க அனுமதிக்கப்பட்டது. மேற்சொன்ன சலுகைகள், நீலகிரி மாவட்டத்திலுள்ள அங்கீகரிக்கப்பட்ட எல்லா தனியார் பள்ளி

[1979 ஏப்ரல் 7

களில் உள்ள (சாதாரண, ஆங்கிலோ இந்தியப்பள்ளி அல்லது ஏனைய வகை சிறப்புப் பள்ளிகள்) ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் அல்லாதவர்களுக்குப் நீட்டிக்கப்பட்டன.

(12) சென்னை மாநகரத்திலும் அதனுடைய எல்லையோரப் பகுதிகளிலும் வசிக்கின்றவர்களும், 1978 டிசம்பர் கடைசி வாரத்தில் கடுமையான மழையின் காரணமாகத் தங்களுடைய சொத்துக்களுக்கு இழப்பு அல்லது பாதிப்பு ஏற்பட்டவர்களுமான அனைத்து அரசுப் பணியாளர்களுக்கும் ஒரு மாத அடிப்படைச் சம்பளம் அல்லது ரூ. 400 இதில் எது குறைவோ அத்தொகையை வட்டியில்லா முன்பணமாக வழங்க அனுமதிக்கப்பட்டது. மேற்சொன்ன முன்பணம் 10 மாத சம தவணைகளில் வசூலிக்கப்படத் தக்கதாகும்.

(13) இராமநாதபுரம் (இராமேஸ்வரம் துணை வட்டம் உட்பட), முதுகுளத்தூர் (கமுதி துணை வட்டம் உட்பட) திருவாடானை ஆகிய 3 வட்டங்களில் 1978 நவம்பரில் புயலாலும் வெள்ளத்தாலும் தங்களுடைய வீடுகளுக்கு அல்லது சொத்துக்களுக்கு இழப்பு அல்லது பாதிப்பு ஏற்பட்ட அரசுப் பணியாளர்கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், உதவி பெறும் பள்ளிகளின் ஆசிரியர்கள், ஆசிரியரல்லாதவர்கள், முழுநேர சில்லறை நிதி ஊதியம் பெறும் பணியாளர்கள் ஆகியவர்களுக்கு கீழ்க்கண்ட சலுகைகள் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டன :—

(அ) 10 மாத சம தவணைகளில் வசூலிக்கப்படத்தக்க உயர்ந்தளவு 400 ரூபாய் என்பதற்குட்பட்டு ஒரு மாத அடிப்படைச் சம்பளத்திற்கு இணையான வட்டியில்லா முன்பணத் தொகை.

(ஆ) முழுநேர சில்லறை நிதி ஊதியம் பெறும் பணியாளர்களைப் பொறுத்தமட்டில் 20 மாத சமத் தவணைகளில் வசூலிக்கத்தக்க, உயர்ந்தளவு 200 ரூபாய் என்பதற்குட்பட்டு ஒரு மாத அடிப்படைச் சம்பளத்திற்கு சமமான வட்டியில்லா முன் பணத்தொகை. இராமநாதபுரம் மாவட்டத்தில் மேற்சொன்ன மூன்று வட்டங்களில் உள்ளவர்களுக்கும், இராமநாதபுரம் மாவட்டத்தில் மேற்சொன்ன மூன்று வட்டங்களில் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாயிருந்து ஆனால் வேறு இடத்தில் பணிபுரிகின்ற எந்த அரசுப் பணியாளர்களது வீடுகள் அல்லது சொத்துக்கள் கடுமையான மழையால் மோசமாகப் பாதிக்கப்பட்டனவோ அந்த அரசுப் பணியாளர்களுக்கு காலக்கெடு முடிவடைவதற்கு முன்பே கூடுதல் அகவிலைப்படியைத் திருப்பிக் கொடுக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

1979 ஏப்ரல் 7]

கீழே குறிப்பிட்டவாறு பல்வேறு பொருத்தமான அதிகாரிகளுக்கு ஒவ்வொரு வகை விபத்துக்கும் ரொக்கமாகவும் துணியாகவும் உதவி வழங்குவது குறித்த செலவை அனுமதிப்பதற்கான அதிகாரத்தை உயர்த்தவும் அரசு முடிவு செய்துள்ளது :

	தற்போதைய உயர்த்தப் பட்ட அளவு.	முன்னர் உள்ள அளவு.
(1)	(2)	(3)
	ரூபாய்.	ரூபாய்
வருவாய் வாரியம்	1,00,000	20,000
மாவட்ட ஆட்சித் தலைவர்கள்	50,000	10,000
வருவாய் கோட்ட அதிகாரிகள்	25,000	5,000
தாசில்தார்களும், தனித் துணைத் தாசில்தார்களும்.	10,000	1,000
சார்புத் துணைத் தாசில்தார்கள், துணை வட்டங்கள் பொறுப்பு.	5,000	500

4. கடற்கரைக்கு நெருங்கியுள்ள, புயலால் பாதிக்கப்படக் கூடிய பகுதிகளில் வாழும் மக்களின் உயிர்களை, புயல்வீசும் காலங்களில் பாதுகாப்பது மிகவும் முக்கியமானதாகும் என்பதை அரசு உணர்ந்துள்ளது. இதைக் கருத்தில் கொண்டு இந்திய செஞ்சிலுவைச் சங்கம் உதவ முன்வந்ததை அரசு பொதுவாக ஏற்றுக்கொண்டு புயல் வீசும்போது ஒவ்வொரு பாதுகாப்பு ஒதுங்கும் இடத்திற்கும் 2·25 இலட்சம் ரூபாய் என்ற வீதத்தில் தமிழ்நாட்டு கடற்கரை நெடுகிலும் உள்ள தெரிந்தெடுத்த 25 இடங்களில் பாதுகாப்பிற்காக ஒதுங்குமிடங்களைக் கட்ட அரசு முடிவு செய்துள்ளது. இச்செலவை, மாநில அரசும் இந்தியச் செஞ்சிலுவைச் சங்கமும் சமமாகப் பகிர்ந்துகொள்ளும், புதுக்கோட்டை மாவட்டத்தில் மிமிசால் என்ற இடத்தில் ஒன்றும், தஞ்சாவூர் மாவட்டத்தில் அக்கரைப்பேட்டை என்ற இடத்தில் ஒன்றுமாக இரண்டு பாதுகாப்பு ஒதுங்குமிடங்கள் ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்டு சென்ற புயலின்போது நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளப்பட்டன. வருகிற வடகிழக்குப் பருவ மழைக்கு முன்னர் எஞ்சிய பாதுகாப்பு ஒதுங்குமிடங்கள் கட்டி முடிக்கப்படும் என்று அரசு எதிர்பார்க்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

நிலமற்ற ஏழை மக்களுக்கு சாகுபடி செய்வதற்காக நிலம் ஒப்படை செய்தல்.

5. அரசின் கொள்கையின்படி, மதிப்பேதும் இல்லாத நிலம், நேரடி சாகுபடியில் ஈடுபடும் நிலமற்ற ஏழைகளுக்கு இலவசமாக ஒப்படை செய்யப்படுகிறது. ஐந்து அல்லது அதற்குக் குறைவான நபர்களைக் கொண்டுள்ள குடும்பத்தையுடைய ஒருவரின் வருவாய் திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 200 அல்லது அதற்குக் குறைவானதாக இருக்கும் போதும், ஐந்துக்கு மேற்பட்ட நபர்களைக் கொண்ட குடும்பத்தையுடைய ஒருவரின் வருவாய் திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 250 அல்லது அதற்குக் குறைவானதாக இருக்கும்போதும் அவர் ஏழை என்று கருதப்படுகிறார்.

கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் ஒருவருக்கு ஒப்படை செய்யக்கூடிய நிலத்தின் பரப்பு, அவர் நிலம் ஏதேனும் வைத்திருப்பின் அந்த நிலத்தின் பரப்பும் சேர்ந்து புன்செய் நிலமாக இருந்தால் 3 ஏக்கர் அல்லது நன்செய் நிலமாக இருந்தால் $1\frac{1}{2}$ ஏக்கராகும். கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலங்கள் மிகவும் மதிப்புள்ளவையாதலால், ஒருவருக்கு ஒப்படை செய்யக்கூடிய நிலத்தின் உயர் அளவு புன்செய் நிலமாக இருப்பின் ஒரு ஏக்கர் என்றும், நன்செய் நிலமாக இருப்பின் அரை ஏக்கர் என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒப்படை செய்யப்பட்ட நாளிலிருந்து 3 ஆண்டு காலத்திற்குள் நிலம் சாகுபடியின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும். இந்நிலம் பத்தாண்டு காலத்திற்கு விற்கப்படவோ அல்லது உடைமை மாற்றம் செய்யப்படவோ கூடாது. இந்நிலம், ஒப்படை பெற்றவரால் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களால் அல்லது கூலி ஆட்களால் சாகுபடி செய்யப்படவேண்டும். வேறு வகையில் சாகுபடி செய்யப்படக்கூடாது. கடன்கள் வாங்குவதற்காக அத்தகைய நிலங்களை அவர்கள் வங்கிகளில் அடமானம் வைக்கலாம்.

6. தஞ்சாவூர் மாவட்டத்தில், வடிகால் நிவாரணப் பணிகளை நிறைவேற்ற இயலச் செய்வதற்காக, திருத்துறைப்பூண்டி வட்டத்தில் உள்ள சில கிராமங்களில், சாகுபடி செய்யும் நோக்கத்துடன் ஒப்படைக்கப்படுவது 1967 ஆம் ஆண்டில் தடைசெய்யப்பட்டிருந்தது. மேற் சொன்ன வட்டத்தில் 8 கிராமங்களில் இந்தத் தடையுத்தரவு நீக்கப்பட்டுள்ளது. இந்த தடையுத்தரவு நீக்கப்பட்டதன் விளைவாக, நிலமில்லாத ஏழைகளுக்கு நிலங்கள் ஒப்படைப்பதற்காக சுமார் 3,000 ஏக்கர் மொத்த பரப்புள்ள நிலங்கள் தற்போது கிடைக்கும்.

7. உண்மையிலேயே நிலமற்ற ஏழைகளின் உபயோகத்திற்காக மாநில அரசுப் பணியாளர்கள், மத்திய அரசுப் பணியாளர்கள், உள்ளாட்சி மன்றம், அரசுக்கு சொந்தமான இணைக்கப்பட்ட

1979 ஏப்ரல் 7]

நிறுவனங்கள் (சட்டப்படி அமையாத, சட்டப்படி அமைந்த) அல்லது ஓரளவு அரசுத் தன்மை வாய்ந்த அமைப்புகள் ஆகியவற்றின் பணியாளர்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும், சாகுபடி செய்யும் நோக்கத்திற்காக அரசு தரிசு நிலங்கள் ஒப்படைக்கப்படுவது குறித்தும் தடையுத்தரவு ஒன்றை அரசு விதித்துள்ளது.

1—4—1978-லிருந்து 31—10—1978 வரை, தகுதியுடைய 29,707 நபர்களுக்கு 29,746·37 எக்கர் பரப்பளவுள்ள நிலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வீட்டுமனை ஒப்படை செய்தல்.

1—4—1978 லிருந்து 31—10—1978 கால அளவில் 30,839 நபர்களுக்கு அரசு நிலங்களைப் பொறுத்த வரையில் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது.

பட்டாப் புத்தகம்.

8. நிலத்தின் உரிமையாளர், தம்முடைய நிலம் பற்றிய விவரங்களை, அதாவது, அளவு, வகைப்பாடுகள், நிலவரி, நிலவரி செலுத்தியது, அரசிடமிருந்து பெற்ற கடன், திருப்பிச் செலுத்தப்பட்டது முதலியவைகளை அறிந்து கொள்ளும் பொருட்டு, பட்டாப் புத்தகத்தை வழங்குவதற்கான ஒரு திட்டத்தை 1972 ஆம் ஆண்டில் அரசு கொண்டு வந்தது. கிராமக் கணக்குகளிலிருந்து குறிப்பெடுத்தல் அல்லது கிராம அலுவலர்கள் வழங்கும் சான்றிதழ்கள் ஆகியவற்றிற்குப் பதிலாக பட்டாப் புத்தகங்கள், ஆவணச் சான்றாக அமையவேண்டும் என்பதும், வேளாண்மை இடுபொருள்கள் வழங்குதல், குடியானவர்களுக்கு உதவி செய்தல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ள பல்வேறு நிறுவனங்களையும், முகவரமைப்புகளையும் இந்த பட்டா புத்தகம் வைத்திருப்பவர்கள் எளிதில் அணுக இயலச் செய்வதும் இத் திட்டத்தின் நோக்கமாகும். கிராம அலுவலர்கள் மூலமாக வருவாய்த் துறையினால் பட்டாப் புத்தகங்கள் விநியோகிக்கப் படுகின்றன. ஒரு பட்டாப் புத்தகத்தின் விலை ரூபாய் 1, சென்னை, நீலகிரி தவிர மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பட்டாப் புத்தகத்தில் தேவையான பதிவுகளை செய்து தாசில்தார்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்டவர்களிடமிருந்து அந்தப் பதிவுகளுக்கு சான்றொப்பம் பெற்று, அந்த பட்டாப் புத்தகத்தை விநியோகிக்க வேண்டியது கிராம அலுவலர்

[1979 ஏப்ரல் 7

களின் கடமையாகும். நிலத்தீர்வைத் தவணைகள் செலுத்தும் போது அதனுடன் பட்டாப் புத்தகத்தின் விலையையும் பட்டா தாரர்களிடமிருந்து வசூலிக்க வேண்டும்.

உழவர்களுக்கு 99,16,135 பட்டாப் புத்தகங்கள் விநியோகிக் கப்பட்டுள்ளன. உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பட்டாப் புத்தகங்களின் மொத்த விலை ரூபாய் 99,16,135 என்று கணக் கிடப்பட்டுள்ளது. இதில், இதுவரை ரூபாய் 91,13,306 வசூ லிக்கப்பட்டுள்ளது. ரூபாய் 8,02,829 வசூலிக்கப்பட வேண்டி யுள்ளது.

தண்ணீர் வரி வீதங்கள்.

9. இம் மாநிலத்தில் உள்ள நிலங்கள் நன்செய், புன்செய் என்ற இரண்டு வகைகளின் கீழ் பொதுவாக வகைப்படுத்தப்பட் டுள்ளன. நன்செய் நிலங்கள், ஒருபோகம் நிலங்கள், இருபோகம் நிலங்கள், தீர்வை இணக்கம் செய்து கொண்ட இருபோக நன்செய் (Compounded double crop wet lands) நிலங்கள் என்று மேலும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. நன்செய், புன்செய் நிலவரிகள் மண்ணின் இயல்பு, வேளாண்மை விளை பொருள் களின் விலைகள், பாசன வாயில்களுக்கு அருகாமையிலிருத்தல் ஆகியவற்றை ஒட்டி, மறு நிலவரி ஏற்பாட்டின்போது வரை யறுக்கப்படுகின்றன. நன்செய் நிலங்களுக்கு வரையறுக்கப்படும் நிலவரியில், தண்ணீர் வரிகளின் ஒரு பகுதி அடங்கும். புன்செய் நிலங்களைப் பொறுத்தவரையில் பாசனத்திற்காக அரசுப்பாசன வாயில்களிலிருந்து தண்ணீர் பெறப்பட்டால், அந்த புன்செய் நிலவரி விதிப்புக்குக் கூடுதலாக "தண்ணீர் வரி (Water Cess) என்னும் தனிப்பட்ட கட்டணம் கூடுதலாக விதித்து வசூலிக்கப் படுகிறது. தண்ணீர் வரிக்கான தர நிலை வீத ஏற்பாட்டின் கீழ்வரையறுத்த ஒரு தண்ணீர் வரி விதிக்கப்படுகிறது. இந்த தண்ணீர் வரி பாசன வாயில்களின் வகைக்கேற்ப மட்டுமே மாறும். பெரிய நடுத்தரப் பாசனத் திட்டங்கள் தொடர்பாகவும் சிறு பாசன சிறப்புத் திட்டப் பணிகள் தொடர்பாகவும் தனித் தண்ணீர் வரி வீதங்கள் செயலில் உள்ளன.

10. சட்டம் 15/78 ஆல் திருத்தப்பட்டபடியுள்ள தமிழ் நாடு 1976 ஆம் ஆண்டு கூடுதல் தீர்வை, கூடுதல் தண்ணீர் வரி (திருத்த) சட்டத்தின்படி (சட்டம் 4/1976), 1—7—1977 ஆம் நாளிலிருந்து, முதல்தர, இரண்டாம்தர, பாசன வாயில்களி லிருந்து அல்லது சட்டத்தின் III ஆவது அல்லது IV-ஆவது விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள யாதொரு திட்டத்தைச் சேர்ந்த யாதொரு வாயிலிலிருந்து பாசனம் பெறும் ஒவ்வொரு

1979 ஏப்ரல் 7]

பயிரைப் பொறுத்த மட்டில் தனித் தீர்வை, தனித் தண்ணீர் வரி விதிக்கப்படவேண்டுமென அரசு முடிவு செய்துள்ளது. தனித் தீர்வை, தனித் தண்ணீர் வரியின் வீதங்கள் பின்வருமாறு:—

பாசன வாயில்கள்.	தனித் தீர்வை. சாதாரணப் பயிர்.	இருபருவப் பயிர்.
(1)	(2)	(3)
III-ம் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள முதல் தர வாயில்கள்.	ரூ. 10 ஆண்டொன்றுக்கு.	ரூ. 15 ஆண்டொன்றுக்கு.
IV-ம் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள இரண்டாம் தர வாயில்கள்.	ரூ. 8 ஆண்டொன்றுக்கு.	ரூ. 12 ஆண்டொன்றுக்கு.
III-ம் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள முதல் தர வாயில்கள்.	ரூ. 10 ஆண்டொன்றுக்கு.	ரூ. 15 ஆண்டொன்றுக்கு.
IV-ம் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள இரண்டாம் தர வாயில்கள்.	ரூ. 8 ஆண்டொன்றுக்கு.	ரூ. 12 ஆண்டொன்றுக்கு.

தண்ணீர் வரி வீதங்களின் அமைப்பு முழுவதையும் சீரமைப்பது குறித்து அரசு பரிசீலனை செய்து, இவற்றை ஆய்வு செய்வதற்கு ஒரு குழுவை 1977 செப்டம்பரில் அமைத்தது. குழுவின் அறிக்கை விரைவில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வணிகப் பயிர் வரி விதிப்பு.

11. இம் மாநிலத்தின் வருவாயைப் பெருக்கும் பொருட்டு தமிழ்நாடு 1976-ஆம் ஆண்டு வணிகப் பயிர்கள் வரிவிதிப்புச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் 1976 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் முதல் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. இச்சட்டத்தின் கீழ் சில வணிகப் பயிர்களின் மீது வணிகப் பயிர் வரி கீழ்க் காணும் வீதங்களில் விதிக்கப்பட்டது:—

(அ) திராட்சை, கரும்பு, வாழை, தென்னை, வெற்றிலை, மஞ்சள் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் ஆண்டொன்றுக்கு, ஏக்கர் ஒன்றுக்கு 20 ரூபாய்.

(ஆ) புகையிலை, மிளகாய், பாசனம் பெறும் பருத்தி, பாசனம் பெறும் வேர்க்கடலை ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் ஆண்டொன்றுக்கு, ஏக்கர் ஒன்றுக்கு 12.50 ரூபாய்.

1386-ஆம் விளைச்சல் ஆண்டில் இம்மாநிலத்தில் பொதுவாக நிலவிய பாதகமான பருவகால நிலமைகளைக் கருத்தில் கொண்டு அந்த ஆண்டில், இம்மாநிலத்தில் எல்லாப் பகுதிகளிலும் 1976 ஆம் ஆண்டு வணிகப் பயிர்கள் வரி விதிப்புச் சட்டத்தின் கீழ் செலுத்த தக்க வணிகப் பயிர்கள் வரியை அரசு தள்ளுபடி செய்துள்ளது. திராட்சை, கரும்பு, வாழை, தென்னை, வெற்றிலை, மஞ்சள் ஆகியவை மீதான வணிகப் பயிர்கள் வரி வீதங்களை 20 ரூபாயிலிருந்து 15 ரூபாயாக அரசு குறைத்துள்ளதோடு, 1387-ஆம் விளைச்சல் ஆண்டிலிருந்து (1—7—1977) புகையிலை, மிளகாய், பாசனம் பெறும் பருத்தி, பாசனம் பெறும் வேர்க்கடலை ஆகியவை மீது வரி விதிப்பதையும் அரசு முற்றிலும் நீக்கியுள்ளது.

நிலச் சீர்திருத்தங்கள்.

நில உச்சவரம்பு :

(12) அவ்வப்போது திருத்தப்பட்டுள்ள தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் கீழ், 5 பேர் அல்லது அதற்குக் குறைவானவர்களைக் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு அனுமதிக்கப்பட்ட மொத்த உச்சவரம்பு நிலம் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர்களாகும். 5 பேருக்கு அதிகமாக உள்ள குடும்பம் ஒன்றிற்கு, மொத்தம் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர்கள் என்ற அளவிற்கு உட்பட்டு, அக் குடும்பத்தில் ஐய்ந்து பேருக்குக் கூடுதலாக உள்ள ஒவ்வொருவருக்கும் 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற சொன்ன மொத்த உச்ச வரம்பு அளவான 30 ஸ்டாண்டர்டு ஏக்கர்கள் என்பதற்கு உட்பட்டு, அக்குடும்பத்திற்கு உச்ச வரம்புக்கு மேற்பட்டு அக்குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொரு பெண்ணும ஸ்ரீதன நிலமாக 10 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலம்வரை வைத்திருக்க அனுமதிக்கப்படுகிறது. (ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பது, பாசனம் பெறும் நல்ல தரமுடைய சாதாரண 0.8 ஏக்கர் நிலம் என்னும் அலகு தொடங்கி பாசனம் பெறாத நல்ல தரமற்ற சாதாரண 4 ஏக்கர் நிலம் என்னும் அலகு வரையில் பலவகைப் பட்டது). இச்சட்டம், குறிப்பிட்ட சில விலக்குகளுக்கும், சலுகைகளுக்கும் வகை செய்கிறது.

1979 ஏப்ரல் 7]

31—1—1979 ஆம் நாளன்று உள்ளவாறு, வேளாண்மை நிலங்கள் உச்ச வரம்புச் சட்டத்தை செயல் படுத்துவதில் ஏற்பட்ட பணி முன்னேற்றம் குறித்த விவரம் பின்வருமாறு;—

		(ஏக்கர்.)
(i) உபரியாக இருப்பதாக அறிவிக்கப்பட்ட நிலங்களின் பரப்பளவு.		98,334
(ii) எடுத்துக் கொள்ளப்பட்ட நிலங்களின் பரப்பளவு.		91,730
(iii) (அ) பிரித்தளிக்கப்பட்ட நிலங்களின் பரப்பளவு.		73,805
(ஆ) தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம் லிமிடெட்டுக்கு அளிக்கப்பட்ட நிலங்களின் பரப்பளவு.		3,9115
	எண்ணிக்கை.	பரப்பளவு.
		(ஏக்கர்.)
(iv) பயனடைந்தோரின் எண்ணிக்கை.	..	..
(அ) அரிசனங்கள் ..	16,738	21,514
(ஆ) பழங்குடியினர் ..	20	9
(இ) ஏனையோர் ..	31,228	52,282
மொத்தம் ..	47,986	73,805

13. மேற்சொன்ன சட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட உபரியான நிலங்களுக்கு வழங்கத் தக்க நஷ்ட ஈட்டுத் தொகை குறிப்பிட்ட ஒரு சில நேர்வுகளில் அந்த நிலங்களுக்கான அங்காடி மதிப்பைக் காட்டிலும் அதிகமாக உள்ளது என்று தெரியவந்தது. நிலச் சொந்தக்காரர்களுக்கு வழங்கப்படும் தொகை, அந்நிலங்களுக்கான மதிப்பாக, அந்நிலங்கள் ஒதுக்க பெற்றவர்களிடமிருந்து வசூலிக்கப்படுவதால், உபரி நிலங்கள் ஒதுக்கப்பெற்றவர்களிடமிருந்து நிலத்தின் மதிப்புக்கான தொகையை வசூல் செய்வது இடர்பாடாக இருந்தது. நிலங்கள் ஒதுக்கப் பெற்றவர்களுக்கு

நிவாரணம் அளிக்கும் பொருட்டு, சிறந்த வகை நிலத்திற்கு வழங்கத்தக்கத் தொகை ஏக்கர் ஒன்றுக்கு 3,500 ரூபாய்க்கு அதிகப்படக்கூடாது என்றும் வன, தரிசு நிலங்களுக்கு வழங்கத் தக்க தொகையைக் கணக்கிடுவதற்கான முறையை வரையறுத்தும், நில உரிமையாளர்களுக்கு வழங்கத் தக்க தொகையைக் கணக்கிடுவதற்கான அடிப்படை, தமிழ்நாடு 1978-ம் ஆண்டு **14**-வது அவசரச் சட்டத்தின் மூலம் மாற்றப்பட்டுள்ளது.

இச்சட்டத்தை, தேசீய வழிமுறை கோட்பாடுகளுக்கு இணங்க கொண்டு வருவதற்கும், இதனைச் செயல்படுத்துவதற்கான நடைமுறையை எளிதாக்குவதற்கும், சீரமைப்பதற்கும், நீதி மன்றங்கள் பிறப்பிக்கும் பாதகமான தீர்ப்புகளிலிருந்து எழும் சட்ட இடர்பாடுகளைக் களைவதற்கும் இயலும் வண்ணம், இச்சட்டத்தை திருத்துவது குறித்து அரசு கருதிப் பார்த்து வருகிறது. 1975 ஆம் ஆண்டு வரையில் இயற்றப்பட்ட நில உச்ச வரம்புச் சட்டங்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 9 ஆவது விவர அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளதோடு. அச்சட்டங்களின் செயல்திறன் குறித்து நீதிமன்றங்களில் வழக்கு தொடருவதிலிருந்தும் பாதுகாப்பும் அளிக்கப்பட்டுள்ளது.

குத்தகை உரிமை.

14. குத்தகை உரிமை சீர்திருத்தங்களின்கீழ், குத்தகைத்தாரர்களை, தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமைகளைப் பதிவு செய்தல்) சட்டத்தின்கீழ் பதிவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 31—1—79 ஆம் நாள் நிலவரப்படி பதிவு செய்யப்பட்ட குத்தகைதாரர்களின் எண்ணிக்கை 4,07,924 ஆகும்; இதில் அடங்கியுள்ள நிலங்களின் பரப்பளவு 6,13,848 ஏக்கர்களாகும்.

15. தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாயமான ஊதியங்கள் சட்டத்தின்கீழ் (தமிழ்நாடு சட்டம் 19/1969) நியாயமான ஊதியங்கள் வரையறுக்கப்பட்டுள்ள பகுதிகளைத் தவிர, ஏனைய பகுதிகளுக்காக, குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின்கீழ் வேளாண்மைத் தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு ஊதியங்கள் 1976-ல் வரையறுக்கப்பட்டன. தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு 19 ஆவது சட்டம் தஞ்சாவூர் மாவட்டத்தில், 7 கிழக்கு வட்டங்களில், அதாவது, மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, மாயூரம், சீர்காழி, நன்னிலம், நாகப்பட்டினம், திருவாரூர், ஆகிய இந்த ஏழு கிழக்கு வட்டங்களில் செயலில் உள்ளது என்பதோடு, பயிரிடுங்காலத்திலும் அறுவடைக்காலத்திலும் வேளாண்மைத் தொழிலாளர்கள் புரியும் பணிக்காக அவர்களுக்கு ஊதியங்கள் வழங்கவும் இச்சட்டம் வகை செய்கிறது. இச்சட்டத்தைச் செயல்படுத்தும்

1979 ஏப்ரல் 7]

பணியாளர்களுக்குத் தருந்தவாறு அதிகாரமளித்து நியாயமான ஊதியங்கள் வழங்குவதற்கான இச்சட்டத்தை மிகவும் கண்டிப்பாகச் செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு 19 ஆவது சட்டத்தைத் திருத்துவது குறித்து, அரசு பரிசீலித்து வருகிறது.

தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு 19 ஆவது சட்டத்தின்கீழ் அளிக்கப்பெறும் நியாயமான ஊதியங்கள், 1974 ஆம் ஆண்டில் பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டது :—

பயிரிடுகாலத்தில் செய்யும் எல்லா வகையான வேலைகளுக்கும்.

ஆடவர்—நாளொன்றுக்கு ரூ. 6·00 அல்லது ரூ. 2·75+6 லிட்டர் நெல்.

மகளிர்—நாளொன்றுக்கு ரூ. 4·00 அல்லது ரூ. 1·50+5 லிட்டர் நெல்.

விளக்கம் :

உழவு மாடுகளையும், கலப்பைகளையும் வேளாண்மைத் தொழிலாளர்கள் கொண்டு வந்தால், வேலை என்பதில், உழுதல் அடங்காது.

அறுவடை செய்வதற்கு, அறுவடை செய்யப்பட்ட ஒவ்வொரு 54 லிட்டர் நெல்லுக்கு 6 லிட்டர் நெல் என்ற வீதம் தொடர்ந்து செயலில் இருந்து வருகிறது.

16. இச்சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ள நியாயமான ஊதியங்களைத் திருத்தியமைப்பது குறித்து ஆய்வு செய்யுமாறு 1978 ஜூலையில் வருவாய்த் துறை வாரிய உறுப்பினர் திரு. இராம் சந்தர், ஐ.ஏ.எஸ். அவர்களைக் கொண்ட "ஒரு நபர் குழு" ஒன்றை அரசு அமைத்தது. தொழிலாளர்களுக்கு ரொக்கமாக வழங்கத்தக்க ஊதியங்களில் 50 காசு உயர்த்த வேண்டும். என்று இக்குழு தனது இடைக்கால பரிவுரையில் குறிப்பிட்டது. அரசு இக்குழுவின் பரிவுரையை ஏற்றுக்கொண்டு, 16—8—1978-லிருந்து ஊதிய வீதங்களை அதிகரித்து ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. 'ஒரு நபர் குழு' இறுதியாக பின்வரும் பரிவுரைகளை அளித்தது.

[1979 ஏப்ரல் 7

வயது வந்தோர்.

உழுதல், விதைத்தல், நாற்றுப் பறித்தல், நிலங்கள் வாய்க்கால்களுக்கு வரப்பு கட்டுதல், வரப்பு வெட்டுதல், அவற்றைப் பராமரித்தல், விதைப்பதற்கு நிலத்தைத் தயார் செய்யல், நாற்று நடுதல், இடுபொருட்கள், விளை பொருட்கள் ஆகியவற்றைச் சுமந்து செல்லுதல்—

நாளொன்றுக்கு 7 லிட்டர் நெல்+ரூ. 2·80.

அல்லது

ஜூன் 1 ஆம் தேதிக்கும், செப்டம்பர் 30-ம் தேதிக்கும் இடைப்பட்ட கால அளவில் நாளொன்றுக்கு ரூ. 7·20; அக்டோபர் முதல் தேதிக்கும், மே 31 ஆம் தேதிக்கும் இடைப்பட்ட கால அளவில் நாளொன்றுக்கு ரூ. 6·60

நாற்று நடுதல், களையெடுத்தல் அல்லது ஊதிய வீதங்கள் குறிப்பிடப்படாத ஏனைய வேளாண்மைப் பணிகளில் ஈடுபட்டுள்ளோருக்கு—

நாளொன்றுக்கு 6 லிட்டர் நெல்+ரூ. 1·80.

அல்லது.

ஜூன் 1 ஆம் தேதியிலிருந்து செப்டம்பர் 30 ஆம் தேதி வரையிலுள்ள கால அளவில் நாளொன்றுக்கு ரூ. 5·60 : அக்டோபர் 1 ஆம் தேதியிலிருந்து மே 31 ஆம் தேதி கால அளவில் நாளொன்றுக்கு ரூ. 5 00.

உரிய வயது வராதோர்.

வேளாண்மைப் பணிகள் அனைத்திற்கும்—

4 லிட்டர் நெல்+ரூ. 1·50.

அல்லது.

ஜூன் 1 ஆம் தேதிக்கும், செப்டம்பர் 30 ஆம் தேதிக்கும் இடைப்பட்ட கால அளவில் நாளொன்றுக்கு ரூ. 4·50 ; அக்டோபர் 1 ஆம் தேதிக்கும், மே 31 ஆம் தேதிக்கும் இடைப்பட்ட கால அளவில் நாளொன்றுக்கு ரூ. 3·60 ; உழுதல் என்பதில் உழவு மாடுகளையும், கலப்பைகளையும் வேளாண்மை தொழிலாளர்கள் கொண்டுவர வேண்டும் என்பது அடங்காது ; உழுதலைத் தவிர ஏனைய வேளாண்மைப் பணிகளுக்கான பணி நேரம்

1979 ஏப்ரல் 7]

நாளொன்றுக்கு 7 மணி நேரமாகும். உழுதலுக்கான பணி நேரம் நாளொன்றுக்கு 5 மணி நேரமாகும். இரவு நேரங்களில் பணி புரியுமாறு அமர்த்தப்படுவோருக்கு அவர்களது ஊதியத்தோடு, அவர்களது ஊதியத்தில் 50 சதவீத அளவைக் கூடுதலாக வழங்க வேண்டும்.

அறுவடை செய்யும் பணிக்கு, தற்போதுள்ள அறுவடை செய்யப்பட்ட ஒவ்வொரு 54 லிட்டர் நெல்லுக்கும் 6 லிட்டர் நெல்லைக் கூலியாக வழங்குவது என்ற தற்போதுள்ள முறை தொடர்ந்து இருக்கலாம. ஒரே பணிக்கு அல்லது ஒரே தன்மை கொண்ட பணிக்கு, ஆடவர், மகளிர் ஆகிய இருபாலாருக்கும் சமமான ஊதியங்களை வழங்க திருத்த ஊதிய அமைப்பு வகை செய்கிறது.

மேற்சொன்ன பரிந்துரைகளை அரசு ஏற்றுக் கொண்டு, அவை 24—2—1979-லிருந்து, அவ்வாறே செயலுக்கு வருமாறு ஆணை பிறப்பித்தது.

17. தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களின் பாதி அளவை நிலச் சொந்தக்காரர் தன் சொந்த சாகுபடிக்குத் திரும்பப் பெற்றுக்கொள்ள வகை செய்யும் 4A-வது பிரிவை நீக்குவதற்காக, அச்சட்டம் 1976-ல் திருத்தப்பட்டது. இதனால் பயிரிடும் குத்தகைதாரர்களுக்கு குத்தகையின் நிரந்தரத்தன்மை கிடைக்க உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இந்த பயிரிடு குத்தகைதாரர்களை, குத்தகைத் தொகை செலுத்தத் தவறினாலும், நிலத்திற்கோ அல்லது அதில் உள்ள பயிர்களுக்கோ கேடு விளைவிக்கக்கூடிய அல்லது பாதகம் விளைவிக்கக்கூடிய கவனமின்மைக்காகவும், நிலத்தைப் பயிரிடாமல் விட்டுவிடுவதற்காகவும், நிலத்தை வேளாண்மை அல்லது தோட்டப்பயிர் தவிர பிற காரியங்களுக்குப் பயன்படுத்தினாலும், நிலத்தின் சொந்தக்காரர்களுக்கு உள்ள நில உரிமையை வேண்டுமென்றே மறுத்தாலும், மட்டுமே அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்ற முடியும்.

18. 1976 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் தேதியுடன் முடிவடையும் பசலி ஆண்டுக்கும் (1385 ஆம் பசலி ஆண்டு) அதற்கு முந்திய யாதொரு பசலி ஆண்டுக்கும் நிலச் சொந்தக்காரர்களுக்குச் செலுத்த வேண்டிய குத்தகை பாக்கிக்காக, பயிரிடும் குத்தகைதாரர்கள் வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாப்பு அளிப்பதற்குத் தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாப்பு) சட்டம் (குடியரசுத் தலைவர் சட்டம் 36/1976) வகை செய்கிறது. குவிந்துள்ள நிலுவை குத்தகைத் தொகைகள் தொடர்பாக பயிரிடு குத்தகைதாரர்களுக்கு நிலையான குத்தகை நிவாரணம் அளிக்க அரசின் பரிசீலனையில் உள்ள நடவடிக்கைகள் முடிவுறாத நிலையில், 15—7—1979 வரையில் இப்பாதுகாப்பு நீட்டிக்கப்பட்டுள்ளது.

[1979 ஏப்ரல் 7

19. வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் 1978 ஆம் ஆண்டு ஜூன் 13 ஆம் தேதியுடன் முடிவடைகிற பசலி ஆண்டுக்கான (பசலி 3087) குத்தகைத் தொகையை அல்லது முந்திய பசலி ஆண்டுகளுக்கான நிலுவைகளைச் செலுத்தாத காரணத்திற்காக அவர்களை நிலங்களிலிருந்து வெளியேற்றம் செய்வதற்கும், அவர்களிடம் குத்தகைத் தொகையை வசூலிப்பதற்கும் எடுக்கப்படும் நடவடிக்கைகளிலிருந்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக, கடந்த ஆண்டில் 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரணம்) சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்ட திருத்தத்தின் மூலம், இப்பாதுகாப்பு காலம் 15—7—1979 வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளது.

20. தற்போதுள்ள தமிழ்நாடு 1956 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்களின் (நியாயவாரம் செலுத்துதல்) சட்டத்தின் விதித்துறைகளின் கீழும், தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலம் நிர்வாகத்தை முறைப் படுத்துதல்) சட்டத்தின் விதித் துறைகளின்கீழும், நிலச் சொந்தக்காரர்களுக்குப் பயிரிடும் குத்தகைதாரர்கள் செலுத்தத்தக்க நியாயவாரம், இயல்பான மொத்த விளைபொருளில், நன்செய் நிலம் அல்லாத நிலத்திற்கு 33 1/3 சதவீதம் என்பதிலிருந்து நன்செய் நிலத்திற்கு 40 சதவீதம் என்பது வரை பல்வேறு வகையாக வரையறுக்கப்பட்டுள்ளது. குத்தகைதாரர்களிடமிருந்து நிலச் சொந்தக்காரர்களுக்கு சேரவேண்டிய நியாயவாரம் மொத்த விளைபொருளில் 25 சதவீதத்துக்கு மேற்படாமல் இருக்குமாறு வரையறுக்கப்படவேண்டுமென்பது தேசியக் கொள்கையாகும். செலுத்தத்தக்க நியாயவாரம், மொத்த விளை பொருளில் 25 சதவீதம் என்றிருக்குமாறு அதனைக் குறைக்க முடிவு செய்யப் பட்டுள்ளது. கரும்பைப் பொறுத்தவரை இயல்பான விளைச்சலில் 25 சதவீதம் என நியாயவாரத்தை வரையறுக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

குடியிருப்பு.

21. தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்கல்) சட்டம், 1971 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19 ஆம் தேதிப்படி குடியிருப்பு ஒன்றில் உழவுத் தொழிலாளர்கள் குடியிருப்புதாரர்களாகவோ, உரிமைதாரர்களாகவோ இருப்பின், அவற்றிற்கு சொந்தம் கொண்டாட உரிமை வழங்குகிறது. இச் சட்டத்தின்கீழ், இதுவரை 1,76,263 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் அரிசனங்களுக்கு வழங்கிய 96,543 பட்டாக்களும் பின்தங்கிய வகுப்பினருக்கு வழங்கிய 48,568 பட்டாக்களும், ஏனையோருக்கு வழங்கிய 31,152 பட்டாக்களும் அடங்கும். இம் மாநிலத்திலுள்ள மலைத்தோட்டங்களில் 1971 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19 ஆம் தேதிப்படி குடியிருப்புதாரர்களாகவோ குடி-

1979 ஏப்ரல் 7]

யிருப்பிலிருந்து மலைத் தோட்ட உழவர்கள் அல்லாத பிற உழவர்களும் மலைத் தோட்ட உழவுத் தொழிலாளர் அல்லாத பிற உழவுத் தொழிலாளர்களும் பயன்பெறும் வகையில் 1977 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19 ஆம் தேதி முதல் இச் சட்டம் இம்மாநிலத்திலுள்ள மலைத் தோட்டப் பகுதிகளுக்கு நீட்டிக்கப் பட்டது. இச்சட்டம் தற்போது, சென்னை மாநகர் நீங்கலாக வும், தஞ்சாவூர், நீலகிரி மாவட்டங்கள் தவிர இதர மாவட்டங் களிலுள்ள நகராட்சிகள், நகரியங்கள் நீங்கலாகவும், இம்மாநிலம் முழுவதற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இது மலைத் தோட்டங் களுக்கும் மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் பொருந் தாது.

22. தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோக தாரர்கள் (உடைமை உரிமை வழங்கல்) சட்டத்தை மாதிரியாகக் கொண்டு, அதே முறையில் இயற்றப்பட்ட, தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு கிராமக் கைவினைஞர்கள் (குடியிருப்பு உடைமை உரிமை வழங்கல்) சட்டம், கிராமக் கைவினைஞர்களுக்கு, 1975 ஆம் ஆண்டு ஜூலை முதல் தேதியில் குடியிருப்புதாரர்களாகவோ, உரிமைதாரர்களாகவோ அவர்கள் அனுபோகத்தில் இருந்த குடி யிருப்புகளின் உரிமையை வழங்குகிறது. இந்தச் சட்டம் சென்னை, மதுரை மாநகர்கள் நீங்கலாகவும், நகராட்சி அல்லது நகரியம் ஒன்றில் உள்ள பகுதிகள் நீங்கலாகவும் இம் மாநிலம் முழுவதற்கும் பொருந்தும். இச் சட்டத்தின் பயனாக சுமார் 1,088 கிராமக் கைவினைஞர்கள் பயனடைவார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது.

இடையாட்களை ஒழித்தல்.

23. இடையாட்களை ஒழிக்கும் பணி குறித்த முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

(அ) தமிழ்நாடு 1948 ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்து வாரியாக மாற்றுதல்) சட்டம்

	எஸ்டேட்டு களின் மொத்த எண்ணிக்கை.	பரப்பளவு சதுர கிலோ மீட்டரில்.
1. எடுத்துக்கொள்ளப்பட்ட எஸ் டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை.	5,134	29,931·21
2. 1978 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி வரை நிலவரி ஏற்பாடு செய்யப்பட்ட பகுதி.	5,134	29,931·21
3. எஞ்சியவை	..	..

[1979 ஏப்ரல் 7

(ஆ) தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம்.

	எஸ்டேட்டு களின் மொத்த எண்ணிக்கை.	பரப்பளவ சதுர கிலோ மீட்டரில்.
1. எடுத்துக்கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை.	2,091	4,149·26
2. 1978 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதிவரை நிலவரி ஏற்பாடு செய்யப்பட்ட பகுதி.	2,046	3,429·83
3. எஞ்சியவை	45	719·43

(இ) தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு சிறு இனாம்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம்.

1. எடுத்துக்கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை.	13,562	4,048·04
2. 1978 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி வரை நிலவரி ஏற்பாடு செய்யப்பட்ட பகுதி.	13,558	4,044·42
3. எஞ்சியவை	4	3·62

(ஈ) தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு குத்தகை கிராமங்கள் (ஒழிப்பு—ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம்.

1. எடுத்துக்கொள்ளப்பட்ட பகுதி.	13	83·20
2. நிலவரி ஏற்பாடு செய்யப்பட்ட பகுதி.	13	83·20
3. எஞ்சியவை	இல்லை.	இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1979 ஏப்ரல் 7]

மேலே குறிப்பிடப்பட்டுள்ள, தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் விதித்துறைகளின் கீழ், ரயத்துவாரி நிலவரி ஏற்பாட்டின கீழ்க்கொண்டுவரப்பட வேண்டிய எஞ்சியுள்ள 45 இனாம் எஸ்டேட்டுகளில், 40 இனாம் எஸ்டேட்டுகளுக்கு, உயர்நீதிமன்றம், பிற சிவில் நீதிமன்றங்களின் தடை ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. நீதிமன்றங்களால் இந்தத் தடை ஆணைகள் நீக்கப்பட்ட பிறகே இந்த எஸ்டேட்டுகளில் நிலவரி ஏற்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள இயலும்.

கல்ராயன் ஜாகீர் இனாம்கள்.

24. எஞ்சியுள்ள 5 இனாம் எஸ்டேட்டுகள், அதாவது 671.73 சதுர கிலோ மீட்டர்கள் மொத்த பரப்பளவுள்ள 140 கிராமங்களைக்கொண்ட கல்ராயன் ஜாகீர் இனாம் எஸ்டேட்டுகள்; அவையாவன :—

தென் ஆற்காடு மாவட்டத்தில் (1) ஆரியக் கவுண்டன் ஜாகீர், (2) குறும்பக் கவுண்டன் ஜாகீர், (3) ஐடையக் கவுண்டன் ஜாகீர்; சேலம் மாவட்டத்தில் (1) பெரிய கல்ராயன மேல் நாடு, (2) பெரிய கல்ராயன் கீழ்நாடு. ஜாகீர்தார்சள் தாங்கள் தொடுத்த வழக்குகளை 1976 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு திங்களில் திரும்பப் பெற்றதால், மேற்சொன்ன ஜாகீர் கிராமங்களை தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் கீழ், இனாம் எஸ்டேட்டுகள் என அறிவித்து அவற்றை அரசு எடுத்துக்கொண்டது.

தனி நில அளவைப் பிரிவால், இந்த ஜாகீர் கிராமங்களில் நில அளவைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 31—12—1978 ஆம் நாளன்று முடிக்கப்பட்டுள்ளன.

சேலம் மாவட்டத்தில், ஆத்தூர் இனாம் எஸ்டேட்டில் ஜாகீர் கிராமங்களைப் பொறுத்தமட்டில், சரியான கணக்குகள் 30—12—1978 ஆம் நாளன்று வருவாய்த்துறையிடம் ஒப்படைக்கப்பட்டன. கள்ளக்குறிச்சி வட்டம், ஜாகீர் கிராமங்களில் நிலவரி ஏற்பாட்டுப் பணி, 30—6—1979-க்குள் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[1979 ஏப்ரல் 7

ரயத்துவாரி பட்டா அளிக்கப்பட்டு பயன் அடைந்தவர்கள்.

25. பல்வேறு இனாம் ஒழிப்புச் சட்டங்களின் விதித்துறைகளின் கீழ், ரயத்துவாரி பட்டாக்கள் வழங்கப்பெற்ற நபர்களின் எண்ணிக்கையும், அனுமதிக்கப்பட்ட பட்டாவின் பரப்பளவும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

சட்டத்தின் பெயர்.	பயனடைந்தோரின் எண்ணிக்கை.	பட்டா அனுமதிக்கப்பட்ட நிலத்தின் பரப்பளவு. (ஹெக்டேரில்).
(1)	(2)	(3)
தமிழ்நாடு 1948 ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 26/1948].	23,33,798	18,17,105–00–00
தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம்.	3,45,255	1,79,976–33–50
தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு குத்தகை கிராமங்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம்.	6,003	5,605–91–50
தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு சிறு இனாம்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 30/1963).	5,10,820	3,22,625–00–00
1969 ஆம் ஆண்டு கூடலூர் ஜன்மம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/1969).	6,214	3,131–00–00
மொத்தம் ..	32,02,090	23,28,443–25–00

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 ஏப்ரல் 7]

எஸ்டேட்டுகள் ஒழிப்பு சட்டத்தின் செயல் வரம்புக்குப் புறம்பாக பட்டா வழங்குதல் :—

26. தமிழ்நாடு 1948 ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் செயலுக்கு வந்து, பட்டா வழங்குவதை எளிதாக்க நிர்வாக ஆணைகள் பிறப்பிக்கப்பட்ட பிறகும் கூட, ஏராளமானவர்கள் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளில் பல ஆண்டு களாக நிலங்களைத் தமது சுவாதீனத்தில் வைத்துக்கொண்டு அனுபவித்து வருகிறார்கள் என்றும், மேற்சொன்ன சட்டத்தின் கீழ் பட்டா வழங்குவதற்கான தகுதியுள்ள இனத்தின்கீழ் அல்லது அரசு வழங்கிய ஆணையின்கீழ் அவர்கள் வராததால் அவர்களுக்கு பட்டா வழங்கப்படவில்லை என்றும் கண்டறியப்பட்டது. ஆகவே, அறிக்கையிடப்பட்ட நாளன்றும், அதற்கு முன்பும், நிலத்தைத் தொடர்ச்சியாக அனுபோகத்தில் வைத்து வரு வோர்க்கு பட்டாக்கள் வழங்குமாறு, 1971-ல் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இனாம் ஒழிப்பு சட்டங்களின் செயல் வரம்பிற்குப் புறம்பாகப் பட்டா வழங்குமாறு மனுச் செய்து கொள்ள இயலும் வகையில், அதற்கான காலவரம்பை அரசு அவ்வப்போது நீட்டித்துள்ளது. அத்தகைய நீட்டிப்பு கடைசி யாக 30—6—1975 ஆம் நாள் வரை கொடுக்கப்பட்டது.

இந்நாள்வரை, 10,508 பேர்கள் வரை பயனடைந்து உள்ள னர். பட்டா நிலமாக இதுவரை வழங்கப்பட்ட மொத்த பரப்பு 9,895 —58— 00 ஹெக்டேர்கள்.

நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த கூடலூர் வட்டத்திலுள்ள ஜென்மம் எஸ்டேட்டுகள் ஒழிப்பு :—

27. நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்தில் பெருமளவில் நிலங்களை வைத்து வருகின்ற ஜென்மிகள் சாகுபடி செய்யும் உரிமையுடன் குத்தகைக்காரர்களை அங்கிருக்க அனுமதித்தனர். 1929 ஆம் ஆண்டு மலபார் குத்தகைச் சட்டத்தின்கீழ் அந்த குத்தகை உரிமை அங்கீகரிக்கப்பட்டது. குத்தகைக்காரர் களுக்கு சாகுபடி செய்து கொள்வதற்குரிய உரிமைகள் நிரந்தர மாக வழங்கப்பட்டுள்ளன. குத்தகைக்காரர்களுக்கு அனுபோக உரிமைகளை வழங்குவதற்காக 1969 ஆம் ஆண்டு கூடலூர் ஜென்மம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/1969) நிறைவேற்றப் பட்டது.

இச்சட்டம் 1974 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 27-ம் நாள் முதல் செயலுக்கு வரத்தொடங்கியது. 324.24 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டு நில அளவை பணி முடிவுற்றது. முழுப் பரப்பளவு குறித்து ரயத்துவாரி பட்டா வழங்குவதற்கான சட்டப்படிக்கான விசாரணைகள் முடிக்கப்பட்டன. சில ஜென்மிகள் தங்கள் நிலங்களுக்கு, இச்

சட்டத்தின் பொருத்தம் பற்றி எதிர்ப்பு தெரிவித்து உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுக்களைத் தாக்கல் செய்தனர். இந்த ரிட் மனுக்கள் 1976 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23 ஆம் நாளன்று தள்ளுபடி செய்யப்பட்டன. இருந்தபோதிலும், அவர்கள் உச்ச நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்து தடையாணைகள் பெற்றுள்ளனர். 172.46 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு குறித்து தடையாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. தடையாணைகள் பிறப்பிக்கப்பட்ட பரப்புகளைத் தவிர்த்து மற்ற பரப்பளவில் கூடலூர் வட்டத்தில் நிலவரி ஏற்பாட்டுப் பணிகள் முன்னேற்றம் அடைந்து வருகின்றன. 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாளன்றுள்ளபடி, நிலவரி ஏற்பாட்டுக் களப்பணி 197.43 சதுர கிலோ மீட்டருக்கும், தகவல் சேகரிப்புப் பணி 140.15 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு நிலத்திற்கும் முடிக்கப்பட்டுள்ளது. 10,619—00—00 ஹெக்டேர் பரப்பளவு நிலத்திற்கு ரயத்துவாரி பட்டா அளிக்கப்பட்டுள்ளது. 1969 ஆம் ஆண்டு கூடலூர் ஜன்மம் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் 17 ஆவது பிரிவின்கீழ் வருகின்ற மலைத்தோட்ட குத்தகைகளை ஆய்வு செய்யவும், குத்தகைகளை நீட்டிக்கலாமா அல்லது நீக்கலாமா என்பது குறித்து கருத்து வழங்கவும் எஸ்டேட்டு நிலவரி ஏற்பாட்டு ஆணையாளரைத் தலைவராகவும் வன-மீன் துறைச் செயலாளர், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட குழு ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது.

தாராபுரம் மறு நில அளவைப் பணி :—

28. கோயம்புத்தூர் மாவட்டம், தாராபுரம் வட்டத்தில் மறு நில அளவைப்பணி, மாவட்டத்தில் ஏனைய வட்டங்களுடன் 1958-ல் முதலில் எடுத்துக் கொள்ளப்பட்டது. தாராபுரம் வட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பணி மட்டும் தடைப்பட்டது. மாநிலம் முழுவதிலும் மறு நில அளவை தொடர்பாக கொள்கை முடிவு ஒன்று எடுக்கப்படாமல் உள்ள நிலையில், தாராபுரத்தில் 160 சதுர மைல் பரப்புள்ள பகுதியில் பணி முடியவில்லை. எனினும், தாராபுரம் வட்டத்தின் பெரும்பகுதி கீழ்பவானித் திட்டப் பகுதியால் பயனடைந்துள்ளதால் அந்த வட்டத்தில் மறு நில அளவைப் பணியை முடிக்க வேண்டிய அவசரமும், முக்கியத்துவமும் ஏற்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு, தாராபுரம் வட்டத்தில் 1—10—1978 முதல் 22 கிராமங்களில் மறு நில அளவைப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணி நடந்தேறி வருகிறது.

1979 ஏப்ரல் 7]

பதிவேடுகளில் நிலக் கணக்குகளை நாளது தேதிவரை சரியாகப் பதிந்து வைத்தல் :—

29. தமிழ்நாட்டிலுள்ள ரயத்துவாரிப் பகுதிகளில் மறு நில அளவைப் பணி கடைசியாக 1880, 1920 ஆகிய ஆண்டுகளுக்கிடையே மேற்கொள்ளப்பட்டது. பெரும்பாலான கிராமங்களில், நிலவரி ஏற்பாட்டுப் பதிவேடுகள், நில அளவைப் பதிவேடுகள் கிராம வரைபடங்கள் ஆகியவை போன்ற கிராம அடிப்படைப் பதிவேடுகள், நெருக்கமான பதிவுகளைக் கொண்டு மிகவும் மோசமாகவும், கந்தலாகவும் உள்ளன. இவை அன்றாடப் பணிக்குப் பயன்படுத்த ஏற்றவைகளாய் இல்லை. இந்தப் பதிவேடுகள், நிலங்களின் சரியான சொந்தக்காரர்களைக் குறிப்பிடவில்லை. இதன் விளைவாக, வேளாண்மைக் கடன்களைப் பெறுவதில் குடியானவர்கள் மிகவும் அவதியுறுகின்றனர். எனவே கிராமங்களிலுள்ள நிலத்தை நேரில் சென்று பார்வையிட்டு அதன் உரிமை குறித்து விசாரணை செய்த பின்னர் நிலப் பதிவேட்டில் பதிவுகளை நாளது தேதிவரை கொண்டுவர வேண்டியதன் அவசியம் ஏற்பட்டுள்ளது.

நிலப் பதிவேடுகளில் பதிவுகளை நாளது தேதிவரை கொண்டு வருவதற்கானத் திட்டம் பற்றி முடிவெடுக்கப்பட்டுள்ளது. இது ஒவ்வொரு கோட்டத்திற்கும் நியமனம் செய்யப்பட்ட தனித் தாசில்தார் மாற்றங்கள் எவையேனும் தெரிவித்தால் அவற்றைக் கிராமக் கணக்குகளில் சேர்க்கும் நோக்கத்துடன் வருவாய்த் துறை தனி ஆய்வாளர்களை அனுப்புவதன் மூலம், நிலங்கள் அனைத்தையும், நில அளவை செய்வதற்கும், ஒவ்வொரு நிலத்தைப் பொறுத்த வரையில் பதிவேட்டில் பதிவுகளை சரிபார்ப்பதற்கும் வகை செய்கிறது.

இத்திட்டம் குறித்து செலவை எவ்வளவு குறைக்க இயலுமோ அவ்வளவு குறைவாகச் செய்வதற்காகவும், பணிகளை விரைவாக நிறைவேற்றுவதற்காகவும், 1963 ஆம் ஆண்டு 26-வது சட்டத்தின் கீழ் அண்மையில் நடவடிக்கை எடுக்கப்பட்ட பகுதிகள், அண்மையில் மறு நில அளவை செய்யப்பட்ட பகுதிகள், தீவிர உட்பிரிவினைத் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ள பகுதிகள், ஆகியவற்றை நீக்கக் கருதப்பட்டுள்ளது. எனவே பதிவேட்டில் பதிவுகளை நாளது வரை கொண்டுவருவதற்கான பகுதிகள் தோராயமாக 30,000 சதுர மைல்களாகும்.

பதிவேட்டில் பதிவுகளை நாளது வரை கொண்டு வருவதற்கான திட்டம் தற்போதுள்ள பணியாளர்களை இதற்கென மாற்றுவதன் மூலமும், கூடுதல் பணியாளர்கள் குறித்த தேவைகளைக் கூடிய வரையில் குறைப்பதன் மூலமும் ஐந்தாண்டுத் திட்டமாகச் செயற்படுத்தப்படும். நில அளவை எல்லைகள் சட்டத்தின் 8-வது பிரிவின் கீழ் வகை செய்யப்பட்டுள்ளவாறு நில அளவைக்

கட்டணங்கள் வசூலிக்கப்படும். மிகச் சிறிய அளவில் உட்பிரிவினைகள் செய்யப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு (கிணறுகள், வீட்டு மனையிடங்கள் நீங்கலாக), உட்பிரிவினை ஒன்றின் குறைந்தளவு பரப்பு, நன்செய், தோட்ட நிலங்களுக்கு 10 செண்டுகள், புன்செய் நிலங்களுக்கு 25 செண்டுகள் என்றும் நிர்ணயிக்கப்படும். இத்திட்டம் 1—4—1979 ஆம் நாளிலிருந்து தொடங்கப்படும்.

இத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காகும் மொத்தச் செலவு சுமார் ரூ. 1·48 கோடி என எதிர்பார்க்கப்படுகிறது.

கிராமக் கணக்குகளில் நாளதுவரையிலான பதிவுகள் எழுதப்பட்டு, நில உடைமை உட்பிரிவினைகளின் பதிவுகள் நிலவரி ஏற்பாட்டுப் பதிவேடுகளில் சேர்க்கப்பட்டால், சாகுபடி செய்யும் காரியத்திற்காக இடர்பாடின்றியும், தாமதமின்றியும் கடன்களைப் பெற குடியானவர்களுக்கு உதவியாக இருக்கும். சங்கிலிகளை இழுப்பதற்கும் நில அளவை கற்களை நடுவதற்கும் நில அளவைப் பணியாளர்களாலும், கற்களை உடைப்பதற்காக ஒப்பந்தக்காரர்களாலும், கூலித் தொழிலாளர்கள் பணியில் அமர்த்தப் படுவார்களாதலால், இத்திட்டம் கிராமப்புற பகுதிகளில் வேலை வாய்ப்புகளையும் அதிகப்படுத்தும்.

பொதுமக்கள் தொடர்புத் திட்டம் :—

30. பொதுமக்கள் தொடர்புத் திட்டம், அலுவலர்கள் குழு அவ்வப்போது கிராமங்களுக்குச் சென்று மக்களின் குறைகளைக் கேட்டு அந்த இடத்திலேயே முடிவு எடுக்கும் வாய்ப்பை அளிக்கிறது. இத்திட்டம் மிகத் தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் வரப்பெற்ற 56,097 மனுக்களில், 31—12—1978 முடிய 51,171 மனுக்கள் மீது முடிவு எடுக்கப்பட்டுள்ளது. முடிவு செய்யப்பட்டுள்ள மனுக்களின் எண்ணிக்கை வீதம் 90 சதவீதம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

வேளாண்மை வருமான வரி :—

31. வேளாண்மை வருமானத்தின் மீதான வரி அண்மையில் கொண்டுவரப்பட்ட ஒன்றாகும். வேளாண்மை தவிர பிற வகை வருமானங்களுக்கு 1860 ஆம் ஆண்டு முதற்கொண்டே வரி இருந்தபோதிலும், வருமான வரி விதிப்பிலிருந்து வேளாண்மை வருமானம் விலக்களிக்கப்பட்டிருந்தது. தமிழ்நாட்டில் 1955 ஆம் ஆண்டு முதல் கடந்த 23 ஆண்டுகளில் வேளாண்மை வருமானத்திற்கு வரி விதிப்பு செயலில் இருந்து வருகிறது.

1979 ஏப்ரல் 7]

சென்னை மலைத் தோட்ட வேளாண்மை வருமானவரிச் சட்டம் 1955 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டபோது முதற்கண் காப்பி, தேயிலை, இரப்பர், ஏலக்காய், சின்கோனா போன்ற மலைத் தோட்டப் பயிர்களுக்கு மட்டும் வரிவிதிக்கச் கருதப்பட்டது. மாநிலம் முழுவதிலும் உள்ள மலைத் தோட்டப் பயிர்கள் அல்லாத பயிர்கள், பிற பயிர்கள் ஆகிய அனைத்திற்கும் பொருந்துகிற வகையில் 1958–59 ஆம் வரிவிதிப்பு ஆண்டில் 1958 ஆம் ஆண்டு திருத்தச் சட்டம் செயலுக்கு வந்தது. இத்திருத்தச் சட்டம் வருமானவரி விலக்களிப்பதற்கான அளவை ரூ. 2,000-த்திலிருந்து ரூ. 3,600 ஆக உயர்த்தியது. இந்த அளவு 1968 ஆம் ஆண்டு ரூ. 4,000 ஆகவும் 1973 ஆம் ஆண்டு ரூ. 5,000 ஆகவும் மேலும் உயர்த்தப்பட்டது. வரி இணக்க உடன்பாட்டுத் திட்டத்தின்படி விலக்களிப்பதற்காக தற்போதுள்ள அளவு 10 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரையாகும். மலைத்தோட்டப் பயிர்கள் அல்லாத பிற பயிர்களுக்கு எந்தவித வரையறையின்றியும், முழுவதும் மலைத் தோட்டப் பயிர்களாகவும் அல்லது ஒரு பகுதி மலைத் தோட்டப் பயிரும், ஒரு பகுதி பிற பயிரும் கொண்ட நிலங்கள் 50 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரைக்கும் வரி இணக்கம் செய்து கொள்ளும் வசதி தற்போது உள்ளது.

32. ஆண்டொன்றுக்கு ரூ. 5,000-க்கு மேல் வருமானம் உள்ள அல்லது 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்குக் குறையாத நிலம் வைத்துள்ள வரிவிதிக்கப் பெறுபவர் ஒவ்வொருவருக்கும் அவருடைய கடந்த ஆண்டின் (கணக்காண்டு) மொத்த வேளாண்மை வருமானத்தின் மீது ஒவ்வொரு நிதியாண்டும் வேளாண்மை வருமானவரி விதிக்கப்படுகிறது. வருமானம் நிலப்பரப்பு அடிப்படையில் விதிக்கப்படும் வரி வீதங்கள் /வரி இணக்கக் கட்டணங்கள் அவ்வப்போது மாற்றப்பட்டுள்ளன.

இச் சட்டத்தை செயல்படுத்துவது, வேளாண்மை வருமான வரி ஆணையரின் பொறுப்பாகும். இவர் வருவாய்த்துறை வாரியத்தின் (வே. வ. வ.) கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகிறார். இவருக்கு 4 வட்டார உதவி ஆணையர்கள், 30 வேளாண்மை வருமான வரி அதிகாரிகள் உதவிபுரிகின்றனர். மலைத் தோட்ட பயிர்கள் அல்லாத பிற பயிர்கள் உள்ள பகுதிகளைப் பொறுத்த மட்டில் வரி வசூலிக்கும் பணி 1—8—1975 முதல் வட்டாட்சியரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வரி வருவாயில் பெரும்பகுதி மலைத் தோட்டப் பயிர்களிலிருந்து கிடைக்கிறது. வேளாண்மை வருமானவரி வருவாய் நீண்டகாலமாகவே ஓராண்டிற்கு ரூ. 1·5 கோடி முதல் 2·5 கோடி வரை கிடைத்து வந்தது. இது 1977–78 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்ட மதிப்பீடான ரூ. 2·5 கோடி மதிப்பீட்டிற்கு மாறாக, 5·25 கோடியாக கிடைத்துள்ளது. இது 1978–79 ஆம்

ஆண்டில்-வரவு செலவுத் திட்ட மதிப்பீடான ரூ. 2·5 கோடிக்கு மாறாக ரூ. 10 கோடியை எட்டும் அளவுக்கு வெகுவாக உயரக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வேளாண்மை வரி வருவாயில் ஏற்பட்டுள்ள இந்த உயர்வுக்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. அவற்றுள் உயர்வுக்கு சம்பந்தப்பட்ட கணக்காண்டில் தேயிலைக்கு சாதகமான விலை இருந்தது ஒரு முக்கிய காரணமாகும். இந்தப் பிரிவிலிருந்து வருவாய் பெருகுவதற்கு இந்தத் துறையின் பணிகளை எளிதாக்கி சீரமைக்க மேற்கொண்ட விடா முயற்சியும் பெருமளவிற்குக் காரணமாகும்.

வரி விதிக்கப்பட்டவர்கள் 94,447 பேரில் சுமார் 7,600 பேர் வருமான விவரங்களைத் தாக்கல் செய்து வருகின்றனர். எஞ்சியவர்கள், பெயரளவிலான ஒரு தொகையை இணக்கக் கட்டணமாகச் செலுத்துவதன் மூலம், இணக்க வசதியைப் பெறுகின்றனர். வரி விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

ஆண்டு.	வரி விதிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை.
(1)	(2)
1975–76	92,927
1976–77	93,366
1977–78	89,461
1978–79 (1978 நவம்பர் வரையில்)	94,447

33. இச் சட்டத்தை செயலாக்குவதில் விதிகள் மீறப்படுவதைத் தடுக்கும் நடவடிக்கையாக குறிப்பாக வரித் தொகை பெருமளவிற்குச் செலுத்த வேண்டியவர்கள் வரி ஏய்த்தலையும், வரி செலுத்துவதைத் தவிர்த்தலையும் தடுக்கும் பொருட்டு, 1977 செப்டம்பரில் அரசு, உதவி ஆணையர் (புலனாய்வு) பதவி ஒன்றை ஏற்படுத்தியது. இந்த நடவடிக்கை நன்கு செயல்பட்டு வருகிறது.

பல்வேறு பயிர்வகைகளின் விளைச்சல், செலவு, பெருமொத்த வருவாய், நிகர வருவாய் ஆகியவற்றைக் குறிக்கும் வழிமுறை விவரங்கள் தயாரிக்கப்பட்டு, வேளாண்மை வருவாய்க்கு நியாயமான உரிய வரியை விதிக்கும் பொருட்டு, வரி விதிக்கும் அலுவலர்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன.

1979 ஏப்ரல் 7]

34. சட்டப் பேரவையில், 1978-ல் நடந்த வரவு-செலவுத் திட்டக் கூட்டுத் தொடரில் முகவுரைக்கப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரித் திருத்தச் சட்ட முன் வடிவு தேர்வுக் குழுவிற்கு அனுப்பப்பட்டது. வரி விலக்கு வரையறையை ரூ. 5,000-லிருந்து ரூ. 10,000-மாக உயர்த்துவதற்கு அந்தச் சட்ட முன் வடிவில் வகை செய்யப்பட்டிருந்தது. மேலும் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலம் எவ்வளவு என்பதை நிர்ணயிப்பதற்கான விதிமுறைகளைத் திருத்தி அமைத்தல், மலைத் தோட்டப் பயிர்களாயின் 20 ஏக்கர் நிலத்திற்கும், மலைத் தோட்டப் பயிரல்லாத ஏனைய பயிர்களாயின் 30 ஏக்கர் நிலத்திற்கும் மட்டும் உரிய வரி இணக்க வசதியை வரையறுத்தல் போன்ற ஏனைய பிற மாறுதல்களைத் தவிர, உயரளவுவரி வீதத்தை 55 சதவீதத்திலிருந்து 65 சதவீதமாக உயர்த்தி வரி இணக்கக் கட்டணத்தைச் சீரமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. பொறுக்குக் குழு, காலப் போக்கில், பரிந்துரைகளை நல்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிராமப் பணியாளர் நிர்வாகம்.

35. கிராம அலுவலர்கள் முழு நேர அரசுப் பணியாளர்களல்லர், அவர்கள் பகுதி நேரப் பணியாளர்களே. இவர்கள் கோட்டாட்சியர் அல்லது மாவட்ட வருவாய்த் துறை அதிகாரியிடம் எழுத்து மூலம் முன் அனுமதி பெற்றுத் தனது அரசுப் பணிக்குக் குந்தகம் ஏற்படாவண்ணம் பிற பகுதி நேரப் பணி அல்லது தொழில்களில் ஈடுபடலாம். இவர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியத்தில் 1—4—1978 முதல் ஒரே சீரான வீதத்தில் ரூபாய் பத்து உயர்த்தப்பட்டுள்ளது. மற்றும் இவர்களுக்கு வழங்கப்படும் வருடாந்திர பயணப்படியை தலைமையிடத்திலிருந்து இருக்கின்ற தொலைவைப் பொறுத்து ஆண்டொன்றுக்கு ரூ. 12 முதல் ரூ. 30 வரை ஒட்டு மொத்தமாக உயர்த்தியுள்ளது.

கிராம அதிகாரிகள், அவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுதல், தண்டனை தொடர்பாக தாக்கல் செய்துள்ள மறு விசாரணை மனுக்களைப் பரிசிலனை செய்வதற்கு அரசு, வருவாய்த் துறை வாரியத்திற்கு 1—4—1976 முதல் அதிகாரமளித்துள்ளது அதன்படி மறு விசாரணை மனுக்கள் வருவாய்த் துறை வாரியத்தால் விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

கிராம அதிகாரிகள் வேலைக்கு அமர்த்தப்படுதல், அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை வழக்கு தொடர்பாக, வருவாய்த் துறை வாரியம் 1—4—1978-லிருந்து பிறப்பித்த ஆணைகளுக்கு அரசுக்கு இரண்டாவது முறையாக மறு விசாரணை மனு கொடுத்துக் கொள்ள வகை செய்து அரசு 29—6—1978 ஆம் நாளிட்ட ஆணையில், தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கிராம அதிகாரிகள் பணி விதிகளில், திருத்தங்களை வெளியிட்டது.

[1979 ஏப்ரல் 7

வாரிய நிலை ஆணை விதித்துறைகளின் கீழ் அமர்த்தப்பட்ட கிராம அதிகாரிகளின் ஓய்வு கால வயதை 60 ஆண்டு என அரசு நிர்ணயித்துள்ளது. அதைத் தொடர்ந்து, கிராம அதிகாரிகள் சங்கத்திடமிருந்து வந்த முறையீட்டின் பேரில், அரசு, 60 வயது முடிந்தவர்கள் உடனே பணியிலிருந்து ஓய்வு பெற வேண்டுமென்றும், அவ்வாறு பணி ஓய்வு பெற்ற பின்னர் 30—6—1979 வரையில் மீண்டும் பணியில் அமர்த்தப்படலாம் என்றும் ஆணையிட்டுள்ளது.

36. அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்களும், பழங்குடியினரைச் சேர்ந்தவர்களும், கிராம அதிகாரிகள் பதவிக்குப் போட்டியிட இயலும் வகையில், அரிசன வகுப்பு, பழங்குடியைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் 'கிராம அதிகாரிகளுக்கான சிறப்புத் தேர்வில்' 'தேர்ச்சியுறும் பொருட்டு' அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான திட்டமொன்றுக்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. அரிசன வகுப்பு, பழங்குடியைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கென்று 1978 ஆம் ஆண்டு சனவரி மாதம் 2-ம் நாள் முதல் 3 திங்கள் காலத்திற்கு தஞ்சாவூர், மதுரை, சேலம், கடலூர் ஆகிய நான்கு இடங்களில் சிறப்புத் தேர்வு பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டன. பயிற்சி பெறுபவர் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு பயிற்சிக் கால உதவித் தொகை ரூ 50 கொடுக்கப்பட்டது. கிராம அதிகாரிகள் பதவிக்குத் தகுதி வாய்ந்த அரிசன பழங்குடியைச் சேர்ந்தவர்கள் இல்லாத குறையை இத்திட்டம் அகற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இப்பயிற்சி கிராம அதிகாரிகள் பதவிக்காக தேர்வில் வெற்றி பெறுவதற்கு பயிற்சியாளர்களுக்கு உண்மையில் உதவிபுரியும். இது காறும், அரிசன பழங்குடி வகுப்பைச் சேர்ந்த 94 பேர் கிராமக் கர்ணம் பதவிக்குப் பயிற்சி அளிக்கப்பட்டனர். 82 பேர் கிராம அதிகாரி பதவிக்கு பயிற்சி அளிக்கப்பட்டனர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

நகர்ப்புற நிலவரி.

37. 1966 ஆம் ஆண்டின் நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின்படி நகர்ப்புற நிலவரி குறிப்பிட்ட சில பகுதிகளிலுள்ள நகர்ப்புற நிலங்களுக்குச் செலுத்தத்தக்கதாகும். ரயத்துவாரி வரிவிதிப்பு, விடு வரி, மனை வரி முதலியவற்றுக்குப் பதிலாக நகர்ப்புற நிலவரி உள்ளது. இச்சட்டம் சென்னை மாநகரில் 1963 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1-ம் நாளிலிருந்து செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய நகராட்சிகளிலும், மதுரை மாநகரிலும் 1971 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1-ம் நாளிலிருந்து இச்சட்டம் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது.

1979 ஏப்ரல் 7]

சென்னை மாநகரில், தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் செயலுக்கு வரத் தொடங்கியதிலிருந்து, 1963 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1ஆம் நாளன்றுள்ள நிலத்தின் அங்காடி மதிப்பு 0·4 சதவீதத்தின்படி நகர்ப்புற நிலவரியைக் கணக்கிடுவதற்கு அடிப்படையாக கொள்ளப்பட்டது. இச் சட்டம் அவ்வப் போது திருத்தி அமைக்கப்பட்டது. சென்னை மாநகரையும் அதனைச் சுற்றி அமைந்துள்ள எல்லைப் பகுதிகளையும் சேர்த்து அப்பகுதிகளுக்கு இச்சட்டத்தை நீட்டித்து 1975 ஆம் ஆண்டில் இச்சட்டம் கடைசியாக திருத்தி அமைக்கப்பட்டது. நகர்ப்புற நிலவரியைக் கணக்கிடுவதற்காக 1971 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1 ஆம் நாளன்று நிலவரி அங்காடி மதிப்பு பின்பற்றப் பட்டது. தரவாரியான வரி வீதம் நிலை 0·5 சதவீதத்திலிருந்து 1சதவீதமாக இருந்ததை 0·7 சதவீதத்திலிருந்து 2·5 சதவீதமாக உயர்த்தப்பட்டது. குடியிருப்புக்கான அல்லது குடியிருப்புக்கு அல்லாத நகர்ப்புற நிலங்களுக்கிடையே வேறுபாடு கொண்டுவரப் பட்டு வெவ்வேறு விதமான தரவாரி வரி வீதங்கள் நிர்ணயிக்கப் பட்டன. இதனால் வரி அதிக அளவுக்கு உயர்வதாயிற்று.

38. 1966 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தை 1975-ல் திருத்தியதின் விளைவாக நகர்புற நிலவரி கூடிய தற்கு எதிர்ப்புத் தெரிவித்து தனிப்பட்டவர்களிடமிருந்தும், நிறுவனங்களிடமிருந்தும் தொடர்ந்து முறையீடுகள் வரப்பெற்றதற்கு அரசு செவிமடுத்தது. 1976 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 27-ம் நாளிட்ட 2625 எண்ணுள்ள தமது ஆணையில், சட்டத்தில், அதற்கென அமைந்த திருத்தங்கள் செய்யப்படும் வரை, பல சலுகைகளை வழங்க அரசுக்கு வாய்ப்பு ஏற்பட்டது. தொழிற்காரியங்களுக் காகப் பயன்படுத்தப்பட்ட நிலங்களைப் பொறுத்த மட்டில், அரசு, வருவாய்த் துறையின் 1978ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 4-ம் நாளிட்ட 2516-ம் எண். ஆணையில் வரிச் சலுகை அளித்தது.

தற்போது வரையறுக்கப்பட்டுள்ள வரி வீதம் வருமாறு:

சென்னை எல்லையோரப் பகுதியைத் தவிர மற்ற பகுதிகளில் உள்ள அனைத்து நகர்ப்புற நிலங்கள்.			சென்னை எல்லையோரப் பகுதியில் உள்ள எல்லா நகர்ப்புற நிலங்கள்;		
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1. முதல் 2 கிரவுண்டுகள்.	இல்லை	இரண்டு கிரவுண்டுகளுக்கு மேற்பட்டுள்ள பரப்பளவின் மீது.	1. முதல் 3 கிரவுண்டுகள்.	இல்லை	மூன்று கிரவுண்டுகளுக்கு மேற்பட்டுள்ள பரப்பளவின் மீது.
2. மொத்தப் பரப்பு 5 கிரவுண்டுகளுக்கு மேற்படாமலிருந்தால்.	விற்பனை மதிப்பில் 0·7 சதவீதம்.		2. மொத்தப் பரப்பு 7 கிரவுண்டுகளுக்கு மேற்படாமலிருந்தால்.	விற்பனை மதிப்பில் 0·7 சதவீதம்.	
3. மொத்தப் பரப்பு 5 கிரவுண்டுகளுக்கு மேற்பட்டு 10 கிரவுண்டுகளுக்கு மேற்படாமலிருந்தால்.	விற்பனை மதிப்பில் 1 சதவீதம்		3. மொத்தப் பரப்பு 7-க்கு மேற்பட்டு 10 கிரவுண்டுகளுக்கு மேற்படாதிருந்தால்.	விற்பனை மதிப்பில் 1 சதவீதம்.	,,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

4. மொத்தப் பரப்பு 10 கிரவுண்டுகளுக்கு மேற்பட்டு 20 கிரவுண்டுகளுக்கு மேற்படாமலிருந்தால்.	விற்பனை மதிப்பில் 1·5 சதவீதம்.	,,	4. மொத்தப் பரப்பு 10-க்கு மேற்பட்டு 20 கிரவுண்டுகளுக்கு மேற்படாமலிருந்தால்.	விற்பனை மதிப்பில் 1·5 சதவீதம்.	,,
5. மொத்தப் பரப்பு 20 கிரவுண்டுகளுக்கு மேற்பட்டால்	விற்பனை மதிப்பில் 2 சதவீதம்.	..	5. மொத்தப் பரப்பு 20 கிரவுண்டுகளுக்கு மேற்பட்டால்.	விற்பனை மதிப்பில் 2 சதவீதம்.	.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

39. வருவாய்த் துறையின் 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 4-ம் நாளிட்ட அரசாணை எண். 2516-ல், சிறு தொழில் நிறுவனங்கள் செலுத்த வேண்டிய நகர்ப்புற நிலவரி 25 சதவீதமாகவும், பிற தொழில் நிறுவனங்கள் செலுத்த வேண்டிய வரி 10 சதவீதமாகவும் பசலி ஆண்டு 1385-லிருந்து குறைக்கப்பட்டுள்ளது.

ஆண்டொன்றுக்குக் கிடைக்கும் வரிவசூல் ரூ. 3·27 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 1978-79 ஆம் ஆண்டில் ரூ. 2·3 கோடி வசூலிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நகர்ப்புற நில உச்சவரம்பு.

40. கடந்த 10 ஆண்டுகளிலும் அதற்கு மேலாகவும் நகர்மபுற மக்கட் தொகை பலவித காரணங்களினால் அதிகரித்திருக்கிறது. அவைகளில் முக்கியமான காரணங்கள், கிராமங்களை மக்கள் தொழில் வளர்ச்சியின் காரணமாக கிராமங்களை விட்டு நகர் புறங்களுக்கு அதிகமான வேலை வாய்ப்புக்களை நாடி வந்திருப்பதும் கிராமங்களிலிருக்கும் குறைந்த அளவு வேலை வாய்ப்பும்/வேலை வாய்ப்பின்மையுமே ஆகும். இந்த விஷயத்தில் சிறியதும், நடுத்தரமானதுமான நகரங்களைவிட, தலை நகரங்களும், பெரிய அளவு நகரங்களுட கிராம மக்களை மிக அதிகமாகக் கவரும் சக்தி உடையனவாகும். இதன் காரணமாக சுகாதாரமற்ற வாழ்க்கை நிலைமை உருவாகி, கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு குடிசைப் பகுதிகள் பெருகி வந்தன. அதனால் பொருளாதாரப் பிரச்சினைகளும், சுகாதாரப் பிரச்சினைகளும் எழுந்தன. ஆதலால், ஒரு சிலரிடம் நிலங்கள் குவிந்திருப்பதையும் ஊக வணிகம் செய்தலையும் தடுக்கும் பொருட்டும், மக்கள் ஓரிடத்திலேயே குவிந்து இருக்காமல் பரவலாக எல்லாப் பகுதிகளிலும் இருக்கும் பொருட்டும் குறைவாக உள்ள நகர்ப்புறப் பரப்புக்களை ஒழுங்கு படுத்தி அவற்றை முறையாக மேம்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

41. நகர்ப்புறப் பகுதிகளிலுள்ள நிலங்களின் விலை அதிகரித்துவிட்டதால் ஊக வாணிபத்திற்கும் எளிதில் கிடைக்கப் பெறாத விலை மதிப்புள்ள நகர்ப்புற நிலத்தை மறைப்பதற்கும் வழி ஏற்பட்டிருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்கு, தனிப்பட்ட ஒரு நபர் வைத்துள்ள நில உடைமைகளுக்கும் நகரங்களில் நிலம் வைத்துள்ளவர்களுக்கும் உச்சவரம்பு விதிப்பது ஒரு வழியாகும். நில உடைமைகளின் அளவிற்கு உச்சவரம்பு விதித்தும் வீடுகள் அமைத்திருக்கின்ற நிலப்பரப்பைக் குறைத்தும் நகர நிலங்களையும் நகரமாக ஆவதற்கு வாய்ப்புள்ள பகுதிகளில் இருக்கிற

1979 ஏப்ரல் 7]

நிலங்களையும் சமூக மயமாக்குவதே இதன் நோக்கமாகும், இந்த நோக்கத்தைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலச் (உச்சவரம்பு கட்டுதல்—முறைப்படுத்துதல்) சட்டம் (குடியரசுத் தலைவர் சட்டம் 34/1976) இயற்றப்பட்டது

3. இச் சட்டத்தில் மூன்று முக்கியமான அம்சங்கள் அடங்கியுள்ளன :—

(i) ஒரு நபரிடம் (தனி நபர்), ஒரு குடும்பத்திடம், ஒரு கூட்டு நிறுவனத்திடம், ஒரு கம்பெனியிடம், தனி நபர்களடங்கிய கூட்டமைப்பு அல்லது குழுவிடம் உள்ள காலி நிலங்களுக்கு உச்ச வரம்பு விதித்தல் ;

(ii) எதிர்காலத்தில் கட்டப்படும் குடியிருப்புக் கட்டிடத்திற்கான கட்டிடத் தரைப் பரப்பளவுக்கு உச்சவரம்பு விதித்தல் ;

(iii) நகர்ப்புறச் சொத்துக்களை உரிமை மாற்றம் செய்வதை முறைப்படுத்துதல்.

இச்சட்டத்தை செயல்படுத்துகையில், நடைமுறையில் கணக்கிலடங்காத சங்கடங்கள் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ளதை சுட்டிக் காட்டி, அரசுக்கு எண்ணற்ற முறையீடுகள் வந்தன, பத்திரிகை வாயிலாகவும் இது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க, இச்சட்டத்தின் சில விதித் துறைகளால் மக்களுக்கு ஏற்பட்ட துன்பங்களை நீக்கவும் நகர்ப்புற நிலங்களின் மீதான சமூக சீர்திருத்தத்தை கவனத்தில் கொண்டும் அரசு தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலச் (உச்சவரம்பு கட்டுதல்—முறைப்படுத்துதல்) சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 24/1978) கொண்டு வந்தது. இதன் காரணமாக, தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலச் (உச்சவரம்பு கட்டுதல்—முறைப்படுத்துதல்) சட்டம் (குடியரசுத் தலைவர் சட்டம் 34/1976) ரத்து செய்யப்பட்டது.

42. புதிதாக இயற்றப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு கட்டுதல்—முறைப்படுத்துதல்) சட்டத்தினால் (தமிழ்நாடு சட்டம் 24/1978) சென்னை நகரக்கூட்டுப் பகுதியின் பரப்பு 1,400 சதுர கிலோ மீட்டரிலிருந்து 575 சதுர கிலோ மீட்டராகவும் மற்ற நகர்ப்புற கூட்டுப் பகுதிகளைப் பொறுத்தவரையில் அவற்றின் பரப்பு மூலப் பரப்பளவில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதியாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

43. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நகர்ப்புற கூட்டுப் பகுதிகளில் அதற்கு எதிரே குறிப்பிடப்பட்ட இடங்களில் இச்சட்டம் செயலில் உள்ளது :—

நகர்ப்புறக் கூட்டுப் பகுதியின் பெயர்.	மாநகராட்சி.	நகராட்சி.	உள்ளாட்சியும் வருவாய்க் கிராமங்களும்.	பேரூராட்சி.	தென் பிராந்திய இரயில்வே நிர்வாகம்.	நகரியம்.	பாளையம்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
1. சென்னை	1	4	65	18	..	4	1	93
2. மதுரை	1	..	9	..	..	1	..	11
3. கோயம்புத்தூர் ..	..	2	15	..	..	1	..	18
4. திருச்சிராப்பள்ளி ..	..	3	5	..	1	..	..	9
5. சேலம் ..	..	2	18	..	..	..	..	20
6. திருநெல்வேலி ..	..	3	8	..	..	1	..	12

ஒவ்வொரு நகர்ப்புறக் கூட்டுப் பகுதியிலும் தனி நபரிடம் ஒரு குடும்பத்திடம் ஒரு தொழில் நிறுவனத்திடம் இருக்கின்ற நிலங்களுக்கான உச்சவரம்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

நகர்ப்புறக் கூட்டுப் பகுதிகள்.	வகை.	தனி நபர்.	குடும்பம்.	தொழில் நிறுவனம்.
(1)	(2)	(3)	(4)	(5)
		சதுர மீட்டர்.	சதுர மீட்டர்.	சதுர மீட்டர்.
சென்னை ..	I	500	2,000	2,000
மதுரை கோயம்புத்தூர் திருச்சிராப்பள்ளி சேலம்	II	1,500	3,000	3,000
திருநெல்வேலி ..	III	2,000	4,000	4,000

1979 ஏப்ரல் 7]

ஒருவர் சம்பந்தமாக ''குடும்பம்'' என்பதும். தனி, நபர் அவரது மனைவி அல்லது கணவர், அவர்களுடைய திருமண மாகாத உரியவயதடையாத குழந்தைகள் என்று பொருள்படும். ஒரு குடும்பத்திலுள்ள கணவன், மனைவி, திருமண மாகாத உரிய வயதடையாத அவர்களுடைய இரண்டு குழந்தைகள் ஆகிய ஒவ்வொருவரும் 500 சதுர மீட்டர் வீதம் 2,000 சதுர மீட்டர் காலி நிலத்தை சென்னை நகரக் கூடடுப் பகுதியில் வைத்திருக்க லாம். சென்னை நகரக் கூட்டுப் பகுதியில் இரண்டு நபர்களைக் கொண்ட ஒரு குடும்பம் வைத்திருக்கும் காலி நிலத்திற்கான உச்சவரம்பு 1,000 சதுர மீட்டர். மூன்று நபர்களைக் கொண்ட குடும்பத்திற்கு உச்சவரம்பு 1,500 சதுர மீட்டர். பிற நகர்ப்புறக் கூட்டுப் பகுதிகளில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர் களைக் கொண்ட குடும்பத்திற்கான உச்சவரம்பு அட்டவணையில் (4) ஆம் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. உரிய வயதடையாத சிறார்கள், உச்சவரம்பு வரை தனியாகக் காலி நிலங்கள் வைத்துக் கொள்ளலாம், பிரிவினையாகாத இந்து குடும்பத்தைப் போல, உரிய வயதடைந்த மகன்களும், உரிய வயதடைந்த திருமண மாகாத மகள்களும் சொத்தில் பெயரளவிலான பங்கை, சட்டம் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து வைத்துக் கொள்ளலாம். பிரிவினையாகாத இந்து குடும்பத்திற்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகள் கிறித்துவ, முகமதிய குடும்பங்களுக்கும் அளிக்கப்பட்டு உள்ளன.

எந்த நிலங்களுக்கு 3—8—1976-க்கு முன்னரே வரைப் படங்கள் ஏற்பளிக்கப்பட்டனவோ அந்தக் காலி நிலங்களில் உச்ச வரம்பிற்கு மிகுதியாக உள்ள காலி நிலத்தை மற்றவர்களுக்கு விற்பதற்காக வைத்திருக்க நில உடைமையாளர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. விவசாய நிலங்கள் முழுமையாக இச் சட்டத்தின் வரம்பிலிருந்து நீக்கப்பட்டன. இந்நிலங்கள் பெருந் திட்டத்தில் விவசாயமல்லாத பிற காரியத்திற்கென குறிப்பிடப் பட்டிருந்து, விவசாயக் காரியத்திற்காகத் தொடர்ந்து பயன் படுத்தி வந்தால் அந்த நிலங்களுக்கு இச்சட்டம் பொருந்தாது, ஆனால் அந்த நிலங்கள் விவசாயமில்லாத பிற காரியங்களுக்காக மாற்றப்பட்டால் இச்சட்டம் பொருந்தும்.

உச்சவரம்பிற்கு கூடுதலாகக் காலி நிலம் வைத்திருக்கும் எவரும் 7-வது பிரிவின்கீழ் அறிக்கை ஒன்றை அவர் தாக்கல் செய்யும் வரையிலும். அவர் வைத்திருக்கும் கூடுதலான காலி நிலம் சம்பந்தமான அறிவிப்பு ஒன்று 11-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்கீழ் வெளியிடப்படும் வரையிலும் அத்தகைய நிலம் எதையும் அல்லது அதன் ஒரு பகுதியை விற்பனை, அட மானம், தானம், குத்தகை அல்லது பிற வழிகளில் மாற்றக் கூடாது.

[1979 ஏப்ரல் 7

44. இச்சட்டம் செயலுக்கு வரத் தொடங்கும்போது, உச்ச வரம்பிற்கு கூடுதலாக காலி நிலம் வைத்துள்ள ஒவ்வொருவரும் அந்நிலங்களின் விவரங்களடங்கிய அறிக்கை ஒன்றை அப்பகுதி மீது அதிகார வரம்பு உள்ள தகுதி வாய்ந்த அதிகாரியிடம் தாக்கல் செய்ய வேண்டும். சட்டத்தின் 7-வது பிரிவின்கீழ் அவ்வாறு அறிக்கை தாக்கல் செய்வதற்கான கடைசி நாள் 14-9-1978 ஆகும். 10-2-1979 அன்றுள்ளபடி 1976-வது ஆண்டுச் சட்டத்தின் 6 (1) பிரிவு, 1978-ஆம் ஆண்டு சட்டத்தின் 7 (1) பிரிவின்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள அறிக்கைகள் 13,515 ஆகும். இதில், 1978ஆம் ஆண்டு சட்டப்படி 8,346 அறிக்கைகள் சம்பந்தமான நிலங்கள் உச்சவரம்பிற்குட்பட்டவையென அறிவிக்கப்பட்டுள்ளன. மீதி 5,169 அறிக்கைகள் நடைமுறையில் உள்ளன. இந்த அறிக்கையின்படி 2,331 ஹெக்டேர், 80 ஏர் 27 சதுர மீட்டர் காலி நிலங்கள் உபரியாக உள்ளன, தகுதி வாய்ந்த அதிகாரிகள் இவ்வறிக்கைகளை பரிசீலனை செய்து வருகின்றனர். 5 அறிக்கைகளின் பேரில் நடவடிக்கை எடுத்து, 4 ஹெக்டேர், 87 ஏர் 20 சதுர மீட்டர் காலி நிலங்கள் உபரியென அறிவித்து அது சம்பந்தமாக 11 (1) பிரிவின்கீழ் அறிவிப்பு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது. இந்நிலங்கள் குறித்து சட்டத்தின் 11 (3) பிரிவின் கீழ் தமிழ்நாடு அரசிதழில் அறிவிப்பு வெளியிடப்பட்ட பிறகு அவை அரசால் கையகப்படுத்தப்படும். சட்டத்தின் 9 முதல் 11ஆவது பிரிவுகளின் கீழ் இந்த அறிக்கைகளை தகுதி வாய்ந்த அதிகாரிகள்பரிசீலனை செய்து வருவதால் உபரியாக இருக்கக் கூடிய காலி நிலங்களின் பரப்பை இந்த நிலையில் மதிப்பிட இயலாது.

45. ஒவ்வொரு நகர்ப்புறக் கூட்டுப் பகுதியிலும் கையகப் படுத்தப்படும் உபரி காலி நிலத்திற்குக் கொடுக்கப்படத்தக்க தொகை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

நகர்ப்புறக் கூட்டுப் பகுதிகள்.	வகை.	கொடுக்கத்தக்க தொகை.
(1)	(2)	(3)
சென்னை	I	சதுர மீட்டர் ஒன்றுக்கு ரூபாய் 50க்கு மேற்படாமல்.
மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம்.	II	சதுர மீட்டர் ஒன்றுக்கு ரூபாய் 25-க்கு மேற்படாமல்.
திருநெல்வேலி	III	சதுர மீட்டர் ஒன்றுக்கு ரூபாய் 15-க்கு மேற்படாமல்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1979 எப்ரல் 7]

இச்செயல் நோக்கத்திற்காக ஒவ்வொரு நகர்ப்புறக் கூட்டுப் பகுதியையும் அங்கு நிலம் அமைந்துள்ள இடம், நிலத்தின பொதுப்பயன், நிலத்தின் உபயோகம் முதலியவற்றைக் கருத்தில் கொண்டு பல்வேறு மண்டலங்களாகப் பிரித்து, ஒவ்வொரு மண்டலத்திலும் உள்ள காலி நிலத்தின் சதுர மீட்டர் ஒவ்வொன்றிற்கான விலை, அந்த மண்டலத்தில் அந்த காலி நிலம் தற்போது எதற்குப் பயன்படுகிறது என்பதையும், பொருத்தமான ஏனைய விஷயங்களையும் ஒட்டி நிச்சயிக்கப்படும். இது மேற்குறிப்பிட்டுள்ள உயரளவு வீடுகளுக்குட்பட்டது.

தொகையில் 25 சதவீதம் அல்லது 25,000 ரூபாய் இவற்றில் எது குறைவாக உள்ளதோ அத்தொகை உடனடியாக ரொக்கமாகக் கொடுக்கப்படும். எஞ்சிய தொகை 15 சம ஆண்டுத் தவணைகளில் கொடுக்கப்படும். இத்தொகைக்கு ஆண்டொன்றிற்கு 6 சத வீத வட்டி உண்டு. அக்காலி நிலம் அரசினால் எந்த தேதியிலிருந்து கையகப்படுத்தப்பட்டதாகக் கருதப்படுகிறதோ, அந்த நாளிலிருந்து இந்த வட்டி கொடுக்கப்படும்.

இச்சட்டத்தின் விதித்துறைகள், மத்திய, மாநில அரசுகள், அரசு நிறுவனங்கள், அட்டவணையிடப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள், சமய அற நிலையங்கள் முதலியவை வைத்திருக்கும் நிலங்களுக்குப் பொருந்தா.

46. பொதுமக்கள் நன்மையைக் கருதியும், யாருக்காவது தேவையற்ற தொல்லைகள் ஏற்படுமானால் அதனை முன்னிட்டும் நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்க அரசுக்கு அதிகாரமுண்டு. யாதொரு நபர் உச்சவரம்பிற்கு மேற்பட்ட காலி நிலத்தை விற்பனை செய்வதற்காக, அந்த உபரி நிலம் குறித்து மாநில அரசுடன் அல்லது மத்திய அரசுடன் அல்லது மத்திய அரசுக்கு அல்லது மாநில அரசுக்கு சொந்தமான அல்லது அதன் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள யாதொரு கம்பெனி அல்லது கழகத்துடன் அல்லது கல்வி நிறுவனத்துடன் அல்லது மருத்துவ நிறுவனத்துடன் இச்சட்டம் செயலுக்கு வரத்தொடங்கிய நாளுக்கு அல்லது 3—8—1976-க்கு முன்னர் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டிருந்து அது உண்மையென மாநில அரசு மனநிறைவடைந்தால், அந்தக் காலி நிலத்திற்கு விதிவிலக்களிக்கலாம்.

இச்சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பெற்ற உபரி நிலங்களை ஒருவருக்குத் தொழில் தொடங்குவதற்காகவோ அல்லது தொழிலாளர் குடியிருப்புகளுக்காகவோ ஒப்படை செய்வதற்கு இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. அரசு தம் விருப்பம் போல, பொது நலத்திற்சாகவம் இந்நிலங்களை ஒதுக்கித் தரலாம்.

247. உச்சவரம்புக்கு உட்பட்ட காலி நிலங்களையும், நகர்புறச் சொத்துக்களையும் மாற்றுவதற்குண்டான கடுமையான நடைமுறையை எளிதாக்க பழைய சட்டத்திலுள்ள 25, 26, 27 ஆவது பிரிவுகள் விட்டுவிடப்பட்டன. புதிய சட்டத்தின 27 ஆவது பிரிவில் விதித்துறை ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது.

அத்ன்படி காலி நிலத்தை விற்பனை, தானம், பரிவர்த்தனை, குத்தகை, சுவாதீன அடைமானம், ஒப்படை, ஒப்பந்தம், செட்டில்மெண்ட் அல்லது வேறு வகையில் மாற்றம் செய்ய, பத்திரப் பதிவு அதிகாரி முன்பு உரிமை மாற்றம் செய்யப் பெறுபவரும் XIII-வது படிவத்தில் இரண்டு படிகளில் அவர்கள் வைத்திருக்கும் காலி நிலத்தின் மொத்தப் பரப்பளவு குறித்து அறிக்கையொன்றை தாக்கல் செய்து, மாற்றம் தொடர்பான ஆவணத்தைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். சாதாரண அடைமானம் செய்ய XIII-வது படிவத்தில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டிய அவசியமில்லை.

சட்டத்தின் விதித்துறைகள் தளர்த்தப்பட்டுள்ளபடியால், கட்டிட வரைபடங்களுக்கு உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து ஒப்புதல் பெறுவதிலுள்ள இடர்பாடுகள் நீக்கப்பட்டு, கட்டிடங்கள் கட்டுவதில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

48. இச்சட்டத்தைச் செயல்படுத்துவதற்கு வருவாய் வாரியம் (நகர்ப்புற நில உச்சவரம்பு) பொறுப்பு வகிக்கிறது. வருவாய் வாரியத்தின் உறுப்பினர் (நகர்ப்புற நில உச்சவரம்பு) சட்டத்தின் 13-வது பிரிவின்படி நடுவர் மன்ற நடுவர் ஆகவும், 33-வது பிரிவின்படி மேல் முறையீட்டு அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார். நகர்ப்புற நில உச்சவரம்பு இயக்குநர், அலுவல் முறையில் வாரியத்தின் செயலாளராக இருந்து வாரியத்துக்கு இது தொடர்பான எல்லா விஷயங்களிலும் உதவி புரிகின்றார்.

49. தமிழ்நாட்டில் நகர்ப்புற நில உச்சவரம்பு வேலையைக் கவனிக்க 19 தகுதி வாய்ந்த அதிகாரிகள் உள்ளனர். இவர்களோடு கூட சென்னை வட்டத்தின் இராணுவ எஸ்டேட் அதிகாரி, பரங்கிமலை-பல்லாவரம் பாளையத்தின் நிர்வாக அதிகாரியும் அவர்களுடைய எல்லைக்குள் தகுதி வாய்ந்த அதிகாரிகளாக செயல்பட்டு வருகிறார்கள். வருவாய் வாரியம் (நகர்ப்புற நில உச்சவரம்பு), நகர்ப்புற நில உச்சவரம்பு இயக்குநர் ஆகியோரின் கட்டுப்பாட்டின்கீழ் இந்த தகுதி வாய்ந்த அதிகாரிகள் செயல்படுகின்றனர்.

50. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு 24-வது சட்டத்தைச் சேர்ந்த 20-வது பிரிவின் (3) உட்பிரிவின் விதித்துறைகளைச் செயல்படுத்துவதில் நடைமுறையில் இடர்பாடுகள் ஏற்பட்டன. இந்த இடர்பாடுகளைக் களையும் நோக்கத்துடன், பொது அறப்பொறுப்புக் கழகம் அல்லது சமயப் பொறுப்புக் கழகம் (வஃபு உட்பட) எதுவும் விற்பனை, அடைமானம், தானம் குத்தகை, அல்லது வேறு வகையில் மிகையாகவுள்ள எந்த ஒரு காலி நிலத்தையும் பிறிதொருவருக்கு மாற்றித் தரக்கூடாது என்றும், அவ்வாறு மிமையாக உள்ள நிலத்தை அல்லது அதன் ஒரு பகுதியை மாற்றித் தருவது செல்திறனற்றதாகும் என்கிற வகையில், மேற்சொன்ன 20-வது பிரிவின் (3) உட்பிரிவுக்குப் பதிலாகப் புதியதொரு உட்பிரிவை அமைத்துக்கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

1979 ஏப்ரல் 7]

51. அத்தகைய ஒரு பொது அறப்பொறுப்புக் கழகம் அல்லது சமயப் பொறுப்புக் கழகம் (வஃபுஉட்பட) வைத்து வந்த நிலம், பொது அறப்பணி அல்லது சமயப்பணி ஒன்றுக்குத் தேவைப் பட்டு, பயன்படுத்தப்படுவது அற்றுப்போகுமாயின், அப்போது அந்த நிலத்திற்கு மேற்சொன்ன தமிழ்நாடு சட்டத்தின் விதித் துறைகள் பொருந்தவும், மிகையாக உள்ள காலி நிலத்தை தமிழ்நாடு சட்டத்தின் III-வது அத்தியாத்தின் விதித் துறை களுக்கு இணங்க அரசு கையகப்படுத்தவும் வகை செய்வதென்று முடிவு செய்யப்பட்டது.

மேற்சொன்ன முடிவுகளைச் செயல்படுத்துவதற்காக, தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்புகட்டுதல்-முறைப்படுத்துதல்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 5/1979) ஆளுநரால் 1979-வது ஆண்டு பிப்ரவரி மாதம், முதல் நாளன்று அதிகார முறையில் வெளியிடப்பட்டது. தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதல்-முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்ற பேரவை சட்ட முன்வடிவு எண். 10/1979) அவசரச் சட்டத்திற்குப் பதிலாகக் கொண்டுவரப்பட்டு, இரு மன்றங்களி லும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு கட்டுதல் முறைப்படுத்துதல்/திருத்தச் சட்டமாக (தமிழ்நாடு சட்டம் 14/1979) தமிழ்நாடு அரசிதழில் 22—3—1979 அன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது.

விவரக் களஞ்சியங்கள்.

52. ஒவ்வொரு பகுதியிலும் உள்ள மக்களின் வாழ்க்கைக்குத் தொடர்புடைய விவரங்களை எடுத்துக் கூறுகின்ற விதத்தில் விவரக் களஞ்சியங்களைத் தயாரிப்பது அரசின் நோக்கமாகும். மத்திய அரசு நாடு முழுவதற்கும் வரையறுத்துள்ள சீரான அமைப்பு முறையை இயன்ற வரை பின்பற்றி இந்த விவரக் களஞ்சியங்கள் தயாரிக்கப்படும். விவரக் களஞ்சியம் என்றாலே அது பல்வேறு இடங்களில் நடத்தப்படும் ஆய்வுகளுக்கும், ஆராய்ச்சிகளுக்கும் அடிப்படையாக அமையும் என்பது பாரம் பரியம். மேலும் அது இந்த ஆய்வுகளுக்கு நல்ல முறையில் பயன்படக்கூடும். எனவே இதன் பாரம்பரியத்தையும் பயனை யும் கட்டிக்காப்பதில் அரசு ஆர்வம் காட்டி வருகிறது. மக்கள் தங்கள் வாழ்க்கை வரலாற்றையும், பண்பாட்டையும் பழக்க வழக்கங்களையும் நன்கு புரிந்துகொள்ள உதவும் சாதனமாக இந்த விவரக் களஞ்சியம் அமைய வேண்டுமென்றும் அரசு விரும்பு கிறது. ஒரு மாவட்டத்தின் பொருளாதார நிலையையும், அரசியல் நிலைமையையும் சமூக நிலைமைகளையும் தெளிவாக எடுத்துக் காட்டுவதற்காகவே இந்த விவரக் களஞ்சியங்கள் தயாரிக்கப்படுகின்றன.

விவரக் களஞ்சியங்கள் தயாரிக்கும் திட்டம் முதற்கண் 1954 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் 1958-ல் இத்திட்டம் மத்திய அரசு உதவி பெறும் திட்டமாக ஆயிற்று. தஞ்சாவூர், மதுரை, தென்ஆர்க்காடு, கோயம்புத்தூர், சேலம், இராமநாதபுரம் மாவட்டங்களுக்கான விவரக் களஞ்சியங்கள் இதுவரை வெளியிடப்பட்டுள்ளன. புதுக்கோட்டை மாவட்டத் திற்குரிய விவரக் களஞ்சியம் அச்சிடப்பட்டு வருகிறது. 1 979-80 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு, சென்னை மாவட்டம் தவிர பிற எல்லா மாவட்டங்களுக்கும் உரிய விவரக் களஞ்சியங்களைத் தொகுப்பதற்குத் தொடர்புடையதாகும். தருமபுரி, திருநெல் வேலி, கன்னியாகுமரி, மாவட்டங்களுக்கான விவரக் களஞ்சியங் கள் எழுதப்பட்டு வருகின்றன.

இப்போதிருக்கும் பணியை முடித்த பின்னர் சென்னை மாவட்டத்திற்குரிய விவரக் களஞ்சியம் எழுதும் பணி மேற் கொள்ளப்படும். மாவட்டங்களுக்கான புதிய களஞ்சியங்களைத் தயாரித்து முடித்த பின்னர் அவற்றை எல்லாம் தொகுத்து தமிழ் நாட்டுக்கான விவரக் களஞ்சியம் தயாரிக்கும் பணியையும், ஏற்கனவே வெளியிடப்பட்ட மாவட்ட விவரக் களஞ்சியங் களுக்குத் துணை விவரக் குறிப்புகள் தயாரிக்கும் பணியையும் மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது.

வருவாய் நிர்வாகம்.

53. 1979–80 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட உரை யில் நிதியமைச்சர், இம்மாநிலத்தில் வருவாய் பிர்க்காக்களை சீரமைக்க அரசு முடிவு செய்திருப்பதாக ஏற்கனவே அறிவித் துள்ளார். அவ்வாறு சீரமைக்கப்படுவதன் பேரில் சுமார் 350 புதிய பிர்க்காக்கள் அமைக்கப்படுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது. மக்கள் தொகை, பரப்பு, இது தொடர்பாக நிலவரி கேட்புத் தொகை ஆகியவற்றைக் கருதிப் பார்த்து இரண்டு அல்லது மூன்றாண்டுக் காலத்தில் படிப்படியாக இந்த முடிவு செயல்படுத் தப்படும்.

54. சார்ந்தும் தனித்தும் இயங்கும் நிலையில் உள்ள 29 துணை வட்டங்கள் இருக்கின்றன. எல்லாத்துணை வட்டங் களையும், வட்டங்களாகத் தரம் உயர்த்துப் திட்டத்தின் கீழ் இவை வட்டங்களாகத் தரம் உயர்த்தப்படும். இப்போதுள்ள 14 துணை வட்டங்களைத் தரம் உயர்த்துவதன் மூலம் 1979–80 -ல் 14 புதிய வட்டங்கள் ஏற்படுத்தப்படும் என்று 1979-80-ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட உரையில் நிதியமைச்சர் அறிவித்துள்ளார். எஞ்சியுள்ள துணை வட்டங்கள் அடுத்து வரும் ஆண்டுகளில் வட்டங்களாகத் தரம் உயர்த்தப்படும்.

———